
Deviyin KANMANI -Tamil Fortnightly JUNE - 15, 2010 Regd. No. TN/CH(C)/360/09-11 Registered With Registrar of News papers for India Under No.49510/89 Published every 1st and 15th of every month.

## என்னுரை...



பத்திரிகை மூலமாக எனக்கு வரும் கடிதங்கள் அல்லது பத்திரிகைகட்கு தொடர் நாவல் வளரும் போது,முடியும் போது வரும் கடிதங்கள் இவைகளை விட நேரடியாய் எனக்கு, முழுநாவல் படித்த பிறகு வரும் வாசக விமர்சனங்கள் தெளிவாய் இருக்கின்றன.

நாவலை வாரா வாரம் தொடராய்ப் படிப்பது சொம்பில் மொண்டு குளிக்கிற வகைதான். அப்படியானால் முழு நாவல்? அருவி சுகம். இது என் அனுபவம்.

மாத நாவல்கள் அதிகம் விற்பனையாவது. இந்த அருவி சுகத்துக்கு வாசகர்கள் தயாராகிறார்கள் என்பதாய் நான் கருதுகிறேன்.


என்றென்றும் அன்புடன்

பாலகுமாரன்

தேவியின் கண்மணி

பால குமாரன்

ரூ.10



# ஆனந்த வயல்

# அறுசுவை

## காஷ்மீர் புலாவ்

தேவையான பொருட்கள்:
பாசுமதி அரிசி- 2 கப்
வெங்காயம் -2
இஞ்சி,பூண்டு விழுது- அரை டீஸ்பூன்
பச்சை மிளகாய் -6
சோம்பு - அரை டீஸ்பூன்
எண்ணெய், உப்பு-தேவையான அளவு
காய்ந்த திராட்சை , டூட்டி புரூட்டி, செர்ரி- 100 கிராம்
முந்திரி,பிஸ்தா,வேர்க்கடலை -100 கிராம்
பைனாப்பிள்,ஆப்பிள்,ஆரஞ்சு-50 கிராம்

செய்முறை

பாசுமதி அரிசியை குக்கரில் வேகவைத்துக் கொள்ளுங்கள். ஒரு கடாயில் எண்ணெய் விட்டு வெங்காயத்தை வதக்கி அதில் இஞ்சி பூண்டு விழுது பச்சை மிளகாய் சோம்பு சேர்த்து வதக்கிக் கொள்ளுங்கள்.

வேகவைத்த பாசுமதி அரிசியுடன் கொண்டு பரிமாறும் போது நெய்யில் வறுத்த முந்திரி பிஸ்தா, வேர்க்கடலையையும், காய்ந்த திராட்சை, டூட்டி புரூட்டி, செர்ரி, சிறு துண்டுகளாக்கிய பைனாப்பிள், ஆப்பிள், ஆரஞ்சையும் சேர்த்துப் பரிமாறுங்கள்.

-போரூர் ஆர். வனஜா

## பயறு சாலட்

தேவையான பொருட்கள்:
வினிகர்- 1/4 கப்
மிளகுத்தூள் - டீஸ்பூன்
பூண்டு -2 டேபிள் ஸ்பூன் (மெலிதாக நறுக்கியது)
முட்டைக் கோஸ்,சிவப்பு கோஸ் (மெலிதாக நறுக்கியது)-1/4 கிலோ
வெங்காயம் - 1 கப்
நறுக்கிய குடமிளகாய் -1 கப் சிவப்பு குடமிளகாய் கிடைத்தாலும் சேர்க்கலாம்
பச்சைப் பயிறு - 2 கப்(ஊறவைத்து வேகவைக்க வேண்டும்)

செய்முறை:

முதலில் தேவையான உப்பு , வினிகர் , மிளகுத்தூள் முதலியவற்றைச் சேர்த்துக் கலந்து வைத்துக் கொண்டு நறுக்கிய கோஸ், வெங்காயம், குட மிளகாய் இவற்றுடன் வினிகர் கலவையைக் கலக்கவும். ஒரு பெரிய தட்டில் கொட்டி, வெந்தயப் பயிரையும் அத்துடன் கலந்து பரிமாறவும்.

-போரூர் ஆர்.வனஜா



# ஆனந்த வயல்

எழுத்துச் சித்தர் பாலகுமாரனின்
பல்லாயிரம் பல்லாயிரம் வாசகர்களால்
பாராட்டப்பட்ட மிகச்சிறந்த நாவல்

**வா**சலில் கார் கதவு மூடும் சப்தமும் பன்னீர் செல்வத்தின் கனத்த குரலும் கேட்டன. அதுவரை வயிற்றில் இருந்த கவலைக்குமிழ் உடைந்து போயிற்று.

செண்பகா சமையலறையிலிருந்து எட்டி ஹால் கடிகாரத்தைப் பார்த்தாள். ஏழடிக்க ஐந்து நிமிடம்.

வாணலி மூடியைக் கரண்டிக் கம்பால் நெம்பி எடுத்து, ஆவி வீச தள்ளி நின்றாள். தணிந்ததும் ஈரத்தில் கை நனைத்து இட்லி தட்டைத் தூக்கினாள். ஆவி பறக்கும் துணிகளைப் புரட்டிப் புரட்டி இட்லிகளை எடுத்து வைத்தாள்.

அவள் நிற்கும் சமையலறையின் வழியே ஹாலுக்குள் அவன் நுழைவது தெரிந்தது. ஓய்ச்சலுடன் தோல் பையை நாற்காலியில் வைத்து விட்டு ஜிப்பாவைக் கழற்றுவது தென்பட்டது. ஜிப்பா, பித்தானில் மாட்டி இழுபட்டு மறுபடி அவன் மார்பில் புரண்டு அலைந்தது.

பச்சை பெல்ட்டும், மல்வேட்டியுமாய் வெறும் மார்போடு நிற்கிறவனைக் கண்டு உதடு சுழித்தாள். ஜிப்பாவின் பைகளைப் பரிசோதித்து துண்டு காகிதங்களை நாற்காலியில் எறிந்து விட்டு முற்றத்தில் இறங்கி சிமெண்ட் தொட்டித் தண்ணீரை ஓசையெழ முகத்தில் அறைந்து கொண்டதைக் கவனித்தாள்.

செண்பகா மாவைக் கிளறி மறுபடியும் குழிகளில் நிரப்பினாள். எட்டி என்ன செய்கிறான் என்று பார்த்தாள். கால் மீது கால் வைத்து பன்னீர்செல்வம் கரகரவென்று தண்ணீர் விட்டு அலம்பிக் கொண்டிருந்தான். முதுகிலும் இடுப்பிலும் தண்ணீர்த் திவலைகள் ஓடி குழல் விளக்கொளியில் தெறித்தன. நடு முதுகு கால்வாய் வெட்டின மாதிரி அழுந்தி கழுத்து வரை நகர்ந்து பிடரிக்குள் மறைந்திருந்தது. இரண்டு பக்க முதுகெலும்பும் ஒவ்வொரு அசைவுக்கும் புடைத்துப் புடைத்து நகர்ந்தன.

''ராத்திரிக்கு வா இரண்டு பக்க முதுகையும் நகம் பதிய கிள்ளிவுட்

**பாலகுமாரன்**

டுர்றேன்.'' உதடு கடித்து வாணலி மூடியை அழுத்தி இறுக்கினாள்.

'காணமே காணமே' என்கிற கவலை இவன் முகம் பட்டதும் சட்டென்று மறைந்து குமுறலாய் ஒரு கோபம் பொங்கிற்று. கோபத்தோடு ஒரு விதமான காமம் கலந்து தளும்பிற்று.

'ராத்திரி புரண்டு வந்து வயித்துல முட்டுவல்லே... அப்ப நல்லாபுடிச்சி நிருகி வுட்டுர்றேன் உதட்டை... வா...' என்று மறுபடி கருவினாள். அலுப்பு, கிலுப்புன்னா அதெல்லாம் இன்னிக்கு ஒண்ணும் வேவாது. உன்னை ரெண்டுல ஒண்ணு பண்ணி வுட்டுர்றேன் வா. வுட்ரு செண்பகா வுட்ரு செண்பகான்னு கெஞ்சணும். 'ச்சீ' போன்னு தள்ளிட்டுத் திரும்பிப் படுத்துக்கணும். கெஞ்ச கெஞ்ச மிஞ்சணும், காலைல எட்டு மணிக்குப் போன ஆளு சோத்துக்குக் கூட வராத சுத்திட்டுத் திரும்புனா... ஒரு கை பார்த்துடணும். நேத்திக்கு என்னை அழவிட்டேல்லே... இன்னிக்கு மாட்டின வா.

செம்பை பானையில் முக்கி குடி தண்ணீர் தளும்ப ஹாலுக்குள் வந்தான். முற்றக் கொடியில் இருந்த டவலை உருவி மார்பு ஈரத்தைத் துடைத்துக் கொண்டிருந்தவனிடம் நீட்டினாள்.

''முடிச்சுட்டேன் செண்பகா... செட்டியாரு மொத்தமும் எண்ணி குடுத்துட்டாரு. போறப்ப தோல் பைய நீட்டினது நல்லதா போச்சி, இல்லேன்னா மேல் துண்டுல சுத்தி எடுத்துக்கிட்டு வரும்படியிருந்திருக்கும்.''

உயரத் தூக்கி செம்பு ஜலம் முழுக்கக் குடித்தான்.

''யப்பா.. வூட்டுக்குள்ள நுழைய வரைக்கும் கவலை தான். பையத் தொறந்து பாரேன். பண்டுலு பண்டுலா குடுத்துட்டாரு.''

செண்பகா பதில் சொல்லாது காலி சொம்பை வாங்கி சமையலறைக்குப் போனாள்.

''ஏய். என்ன பேசாத போற...'' பின்பக்கம் நின்றபடி மெல்லியதாய் அதட்டினான்.

''ஒரு நா இல்லேன்னா ஒரு நா நடக்கத்தான் போவுது''

''எடு கைய.''

இடுப்பில் தடவும் அவன் வலக்கையை விலக்கினாள். அவன் இடக்கை தடவ அதையும் விலக்கினாள். வலதும் இடதுமாய் நெளிந்து பின்னால் நகர்ந்து அடுப்படிக்கு ஓடினாள். நாலே எட்டில் நகர்ந்து அவன் அவளை சுவரோரம் அழுத்தினான். பிருஷ்டங்களை வலிக்கக் கிள்ளினான்.

''யப்பா...'' அவள் பெருங்குரலில் கூவினாள்.

''ச்சீ கத்தாதடி சனியனே... வீட்டுக்குள் நொழஞ்சதும் சண்டைக்கு இழுக்கறயே...''

''எப்ப போன மனுசன்... எப்ப வர்ற?''

''மாயவரம் போய்ட்டு வரணுமில்ல..?''

''மாட்டு வண்டிலயா போன... காரு போட்டுக் கிளம்பின ஆளு தான.. ரெண்டு மணிக்கு வரேன்னு சொல்லிட்டு...''

''வெயிலு தாங்கல செண்பகா.'' அவளை விடுவித்தான்.

''செட்டியாரு வேற சாப்பிட்டுட்டுப் போலாம்னுட்டாரு. இருந்து சாப்பிட்டுட்டு கடை பக்கம் சுத்தி கிளம்ப இந்தா அந்தான்னு அஞ்சாயி



ருச்சு.''

''உன்னை யாரு கடைக்குப் போவச் சொன்னது?''

''சும்மா ஒரு பிரியம் தான், சந்தோஷம் தான். இப்பிடி ஒரு பொண்டாட்டி கெடைச்சிருக்கே. இதுனாலதானே லாபத்துக்கு லாபம்னு ஒரு குதிப்பு தான். சுத்திச் சுத்தி கடைசில சரி.. துட்டைக் கொண்டு போய் சேத்துருவம்னு பொறப்பட்டுட்டேன்.''

''எப்ப குடுத்தாரு செட்டியாரு.''

''காலையிலே போய் எறங்கினதுமே பேரேடு பொரட்டிப் பாத்து மொத்தத்தையும் கட்டி பண்டுலா குடுத்துட்டாரு.''

''அறுவதா''

''ம்.. ஆறு பண்டுலா.. அறுவது''

''நேத்திக்கு என்ன கத்து கத்தின?''

''நான் எங்கம கத்துனேன்.. எங்கக் காணமேன்னு கேட்டேன்.''

''ரசீது இல்லைன்னா மென்னிய முறிச்சிடுவேன்னு சொல்லல?''

''சும்மா ஒரு இதுக்குச் சொன்னது. நெசமா செய்துருவாங்களா? ரசீது வாங்கிப் பார்க்கக்கூட இல்ல... கிழிச்சுப் போட்டாரு செட்டியாரு. மொத்தம் மூணு பத்து, பாத்துட்டு கிழிங்கன்னேன். புத்தியில இருக்குதுய்யா பத்தும், வரவும். உனக்குத் தான் பேப்பர்- எனக்கு வேணாம்னுட்டாரு.''

''நான் சொன்னா நம்பல. நாயே பேயேன்னு கூச்சல்.''

''வுடுறி கண்ணு, நேத்தி கதை எதுக்கு இந்த நேரத்துல. வந்து பையப் பாரேன்.''

''பாக்கறதுக்கு என்ன இருக்கு. எடுத்து பீரோவுல வை.''

''எண்ணி வைக்க வேணாமா.''

''எண்ணாமயா வாங்கின.''

''செட்டியாரு முன்னாடி எண்ணறதுக்கு என்னவோ மாதிரியிருந்துச்சு.''

செண்பகா ஹாலுக்குப் போய் பையைப் பிரித்தாள். பத்தாயிரம் ரூபாய் கட்டுகள் ஆறு இருந்தன. புரட்டிப் பார்த்தாள். ''எல்லாத்துலயும் பேங்க் சீல் போட்டுருக்கு. எதுக்கு எண்ணனும். அப்படியே வச்சிடலாம். ஐயாக்கிட்ட சொன்னியா?''

''படியேர்றப்ப சொன்னேன். எல்லாத்தியும் வாங்கியாச்சுன்னு.''

மாமியார் படத்துக்குக் கீழே உள்ள சாவிக் கொத்தை எடுத்தாள். பணத்துடன் உள்ளறைக்குப் போய் பீரோவைத் திறந்தாள். லாக்கரில் வேறொரு சாவி நுழைத்து அதையும் திறந்தாள். பணக்கட்டை கண்ணில் ஒற்றி இரண்டு கைகளாலும் உள்ளே வைத்தாள். லாக்கரை மூடினாள்.

பின்னால் வந்தவன் தழைத்திருந்த அவள் மார் சேலைக்குள் கைகளை நுழைத்து அவள் வயிற்றைக் கட்டிக் கொண்டான். காதோரம் முத்தமிட்டான்.

சந்தோஷத்தைச் சமாதானமாய்க் காட்டுவதை விட முரட்டுத்தனமாய் காட்டுவதில் சுவை அதிகம் தான். இது முத்தமிடுகிற போது உதடு கடிப்பது போலத்தான். குறுக்கிக் கொள்கிற போது திமிறித் திமிறி தோல் வழண்டு போகிற எரிச்சல் மாதிரி தான், அந்த எரிச்சல் கூட சந்தோஷம் தான்.

செண்பகாவுக்கு உள்ளே சந்தோஷமாய்த் தான் இருந்தது. இந்த சந்தோஷத்துக்கு தானே காரணம் என்கிற கர்வம் பொங்கிய போது உள்ளே முரட்டுத்தனம் எகிறிற்று. இவனை இன்னும் அழ வைத்து வேடிக்கை பார்க்க ஆசை வந்தது.

''இன்னிக்கு ஊர் மேஞ்சது போதும். பலகாரம் சாப்பிட்டு மேல போய் படுங்க.'' கட்டளையிட்டாள்.

''அதென்ன திமிர்னு வாங்க, போங்கங்ற. திமிர்னு தள்ளி நின்னுங்க போட்டு பேசறே.. எப்பவுமே நீ, வா போன்னு பேசேன்.''

''அது சரி. ஆசையா, தனியா புருஷன் கிட்ட பேசறப்ப பொம்பளைங்க இப்படித்தான் எக்குத்தப்பா ஏதாவது பேசுவாங்க. அதுக்காக எப்பவுமே அப்படிப் பேசுனா வெளி மனுஷங்க காதில் விழுந்தா நொடிச்சுக்கிட்டு காறில்ல துப்புவாங்க. சரி, சரி, சாப்பிட வாங்க.''

''அப்பாவுக்குப் போட்டாச்சா?''

''ஆறு மணிக்கே முடிஞ்சு போச்சு.''

''எங்கக் காணமேன்னு கேட்டாரா?''

''நாலு தடவை கேட்டாச்சு.''

''என்ன சொன்ன?''

''என்னிக்கு நேர் புத்தி இருந்திருக்கு உங்க புள்ளைக்கு. எங்கனயாச்சும் ஊர் சுத்திட்டு வருவாங்கன்னேன்.''

''திமிருதானே.'' எச்சல் கையால் அவள் கன்னத்தைக் கிள்ளினான்.

''தூத்தேறி... சோத்துக் கையால தொடாத.''

''ச்சீ கைல தொட்டா.'' இடக்கையால் மறுபடி கிள்ளினான்.

''கடவுளே, என்னிக்குத்தான் இந்த நரகத்திலேர்ந்து விடுதலையோ, உடம்பு முழுக்கப் புண்ணாப் போவுது.''

''சுத்திச் சுத்தி லவ் பண்ணி தாலி கட்டி குடித்தனம் போட்டப்புறம் விடுதலையா கேக்கற.'' எட்டி அவள் தலை மயிரை இடக்கையால் கொத்தாய் பிடித்தான். வலிக்க இழுத்து மார்பில் முகத்தை வைத்துக் கொண்டான். முத்தமிட்டான்.

''தலை நோவுது விடுங்க.''

''விட முடியாது.''

''ஐயோ விட்ருப்பா, நோவுது.''

''உனக்கு என்ன வாங்கியாந்திருக்கேன்னு பாத்தியா?''

தலையசைத்தாள்.

''ஏன் பாக்கல?''

''நீ வந்து சேர்ந்ததே போதும்பா. வேற ஒண்ணும் பார்க்க வேணாம், விடு.''

''வராத போய்டுவாங்களா...ஏன்டி?''

''பைல வச்சிக்கற மாதிரி கண்ணாடி டப்பா. பிரிச்சா நாலு பக்கமும் தொறந்துக்கும், நாலு பக்கமும் வித விதமான கண்ணாடி அப்புறம் ஃபாரின் செண்ட் பாட்டிலு.''

''அப்புறம்?''

''ஊதுவத்தி, வாச பக்கம் மாட்டறதுக்கு வெங்கடா ஜலபதி படம். அலுமினிய தகட்டுல கோடு கோடா கிழிச்சி பளபளன்னு மின்ற மாதிரி...



அப்புறம் நாலஞ்சு கேஸட். உனக்குப் புடிச்ச பாட்டா.''

இரவு டேப் ரெக்கார்டரை தலைமாட்டில் வைத்து ஒவ்வொரு கேஸட்டாய் போட்டு கேட்டுக் கொண்டிருந்தார்கள். விடிவிளக்கு வெளிச்சத்தில் நட்சத்திரங்கள் மட்டுமே பார்க்கும் ஜன்னல் விளிம்பு பக்கம் போட்ட கட்டிலில், அவன் தோளில் மார்புகள் அழுந்த பாட்டுக்கேட்டுக் கொண்டிருந்தாள். ஒப்புக்குப்புடவையைச் சுற்றி அவன் முழங்காலில் தன் முழங்காலைப் போட்டுப் பின்னிக்கொண்டு கண்மூடி ரசித்துக் கொண்டிருந்தாள். அவன் வலது கை முழுவதும் அவளைச் சுற்றி கொண்டிருந்தது. தோளின் சரிவையும், இடுப்பின் வளைவையும் பிருஷ்டத்தின் மென்மையையும் தடவித்தடவி கிளறிற்று உடம்பில் அனல் பரவி காமம் மெழுகாய் உருகிற்று. நிமிர்ந்து அவன் காது மடல்களைக் கவ்வினாள். கன்னத்தைக் கடித்தாள். முகவாயில் பல் பதித்தாள். உதட்டை இரண்டு விரலால் அழுத்திப் பிடித்து வலிக்கத் திருகினாள். தலை முடிக்குள் கைவிட்டு உலுக்கினாள். வலியில் நெளிந்தவனை அசையாது இறுக்கிக் கொண்டாள்.

வாரி மார்பில் அவன் போட்டுக் கொள்ள, அவள் இரு பக்கமும் கையூன்றி கனிவோடு பார்த்தாள்.

தாலிக்கொடி மார்புகளுக்கு நடுவே வழிந்து அவன் மூக்கில் மோதி ஆடிற்று. அவன் உறுத்தல் தாளாமல் முகத்தைப் திருப்ப, மேலும் கொடியைத் தழைத்து முகத்தில் மோதும்படி ஆட்டினாள்.

ஐந்து வருடம் முன்பு செய்த அதே செய்கைகள்தாள். அதே விளையாட்டுதான்.

''நீயும் முரடு. நானும் முரடு. நமக்குப் பொறக்கப் போறது எப்படி இருக்கப் போவுதோ?'' முதல் இரவில் கவலைப் பட்டான்.

''கவலைப்படாத, ரத்தினமா பொறக்கும்'' என்று சமாதனப்படுத்தினாள்.

வீட்டில் தங்கமிருக்கிறது. கரன்ஸி கத்தை இருக்கிறது. குதிர் குதிராய் நெல்லும், பயறும் கிடக்கின்றன. தோப்பும், துரவும், காரும் கறவைகளுமாய் சொத்து விரிகிறது. ரத்தினம் தான் இல்லை. கோவில் கோவிலாய் தொட்டில் கட்டி தொட்டில் கட்டி வந்தாயிற்று. உள்ளே பூச்சி தங்கவில்லை. சண்டையால் சரசமும், சரசத்தில் சண்டையுமாய் வாழ்க்கை புரள்கிறது.

வெறும் காமத்துக்காகவே கூடல் என்று வந்து விடுகிறது. காமம் இல்லாத இரவுகளில் கவலைதான் சூழ்கிறது. கவலைப்படும்போது காமம் தீர்வாகிறது. தூங்க வைக்கிறது.

''இன்னும் எத்தினி நாளைக்குப்பா இந்த வெத்து ஆட்டம்.'' செண்பகா சோர்வோடு அவன் மீது படுத்தாள். வாசல் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது.

## 2

''யார்ரா அவன்?'' அய்யாசாமி பிள்ளை விசுக்கென்று எழுந்திருந்தார்.

கதவுக்கு வெளியே நின்றிருந்த உருவம் பின்வாங்கிற்று ''ஐயாவுங்களா? மன்னிச்சுக்கங்க. தொறந்திருக்கும்னு நெனச்சேன்.''

''மன்னிப்புக் கேக்கறதுக்கா ராவுல வந்து கதவ இடிச்ச..யார்யா அது?''

''நாந்தாங்க மணியம். கதவுல கை வெச்சேன். நொடிப்பு கதவு படப டன்னு ஆயிடுச்சுங்க.''

''நொடிப்பு கதவா. யோவ் மணியம், முடிஞ்சா கதவ ஒடைச்சு உள்ளே வா பார்ப்போம்.''

''ஐயோ நான் கதவ சொல்லலீங்க.என் கை நொடிப் புன்னேன். இச குபிசகா ரெண்டு மூணு தரம் தட்டி வுட்டேன். கை எட்டற நீட்டத்துக்குத் கதவு இருந்தாப்ல இருந்துச்சுங்க. காலு வெச்சேன். கதவு இருக்கிற எடமே தெரியல''.

''கண்ணாடி மாட்டிருக்கேன்ல?''

''இருளோன்னு இருக்குங்க.''

''இரு, விளக்குப் போடறேன்.'' வராண்டா விளக்குக் குமிழைத் தட்டி விட மினுக்கி மினுக்கி குழல் விளக்கு வீதியின் குறுக்கே வெளிச்சத் துணி விரித்தது.

அய்யாசாமி பிள்ளை கதவைத் திறந்தார்.

''என்னய்யா...ராவுல வந்து கதவு கதவா முட்டிக்கிட்டு நிக்கறே. என்னா விசயம் சொல்லு.''

''ரெண்டு மூணு பேர் வந்திருக்கோம்.''

''யாரது வெளிச்சத்துக்கு வாங்க.'' புருவத்தில் கை வைத்து உற்றுப் பார்த்தார்.

''நான் சபாரத்தினம் ஹெட்மாஸ்டர். கூட கிராமசேவக் வந்துருக் காரு.'' ''அட...வாங்க...என்ன இத்தினி தொலைவு?''

''சின்னவரைப் பார்க்கலாம்னு வந்தோம். நாளைக்குப் பள்ளிக்கூடத் துல ஒரு சமாச்சாரம்.'' ஆகஸ்ட்-15 தேதிய கொடி ஏற்றம் நீங்க நாலுவாட்டி கொடி இழுத்திட்டீங்க. மணியம், கிராம சேவக், நானு ஆளுக்கு ரெண்டு மூணு தடவை இழுத்துட்டோம். இந்த வருஷம் சின்னவரை சம்சாரத் தோட கூப்பிட்டு கொடி ஏத்தச் சொல்லலாம்னு தோணிச்சு. சாயந்திரம் முட்டும் மதகுக்கிட்ட உக்காத்து பாத்தோம். சின்னவரு திரும்பல.காரு எடுத்துக்கிட்டு காலைலபோனதா சொன்னாங்க.''

''வந்துட்டானே. விளக்கு வச்சப்பறம் தான் வந்தான். படுக்கப்போ யிருச்சுங்களே ரெண்டும்.எப்படி கூப்பிடுறது?''

''மாடிலதான் இருக்கும். குரல் கொடுத்தா வரமாட்டாரா.''மணியம் வீட்டிற்குள் எட்டிப் பார்த்தார்.

''யப்பா யாரும் கூப்டறாங்களா?'' மேலேயிருந்து குரல் கேட்டது.

''சின்னவரு முழிச்சிட்டாரு. சின்னவரு முழிச்சிட்டாரு.''

''யோவ் கூவாதையா. தம்பி ஹெட்மாஸ்டர் வந்திருக்காரு.''

''மணியம் வந்திருக்கேன் தம்பி. நாளைக் கொடியேத்தணுமில்ல.''

தெருவில் படுத்திருந்த கால்நடைகள் இந்த உரத்த குரல்கள் கேட்டு எழுந்து நிற்கத் துவங்கின. மெல்ல காதுகளை அசைத்து இனம் புரியா மல் தவித்தன.

வாசலில் அவன் வருகைக்காக எல்லாரும் அசையாது காத்துக் கொண் டிருந்தார்கள்.



செண்பகா உள்ளே இருட்டில் ரவிக்கையைத் தேடிக் கொண்டிருந் தாள். விளக்கு ஏற்ற பன்னீர் செல்வம் எத்தனித்த போது, 'ச்சு' என்று அதட் டினாள். உடுத்திக் கொண்டாள்.

பன்னீர் கண்ணாடி முன் நின்று சட்டையை மாட்டிக் கொண்டு தலை சீவினான். படியிறங்கினான். செண்பகா கட்டிலில் உட்கார்ந்து நகம் கடித் தாள்.

''வாங்க மணியக்காரரே, ஐயா வாங்க வணக்கம்''

''வணக்கம் தம்பி, தொந்தரவு பண்ணிட்டமா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க. என்ன விசயம். எல்லாம் ஒண்ணா கிளம்பி வந்திருக்கீங்க. இப்பத்தான் படுத்தேன். குரல் கேட்டுச்சு உட்கா ருங்க.''

''நாளைக்கு பள்ளிக்கூடத்துல கொடியேத்தம் தம்பி. நீங்க வந்து கவுறு இழுக்கணும்.'' மணியக்காரர் முந்திக் கொண்டு பேசினார்.

''நானா'' நாளைக்கு ஆகஸ்டு பதினைஞ்சு தம்பி. வயசாளியே எப்ப வும் கொடியேத்துறதுங்கறதை மாத்தி, இந்த முறை இளவட்டமா, அதே சமயமா மரியாதைப்பட்ட ஆளா கூப்பிடணும்னு நெனைச்சோம் தம்பி வெவரம் தெரிஞ்சவங்க. சம்சாரத்தோட வந்து கொடியேத்தி பசங்களுக்கு ரெண்டு நல்ல வார்த்தை சொல்லி பூந்தி, லட்டு கொடுக்கணும்.''

''அப்பாரை கூப்பிட்டுப் போங்க. பூந்தி செலவு நான் எடுத்துக்க றேன்.''

''அப்பாரு நாலஞ்சு தடவை ஒத்துக்கிட்டு வந்து ஏத்திக் கொடுத்தாரு தம்பி. உங்கம்மா இருக்கப்பவே வந்திருக்காரு. அதிரசம் போட்டாங்க முதத்தடவையா சுதந்திரத்துக்கு.'' ஹெட்மாஸ்டர் பின்னோக்கிப் போனார். ''அதிரசமும் பொரிகடலையும் அள்ளி அள்ளி அத்தினி பசங்க ளுக்கும் போட்டாங்க உங்க தாயார். பசங்களுக்கு நெல கொள்ளலை. அத் தினி சந்தோசம் போயேன். ரெண்டு நா பள்ளிக்கூடம் முழுக்க அரிசிப் பொரி குப்பை தான். அடுத்தவாட்டி கொடியேத்தலைன்னாலும் காரம ணிப் பயிறு வெல்லம் போட்டு அனுப்பிச்சாங்க.''

''நான் தான் கொடியேத்தினேன்.'' மணியம் தலையிட்டார்.

''ஊரான் ஊட்டு நெய்யே எம் பொண்டாட்டி கையே''

''அப்பா எதுக்கு அவரை வம்பு பண்ணிக்கிட்டு வுடுங்க. நான் காலைல சொல்லியனுப்பறேன்.''

''எதுக்கு தம்பி அலையவுடறே. போய் கொடியேத்திட்டு வந்திடு.''

''பூந்திக்கு சொல்லணுமேப்பா.'' -

''நாங்க சொல்லிட்டோம்.

''அப்ப காலைல வந்துடறீங்க.''

''நான் மட்டும் வரேனே. செண்பகா வெட்கப்படும்.''

''செண்பகாவா... எங்கிட்ட என்ன வெக்கம்? நான் தோள்ல போட்டு வளத்த புள்ளை அது.''

''அதுக்கிட்ட ஒரு வார்த்தை கேட்டுக்கிறேனே.''

''கேக்கறதுக்கு என்ன கூட்டிட்டு வந்துரு தம்பி. வரலைன்னா மணி யக்காரர் சத்தம் போடுவாருன்னு சொல்லு.''

''அவர்கள் இருட்டில் நகர வராண்டா கதவைத் தாழிட்டு விட்டு அப்

பாயின் கட்டிலில் உட்கார்ந்தான்.

'' செண்பகா மேல தனியா இருக்குமே தம்பி. ''

'' தூங்கிட்டிருக்கும். ''

'' உனக்குத் தூக்கம் வரலியா ''

'' கண்ணைச் சுழட்டிச்சு. குரல் கேட்டு இறங்கினேனா, கலைஞ்சி போச்சு. ''

'' இந்த மணியக்காரன் பேசினா அப்பிடித்தான். ஓலைப் பாயில ஏதோ பேஞ்ச மாதிரி. ''

'' அவரை ஆனாலும் வெரட்டறீங்கப்பா. ''

'' செண்பகா சரிங்கணுமே, ஒரு வார்த்தை கேட்டுக்க. ''

தலையணைகளை இடுக்கிக் கொண்டு சாய்ந்தார்.

'' ஏன் மாட்டேனுடுவாளா? படிக்கிற புள்ளைகளுக்கு குடுக்குறதுல வஞ்சனை எதுக்கு? ''

'' கேட்டுக்கோயேன் எதுக்கும். '' கிழவர் கால் நீட்டிப் படுத்தார்.

விளக்கை அணைத்து விட்டு பன்னீர் நடையில் ஏறினான். நடைக்கதவை மெல்ல ஒருக்களிக்கையில் கதவின் பின்னே இருட்டில் செண்பகா மின்னும் விழிகளோடு நின்று கொண்டிந்தாள். '' நாளைக்கு நான் பள்ளிக்கூடத்துக்கு வரல. என்னைக்கூப்பிடாதே. '' என்றாள்.

'' ஏய் என்ன'' என்று அதட்ட வாய் திறந்தவனை பளிச்சென்று பொத்தினாள். வியந்தவனை நடையிலேயே விட்டு விட்டு மெட்டி சத்தமெழ மாடிப்படி ஏறினாள். கதவு இடைவெளி பன்னீர் செல்வம் அப்பாவை பார்த்தான்.

'' மன்னே மாமணியே
மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால்-இனி
யாரை நினைக்கேனே. ''

அய்யாசாமிப்பிள்ளை மல்லாந்து பாடிக்கொண்டிருந்தார். பன்னீர் கோபத்தோடு படியேறினான்.

3

''கொழுப்பு புடிச்சு ஆடறே செண்பகா.''

''ஆமா அப்பிடித்தான். ''

'' எனக்கு வர்ற கோவத்துல அப்பிடியே தூக்கிப் போட்டு மிதிச்சிருவேன். ''

'' அதுக்கு வேற ஆளப்பாரு. ''

'' அடிச்சா முடிஞ்சு போச்சா உனக்கு தனக்காகவும் தெரியாது. சொன்னாலும் புரியாது. ''

'' ஏன் வரமாட்டேங்கறே. சொல்லித் தொலையேன். ''

'' நீங்களே கொடியேத்தி நீங்களே பூந்தியும் குடுங்க. கண்ட எடத்துக்கும் என்னைக் கூப்பிடாதீங்க. ''

'' அடச்சீ மொகரக்கட்டை... நம்மூர் பள்ளிக்கூடம் உனக்கு கண்ட எடமா போச்சா? அங்க தான் நீயும் படிச்சு காலேஜ் போன. ''

'' ஆமா படிச்சு பாழா போனேன். வுடுங்க என்னை. ''



'' ஏன்னு வெவரமா செல்லு வுட்டுர்றேன். நம்மூரு, நம்ம பசங்க, வேறாள் வரப்போறதில்லை. அப்புறம் என்ன... எங்க குத்துது உனக்கு?''

'' வந்தா என்னாங்குறேன். ''

'' கஷ்டம்பா ''

'' என்ன கஷ்டம்? ''

'' நம்மூர் பள்ளிக்கூடம், நம்ம மணியம், நம்ம ஹெட்மாஸ்டர் சின்ன வயசுலேர்ந்து பாத்து பழகின மனுஷங்க தான். ''

'' யப்பா இதுக்கு மேல எனக்கு தெம்பில்லை, ஆள வுடுங்க. ''

செண்பகா வெள்ளை ஆர்கண்டி பின்னணியில் பழுப்பு பூக்கள் போட்ட புடவை உடுத்தியிருந்தாள். சோளியிலும் அதே மாதிரி பார்டர் பரவியிருந்தது. வலக்கையில் நாலு வளையல்களும், இடக்கையில் வாட்சும் கட்டியிருந்தாள். கனத்த தாலிக்கொடி தவிர, இன்னொரு சங்கிலி போட்டிருந்தாள். ஒற்றைப் பின்னலும், நெற்றியில் விபூதியுமாய் கீழே குங்குமமுமாய் மின்னினாள்.

பன்னீர் செல்வம் வெள்ளை மல் ஜிப்பாவும், பச்சைக்கரை வேஷ்டியுமாய் அவளுக்கு அருகே வந்து நின்றான். கண்ணாடியில் தெரிந்த மனைவியின் அழகை ரசித்தபடி அவள் தோளில் கை போட்டுக் கொண்டான். செண்பகா அங்கவஸ்திரம் போட வேண்டாமென்று சொல்லிவிட்டாள். மேல் வஸ்திரம் போடுவது வயதை அதிகரிக்கிறதாம். சின்ன டர்க்கி டவலை மடித்து வைத்திருந்தான்.

புருஷனும், மனைவியும் தெருவில் இறங்கினார்கள். ஊர் வணக்கம் சொல்லிற்று. தெருக்குழந்தைகள் கூடவே ஓடி வந்தார்கள். வெயில் தெரியாமல் மேகம் கவிழ்ந்து கிடந்தது.

யாரோ ஒரு பையன் சிலேட்டு பலகையோடு இவர்களை ஓடிக் கடந்தான்.

'எலேய்.. இன்னிக்கு பள்ளிக்கூடம் லீவுடா....எதுக்கு சிலேட்டு பலகை?' பன்னீர் சிரிப்போடு குரல் கொடுத்தான்.

'அவனுக்கு பீச்சாங்கை வெளங்காதுங்க. ஒரு கைல பூந்தி வாங்கினா சிதறிடும்னு சிலேட்டு எடுத்துக்கிட்டுப் போறான்..'

பையனை உற்றுப் பார்த்தபோது இடது கை சுவாதீன மற்று வாடின. சாமந்திச்சரம் மாதிரி தொங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது.

'ஏண்டா யார் பையன் நீ. ஏதாவது கிண்ணம் கொண்டு வரக்கூடாது?'

'அதக்கூட தவறவுட்ருவான் சார். சிலேட்டுன்னா தூக்கித் தூக்கிப் பழக்கம்..'

'எண்ணையாயிடாது சிலேட்டு பலகை...'

'செங்கலு தேச்சு கழுவிடுவான் சார்...'

'ச்சே.. தோணவே இல்ல பாரு செண்பகா. பசங்களுக்கு பொட்டலமா போட்டு குடுக்கணும்னு தோணவே இல்லை. ஆளுக்கு அம்பது கிராம் பைல போட்டு குடுத்துருக்கலாம்.'

'அடுத்தவாட்டி செஞ்சுடலாம். தித்திப்பும், காரமுமா பிளாஸ்டிக் பைல போட்டுக் குடுத்துரலாம். வேலுத்தாயி புள்ளையிது. பொறக்கறப்பவே பூஞ்சை. எட்டாவதோ.. ஏழாவதோ...'

'எட்டு பசங்களா...'

'மூணுதான் தங்குச்சு. இவன்கூட பேதி கண்டு பொழப்பானோ மாட்டானோன்னு கெடந்தவன் தான்..'

தெருக்கோடியில் பள்ளிக்கூடம். வாசலில் ஹெட் மாஸ்டர் காத்திருந்தார். கை கூப்பினார். இரண்டு வயதான ஆசிரியைகள் முன்வந்து செண்பகாவை வரவேற்றனர்.

கூச்சலாய்க் கிடந்த பள்ளி இவர்கள் நுழைந்ததும் அமைதியாயிற்று. கண்ணாம்புக் கோட்டு வரிசையில் பையன்கள், பெண்கள் தனித்தனியே நிற்க... கொடி மரத்தின் கீழே செங்கல் அடுக்கி, வெள்ளையடித்து, சாமந்திப் பூவும், வாடா மல்லியும் கோலமாய் அடுக்கப்பட்டிருந்தன.

மேடையில் நாற்காலி போட்டு செண்பகாவையும், பன்னீரையும் உட்கார வைத்தார்கள்.

'நீராடும் கடலுடுத்த நிலமடந்தை...'

எழுந்து நின்று எல்லோரும் பாடினார்கள். பள்ளிக்கூடம் படித்து முடித்த விடலைகளும், மாடு கல்ப்பையோடு வயலுக்குப் போய்க் கொண்டிருந்த குடியானவர்களும் பள்ளிக்கூட சுற்றுச்சுவர் வழியே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஹெட்மாஸ்டர் பேசுவதைக் கேட்காமல் பன்னீர் செல்வம் குழந்தைகளையே பார்த்தபடி யோசித்துக் கொண்டிருந்தான். சுதந்திர தினத்தன்று கூட ஒரு டீச்சர் ஆமணக்குக் குச்சியை உடைத்து பிரம்பாய் வைத்து அதட்டிக் கொண்டிருந்தாள். 'லைன்ல நிக்றப்ப என்ன பேச்சு' என்று ஒரு பத்து வயசுப் பெண்ணை 'ணக்'கென்று குட்டினாள். குட்டு வேகமாய் விழுந்தும் அந்தப் பெண் குழந்தை அசையாது, வலியில் குனியாது நின்று கொண்டிருந்தது. ஒரு வேளை குட்டு வாங்கி வலி தாங்கும் சக்தி அந்த பத்து வயசுப் பெண்ணுக்கு வந்திருக்க வேண்டும். ஒரு வேளை அழுது கொண்டு ஓடினால் கைப்பிடி பூந்தி நஷ்டம் என்பதால் தாங்கிக் கொள்கிறதோ என்னவோ.

பன்னீரை அவன் தகப்பனார் அடித்ததில்லை. கனிவான கண்டிப்பு இருக்குமே தவிர, கட்டாயங்கள் இல்லை.

'மாயவரம் போய் காலேஜு படிப்பு படிக்கப் போறியா... எதுக்கு?' அப்பா கேட்டார்.

'படிச்சு பட்டணத்துக்கு கணக்கெழுதற வேலைக்குப் போற நெனப்பு இருந்தா காலேஜு படிப்பு கிடையாது. கூட நாலு எழுத்தும் படிச்சு உலகம் தெரிஞ்சுக்கணும்னு ஆசைப்பட்டா, சரி..'

ஞானத்துக்காகத்தான் படிப்பு. படிப்பு ஒரு அனுபவம் என்று சொல்லித்தர பன்னீரின் தகப்பனுக்குத் தெரிந்திருந்தது.

'எதுக்குடா நாலு கால்சராய் வாங்கிருக்க..'

'வேட்டியவிட இது போட்டுக்கிட்டு நடக்கறது சுலபம்பா..'

'வயல்ல வெளிக்கு வந்தா அவுத்து தோள்ல போட்டுக் குவியா..'

'யாபாவ்..'

'டேய், நம்ம தொழிலுக்கு, நம்ம எடத்துக்கு எது சுலபமோ அத உடுத்தணும். சினிமால டான்ஸ் ஆடறவன் போட்டிருக்கான்னு நம்மளும் மாட்



டிக்கிட்டா அவசரத்துக்கு உதவாதுடா. வாய்க்கால்லயே அலசும்படியா ஆயிடும்..'

ஆயிற்று. ஆன பிறகுதான் வேட்டி சௌகரியம் தெரிந்தது. மல்ஜிப்பாவும், கெட்டிக்கரை வேட்டியும், சிங்கப்பூர் செருப்பும் காடுமேடெல்லாம் சுற்ற ரொம்ப வசதி என்று தெரிந்து போயிற்று.

அப்பா இந்த மாதிரி ஆயிரம் சொல்லிக் குடுத்தார். சொல்லியும் புரியலியா, போய் அனுபவி புரியும் என்று ஒதுங்கிக் கொள்வார். அப்பாவின் துணையோடும், அனுபவங்களின் செறிவோடும் பன்னீர் ஆளானான். தனக்குக் குழந்தை பிறந்தால் இன்னும் தெளிவாய் வளர்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டான். அதற்கு நல்ல மனைவி வேண்டும் என்றும் யோசித்தான். செண்பகாவைச் சந்தித்த கணமே இவள் தனக்குத்தான் என்று யோசித்தான். எதிர்ப்புகளையெல்லாம் தாண்டி, வீறாப்பாய் கை பிடித்தான்.

பன்னீருக்கும், செண்பகாவுக்கும் வசதியிருக்கிறது. விவேகம் இருக்கிறது. விழைவு இருக்கிறது. குழந்தை தான் இல்லை.

ஹெட்மாஸ்டர் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார். பன்னீர் திரும்பி செண்பகாவைப் பார்த்தான். செண்பகா எங்கேயோ தொலைவில் வெறித்துக் கொண்டிருந்தாள்.

'யேய் என்ன..'

'ஒண்ணுமில்ல...'

'என்ன யோசனை?'

'அடுத்த வாரம் மெட்ராஸ் போலாமா?'

'எதுக்கு. பீச்சு பார்க்கணுமா?'

'இல்ல.. டாக்டர்கிட்ட போவோம். ரெண்டு பேரும் போய் நின்னு என்ன குத்தம், ஏதுன்னு தெரிஞ்சுக்கிட்டு வந்துருவோம்...'

'ஏன் என்ன அவசரம்?'

'எனக்குப் பொறுக்கலை...'

'ஏன் திடும்னு..'

'தோளுக்குப் பின்னாடி சிரிக்க ஆரம்பிச்சிட்டாங்க...'

'யாரது.. எதுக்கு சிரிக்கிறது...' பின்னால் திரும்பி பார்த்தான். பூச்சற்றின கொடி உம்மென்று இருந்தது.

'உடனே திரும்பிப் பாரு. பூடகமா சொன்னா புரிஞ்சுக்கறதேயில்லை...'

'யாரச் சொல்ற...'

'உன்னைத்தான். கூப்புடறாங்க. எழுந்து போய் கொடியேத்து..'

பன்னீர் எழுந்திருந்து ஹெட்மாஸ்டருடன் கொடிக் கம்பம் அருகே போய் கயிறை இழுத்தான். பளிச்சென்று சுருக்கு அவிழ்ந்து மூவர்ணக் கொடி விரிந்தது. பூவிதழ்கள் உதிரச் சிரித்தது.

விழா முடிந்து வீடு திரும்பும் போது நூறு குழந்தைகள் காலை வீசி நடக்க முடியாமல் சூழ்ந்து கொண்டு ஹோவென்று கூச்சலிட்டபடி வந்தன. நடுத்தெருவில் நூறு பிள்ளைகள் சூழ்ந்து கத்தினால் பழக்கப்படாத

யாருக்கும் மிரட்சியாத்தான் இருக்கும். வுட்டு ஒழிங்கடா என்று கோபம் வரும்.

பன்னீரும், செண்பகாவும் ரொம்ப சந்தோஷமாய் பள்ளிப் பிள்ளைகளோடு பேசிக் கொண்டு வந்தார்கள். திடீர் திடீரென்று கூச்சலிட்ட பிள்ளைகள் களிப்பைக் கண்டு சிரித்தார்கள். கிராமத்துப் பிள்ளைகளுக்கு தேங்க்யூ சொல்லத் தெரியாது. இந்தக் கூச்சல் தேங்யூ மாதிரியான சந்தோஷம். ஒரு நன்றி அறிவிப்பு. நீ போட்ட பூந்தி ரொம்ப நல்லா இருந்தது என்கிற மாதிரி விளக்கம். அடுத்த வருஷமும் போடுவியா என்கிற கேள்வி.

**4**

பூந்தி போட்ட புண்ணியவானை வீடு வரைக்கும் கொண்டு போய் விட்டுட்டு வருகிற பண்பாடு. வாங்கித் தின்றுவிட்டுத் துடைத்து விட்டுப் போய்விடத் தெரியாது. கை கூப்பி 'நன்றிங்க' என்று சொல்லவும் வெட்கம். 'ஹோ' என்கிற கும்மாளக் கூச்சலில் நெஞ்சு பொங்கி வரும்.

நன்றியும், அன்பும் தெரிந்து விடும். பழக்கப்பட்டவர்களுக்குத்தான் இது அன்பு, நன்றி என்பது புரியும். புரிந்தவருக்குத்தான் உலகம் சந்தோஷம்.

'மூக்கு ஒழுவுது தொடச்சுக்கடா....' ஒரு பையனைப் பார்த்து பன்னீர் செல்வம் செல்லமாய் அதட்டினான்.

'எத்தினி தொடச்சாலும் அவனுக்கு மூக்கு சளி நிக்காதுங்க. அவனுக்குப் பேரே சளி...' எவனோ பதில் சொன்னான்.

பையன் முகத்தில் கண்கள் இரண்டுதான் உயிரோடு இருந்தன. இருமி இருமி சற்று பிதுங்கலான விழிகள்.

'உங்கப்பா யாருடா?'

'அவங்கப்பா தோப்பு சண்முகம் சார். கள்ளு இறக்குறாரு..'

'செல்லக்கிளி புள்ளையா...' செண்பகா கேட்டாள்.

'ஆமாங்க. அவங்கம்மா..' மறுபடி எவனோ குரல் கொடுக்க, 'சும்மா இருடா..' செண்பகா அதட்டினாள்.

புருஷன் கொடுமை தாங்காது செல்லக்கிளி கொளுந்தனோடு ஓடிப் போய் விட்டாள். கொடுமை என்பது அடித்து ஹிம்சித்து வசவுகள் கிடைக்கிற கொடுமை இல்லை. வீட்டுக்கு வராத கொடுமை. கதவுகளே இல்லாத கள்ளுக் கடையில நாள் பூராவும் வேலையிருந்தது. வியாபாரம் இருந்தது. போட்டியிருந்தது. வயலுக்குப் போய் புருஷனோடு வேலை செய்வது போல, ஒரு பெண் கள்ளுக் கடைக்குப் போய் உதவி செய்ய முடியாது.

செல்லக்கிளி தனிமை தாங்காமல் ஒரு முறை விஷம் குடித்தாள். ஊர் கூடிப் பிழைக்க வைத்தது. உடம்பு சரியானதும் ஓடிப்போனாள்.

'இதை முதல்லயே செய்திருக்கலாம்' என்று ஊர் சொல்லிச் சொல்லி சிரித்தது. 'எதுக்கு ஓடிப்போகணும். நாங்க இல்லை' என்று கேலி பேசிற்று. 'சயத்த காய்ச்சி ஊத்த... என்று பெண்கள் சாபமிட்டார்கள்.



பெண் ஓடிப்போகும் காரணம் உடம்பில்லை. மனசு என்பதைப் புரிந்து கொள்ள மறுத்தார்கள்.

தோப்பு சண்முகம் கடையை விட்டு எழுந்திருக்காமல் ஒழிஞ்சது பீடை என்று முடித்து விட்டான். இந்த பிள்ளை மட்டும் நெஞ்சில் சளியும், மனசில் கலவரமுமாய் அலைகிறது. அம்மாவைப் பற்றிப் பேசுகிறார்கள் என்று தெரிந்ததும் புழுதிக்காலைத் தரையில் தேய்த்து தானும் ஒரு குற்றவாளி என்பது போல் நிற்கிறது.

பன்னீர் மேலே நகர்ந்தான். குழந்தைகள் மறுபடியும் ஓவென்று கூச்சலிட அந்தப் பையன், அவன் பெயரென்ன. சரி அவன் மட்டும் பின்னே கூட்டத்தோடு சேராமல் தனியே தரையைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''எட்டு வயசுப் புள்ளைய விட்டுவிட்டு ஓடியிருக்கா மாணங்கெட்டவ.''

''என்ன வேதனையோ?''

''வேதனையென்ன.. கொழுப்புதான்.''

''இருக்காது செண்பகா.''

''செல்லக்கிளி வாழைத் தோப்புலதானே இவனைப் பெத்தா - நழுவுனாப்பல தரைல விழுந்துடுச்சு -அரிவாளால கொடியறுத்து அதையும், புள்ளையும் ஒண்ணா புடவைல சுருட்டி தூக்கிக்கிட்டு வந்துட்டாளே.''

''கடவுளே..''

''அத்தினி நெஞ்சுரப்பு.''

''ஆதரவா ஆளில்லைன்னா அழத்தோணாது செண்பகா. நீ சொன்ன நெஞ்சுரப்பு எவளுக்கும் வந்துரும்,''

''எனக்கு செத்தாலும் வராதுப்பா இத்தினி உரம்.''

''பொத்திப் பொத்தி வளர்ந்துருக்க. வாழ்க்கப்பட்ட இடத்திலியும் தாங்கறம்.''

''அடடா அரியாசனத்துல வச்சுல்ல தாங்குறீங்க.''

''நன்றிங்கறது சுபாவமா வரணும் செண்பகா, சொல்லிக் குடுத்து வராது.''

''தாலி கட்டி குடித்தனம் போட்டு அனுபவிக்கறதுக்குப் பொம்பளைதான் நன்றி சொல்லணுமாக்கும். ஆம்பிளைக்கு ஒண்ணுமேயில்லையா?''

''இருக்கு யாரு சொன்னாங்க இல்லைன்னு.''

''ஆனா வாயா வார்த்தையா வராது. மெதப்பா கை கட்டி நின்னுடுவீங்க.''

''ஆம்பளை தேங்க்யூ சொன்னா, பொம்பளைங்க பயந்துடுவாங்க செண்பகா.''

''ஏன்.. ஏன் பயப்படணும்''

''போறம்னு நெனைச்சுட்டானோ.. இனிவேணாம்னு ஒதுங்கிடுவானோன்னு கலவரப்பட்ருவாங்க.''

''தேங்க்யூ செண்பகா.''

''தேங்க்யூ நானும் செண்பகா விறுவிறுவென்று வீட்டுப் படியேறினாள். பன்னீர் அவள் கோபத்துக்கு வாய்விட்டுச் சிரித்தான். படியேறி அப்பாவின் அருகில் உட்கார்ந்தான்.

''ஏண்டா, செண்பகா கோச்சுக்கிட்டு போவுது. கொடியேத்தம் நடந்துச்சில்ல.'' கிழவர் கண்ணைத் திறந்து பார்த்தார். சாய்மானத்தை விட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டார்.

அப்பாவுக்கு உடம்பெல்லாம் செவி.

''கோவம் ஒண்ணுமில்லையப்பா.''

''வழக்கமா வாசல்ல செருப்பவுட்டு கைல எடுத்துக் கிட்டுப் போவும், சரக்கு சரக்குன்னு வெராண்டா ஏறிச்சேன்னு கேட்டேன்.''

அப்பாவுக்கு மனசெல்லாம் மூளை. மயிர்க்காலெல்லாம் கண்.

''தெரிலைப்பா. கேட்டுட்டு வர்றேன்.''

''தம்பல்லு தனக்கு விஷமல்ல. பொண்டாட்டி சொல்லு பெரிய விஷயமில்லை, போ எந்திரிச்சு.''

''மாமா எப்ப சாப்பிட வருவாங்க. கேளுங்க.''

''வந்துட்டேன்.''

கையில் மோர் ஊற்றி குடிக்கிறவரை பேச்சில்லை. மாமா கையலம்பியதும் அடுத்து குவளையை மொண்டு காத்திருக்கையில், அருகில் வந்து பன்னீர் அடக்கமாட்டாமல் அவளைப் பார்த்து சிரித்தான்.

''ச்சீ.. சிரிப்பு ஒரு கேடு உனக்கு, கோள்மூட்டி. வெட்கமானம் ஒண்ணும் கிடையாது. உக்காந்து எல்லா விஷயத்தையும் அப்பாக்கிட்ட சொல்லு.'' வாசலுக்குப் போகிற மாமனாரைப் பார்த்துக் கொண்டே அடிக்குரலில் அதட்டினாள்.

''ஏற்கனவே எளப்பம் நானு. இனி வெங்காயம் உரிச்சு கண்ணைத் துடைச்சாக்கூட சதா சண்டைதானா வூட்லன்னு கத்துவாரு. நான் தலையெழுத்தேன்னு கேட்டுக்கணும்.

''அத்தினி அக்கறை மருமக மேல''

''சாமி.. எனக்குத் தாங்காதுப்பா அத்தினி அக்கறை, பெத்து இறக்கி கிழவன் மடில போடறதுக்கு எனக்குத் துப்பில்லை. யாரை நோவறது. கன்னுக்குட்டி கதவுல முதுகு தேய்க்கிற சத்தம் கேட்டாலும், ஆள் வராப்புல பதறிப்போவுது உடம்பு.''

''அடடா.''

''நாம மெட்றாஸ் போறோம் அடுத்த வாரம். டிக்கெட் வாங்கு. பீச் பாக்கறதுக்கு இல்லை. நான் புள்ளை பெறுவனா மாட்டேனான்னு தெரிஞ்சுக்கறதுக்கு.'' சட்டென்று முகத்தைத் தலைப்பில் பொத்திக்கொண்டு செண்பகா அழுதாள். பன்னீர் கலங்கினான்.

''புரிஞ்சுக்கற ஆளா உன்னை உங்க வூட்ல வளர்க்கலையே.''

**5**

''**வா**ஸ்தவம், அம்மா இல்லாத வளர்ந்தவன் நான். கூடப் பொறப்பும் இல்ல. நானே சோறு எடுத்துப் போட்டு தின்ன நாளுதான் அதிகம். புரியாதது நூறு ஆயிரம் இருக்கலாம். இதப் புரிஞ்சுக்கன்னு தெளிவா சொல்றதுல தப்பில்லையே.''

''அவிழ்த்துப் போட்டாப்பல சொல்றதுக்குப் பெண்டாட்டியால முடியாதுப்பா.''



''புரியலை செண்பகா.''

''புரிஞ்சு என்ன வுட்ருவோம். மெட்ராஸ் போறது கவனம் இருக்கட்டும்.''

''ரெண்டு வருசம் பார்ப்பமே.''

''நரைச்சப்பொறவு போலாங்கிறியா.''

''நாப்பதுக்குத்தான் நரைக்கும்.''

''எனக்கு இருக்கற உளப்பல்ல, இன்னும் ரெண்டு வருஷத்துல நரைச்சுடும். இப்பவே உச்சியில் ரெண்டு மூணு நரை இருக்கு.''

''அதிகமா அலட்டிக்கற.''

''அலட்றனா. சோத்துல கை வைக்கத் தோணலை. தின்னாலும் பகீர்னு எரிஞ்சு போற மாதிரி இருக்கு. இப்படியே கட்டாந்தரையா கிடந்துருவோம்னு நினைக்கிறப்பவே பதறிப் போவுது.''

''டெஸ்ட் எடுத்து ஆமான்னுட்டா என்ன செய்வே?''

''அத உன் வாயால சொல்லாத வேணாம்.''

''இத்தினி பயம் இருக்கறப்ப டெஸ்ட் எதுக்கு?''

''அடுத்தபடி என்னென்னாவது யோசிக்கலாம்.''

''அடுத்தபடின்னா.''

''வேற எவளையாவது நஞ்சை புஞ்சையாப் பாத்துக் கட்டிக்கன்னு சொல்லிட்டு நகர்ந்துடணும்.''

''ஒஹோ.''

''என்ன ஒஹோ''

''பொட்டாக் கழுதை, கைநீட்டி அடிக்கக் கூடாதுன்னு பாக்கறேன். எக்குத்தப்பா ஏதாவது பேசினா செருப்பு பிஞ்சிடும்.''

''ஏம்பா திட்டுறே?''

''போடி நாறக் கழுதை.''

''அப்ப டெஸ்டுக்கு ஒத்துக்கமாட்டியா?''

''யார் டெஸ்டு.''

''நான், நீ ரெண்டு பேரும்.''

''அடி சக்கை, நான் கூட டெஸ்ட்டுல உண்டா.?''

''வேற நிலம் வாங்கிட்டு அப்புறம் விதை சரியில்லைங்கறதவிட..''

பன்னீர் செல்வம் வாயைப் பொத்திக் கொண்டு அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஏம்பா.. வேணாம்னு தோணுதா. அப்போ மெட்றாஸ் போவேணாம். மறந்துரு.''

''போறோம்.''

''ஏன்?''

''விதை தப்பா, விளைச்சல் தப்பான்னு பாத்துடலாம்.''

''விளைச்சல் தப்புன்னா?''

''விதையை அடுப்புப் பரண்ல போட்டுருவோம். விதையே தப்புன்னு வந்தா விளைக்க வேறாள் கொண்ணாந்துடலாமா, குத்தகைக்கு.''

''ஏய்.. ச்சீ.. த்தூ.. வாயைக் கழுவு.''

''நீ சொன்னதுதானடி நாயே.. நான் சொன்னா வாயைக் கழுவணுமா.''

''நீ ஆம்பிளை.''

''அடி விளக்கமாறே.''

''எம்மா.''

''தியாகம் பண்ணலாம்னு பார்க்கிறியா. ஐயோ பாவம் செண்பாகன்னு ஊர்கூடி அழுதா உள்ளுக்குள்ளே கிளுகிளுப்பா. படிச்ச பொம்பளையாம். மூஞ்சியப்பாரு. உம்படிப்புல...''

''நொந்து போறாப்புல உன்னை என்னா சொன்னாங்க. நான் சொன்னேனா.. எங்கப்பன் சொன்னானா''

''இன்னிக்கு சொல்லை.''

''நாளைக்கு சொன்னா, எங்க மூஞ்சியில துப்பிட்டு வெளிய போடி..''

''இன்னும் கேவலம், நானே போனாகூட புருஷன் வீட்ல தள்ளி வச்சிட்டாங்கன்னுதானே ஊர் சிரிக்கும்.''

''டெஸ்டும் வேணாம். ஒரு மயிரும் வேணாம். பொறந்தா பொறக்கட்டும். பொறக்கலேன்னாலும் சரி, சாவுற நேரத்துல சொத்தை தருமத்துக்கு எழுதி வுட்டுறலாம். வாரத்துக்கு ரெண்டு தடவை பூந்தி குடுத்துத் தீத்துடலாம்.''

''என்னால முடியாது. ஊர்ல அத்தினி பொம்பளைக்கும் புள்ளைக் குட்டி இருக்கு. எனக்குத்தான் இல்லேங்கறப்ப எனக்கு ஊர் பொம்பளையும் புடிக்கல. ஒரு புள்ளைக் கிட்டயும் ஒட்டல, எல்லாத்து மேலேயும் வெறுப்புதான் வருது. வெறுத்து வெறுத்து கோவம்தான் வருது.''

''அதனாலதான் கொடியேத்த வரமாட்டேன்னியா.''

''அப்பாடி. இப்பவாவது புரிஞ்சுதே. ட்யூப் லைட்டுன்னு வாங்க. நீ பெட்ரோமாக்ஸ், உனக்குப் புரிஞ்சு பத்திக்கறதுக் குள்ளே எதிராளிக்கு வேர்த்து வுட்டுறும்.''

''எனக்குப் புடிக்குது செண்பகா. இந்த கிராமத்துப் புள்ளைங்க அத்தினிக்கும் ஏதாவது செய்யமாட்டமான்னு தோணுது. எனக்கு இல்லாது போனா என்ன? இத்தினி திரியுதே.. இதுங்களுக்கு ஏதாவது செய்யலாமேன்னு படுது.''

''செய்யறதைத் தடுக்கலை. என்னைக் கூப்பிடாத.''

''ஏன்.''

''இல்லேன்னுதான் பூந்தியா கொட்டறா. இருந்தா இத்தினி வீசு வீசுவாளான்னு பேசுவாங்க. இவளுக்குத்தான் இல்லியே. குடுத்தா என்னன்னும் பேச்சு வரும். வேணாம்பா. நின்னாலும் குத்தம், உக்காந்தாலும் குத்தம்,''

''பேசிட்டுப் போறாங்க.''

''எனக்குச் சொல் தாங்காது.''

''சக்களத்திய மட்டும் தாங்கிடுவியாக்கும்.''

''தலையெழுத்தேன்னு வூட்டுக்குள்ள ஒரு ஓரமா ஒதுங்கிடுவேன்.''

''வீட்டுக்குள்ள ஓரமா ஒதுக்கிப் போடவா உன்னைச் சுத்திச் சுத்தி வந்தேன். அவ்வளவுதானா என்னைப் புரிஞ்சுக் கிட்டது.''

''கன்னு ஈனும்னு தான் சீமப்பசு வாங்குகிறோம். ஈத்து போச்சுன்னா தைரியம் இருக்கிறவன் அடிமாட்டுக்கு வித்துருவான். இல்லாதவன் அது பாட்டுக்குக் கிடந்துட்டுப் போவுதுன்னு ரெண்டு பிரி வைக்கலை அள்



ளிப்போட்டு..''

''எனக்கு தைரியம் இல்ல.''

''கடைசி வரைக்கும் சோறு போட்டு வச்சுக்குவேங்கிறியா.''

''எழுந்து போடி இங்கேருந்து.''

''எம்மா கன்னுங்கறே''

''அப்பாக்கிட்ட சொல்லிட்டு விடிகாலம்பற மெட்றாஸ் போறோம்.''

''ரயில் டிக்கெட்டு.''

''கார்ல போறோம்.''

''அப்பாக்கிட்ட சொல்ல வேண்டாம்.''

''ஏன்.''

''எம்மேல தப்புன்னு வந்துட்டா.''

''வந்துட்டா.''

''ரொம்ப தவிப்பாங்க, இந்த சனியனை தள்றதா, தக்க வச்சுக்கறதான்னு ஊசலாடுவாங்க.''

''எம்மேலதான் தப்புன்னு தெரிஞ்சா.''

''இன்னும் வேதனைப்படுவாங்க. ஐயோ இந்தப் பொண்ணுக்கு இப்படி ஆயிடுச்சேன்னு வாய்விட்டே அழுதுடுவாங்க.''

''ரெண்டு பேருமே தப்புன்னு ரிஸல்ட் வந்தா நிம்மதியாயிடும் செண்பகா.''

''வேணாம்பா, வேணாம்.''

''ஏன்.?''

''நீயாவது நல்லா இருக்கணும். உனக்குன்னு இல்லைன்னாலும் உங்க அப்பாக்கோசரம் உன் ரிஸல்ட் நல்லபடியா வரணும். அவருக்கு இப்பவே கவலை வந்துருச்சு. நமக்கோசரம் ராமாயணம் படிக்கிறாரு. உங்கம்மா படத்துக்கு முன்னாடி ஏங்கின மாதிரி நிக்கிறாரு.''

''டெஸ்ட் பண்ணிக்கலாம் செண்பகா. தப்புன்னா மருந்து மாத்திரை சாப்புட்டாவது சரி பண்ணலாம். தெரியாது போச்சுன்னு பின்னால புலம்பறதவிட..''

''நீயும் செஞ்சுக்கப் போறியா.''

''நிச்சயமா.''

''எம்மேல கோவமா.''

''ச்சிச்சி. நானும் செஞ்சுக்கறதுதானே நியாயம்.''

''இப்படி பக்கத்துல வந்து படேன்.''

''கை போட்டு இறுக்கிக்க என்னை.''

''....''

''காதாண்ட கடிப்பியே அத செய்.''

''என்னைப் புடிச்சிருக்கா உனக்கு. எம்மேல ஆசை குறையலியே. நான் உன் உசிருதானே. என் சொத்து தான் நீ. என் ராஜாதானா.. வா. கிட்டவா. இன்னும் இறுகிக்கிக் கட்டிக்க. சந்தோஷமா இருக்கியா நீ. எத்தினி குறையிருந்தாலும் கடைசி வரைக்கும் வுட்ரமாட்டியே. ச்சீ அழுவாதப்பா. எம்புள்ளை. எம்புள்ளை நீ. அழக்கூடாது. எங்கய்யா கண்ணுல தண்ணி கலங்கி நான் பார்க்கக்கூடாது. இந்த புள்ளை போறும் எனக்கு. என் தலைமுடிய புடிச்சி இழுத்து சுளீர்னு அடி, அடியேன். எக்குத்தப்பா

பேசினா அப்பவே போடு. கூசாம முதுகுல ரெண்டு வை. முடியாதுங்கியா. அப்பிடியே இறுக்கிக் கொன்னுடணும் உன்னை. உடனே நானும் செத்துடணும். கைகோத்துக்கிட்டு கடல் கடலா, மலை மலையா, காத்தோட காத்தா போவணும். உனக்கு ஆசையில்ல அப்பிடி..?''

பன்னீர் கூரையை வெறித்தபடி கிடந்தான். செண்பகா அவன் முகவாயை முத்தமிட்டுக் கொண்டிருந்தாள். காதோரம் நகர்ந்து ''ம்... ஏய்... என்ன வேணாமா'' என்று கொஞ்சினாள். அவன் களைத்த பிறகு உடம்பு முழுவதும் துடைத்தாள். அவன் கண்மூடி தூங்கிய பிறகும் அவனையே வியந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

காலம் பகைத்தாலும் கணவர் பணி செய்து
காதல் உறவாடுவேன்
உயிர் மானம் பெரிதென்று வாழும் குலமாந்தர்
வாழ்வின் புகழ் பாடுவேன்.

என்று பாடினாள்.

பின்பக்கம் கன்று குரல் கொடுத்தது.

புடவையை உதறி உடுத்திக் கொண்டு பால் குவளையைத் தேடினாள். எடுத்துக் கொண்டு கொல்லைப்புறம் போய் கன்றை அவிழ்த்து விட்டாள். கன்று தரையில் சறுக்கி பசுவிடம் ஓடியது. முன்பற்களால் காம்பைக் கவ்வி ஆவேசமாய் நெற்றியால் மடியை இடித்தது.

செண்பகா களைப்போடு கன்றுக்கருகில் உட்கார்ந்தாள். பிரமை பிடித்தவள் போல் கன்று இடிக்கும் பசுவின் மடியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''செண்பகா சட்டுன்னு திரும்பாத. நான் சொல்றத முழுக்கக் கேட்டுட்டு மொள்ள நீயா யதேச்சையா பாக்குற மாதிரி பாரு. உனக்கு நேர்பின்னால ப்ரவுன் சோபா இருக்குல்ல...மஞ்சப் புடவை கட்டிக்கிட்டு கால் மேல கால் போட்டுக்கிட்டு ஒருத்தி இருக்கா. பக்கத்துல ஒரு வயசான அம்மா. சட்டுன்னு திரும்பாத. ஆளை கவனிச்சு வச்சுக்க.''

வரவேற்பு மேசையில் பெயரை எழுதி விட்டு சாவிக்குக் காத்திருக்கையில் காதோரம் பன்னீர் பேசினான். செண்பகா விட்டம், சரவிளக்கு, சுவரோவியம் எல்லாம் பார்த்துவிட்டு அவன் சொன்ன திசைக்குத் திரும்பினாள் பார்த்துவிட்டு என்ன என்பது போல கண் சுருக்கினாள்.

''கேசு...''

''ச்சீ போ. ஹோட்டல் வாசல்ல தனியா உக்காந்திருந்தா கேஸுன்னுடறதாக்கும். யாருக்கோ காத்திருக்காங்களா இருக்கும்,''

''எழுதி ஒட்டியிருக்கு மூஞ்சில.''

''சும்மா எதுனாச்சும் உளறாத.''

''பெட்டு உனக்கும் எனக்கும். இப்பப் போய் பேசிருமுக்கு இழுத்தாரட்டா.''

''ம்ம். இழுத்துட்டு வருவே.''

''அது ருசியே தனி.''

''கருமம். ஏன்தான் அத்தினி ஆம்பிளைகளும் இப்பிடி பொம்பளைக்குக் கெடந்து அலையறீங்களோ தெரியலை.''



''உலகத்துல சுகம் எது சொல்லு?''

''ஆயிரம் சுகம். எத்தினியோ ஆயிரம். சட்டுன்னு மாமாகிட்ட சொல்லிட்டு காரைப் போட்டு மெட்ராஸ் கிளம்பினமே...கிளம்பின பரபரப்பு எத்தினி சுகம். பாதி வழில ஏதோ இடத்துல நின்னு சாப்பிட்டமே...சாப்பிடற போதே மாமா என்ன செய்வாங்கன்னு வீடு பத்தி யோசனை பண்ணினமே, அந்தக் கவலை எவ்வளவு சுகம். வெளியூர்ல நாலு நாள் இருந்துட்டு திரும்பறப்ப ஊர் எல்லை தொட்டதும் தெரிஞ்ச முகமா எதிர்ல படுமே...நம்ம தெருவுக்குள்ள வண்டி நுழைஞ்சதும் அப்பாடான்னு ஒரு குளுமை வருமே...எத்தினி சுகம். நமக்குத் தெரிஞ்சவசங்கக் கூட, நம்ம மனுஷங்க கூட இருக்கிறது எத்தினி இதம். என் தலைகாணி, என் தட்டு, என் ரூம், என் வீடு, என் தோட்டம், என் மாமனார், என் புருஷங்கறது எத்தினி சுகம், எவ்ளோ நிம்மதி. இந்த ஹோட்டல்ல திங்கற பண்டம் அத்தினியும் நெய்யிலயே வறுத்துக் கொட்டட்டுமே, எனக்கென்னமோ எச்சிய திங்கிற மாதிரிதான் இருக்கும். கூட நான் இருக்கும் போதே இப்படி அலையிறியே...''

## 6

''யுவர் ரூம் கீ, ப்ளீஸ். ஸிக்ஸ் நாட்டு டு'' ரிஸப்ஷன் பொம்மை மெல்லிசாய் சிரித்து சாவி கொடுத்தது.

ஆறாவது மாடியிலிருந்து கடல் தெரிந்தது. ''ஐய்யோ கடல் தெரியுதுங்க. பீச் போலாமா. மணல்ல ஓடணும் போல இருக்கு எனக்கு.''

''பீச் பாக்கறதுக்கு வரல்ல. வேற எதுக்கோதான் வரதா சொன்ன...டாக்டர பாக்க வேணாமா.''

''நாளைக்குத்தான், இப்ப குளிச்சிட்டுப் போலாமே.''

''தூக்கம் வருதுன்ன வழியில.''

''கலைஞ்சு போச்சு. அது என்னாங்க?''

''ஹார்பர்.''

''இந்தப் பக்கம்?''

''அண்ணா சமாதி.''

''சரசரன்னு ஒரு ரவுண்ட் அடிப்போமா?''

''வழில தூங்காம இருந்தா சரி.''

கடலைகள் குதித்து வரவேற்றன. காற்றில் கேசம் கலைந்தது. ஒட்டி இழையும் காதலர்களை வியப்போடு பார்த்தார்கள். அண்ணா சமாதியில் சூடம் ஏற்றினார்கள். மவுண்ட்ரோட்டில் சினிமா பேனர்களை அண்ணாந்து பார்த்தார்கள். கபாலி கோவிலைச் சுற்றினார்கள். களைத்தார்கள். அறைக்கு வந்து ஏ.ஸி.யை உச்சத்தில் வைத்துவிட்டு அயர்ந்து தூங்கினார்கள்.

விடிந்ததும் டாக்டருக்குப் போன் செய்தார்கள். விவரம் சொன்னார்கள். டாக்டர் இரண்டு நாள் கழித்து தேதி கொடுத்தாள். அவசர கேஸ்கள் தவிர உடனடியாய் பார்க்க இயலாது என்றாள். உண்டார்கள். தூங்கினார்கள். ஊர் சுற்றினார்கள், மகாபலிபுரம், கமல் படம், முதலைப்பண்ணை, மான்பூங்கா, ரஜினிவீடு, வாஹினி ஸ்டுடியோ, மியூசியம், திருநீர்மலை

என்று அலைந்தார்கள். மெட்ராஸ் வந்ததுக்கு ஞாபகமாய் செண்பகா புடவை வாங்கினாள். பன்னீர் டபிள் பிளேட் ரேஸர், தலைவலித் தைலம் வாங்கினான். அப்பாவுக்குக் கைத்தடி, மாட்டுக் கழுத்துக்கு வெங்கல மணி, வாசலில் மாட்ட வெல்வெட் தோரணம், முழங்கை நீள ட்யூப் லைட் டார்ச், சமீபத்திய சினிமா பாட்டு கேஸட், கூடவே பக்திப்பாடல் கள் நாலு, இளையராஜாவின் கீத வழிபாடு.

வந்த காரியமே மறந்து போயிற்று. எப்போதாவது நினைப்பு வந்தா லும் துடைக்கத் தோன்றிற்று. ஆட்டமும், பாட்டமும், சிரிப்பும், கேலியு மாய் இரண்டு நாட்களும் களைப்பில்லாமல் ஓடின. டாக்டர் சொன்ன தேதி விடிந்த போது மறுபடி மனசில் இருள் கப்பிக்கொண்டது. பத்து மணிக்கு கார் எடுத்து டாக்டர் வீடு நோக்கிப் போகும் போது, பக்திப் பாட் டாய் கேட்டால் தேவலாம் என்றிருந்தது.

என் பாவக் கணக்குக்குப் பட்டியல் போட்டால்
சொல்ல நடுங்குதம்மா-உள்ளம்
சொல்ல நடுங்குதம்மா-முன்னம்
பண்ணிய வினைகள் என்னவென்று பார்த்தால்
அச்சம் பிறக்கும்மா-வினை மிச்சம் இருக்குதம்மா

மெத்தென்ற கம்பளிக் குரலில் சோகம் ததும்ப பின்னணி சங்கீதம் இழைத்து, பாட்டு காதுக்குள் நுழைகையில் மனசு

கனத்து தவித்தது. அயர்ச்சி ஏற்பட்டது. கவனத்தோடு வண்டியைச் செலுத்த முடியாமல் இடதும் வலதுமாய் அலைந்தது. டாக்டர் வீட்டு வாச லில் நிறுத்தி விட்டு மொத்த பாட்டையும் மறுபடி கேட்க விருப்பம் வந் தது.

ஆசை வயப்பட்டு ஆக்கிய தீவினை
ஆயிரம் உள்ளதம்மா-ஒரு
ஆயிரம் உள்ளதம்மா

உள்ளே திசை தெரியாத குற்ற உணர்வு பொங்கிப் பொங்கி குறுக்கிப் போட்டது. யாரையெல்லாம் நோகடித்திருக்கிறோம், யாரையெல்லாம் வேதனைப்படுத்தியிருக்கிறோம் என்று அலச ஆரம்பித்தது. மனசு பட்டி யல் தேடிற்று.

பெற்ற குழந்தையை எட்டி உதைப்பது
தாயின் செயலல்லவே-நல்ல
தாயின் செயலல்லவே-ஒரு
குற்றம் இழைக்காத மானிட ஜன்மத்தைக்
காணல் எளிதல்லவே-எங்கும்
காணல் எளிதல்லவே.

எனவே தவறு செய்திருப்பினும், எவருக்குத் தீங்கு இழைத்திருப்பி னும் கடவுளே, சமயபுரத்தாளே காப்பாற்று என்கிற கேவல் எழுந்தது. தெரிந்து எவ்ரையும் மிதித்ததில்லை சர்வேஸ்வரா ,திட்டமிட்டு எவரை யும் நோகச் செய்ததில்லை. தெரியாமல் மிதித்திருக்கலாம். அழிக்கிறோம் என்ற அறிவு இல்லாமலே அழித்திருக்கலாம்.

பெற்ற குழந்தையை எட்டி உதைப்பது தாயின் செயலல்லவே... எந்த ஜென்மத்திலாவது எந்தக் குழந்தையையாவது எட்டி உதைத்திருப்



போமோ? ச்சீ என்று புறங்கையால் புறக்கணித்திருப்போமோ? கார் கதவு திறந்து நர்ஸிங் ஹோமுக்குள் போகவே முடியவில்லை. அடுத்துப் பொங் கிய தாலாட்டுப் பாட்டு கட்டிப் போட்டது. தாயே தாலேலோ என்று பாடிய போதெல்லாம் உள்ளே தொட்டில் விளையாடிற்று. கைகளை ஏணையாக்கி மார்புப் படத்தையே மெத்தையாக்கி உடுப்பு சூட்டையே போர்வையாக்கி ஒரு குழந்தையைத் தூங்கப் பண்ண ஆசை வந்தது.

மாணிக்கச் சிலையே மரகதக் கொடியே
தாயே தாலேலோ.

வார்த்தைகள் இசையோடு பொங்கிய போதெல்லாம், அரைஞா ணும், அரசிலையுமாய் பெண் குழந்தை மனசுக்குள் சிரித்தது. கேஸட் நின்று பத்து நிமிடம் வரை எதுவும் செய்ய முடியவில்லை. மெல்ல எழுந்து நர்ஸிங் ஹோமுக்குள் நுழைந்து பெயர் சொல்ல, நாலு நிமிடத் தில் தனித்தனியே பன்னீரையும், செண்பகாவையும் கூட்டிப்போனார்கள். கேள்வி கேட்டார்கள், சிரிக்காமல் பச்சை பச்சையாய் கேட்டார்கள். சோதித்தார்கள். இரண்டு நாள் கழித்து ரிப்போர்ட் வாங்கிக் கொள்ள வரச் சொன்னார்கள்.

பன்னீர் நாற்காலியை ஜன்னலோரம் இழுத்துப் போட்டுக் கொண்டு கடலைப் பார்த்துக் கொண்டிருந்தான். செண்பகா கட்டிலில் குப்புறப் படுத்துக்கிடந்தாள். இரண்டு நாளில் தெரிந்துவிடும். யார் லாயக்கு, யார் லாயக்கில்லை என்று பட்டவர்த்தனமாய் தெரிந்து விடும். இரண்டுமே குற்றம் என்றால் நிம்மதி. நிச்சயமான நிம்மதி. இவ்வளவுதான் நம் தலை விதி என்று உட்கார்ந்து விடலாம். ஆரவாரம் எல்லாம் விட்டு அடங்கி விடலாம். தின்று, செரித்து, வெளிப்படுத்தி உயிர் வாழ்தலைத் தவிர வேறு கடமையில்லை என்பதாய் முடங்கிவிடலாம். ஓலை வந்ததும் புறப்பட் டுப் போகலாம். இங்கு மட்டும் தான் குற்றம் என்று ஒருவரை கை காண் பித்து விட்டால்தான் பிரச்சனை. அழுகையும், வேதனையும் சமாதானப் படுத்த முடியாத சங்கடமும்... நான் தானே உனக்கு பாரம்... நான் தானே மட்டம்... நான் தானே இடைஞ்சல் என்றெல்லாம் புலம்ப வேண்டி வரும். சரி அப்ப நான் விலகிக்கிறேன் என்கிற பேச்சு வரும். சண்டை வரும். ஆணுக்குக் குறையிருந்தால் இந்த விலகல் பேச்சு கூட ஆபாசமாய் ஒலிக்கும்.

வந்திருக்க வேண்டாமோ, நாளை விடியும் என்று வெற்று நம்பிக்கை யோடு இருப்பது ஒழிந்து. இனி வாழ்க்கை இருட்டுமயம் என்கிற நிலை வர ஒளிக்கீற்றே இல்லை என்று போகுமோ... வந்திருக்க வேண்டாமோ...

இருவரும் ரூமிலேயே அடைந்து கிடந்தார்கள். மாங்காடு கோவிலுக்கு மட்டும் போனார்கள். கூட்டம் நெளிய அவஸ்தைப்பட்டார் கள். மனசு ஒரு முகப்படாமல் கரம் கூப்பிவிட்டு வந்தார்கள்.

சந்தை போலவே கூடிடுவோரும்
சொந்தம் போலவே நாடிடுவோரும்
போடும் வேஷமம்மா-வெறும்
பந்த பாசமம்மா...பொம்மை
உறவுமானதம்மா உண்மை
வழித்துணையாரம்மா.

காரில் கேட்டுக் கொண்டு வந்த பாட்டுக்கு நெகிழ்ந்தார்கள். எதற்கு இப்படி அலைகிறேன், என்ன ஆசை, எனக்கு எது முக்கியம், யார் இங்கு உறவு? இனம்புரியாத கேள்வியில் தவித்தார்கள். அருகருகே இருப்பினும் அவரவர் மௌனம் அவரவரைச் சூழ்ந்து கொள்ள தனித்தனியாய் உணர்ந்தார்கள். அநாதை என்கிற நினைப்பில் அவஸ்தைப் பட்டார்கள்.

''நாம லவ் பண்ணினது யாருக்கும் பிடிக்காம போச்சா செண்பகா. நம்ம கல்யாணம் பெரிய ஹிம்ஸையா யாருக்கும் பட்டுடுச்சோ.''

''தெரியலை.''

''என்ன ரிப்போர்ட் வந்தாலும் நமக்குள்ள வச்சுக்குவோம் செண்பகா. யாருக்கும்... அப்பாகிட்டக் கூட சொல்ல வேணாம்.''

''ப்ச்ச்...''

''எதுக்கு சொல்றேன்... தெரியுமா உங்க வீட்டுக் குத்தம்... எங்க வீட்டு குத்தம்னு நாலு பேர் பேசி நமக்குள்ள சண்டை மூட்டி விட்டுடுவாங்க. நமக்குள்ள சண்டை வரக்கூடாதுடி செண்பகா. என்ன வந்தாலும் சரி... நாம பிரியக் கூடாது.''

''அப்படி யொண்ணும் சட்டமில்லை.''

''என்னம்மா பேசற?''

''எம்பேர்ல குத்தம்னா நீ இன்னொரு கல்யாணம் பண்ணிக்க.''

''அறைஞ்சு கொன்னிருவேன்,

''வுட்டேன்னு சொல்லு. இன்னொரு தடவை அந்த வார்த்தை சொன்னே... ரொம்ப பொல்லாதவளாயிடு வேன்.''

''புருஷன் இன்னொன்னு கட்டிக்கிட்டா இதான் சாக்குன்னு ஊர்மேல போலாம்னு பார்க்கிறயா.''

''அது உம் புத்தி. உங்கப்பாரு புத்தி.''

''பெல்ட் பிஞ்சிடும் செம்பகா.''

''அதுக்கு வேறாளப் பாரு. இந்த மிரட்டலுக்கு மசியறவ நானில்ல.''

''கிட்டவா நாயேன்னா மூஞ்சிய நக்கற பாத்தியா அப்பப்ப வாய் மேல போட்டாதான் புத்தி வரும். ஒரு மிதி மிதிச்சேன்னா,''

''நான் சொல்லாட்டியும் நாளைக்கு ஊர் பேசுமே... அப்ப என்ன செய்வே...''

''உம் பேச்சுக்கு யாரை மிதிக்கிறதாம்,''

''இன்னொரு கல்யாணத்தைப் பத்திப் பேசாதேன்னு சொல்லியிருக்கேன்ல...''

''ஊர் சொல்லும்டீ... சொல்லும். சொல்றப்ப என்ன செய்றேன் பாரு, இப்ப உன் திருவாய மூடிக்கிட்டுக் கிடடீ,''

''இது நியாயம்தான்.''

''ஏய், தீர்மானமா சொல்றேன். என்ன ரிஸல்ட் வந்தாலும் சரி. நம்ம வாய் திறந்து யார்கிட்டேயும் இது பத்திப் பேசக்கூடாது. இது நம்ம விஷயம், நம்மோட முடியட்டும்,''

''இப்பப் புரியுது.''

''என்னா.''

''ஒரு வேளை தனக்குத் தப்புன்னு வந்துட்டா செண்பகா வெளிய சொல்லிடப் போறாளே... சொன்னா அவமான மாச்சே... அதனால



காபந்தா பேசற... ஓடிப் போயிடுவாளோ செண்பகான்னு பயப்படற.''

''போயேன், பீடையே போச்சுன்னு தலை முழுகுவேன்.''

''ஓடமாட்டேன்னு பாக்கறியா.''

''கூட ஓடறதுக்கு நல்ல ஆள் கிடைக்கணுமே, என்ன மாதிரி சொத்தையில்லாம.''

''கருமம்''.

''ஐய்... நீ சொல்லலாம். நான் சொன்னா கருமமா.''

''சண்டை வேணாம்பா. முள்ளுல துணி போட்டுட்டோம் கிழிக்காது எடுப்போம்.

''அப்பாவை நினைச்சாதான் கஷ்டமா இருக்கு செண்பகா. அவர பாக்கறப்பல்லாம் வயிறு புரளும் நம்ம ரெண்டு பேருக்கும். தெரிஞ்சா உடைஞ்சு உசிரை வுட்றுவாங்க.''

''என்னைத் தலைல வச்சி கொண்டாடிக்கிட்டிருக்காரு.''

''மொத மொதல்ல உங்கிட்டப் பேசிட்டு வந்ததுமே ஒரே குஷியாயிட்டாரு. எம்.ஏ.படிக்குஅந்தப் பொண்ணு.வூடு முழுக்க விதவிதமா கோலம் போட்டுருக்குனுட்டே நுழைஞ்சாரு.''

''நல்லா சமைப்பியான்னு என்கிட்டே கேட்டாரு.''

''கல்யாணத்துக்கு முந்தியே ஒரு நாள் வந்து ரசம் வச்சுக் குடுத்தியே... நாக்கச் சப்புக் கொட்டிக்கிட்டுக் குடிச்சாரு.''

''உங்கம்மா நகை அத்தினியும் கல்யாணத்துக்கு மொத நாள் குடுத்தனுப்பிச்சாரா... எங்க வூடு அப்படியே அசந்து போச்சு, கைல மாட்டறதா, கழுத்துல மாட்டறதான்னே பல பேருக்குத் தெரியலை.''

''நம்ம கல்யாணம் யாருக்கும் பிடிக்காம போச்சா செண்பகா.'' பன்னீர் அயர்ந்தான், ''யார் வயிறும் எரிஞ்சு போச்சா நம்ம கல்யாணத்தைப் பார்த்து?'' முகவாயை ஏந்தி தொலைதூரம் வெறித்தான்.

செண்பகா கண்களை மூடிக் கொண்டாள். பழைய நினைவுகளில் மூழ்கினாள். கல்யாணமா அது. உற்சவம், ஐந்து நாள் உற்சவம்.

## 7

"நாலு தாய்மாமன் இருக்கறப்ப இப்படி ஊர் விட்டு ஊர் கட்டலாமா, மனசுக்குப் புடிச்சுக் கட்டுற தெல்லாம் நம்முளுதுல கெடையாது.நிலம் பிரிஞ்சுரக் கூடாதுன்னு தான் ஒண்ணுக்குள்ள ஒண்ணா முடிச்சுடுறது. கோட்டைக் கட்டி பிள்ளையாருக்குப் பொண்ணக் குடுத்துட்டு, சம்பந்தி வராங்கன்னு தழைஞ்சுக்கிட்டு நிக்கணுமாக்கும், கூலிக்கு அறுக்கிறவன் கூட வூடு வாங்கிட்ட பிள்ளைன்னு பேர் மாத்திக்கிறான் என்ன வம்சம் ஏதுன்னு விசாரிக்க வேணாமா?''

முதிர்ந்த உறவுப் பெண்டுகள் மறித்த போது தாய் மாமன்கள் தான் துணையானார்கள். இருவருக்குத் திருமணமாகி விட்டது. இருவர்காத்திருந்தார்கள். எல்லோருக்குமே விவசாயம்தான் தொழில் எஸ்.எஸ்.எல்.சி. படிப்பு.

''உன் தம்பிக்கு என்ன பதில். அவன் முறைப்பொண்ணு தான் செம்பகா.'' ''அரசிலை போட்ட நாள்லேர்ந்து எங்க தோள்ல வளர்ற குழந்தை

அது. என் தம்பி எவனும் கட்டமாட்டான். கூடப்பொறந்த பொறப்பாட்டம் நெனைச்சக்கிட்டிருக்கோம் ஆசைப்பட்ட இடத்துல கட்டிக் குடுக்குறோம்.''

''அப்பப் பொண்ணுக்கு நிலம் பிரிச்சுக் குடுத்துருவியா, ஒத்தைக் கட்டுமானமா ஒரு வாய்க்காலா ஒரே சரிவா வர இடத்துல சம்பந்திருக்குப் பங்கு போட்டு குடை பிடிச்சுகிட்டு நிப்பியா.''

''குடுத்துட்டுப் போறோம். மச்சான்னு கூப்புட்ட குரலுக்குப் பெண்ணு கட்டின ஆள் வராதயா போய்டுவான். அசலா அன்னியமா, வேற சாதியா. அடுத்தாருதானே. இஷ்டமிருந்தா வந்து கல்யாண சாப்பாடு சாப்பிடு. இல்லியாவுடு. உன் மொய் பணத்துக்கு யாரும் நிக்கல.''நாலு மாமன்களும் திடமாய் நின்றார்கள்.

நாலு பக்கமும் பந்தல் போட்டு வாழை நிறுத்தினார்கள். கிராமத்தில் அத்தனை திண்ணைக்கும் பெட்ரோமாக்ஸ் விளக்கு வைத்தார்கள். ஜமுக்காளம் விரித்து நாப்பது சீட்டுக்கட்டு. முப்பது வில் வண்டி... மூணு டிராக்டர் ட்ரெய்லர், அடுப்பு கட்டின செங்கல் இரண்டு மாதம் சுட்டது. இரு நாறு பவுன் சீர் எடுத்து பன்னீர் வந்ததுமே கிராமம் அதிர்ந்தது. தன் மனைவியின் நகை அனைத்தும் தன் மரு மகளுக்கே என்று மீசையில் கை போட்டு அய்யாசாமிப்பிள்ளை நடுக்கூடத்தில் சொன்னபோது தாய்மாமன்கள் எதிர் சீர் என்ன என்று கலங்கினார்கள். கன்னுக்குட்டியோடு ஒரு சிமைப் பசுவும் காணி நிலமும் போதும் என்றதும் நன்றியில் நனைந்தார்கள்.

''வேற ஏதாச்சும் கேக்கலாம், செய்யறோம்,'' என்று முன் வந்தார்கள்.''

''அன்னியமா நினைக்காத அப்பப்ப வந்து போய்க்கிடடிருங்க. அது போதும்.''

மறுவீடு அழைப்பே பெரிய ஊர்வலம் மாதிரி இருந்தது. செண்பகா கணவனின் கையைப் பிடித்துக் கொண்டு புகுந்த வீட்டுக்குப் புறப்படுகையில், கடைசி மாமன் விக்கி விக்கிக் குழந்தை மாதிரி அழுதான். பன்னீர் அவன் முதுகைத் தட்டி சமாதனப்படுத்துகையில் கழுத்தைக் கட்டிக் கொண்டான்.

''எங்க குல விளக்கு... எங்க குல விளக்கு'' என்று வார்த்தையே முடிக்க முடியாமல் தேம்பினான். செண்பகா கையை எடுத்து பன்னீர் கையைப் பொத்தி விரல் வலிக்கப் பிரிக்க முடியாத படி நெறுக்கினான்.

மாமி இருவரும் தோளில் சாய்ந்துக் கொண்டு அழுதார்கள். முன் தலையைக் கோதிவிட்டார்கள். அப்பா படத்துக்கு அருகே அம்மாதுவண்டு உட்கார்ந்திருந்தாள். விழுந்து நமஸ்கரித்த போது காப்பு வளையலை கழட்டிக் கொடுத்தாள். 'நம்ம ஐயா கூடவே இருப்பாங்க. கவலைப் படாதே' என்றாள். அய்யாசாமிப் பிள்ளைக்கு சரிகை வேட்டியும் மேல் துண்டும் செண்பகா மூலம் கொடுத்து அனுப்பினாள்.

வாசற்படி ஓரம் நின்று, ''எம் பொண்ணு தப்பு செஞ்சா தகப்பனா நின்னு கண்டியுங்க. தயங்கவேணாம்'' என்றாள். பொங்கும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

வீடு மொத்தமும் உருகிக் கதறும் இந்த அன்புச்சீர் தாங்காமல் அய்



யாசாமிப் பிள்ளை கலங்கிப் போனார்.

''அதுக்கு அவசியமில்லை. விரை ஒண்ணு போட்டு கரை ஒண்ணு, முளைக்குமா. வூட்டு வாசலை மிதிச்சதுமே இது நல்ல குடும்பம்னு புரிஞ்சு போச்சு எனக்கு ஒருத்தரும் கவலைப்படாதீங்க. எப்ப வேணாலும் வந்து பார்த்துட்டுப் போங்க. நாலு குடும்பம் சேர்ந்து வாழத்தான் கல்யாணம் கார்த்தி. சண்டை சச்சரவுக்கு இல்லை.''

அது சத்திய வாக்கு கையெழுத்தில்லாத உறுதிமொழி சொல்லும் செயலும் ஒன்றான தெளிவு. ஒன்றாக்க முடிந்த பௌருஷம். பெண்மையைக் குடும்பிடுகிற ஆண்மை.

சாந்தி கழிந்த நாலாம் நாள் கொல்லைப்புறம் போய் உட்கார்ந்த போது செண்பகா வீட்டுக்கு ஆள் அனுப்பி வரச் சொல்லி விருந்து கொடுத்து பாயாசக் கூஜாவோடு தாய் வீடு அனுப்பினார்.

''மருமகள் வீட்டு விலக்கா உக்காந்த மொத தடவைக்கு நாங்க செய்றது வழக்கம். ஏன்னு கேட்றாதீங்க. ரொம்ப சூட்சுமமான விஷயம் நம்ம சடங்கு எல்லாத்துக்கும் அடியில ஒரு சந்தோஷம் இருக்கு.''

''புரியலீங்களே... ரொம்ப யோசிச்சுப் பாத்தும்...'' தாய் மாமன் வயல் வெளியில் சந்தித்துக் கேட்டபோது வாய்விட்டுச் சிரித்தாராம்.

''அட... என்ன சம்பந்திப்பிள்ளை வாளத்தாரா இருக்கிரு. வந்து பொண்ணு உக்காரலைன்னா கர்ப்பமான்னு கேள்வி வரும் ஆமான்னா, இது கல்யாணத்துக்கு முந்தியா பிந்தியான்னு ஒரு சந்தோஷம். மூஞ்சிய சுளிக்காதீங்க. எவனோ பட்டுருப்பான். இல்ல பட்டது கேட்டுருப்பான். சடங்கா செய்யணும்னு ஆரம்பிச்சிருப்பான்.''

அய்யாசாமிப் பிள்ளையின் ஒவ்வொரு செயலுக்கும் செண்பகாவின் வீடு அதிசயப்பட்டது. செண்பகா தாய் வீடு வந்தபோதெல்லாம் மீன் குழம்பு வைக்கவும், மசாலா கறி பதமும் சொல்லித் தந்தது. பெரியவரு, கவுச்சு சாப்பிடுவாரா மில்ல... பக்குவம் தெரிஞ்சுக்க' என்று அதட்டிற்று நாலு பேர் சாப்பிடுகிற அளவாய் மச்ச வகைகள் அடைத்து அனுப்பியது.

மனைவி செத்துப் போய் ருசியற்று உண்டு கொண்டிருந்த பெரியவர், மருமகளின் கைவண்ணத்தில் கண் கிறங்கி சாப்பிட்டார். வாசலில் போட்ட இழைக்கோலமும், படியில் பூசிய மஞ்சள் பூச்சும், கதவு கதவாய் தொங்கிய பூ வேலைகளும், இருட்டிலும் பளிச்சென்று காலை வணக்கம் சொல்லும் தலையணை உறை எம்பிராய்டரியும், பகல் தூக்கத்தில் உளறினால் கூட எழுந்து வந்து 'அப்போவ் முழிச்சுக்கங்க' என்று மருமகள் உலுக்குவதும் பரவசப்படுத்தின.

இழைக்கோல அழகையும், பூ வேலை நறுவிசையும் அழைத்துக் கொண்டு வந்து காட்டாத ஆளில்லை.

ஒரு பிற்பகலில் பிறந்த வீட்டுக்குப் போய் வந்து படி யேறுகையில்,

''உங்க தாயாரு எப்படியம்மா இருக்காங்க?''

என்று வாய் வார்த்தையாக பிள்ளை கேட்க.

''இருமறாங்க. நாலு நாள் தடுமன் புடிச்சு... இப்ப தேவலாம்.''

''அடடே'' என்று சொல்லி தரையை வெறித்ததும் நகர்ந்தாள். ஏதோ குசல விசாரிப்பு என்று நினைத்தாள்.

இரவு எட்டு மணிக்கு வந்த பன்னீரை செண்பகா வீட்டுக்குத்து ரத்தி

மாமியாரை விசாரிக்கச் சொல்லி 'குத்திருமலுப்பா' என்று பன்னீர் கவலைப்பட, இரவோடு இரவாக டாக்டருக்கு அனுப்பி இருமல் மருந்துக்கு கார் விரட்டு...

''எண்டா அறிவு கெட்டவனே.. அடிக்கடி போய் பாத்துட்டு வாடான்னு எதுக்குச் சொல்றது. விருந்து தின்னுட்டுவர்றதுக்கா. பெரியவங்களைப் பாத்து சௌக்கிய மான்னு கேக்க வேண்டாம். அவங்க மருமகப் பிள்ளைன்னு மரியாதையா ஒதுங்கிதான் இருப்பாங்க. நீயில்ல சரியா விசாரிக்கணும்.''

அம்மா, மாப்பிள்ளை வாங்கிக் கொடுத்த மருந்து பாட்டிலை காலியான பிறகும் வெகுநாள் பத்திரப்படுத்தி யிருந்தாள்.

''இன்னிக்குப் பங்குனி உத்திரம் சுவாமிமலைல ஜேஜேன்னு இருக்கும். சின்னதா இருக்கப்ப பாத்தது.''

அம்மா பழசை அசைபோட, அத்தனை வேலையும் முடக்கிப் போட்டு கார் எடுத்துப்போய் சுவாமிமலை தரிசனம் செய்வித்து ஊர் முழுக்கப் பிரசாதம் கொடுத்து...

''எங்க மருமவன் சுவாமிமலைக்குக் கூட்டிக்கிட்டுப் போச்சு... எங்க மருமவன் சுவாமிமலைக்குக் கூட்டிக்கிட்டுப் போச்சு... எங்க மருமவன் சுவாமிமலைக்குக் கூட்டிக்கிட்டுப் போச்சு...'' நடுராத்திரியில் அம்மா மரத்தூணோடு பேசும் படியாயிற்று.

''வயல் வேலை கொள்ளையாக் கெடக்கு. அதெல்லாம் வுட்டுட்டு இப்ப சுவாமிமலைக்கு என்ன அவசரம்?'' அம்மாவோட காரில் போகையில் செண்பகா அதட்ட, பன்னீர் பதிலுக்கு முறைத்தான். திரும்பி பின் சீட்டில் அயர்ந்து தூங்குகிற மாமியாரைப் பார்த்துக் கொண்டான்.

''எப்ப... எது முக்கியம்ன்னு ஒரு ஆள் தெரிஞ்சு வச்சுக்கணும். அதை உடனே செய்தாணும்,''

''எங்களுக்கு...அக்கறையில்லையாக்கும் அக்கறைன்னு உங்களாட்டம் ஆ வூன்னு ஆடமாட்டோம்,''

''ச்சீ...நன்றிகெட்ட ஜென்மம். உங்கம்மா இல்லேன்னா நம்ம கல்யாணம் நடந்திருக்குமா. உங்க மாமன் வந்து பேசியிருப்பாரா?''

''அய்...உனக்கெப்பிடிட தெரியும் அது.''

''உன் பெரிய மாமனே சொன்னாரு.''

''கரெக்ட் அம்மாதான் பிடிவாதமா அந்தப் புள்ளை தான் எனக்கு மருமவன்னு சொல்லிருச்சு.''

''அதான் ஏன்னு தெரியல.''

''எனக்கும் அப்ப புரியல. அப்ப ஆடிமாசம் வேற அப்புறம் தான். இங்க வந்தப்புறம்தான் தெரிஞ்சுது. அன்னிக்கு மறுநாள் சுதந்திர தினம். பள்ளிக்கூடத்துல உங்கப்பா கொடியேத்திருக்காரு.''

''எங்கம்மாவுக்கு அது போறல சரியா கேட்டமான்னு ஒரு சந்தேகம் வண்டி கிராமம் தாண்டிருச்சு மடக்கி திருப்பச் சொன்னாங்க. அப்பவும் ஐயாதான் பேசினாங்க எல்லாருக்கும் இனிப்பு குடு. ஊர்ல அத்தினி ஆளு கையிலயும் லட்டு பூந்தி இருக்கணும்னு கட்டளை. அதுவும் போறல, அம்



மாவுக்கு ஆட்டுக்கு வந்து எங்கய்யா படத்துக்கு முன்னாடி பூ போட்டு பாத்து சரின்னு வந்தப்புறம்தான் வுடாப்பிடியா நின்னாங்க.''

''போறும் செண்பகா, சில்லுன்னு நிக்குது உடல்பெல்லாம். உங்கம்மாவுக்கு கோயிலே கட்டணும். நீ என்னமோ பங்குனி உத்திரத்துக்கு அழைச்சிக்கிட்டுப் போறதுக்கு மூஞ்சி தூக்குற.''

''அதான் கல்யாணமெல்லாம் முடிஞ்சு போச்சே. இன்னமும் எதுக்கு தலைல வச்சுக்கிட்டு ஆடணும். வெளியே வந்துட்டா பொறந்த ஊட்டோட ஒரு அளவோட நிக்கறது நல்லதுதான்.''

''உங்க பெரிய மாமனும் தங்கமான மனுஷன்.''

''அது ஆ வூன்னு குதிச்சது எனக்குல்ல தெரியும்.''

''அது சரி. மொதல்ல எங்கப்பா கூடத்தான் குதிச்சாரு. நாளைக்கு உனக்குப் பொண்ணு பொறந்து அது மாந்தோப் புல எவனோட மடிலயோ படுத்துக்கிட்டிருந்தா நீ சும்மா இருப்பியா.''

''இழுத்து வச்சு சூடு போடுவேன்.''

''அத்தச் சொல்லு மகாராணி. தனக்கொரு சட்டம், தம் புள்ளைக்கொரு சட்டமா.''

''சூடு போடறது லவ் பண்ணதுக்கில்ல. பெத்தவளை ஏமாத்துனத்துக்கு.''

''அப்ப உனக்குமில்ல போட்டிருக்கணும்.''

''போட்டாங்களே.''

''எங்க....''

''காமிக்கிறமாதிரி இடத்துல இல்ல.''

''யாரது உனக்கு சூடு போட்டது?''

''பெரிய அத்தை. செம உதை அன்னிக்கு.''

''சொல்லவேயில்லியே எங்கிட்ட.''

''எதுக்கு சொல்லணும். அவங்க கோபம் ரைட்டுனுதான் பட்டுது. ரெண்டு நாள் அழுது பார்த்தேன். மசியல, நேர எங்கம்மா கால்ல வுழுந்து அழுதேன். நான் பாத்துக்குறேம் மான்னுட்டாங்க.''

''கதை மாதிரி இருக்கு செண்பகா.''

''ஆனா யார்கிட்ட சொல்றது. நாளைக்கு நமக்குப் பசங்க பொறந்து பெரிசாக்கன்னா அதுங்ககிட்ட சொல்லலாம், அவ்ளோ கஷ்டப்பட்டு உங்கப்பனைக் கட்டிக்கிட்டு பெத்தேண்டின்னு அலட்டிக்கலாம்.''

## 4

அலட்டவே முடியாது போலிருக்கிறது. அந்தரங்கங்களை அலட்டிக்கொள்ள அடுத்து ஆளே வராதுபோல் தோன்றுகிறது. கடவுளே... என்ன ரிஸல்ட் சொல்லப் போகிறார்களோ தெரியவில்லை. செண்பகா வெளியே கடலோடு பேசிக் கொண்டிருந்தாள். பன்னீர் ஹோட்டல் கட்டிலில் புரண்டு, புரண்டு படுத்துக் கொண்டிருந்தான்.

''காங்கிராஜுலேஷன்ஸ்.''

''அது புரியுதுங்க மேடம், என்ன ரிஸல்ட்?''

''ரெண்டு பேருமே பாஸிடிவ்.''

''புரியலீங்க.''

''ரெண்டு பேருக்குமே ஒரு குறையும் இல்லேன்னு அர்த்தம். எல்லா டெஸ்ட்லேயும் உங்களுக்குக் குழந்தை பிறக்காதுங்கறதுக்கு தடயம் இல்லை.''

''ஆனா அஞ்சு வருஷமா...''

''அது பற்றி தெரியாது.ரிஸல்ட் இப்படி. மேற்கொண்டு சந்தேகம் டாக்டர்கிட்ட கேட்டுக்கங்க.''

''என்னங்க இவ, பாதி கிணத்துல பக்கெட் சிக்கனா மாதிரி சொல்றா.''

ரிஸல்ட் ஆங்கிலத்தில் எழுதியிருந்தது. மருத்துவர்களின் ஆங்கிலம் படித்தால் புரிந்த மாதிரியும் இருந்தது, புரியாதது போலவும் பட்டது. ரிஸப்ஷனிஸ்ட் வேறு யாருக்கோ கங்கிராஜுலேஷன்ஸ் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''டாக்டரம்மா இருக்காங்களா?''

''அரை மணி வெயிட் பண்ணுங்க.'' சிரித்தாள்.

''ஏங்க இவ்ளோ சிரிக்குது இந்தப்பொண்ணு.''

''அதுக்கும் சேர்ந்து சம்பளம் பேசியிருப்பாங்க.''

''தடாலடியா ஆரம்பிச்சுது. என்ன ஏதுன்னா எனக்குத் தெரியாதுன்னு சொல்லிடுச்சு.''

பேச்சும் பாதி.புத்தியும் பாதி. உடம்புல துணியும் பாதி.''

''ம்...நேரா உக்காந்து அதையே பாருங்க.''

''காட்டினா பாக்காத...''

''ப்ச்சு...போறும்.''

உள்ளே கதவு தள்ளி நுழைந்ததும் டாக்டரம்மா மலரச் சிரித்தாள்.

''ஒருதப்புமில்லை செண்பகவல்லி, சில டெஸ்ட் எல்லாம் ரெண்டு தடவைக்கூட செய்யச் சொன்னேன். சின்ன டாட் அளவுகூட சந்தேகம் இல்லை. பயப்படாத ஊருக்குப் போ.''

''டாக்டர், குழந்தை பொறக்கும்றீங்களா?''

''நிச்சயம் பொறக்கணும்.''

''பொறக்கும்னு சொல்ல மாட்டேங்கிறீங்களே டாக்டர்.''

''மிஸ்டர் பன்னீர்செல்வம், பிறக்காதுன்னு சொல்ல எந்தத் தடயமும் இல்லை. அதுக்குத்தான் டெஸ்ட் நடந்துருச்சு.''

''குழப்பமா இருக்கு டாக்டர், நீங்க பேசறது.''

''கடவுள் மேல் பாரத்தைப் போடுங்க பன்னீர்செல்வம்.''


''உங்களை நம்பிக்கிட்டு மெட்ராஸ் வந்தோங்க.''

''நோ.நோ.நான் டாக்டர். உங்களை மாதிரி மனுஷி. எனக்கும் தலைவலி, காய்ச்சல் வரும். மெடிகல் தியரிப்படி உங்களுக்குக் குழந்தை பிறக்காம இருக்கிறதுக்கு எந்தக் குறைபாடும் இல்லை. நம்பிக்கையோட இருங்க.''

''தளர்ந்து போய் வந்தோம் உங்ககிட்ட?''

''என்னால் முடிஞ்ச அத்தனையும், என் படிப்பு அத்தனையும் காட்டி





டெஸ்ட் செய்திருக்கேன். இதுக்கு மேல என்ன செய்ய முடியும்? பிறக் கும்னு நம்பிக்கையோட இருங்க. என்னுடைய படிப்பு தாண்டி ஒரு யோசனை.கர்ப்ப ரட்சகாம்பிகைன்னு ஒரு கோயில்... நீயெல்லாம் ஒரு டாக்டர்ரான்னு தோனுதா?''

''இல்லீங்க. இரிசங்கு சொர்க்கம்னு கேள்விப் பட்டிருக்கேன். இன் விக்குத் தெரிஞ்சுக்கிட்டேங்க.''

''கமான் யெங் மேன். குறை இல்லேன்னதும் நம்பிக்கை வர வேண் டாமா...''

ஹோட்டல் அறையில் பெட்டியை அடுக்கித் தூக்கும் போது உடம் பில் ஜீவனே இல்லை என்று தோன்றிற்று. 'உனக்கு இந்தப் பாக்கியம் இல்லை' என்று சொல்லியிருந்தால் கூட ஒரு பத்து நிமிட கலங்கலுக்குப் பிறகு மனசு தெளிந்திருக்கும். கலங்கலாகவே போய்விட்டது.

பயணம் செய்து வழியில் தென்பட்ட கோயிலெல்லாம் கும்பிடத் தோன்றிற்று. சென்னையை விட்டு நூற்றுக்கணக்கான பிள்ளைகள் ஓடி வந்தன. இந்தக் கூட்டத்தில் தன் பிள்ளையும் வராதா என்ற ஏக்கம் பொங் கிற்று.

''நிச்சயம் பிறக்கணும்.''

என்ன பதில் இது. என்ன விஞ்ஞானம் இது. வானிலை அறிவிப்பு மாதிரி. இடியுடன் மழை பெய்யக்கூடும். மழை வருவதை எவர் துல்லிய மாய் சொல்ல முடியும். கிழக்கில் மழை என்று காலண்டரில் போட்டாற் போல ரிஸல்ட் வந்திருக்கிறது. எதற்கு கிழக்கு. என் ஊர் கிழக்கில் மழையா. என் தேசத்தில் கிழக்கில் மழையா, உருண்டை உலகத்தில் எது கிழக்கு எது மேற்கு. காலண்டர் கிழிக்கிற போது 'இன்று கிழக்கில் மழை' என்று படித்துவிட்டு மறந்து விடுவது போல, ஆயிரத்து நூறு ரூபாய் டெஸ் டையும் மறக்க வேண்டியது தானா?

''எதுக்குடா தடபுடன்னு ரெண்டு பேரும் மெட்ராஸ் கிளம்பினீங்க. போறப்ப கேக்கக்கூடாதுன்னு வுட்டுட்டேன்.''

''உங்களுக்கு வாக்கிங் ஸ்டிக் வாங்கிட்டு வந்திருக் கோம்பா.''

''இதுக்கா போன, ஆசாரிக்கிட்ட சொன்னா சீவிக் குடுத்துருவானே.''

''செண்பகா மாங்காடு கோயில் போகணும்னு சொல்லுச்சு.''

''காளியாத்தா கோயில்தானே. கோயில பாத்துட்டு வந்தாப்பல தெரி யலேயே உங்களைப் பாத்தா. ஜுரம் அடிச்சா மாதிரி திரும்பியிருக்கீங்களே ரெண்டு பேரும்.''

''ஒரே வெயிலு மெட்ராஸ்ல.''

''அடட... பனிக்கட்டியா பெய்யுதுன்னு யாரும் தப்பா சொல்லிட் டாங்களா உன்கிட்ட.''

''வுடுப்பா.''

''என்னடா...சொல்லு முழுசும்.''

''டெஸ்ட்டுக்குப் போனம்.''

''ம்ம்...''

''ரெண்டு பேரும் செஞ்சுகிட்டோம்.''

''ம்ம்ம்.



''ஒரு குறையும் இல்ல, நிச்சயம் பொறக்கும்னுட்டாங்க டாக்டர்.''

''சோழி போட்டு பாத்து சொன்னாங்களா?''

''எம்பா...நீ வேற...''

''அத என்கிட்ட சொல்லிட்டுப் பேனா என்னா...''

''ஏம்பா கத்தற...''

''எனக்குண்டான சந்தேகம் கேட்டுருப்பேனில்ல.''

''உனக்கென்னப்பா சந்தேகம்.''

''உங்கிட்ட அத எப்படி சொல்றது?''

''எதா இருந்தாலும் கேட்டரு. எம்மேல குத்தம் இருக்கும்னு நெனைக் கிறயா?''

''என் சந்தேகம் வேற.''

''உள்ள வச்சு ஏன் பொசுங்கற. பேசிடு.''

''பொல்லாப்பு வரும்னுதான்.''

''வந்துட்டுப் போவுது. உனக்கும், எனக்கும் நடுவுல எத்தின நாள் பொல்லாப்பு வரும்.''

''கல்யாணத்துக்கு முன்ன எம் புள்ளை, எம் மருமகப்பெண்ணோட சினேகமா இருந்தவன். ஊர்ல நாலு பேர் பாத்து என்கிட்ட சொல்ல, உதைச்சு இட்டாந்தேன்.''

''ம்ம்...''

''ரெண்டு மூணு மாசம் பொறுத்து அதே பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணி வச்சேன்.''

''ம்ம். சொல்லு ஏன் நிறுத்திட்ட.''

''உண்டாகி கலைச்சிருப்பீங்களோன்னு ஒரு சந்தேகம்.''

''யப்பா.''

''ச்சீ போடா, கல்யாணம் ஆயிரங்காலத்துப் பயிரு. அதமாந்தோப்புல முடிச்சிட்டு மெட்ராஸுக்குப் போய் புள்ளை தேடறான்.''

''தோப்புலயே வெட்டிய பொதைச்சிருந்தா நான் புள்ளை தேடாதயே போயிருப்பேன்.''

''உன் குத்தத்துக்கு வேற விதமா தண்டனை நீ அனுபவிக்கணும்னு ருக்கறப்ப என்னால எப்படி வெட்ட'முடியும்.''

''என்ன தண்டனை அனுபவிச்சுட்டோம் இப்ப.''

''ஆச்சே...அஞ்சு வருஷம் ஆச்சே. மருமகளுக்கு விசேஷம் ஒண்ணு மில்லியா. ஊர் மொத்தமும் கேக்கறது தண்டனையில்லியா. ஒரு வேளை உனக்குத் தண்டனையாகப் படலியோ என்னவோ.?''

அப்பனும், பிள்ளையும் மின்னலில் மிரண்ட நாகங்களாய் சீறிப்பட மெடுக்கையில், செண்பகா சலகமும் கேட்டபடி உள்ளே உட்கார்ந்து கொண்டாள். உட்காரக்கூட முடிய வில்லை. சோர்வும் துக்கமும் புரட்டி யெடுத்தன. அழ முடியவில்லை. ஆத்திரமும் வரவில்லை. வெறித்து 'க டவுளே' என்று துவளத்தான் முடிந்தது.

தவறோ... காதலித்தது தவறோ...

''எஸ்.வி.சுப்பையா ஆக்ஷன் கொன்னுட்டாருங்க. அப்பி டியே...அப்பிடியே பாரதியார்தான் அவரு வரப்பல்லாம் எழுந்து போத் திக்கிட்டு நிக்கணும் போல தோணிடுச்சு. உக்கார்றதே ரொம்ப தப்பாபட்

ருக்க.''

பன்னீருக்குச் சொந்தமான தியேட்டரில் படம் பார்த்துத் திரும்புகிற போது பேசிக்கொண்டு வந்தாள்.

''எனக்கும் அப்படித்தாங்க மேடம். பாதி நேர்ல வந்திருந்தாக்கூட இந்த பரவசம் கிடைச்சிருக்காது. நேத்தி ஷோவுல ரீல் மாத்தாத வுட்டு ருக்கேன். ஒரே கூச்சலு அடிக்க புடிக்க அடுத்த ரீலு மாட்டி நீ பாத்துக்கப் பான்னு ஆப்ப ரேட்டர்கிட்ட வுட்டுட்டு சேர்போட்டு உக்காந்துட்டேன்.''

''செண்பகான்னு கூப்புடுங்க. நாளைக்குப் படம் மாத்திடறீங் களாமே.''

''கூட்டமே வரலை.''

''ஒரு நாள் ஓட்டுங்களேன். இன்னொரு தடவை பார்க்கணும் போல இருக்கு. தெம்பரவாரு செக்கு இழுத்து போலீஸ் அடிக்கறப்ப அழுதுட் டேன்.''

''யாருக்கும் இது அருமை புரியலீங்க. வேதனையா இருக்கு. சுத்து வட்டாரத்திலேல்லாம் ஓடிட்டு வந்திருக்கு. ரொம்ப நல்ல படமுன்னு தான் எடுத்தாந்தேன். கூட்டமில்லைங்களே, என்ன செய்ய?''

''ஒண்ணு செய்யுங்க.''

''சொல்லுங்க செண்பகா.''

''நாளையே கடைசி. பாதி ரேட்டுன்னு தண்டோரா செய்துடலாம். நல்ல யோசனை, நாளைக்கு வர்றீங்களா?

''வீட்ல கேக்கணும்.''

''நல்ல படங்க. நாளையே கடைசி. பாதி ரேட்டுதான்.''

செண்பகா சிரித்தாள்.

விடிகாலையில் சிறிய பறை அடித்துக் கொண்டு வீட்டு வாசலில் ஆள் போயிற்று. ''செல்வம் தியேட்டரில் கப்பலோட்டிய தமிழன். நாளை கடைசி. ரெண்டு காட்சிகள் ரெண்டுமே இலவசம்.''

பறை சிலீரென்று நெஞ்சசைத் தாக்கியது. தன்னால் தானா இது. வாய் வார்த்தையாய் வேண்டுகோள் சொல்ல, வள்ளலாய் கதவு திறந்து விட்டு விட்டானா?.

செண்பகாவின் நெஞ்சில் பன்னீர் கம்பீரமாய் புகுந்தான்.

''நீங்க வருவீங்கன்னு தெரியுங்க.யப்பா...கூட்டம் பாத்தீங்களா. எட் டணா காக பஸ்ஸுக்கு செலவழிச்சுட்டு வந்திருக்காஙுங்க நெறைய பேர்.''

''காலையிலேயே தண்டோரா சத்தம் கேட்டுச்சு. நான் ஏதோ சொல் லப்போக...ரொம்ப நஷ்டம் உங்களுக்கு.''

''இல்லீங்க செண்பகா. எனக்கு இது தோணாது போயிடுச்சு. எல்லா ரும் பார்க்கணும், எல்லாருக்கும் இந்தப்படத்து விஷயம் போவணும்னா இதான் சரி. எத்தினியோ கஷ்டம். எவ்வளவோ ஆடம்பரச் செலவு. இதுல ஒண்ணும் கொறஞ்சுடப் போவதில்லை. கப்பலோட்டிய தமிழன் ரெண் டாயிரத்து நூறு பேர் பார்த்தான். நம்ம தேசம் பத்தி கொஞ்சமாவது புரிஞ் சுக்கிட்டான்றது பெரிய விஷயம். ரொம்ப சந்தோஷமாயிருக்கு. உங்களுக் குத்தான் தாங்ஸ் சொல்லணும்.''

பன்னீர் கை கூப்பினான். செண்பகா வெட்கப்பட்டாள். பதிலுக்கு



வணங்கினாள்.

''துயர் போயின போயின துன்பங்கள்
உன்னைப் பொன்னெனக் கொண்ட பொழுதிலே''

படத்தில் பாட்டு கேட்கையில் மனசு முழுக்க பன்னீர் நின்றிருந்தான்.

''எந்தன் வாயினிலே அமுதூறுதே
கண்ணம்மா என்ற பேர் சொல்லும் போதிலே''

மழைக்கால நீர் ததும்பும் வாய்க்காலில் நின்றபடி பாட்டும் பாடி னாள்.

அந்தக் கிராமத்தின் விவரம் தெரிந்த ஒரே விடலை, ரசனை மிகுந்த பெண். காதலித்ததில் என்ன தப்பு?. கண்ணீர் விட்டுப் போராடி மணந்த தில் என்ன குற்றம்?

''நீ யெனதின்னுயிர் கண்ணம்மா
எந்த நேரமும் நின்றனைப் போற்றுவேன்.''

போற்றி போற்றி மனைவியை வைத்துக்கொள்கிற புருஷனாய், ஓடி ஓடி உபசாரம் செய்கிற மனைவியாய் வாழ்வதில் என்ன குறை. சகலரை யும் அன்பினால் ஜெயித்து விட்டோம் என்று இறுமாந்தது பிசகா.?

இந்த இறுமாப்புக்கு தான் இப்படி நெருப்பாய் வார்த்தையா ?.

''உண்டாகிக் கலைச்சிருப்பீங்கன்னா நான் புள்ளை தேடாதியே போயிருப்பேன்'' பன்னீர் கத்தியதற்கு அர்த்தம் உண்டு.

ஏவி விட்டவர் போல அரிவாளோடு வேகமாய் தோப்புக்கு அய்யா சாமிப் பிள்ளை ஓடிவந்தது இன்னமும் நினைவில் இருக்கிறது.

அவர் வருகை தொலைவிலேயே தெரிந்து விட்டது.

மல் பனியனும், கறுப்புக்கரை வேட்டியும், முகத்தில் ரௌத்திரமும், கையில் அரிவாளும் தெளிவாய் தெரிந்தன. அரவமே செய்யாது ஓடியி ருக்கலாம். கிழக்கே ஒருவர், மேற்கே ஒருவர் என்று பிரிந்து போயிருக்க லாம், பன்னீர் ஓட மறுத்துவிட்டான்.

## 9

எவனாவது ரேக்கிவுட்ருப்பான் செண்பகா. நீயும், நானும் துணியில்லாத கிடக்கறோம்னு வத்தி வச்சிருப் பான். பேசாத உக்காரு. ஊர்வ ஜம்பம் காட்டிருக்கிறதுக்கு அப்பா அரிவாளோட வராரு. நான் பேசிக்கிறேன். எதுக் கும் பதறாத. எங்க வுட்டோம் பேச்சை. நாத்திகம், ஆஸ் திகம் பேசினமில்லையா. நாத்திகம்தான் நிஜம். நாத்திகத்தினுடைய இன் னொரு வளர்ச்சி ஆத்திகம். கடவுள் இல்லைன்னு உடனடியாக சொல் லாத, இருக்கு, கடவுள் உண்டுன்னு சொல்லிவிட்டு அது எங்கேன்னு தேட ஆரம்பிக்கணும். தேடினா இல்லன்னு தெளிவா தெரிஞ்சிரும். தேடி தானா தெரிஞ்சுக்கிட்டா தெளிவு. ஆத்திகன் நாத்திகனா மாறுறது வளர்ச்சி. நாத் திகன் ஆத்திகனா மாறுறது சறுக்கல். ஆத்திகம் ஒரு செயல். நாத்திகம் ஒரு நிலை. என்ன...புரியுதா நான் சொல்றது.''

''அப்பாகிட்ட வந்துட்டாரு.''

''வரட்டும். தேடிக் கண்டு கொண்டேன் திருமாலோடு நாயகனை. தேடி தேடொன்னா தேவனை என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன்.

அடடே.... கோயில், பூஜை, கோபுரம், விக்கிரம் எல்லாம் பளிச்சுன்னு ஒருவரில உதறிட்டாங்க பாத்தியா. எனக்குள்ள இருக்கிற நான் சாமி. என் குரல்...என் மனக்குரல்-அவன் கட்டளை. என் மனசு என்னிடமே பொய் சொல்லாது. வஞ்சனை காட்டாது. உள்ள கேக்கற குரலை காது குடுத்து கேட்டவன் பொழைச்சான்.''

''அப்ப பின்னாடி நிக்கிறாருங்க.'' செண்பகா பயத்துடன் எழுந்து நின்றாள். பன்னீர் திரும்பினான்.

''வாப்பா.என்ன அரிவாளு கையில. எது வெட்டணும். எதுக்கு வயது காலத்துல. வெயில் நேரம். சொன்னா நான் வெட்டிட்டு வர மாட்டேன். எது வெட்டணும்?''

''யார்ரா இந்தப் பொம்பளை?.''

''தெரியாதது கத்துக்கறதில என்ன தப்பு, எப்பவும் தெரிஞ்சுக்க ஆசைப்படறது நல்லது. காதால் கேட்பதும் பொய், கண்ணால் பார்ப்பதும் பொய்.''

''பாத்துட்டேன்னு சமாதானம் பேசறியா.''

''பாரேன் நல்லா பாரேன். பாத்து சந்தேகம் தீரலன்னா வாயத் தொறந்து கேளேன்.''

''வந்தவுடனே கேட்டேன். யார் இந்தப் பொம்பளை?''

''மரியாதையா கேக்கற வரைக்கும் பதில் சொல்ல மாட்டேன். கேட்டுக்கிட்டே தான் இருக்கணும்.''

''நீ சொல்லலைன்னா தெரியாது போயிடுமா, கேக்க வேண்டியவங்களை கேக்கறன். யாருடி நீ. எம் புள்ளை யோட என்ன பேச்சு உனக்கு.''

''யாரப் பாத்து டீங்கறிங்க.'' செண்பகா அடிப்பட்ட சிறுத்தையாய் தலை நிமிர்தினாள்.

''ஏய்ய்''

''என்னப்பா ட்ராமா போடற. என்ன சொல்லி அனுப்பிச்சாங்க நம்மூர்ல. உம்புள்ளை ஒரு குட்டியைத் தள்ளிக்கிட்டு மாந்தோப்புக்குள்ள போறான். போய் என்னான்னு கவனின்னு வத்தி வச்சானாக்கும். ஊர் சொன்னதுக்கோசரம் அரிவாளைத் தூக்கிக்கிட்டு பரபரன்னு வந்துட்டே இல்ல...அதான் நம்ப வழக்கம். அரிவாளை கீழே போடு. இப்படி உக்காரு, முதல்ல உக்காரேன். உதறாதப்பா, உக்காரு ரமணாசிரமம் போயிட்டு வந்தாங்களாம். இவங்க பேரு செண்பகம்,எம்.ஏ. படிக்கிறாங்க. கோயிலை விட ஆஸ்ரமம் மனசுக்கு சந்தோஷமா இருந்ததுன்னாங்க, சுத்தமா வச்சிருப்பாங்க, சந்தோஷம் வந்திருக்கும்னேன். சுத்தமான இடமெல்லாம் கோயிலாயிடுமான்னாங்க. பேசிக்கிட்டே போய் நாத்திகம் ஆத்திகத்துக்கு வந்துட்டோம். நீ சொல்லு சுத்தமான இடத்தை கோயிலுன்னு சொல்லலாமா.?''

''தப்பா ஒண்ணும் பண்ணிடலையேடா.''

''வெளியே ஒண்ணும் செய்துடல, மனசுக்குள்ள கொஞ்சம் நடந்துருக்கு மனசுல செஞ்சா என்னா, வெளியே செஞ்சா என்னா....''

''எந்த ஊரு அவங்களுக்கு.''

''பக்கத்தூருதான், பூந்தோட்டம் ரொட்டிக்கடைக்காரர் குடும்பம்னு சொல்வாங்க,''



''முறைப் பசங்க நாலஞ்சு பேர் உண்டுன்னாங்களே.''

''அட மொத்த விபரமும் தெரிஞ்சுக்கிட்டியா.? அப்புறம் எதுக்கு அரிவாளு.?''

''சரி வா. வீட்டுக்குப் போய் பேசுவோம்.''

''அவங்களை அனுப்பிச்சிட்டு வந்துடறேன்.''

''என் கூட வா.''

''அப்ப நான் வரேன் செண்பகா. அப்போவ்....அவங்க உங்களுக்கு வணக்கம் சொல்றாங்க.''

''இருக்கட்டும், இருக்கட்டும்.''

''பதிலுக்குச் சொல்றது.''

''சரிதான் வாடா.''

''மரியாதை தெரியலைப்பா உனக்கு.''

''டேய் குடலை உருவிடுவேன்.''

''எனக்கு ஆட்சேபணையில்லை. நீ போட்ட சோறுதான் என் குடலுக்குள்ளே. வேணுமானா உருவி எடுத்துக்க.''

''மாந்தோப்புல பொம்பளையோட உக்காந்து சிவபுராணம் படிக்கிறானாம், யார்கிட்ட காது குத்துற.''

''வேற ஒரு மாதிரியா எதிர்பார்த்து வந்தே. இல்லேன்ன உடனே கோபம் வருது, கோபத்துல இருக்கிறவங்கிட்ட பேசிப் புண்ணியமில்லை. நீ போ. நான் இவங்களை ஊர் எல்லைல வுட்டுட்டு வரேன். அதான் மரியாதை,'' திடமாய் தகப்பனைக் கடந்து முன்னேறினான். செண்பகா அவன் பின்னே போர்த்தியபடி நடந்தாள்.

தன் வீட்டிற்குள் அவள் படியேறிய மூன்றாவது மணி நேரமே 'அடக்கி வை உன் மருமகளை' என்று தாய் மாமனுக்கு தாக்கீது வந்து விட்டது. தென்னந்துடைப்பம் சிதிலமாகும்படி அடி விழுந்தது. 'சரிதான் போடி' என்று மாமியை ஏசியதற்கு செருப்படியும், சூடும் கிடைத்தன. முற்றம் தாண்டிப் போக முடியவில்லை. ஐந்து நாட்களுக்குப் பிறகு பன்னீர் அங்கு வட்டமிட்டான்.ஏன் என்று கிராமம் வழிமறித்துக் கேட்க, 'புளி வாங்க வந்தேன்' என்று சொன்னான். 'புளிப்பா வேணுமா இந்தா' என்று இரண்டாவது மாமன் கன்னத்தில் அறைய, பன்னீர் ஆட்களைக் கூட்டி வந்து எதிர்பட்டவரையெல்லாம் அறைந்திருக்கிறான். தாய் மாமன் மளிகைக் கடையில் சாமி படங்கள் உடைந்தன. பன்னீர் செல்வத்தின் கை வேறு கால் வேறாக எடுக்க மாமன் பின்னணியில் ஆட்கள் கிளம்பிய போது செண்பகா பின் படலைப் பிரித்து வயல்கள் நடுவே இருட்டில் ஓடி மாமனார் வீட்டுக் கதவைக் தட்டினாள்.

''யாரது?'' என்று கதவைத் திறந்தவர் கால்களில் விழுந்தாள். பன்னீரை வெட்ட வருகிறார்கள் என்று விம்மினாள். படல் பிரித்து ஓடி வந்ததைச் சொன்னாள்.

''இதுக்கா தாயி இந்த இருட்டுல ஓடி வந்த. நான் பாத்துக்குறேன்.கவலைப்படாத போ. நான் உயிரோட இருக்கறப்ப என் பையனை யாரும் எதுவும் பண்ணிட முடியாது. துணைக்கு ஆள் அனுப்பறேன். வந்த வழியா யார் கண்ணிலும் படாத போயிடு.'' அவளை அனுப்பி விட்டு சமையல்காரனை எழுப்பி அண்டா நிறைய சுக்குப் காப்பி போடச்சொல்லி சென்

பகாவின் கிராமத்து ஆட்களுக்காக காத்திருந்தார். ஆட்கள் கூடியவுடன் காப்பி வந்தது.

''சம்மந்தம் பேசவா வந்துருக்கோம், எங்க உம்ம புள்ளை.''

''சம்மந்தம் பேச வரலைங்கறத்தான் அரிவாள் சொல்லுதே வெட்ட ணும். அவ்வளவுதான்...காபி குடிச்சுட்டு வெட்டிக்குவோம் உட்கார் றது.''

''கடைக்குள் பூந்து நொறுக்கியிருக்கான் உம்ம புள்ளை.''

''தப்புதான்.''

''ஊருக்குள்ள பூந்து பொண்ணு நோட்டம் போடுறான்.''

''தப்புதான்.''

''அறியா பொண்ணை மனசு கலக்கி...''

''இல்லை. அது அறியாத பெண்ணில்லை. தெரிஞ்சு பேசியிருக்கு. விரும்பிப் பழகியிருக்கு.''

''என்ன சொல்றீரு இப்ப.''

''சம்பந்தப்பட்டவங்க இருங்க. மத்தவங்க காப்பி குடிச்சுட்டுப் போகலாம்.''

மூணுமாதம் இழுபறியாய் பேச்சு நடந்தது. அம்மா மனசில் ஏதோ உறுதியாய் தைத்தது. குடுத்துரு பொண்ணை என்றதும். சகல முறைப்புக ளும் அடங்கின.

''பொண்ண பெத்தவங்களுக்கு என் புள்ளை மேல அக்கறை வந்தி ருச்சு, மத்தவன் முறைப்பு முக்கியமில்லை.''

மாமா சட்டென்று மாறிப் போனார். சீர் இறைத்து வாயடைத்தார்.

அதே மாமனார்தான் இன்று உண்டாகிக் கலைச்சிருப் பீங்களோன்னு சந்தேகம் என்று கூவுகிறார்.

கிழவருக்கு இரவு உண்ண எடுத்து வைத்துவிட்டு பரி மாறாமல் செண்பகா சமையலறைக்குப் போய் விட்டாள். இடையில் கிழவருக்கு விக்கிற்று.

எட்டிப் பார்த்தாள்.

''உசிரோடதான் இருக்கேன்.சாவலை.'' சீறினார்.

''நீங்க ஏன் சாகணும். சாவறதுக்கு நாங்க இருக்கோம், தூக்கு மாட் டிக்க வேணாம்.அரளி அரைக்க வேணாம். கூட நாலு வார்த்தை சொல் லுங்க.சாவு எவக்குத் தானா வரும். நெஞ்சடைச்சு உசிரு போயிடும்.''

## 10

சொல்லு குத்தி செத்துப் போற பொம்ளைங்க உண்டா இப்ப. இது கலிகாலம். பொண்டாட்டிய தலைல வச்சு கொண்டாடற நேரம். மதுரையில் சிலையே இருக் காம்... கலிபுருஷன்னு பொம்பளைய தலையில வச்சி கிட்டு இருக்கானாம்.''

''அதான் ஆத்திரம்னா நான் அவரோட இனிமே எங்கயும் வெளியே போகல. வீட்டோட முடங்கிக் கிடக்கேன்.''

''ஆமா, புள்ளை கொண்டாறதுதான் எனக்குப் பொங்கிட்டு வருது. பேசறேன். வாக்கப்பட்ட இடத்துல வறுத்துதின்ன ஆளிருந்தா வூட்டோட



முடங்கறதுகூட சந்தோஷம் தான்.''

''வறுத்துத் திங்கற இடத்துலகூட மோர்ல உப்பில்லைன்னு மூஞ்சில இடிப்பாங்களே ஒழிய, மருமவ கெட்டுப்போனவள்னு வாசல்ல நின்னு கத்தமாட்டாங்க. மல்லாந்துக்கிட்டு எச்சு துப்புற மாதிரி.''

''யாரைக் கேக்கணும்?'' செண்பகா சமையலறையை விட்டு வெளியே வந்தாள்.''யாரைக் கேக்கணுங்கறேன், புள்ளைய சோதனைக்கு நிக்கவச்சுட்டான்னு என்னவாயிருக்கும்னு பயம்.''

''இப்பவும் சந்தேகம்தான், நீங்க சொல்றதுதானே ரிஸல்ட்டு.''

''அவுரு மேல தப்புன்னு வந்திருந்தா நாங்க மெட்ராஸ் போனோம்னே சொல்லியிருக்க மாட்டேன்.''

''உள்ளுக்குள்ள புழுங்கி செத்திருப்பே, எம்புள்ளைய நோகடிச்சி ருப்பே.'' ''ஆமா...புருஷன் சொத்தைன்னு ஊர் முழுக்க புலம்பியிருப் பேன். பேச்சுக்கு ஒரு வரம்பில்லை. எவ சொல்லுவா அந்த மாதிரி. நம் பிக்கையா டாக்டர் சொன்னத உங்கக்கிட்ட சொன்னா நாசமா போச் சுன்னு கரிச்சு கொட்டறீங்களே.''

''செண்பகா அவர்கிட்ட என்ன பேச்சு? விடு, ஏதாவது சொல்லிட்டு போவட்டும்.''

''பேசாதீங்கடா. நான் சாவற முட்டும் ஒரு வார்த்தை பேசாதீங்க? இப்ப மட்டும் நான் எவனோட பேசறேன் என்கூட பேரனா பேத் தியா...பேசறதுக்கு அவனுக்கு அடுப்பங்கரை. உனக்கு வயக்காடு. எனக்கு மோட்டுவளை. இப்படியே உருட்டி உருட்டி தின்னுட்டு செத்துப் போலாம்'' உதறிவிட்டு கிழவர் எழுந்திருந்தார்.

''யப்போவ்...''

''வுட்றா கைய.''

''சோத்துல ஏன் கோச்சுக்கற உக்காரு.''

''வேற எதுக்கிட்டடா நான் கோச்சுக்க முடியும் சாமிகிட்ட கேக்கற வரத்தை டாக்டர் கிட்ட கேக்கறீங்களே, படிச்சதுல கிறுக்கு பிடிச்சிக்கு. ஆயிரம் இருக்கும், ஒரு கிறுக்கு மனசு ஒவ்வாத பதில் சொல்லிட்டா பட் டுப்போயிட மாட்டிங்க ரெண்டு பேரும். எதை யார்க்கிட்ட கேக்கறதுன்னு இல்லை. எங்கிட்ட சொல்லக்கூடாது...இப்படி போறம்னுட்டு, எட்டு வருஷம் கழிச்சுதாண்டா உன்னை பெத்தா உங்கம்மா. எந்த டாக்டர்கிட்ட போனேன்.சில பரம்பரைக்கு உடம்பு சூடு பிடிமானமாக நேரம் புடிக் கும்டா, பொம்பளை சூடும், ஆம்பிளை சூடும் ஒன்னுபோல வரணும். எந்த டாக்டருக்குத் தெரியும்.''

''யப்பா...பழைய காலத்து ஆளு நீ?''

''இன்னும் மண்ணுலதானடா விதைக்கிறோம். மானத்துல பயிர் பண் ணலியே. தண்ணி ஊத்தினாதானே செடி வளரும் வெயில்ல போட்டு பழம் அறுக்கலிலே. முளைச்சப்பறம் ஆயிரம் உரம். பிறந்த பிறகு நூறு வைத்தியம். புள்ளை பொறப்புக்கு மாத்திரை உண்டா? போக்கத்த வன...பொறுமையில்லாத ஆடறீங்க ரெண்டு பேரும்.''

''அடிச்சாதானே அடங்குது சிலது. சுள்ளுன்னு சொன்னாதானே புரி யுது சிலருக்கு.''

''யப்பா, போனதுல ஒண்ணும் ஆயிடல. டாக்டருங்க நல்லதுதான்

சொல்லியிருக்காங்க. இனிமே உங்கிட்ட சொல்லாத எங்கியும் போகல?
வுடு எய் இங்க வா.''
செண்பகா குனிந்து கிழவருக்கு மோர் ஊற்றினாள்.
கிழவர் எழுந்து வெளியேறியதும் தன் தட்டை வைத்துக் கொண்டு
உட்கார்ந்தாள். விம்மி அழுதாள்.
''விடுறி, ஏதோ கோவலத்துல கத்திட்டாரு வயசான மனுஷன். நம்ம
பண்ணினதும் பிசகுதான். ஒரு வார்த்தை சொல்லிட்டு போயிருக்கலாம்.''
''அசிங்கமா பேசிட்டாரே, தாங்கித் தாங்கி வச்சுகிட்டு இருக்க சொல்
லியும் கெட்டுபோனது கெட்டுபோனதுன்னு பேசினா...''
''வுடு செம்பகா, அவரு வேற ஏதோ விஷயத்துக்கு அடி போடறாரு.''
''என்ன''
''தெரியலை..''
''எனக்குத் தெரியும். இன்னொரு கல்யாணம் பண்ணிக்கச் சொல்லப்
போறாரு ஒரு நாள்.''
''அன்னிக்கு இருக்கு கலாட்டா. இதெல்லாம் ஒண்ணுமேயில்லங்கற
மாதிரி அன்னிக்கு வரப்போவுது ஒரு சண்டை.''
''பேசாம செய்துக்க.''
''அத்தினியும் வுட்டுட்டு மயிராச்சின்னு போயிடுவேன். எங்கப்பன்
கொள்ளி அநாதைக் கொள்ளிதான்.''
''போறும். சோறு தின்றச்ச எதுக்கு அவலமா பேசிக்கிட்டு. இன்
னிக்கு முழிச்ச நேரம் சரியில்ல.''
வாசலில் கிழவர் யாருடனோ பேசுவது கேட்டது. ''பன்னீர் வா இப்
படி,'' கட்டளை வந்தது. பன்னீர் கை கூப்பினான். வாசலுக்குப்
போனான். செண்பகா பின் தொடர்ந்தாள்.
கடைசி மாமன் நின்று கொண்டிருந்தான்.
''இரண்டு நாள் என்று சொல்லிட்டாராம், பன்னீரையும் செண்பகா
வையும் கூட்டிவரச் சொன்னார்களாம்.''
செண்பகா வெளியேறினாள். பன்னீர் கார் ஷெட்டுக்கு ஓடினான்.
கிட்டத்தட்ட கிடாரிக் கன்று நசுங்கிய கூழாய் போயிருக்கும். கார்
வெளிச்சம் பட்டு இடது வலதாய் மிரண்டு அழுந்தி நின்ற வண்டியில் முட்
டிக் கொண்டு தடுமாறிற்று.
''ஏன் இவ்வளவோ பதட்டாம ஓட்டணும்.''
''சனியன். நவுரும்னு ஹார்ன் அடிச்சா நடுவாந்தரமா நிக்குது.''
கன்றை உரசியபடி கார் கடந்தது. செண்பகா கிராமத்தில் நுழைய,
நாய்கள் துரத்தியபடி வந்தன. டயர்களைக் குறிவைத்து ஓடின. திரும்ப
வீட்டு வாசலில் டாக்டரின் மோட்டார் சைக்கிள் தெரிந்தது. வாசலுக்கு
வண்டி வந்ததும் திண்ணையில் டாக்டர் வெற்றிலைப் பாக்கு போட்டுக்
கொண்டிருந்தார். தாய்மாமன் பாக்கு சீவிக் கொண்டிருந்தார்.
''வாங்க...மாப்பிள்ளை.'' டாக்டர் குரலில் தெரிந்த உற்சாகம் மனசு
பதட்டத்தைக் குறைத்தது
''என்ன டாக்டர்?''
''வா உக்காரு வெத்திலை போடறியா.''
''மாமியாருக்கு...உடம்பு...பதட்டமா ஓடிவந்தோம்.''



''வெத்திலை போடுன்னுட்டேன்ல. அப்புறம் ஏன் பதட்டம். செண்
பகா செத்த இரு. கேட்டுட்டு போ. ஃப்ளு ரஸி மாதிரி அட்டாக் ஆயிருக்கு.
குத்தி நீர் எடுக்கலாம். உங்கம்மா வேணாங்கறாங்க. மாயவரம் கூட்டிட்
டுப் போய் பத்து நாள் வச்சு வைத்தியம் பாக்கறது நல்லது. மெள்ளப் பேசி
ஆஸ்பத்திரி போலாம்னு சொல்லு. இருமறதப் பாத்து பயந்துடாத.
மருந்து குடுத்துருக்கேன். சரியாயிடும். வயசாச்சு பாரு. மனசார ஒத்து
ழைக்க மாட்டேங்கறாங்க. குழந்தை வைத்தியமா செய்யணும். கோச்சுக்
காத, கத்தாத. கிழவி தாங்காது. அதிராத பேசி வழிக்குக் கொண்டா. உன்
னையும் மாப்பிள்ளையையும் பார்க்கணும்னாங்க. அதான் ஆள் அனுப்
பினோம். மத்தபடி கலவரப்பட எதுவுமில்லை. உள்ள போய் பாரு''.
செண்பகா உள்ளே விரைந்தாள்.
பன்னீர் எழ, டாக்டர் கை காட்டி நிறுத்தினார்.
''பன்னீரு...உங்க மாமியார் தங்கறது கஷ்டம்,''
''என்ன டாக்டர்...இப்பத்தான்...''
''ஸ்ஸ'...அது செண்பகாவுக்கொசரம் சொன்னது.''
''உங்க மாமியார் போயிடணும்னு தீர்மானம் பண்ணிட்டாங்க
மருந்து சாப்பிடறதில்லை. ஏதோ உள்ளாற வைராக்கியமா போயிடணும்னு
அவங்களுக்குப் பட்டுடுச்சு. சொல் பேச்சு கேட்டு மருந்து சாப்பிட்டால்
இன்னும் ஒரு வருஷம் தங்கலாம். என்ன இப்பிடி அடம்புடிக்கிறீங்க
ளேன்னு கேட்டேன். இருவது வருஷம் ஆச்சாம் தாலியறுத்து. இனிமே
இருக்கிறது மரியாதையில்லையாம். ஐயா, வரச் சொல்லிட்டாங்க. இளம்
பறேன்னு கைகூப்புது. மேற்கொண்டு பேசாத நான் பெட்டிய மூடிக்கிட்டு
வந்துட்டேன். காலைல பச்சத் தண்ணில குளிச்சிருக்குது. இது சரி
யில்லை.''
''என்னங்க...ரொட்டிச் கடைக்காரரே... டாக்டர் என்னென்னமோ
சொல்றார், பேசாத உக்காந்திருக்கீங்க?'' பன்னீர், செண்பகாவின் தாய்
மாமனை உலுக்கினான்.
''அக்கா மனசுல ஏதோ நோவு. ஏதோ இம்சை. வெளிய சொல்லாத
பொத்திப் பொத்தி அவஸ்தைப்படுது. இன்னிக்குப் பூரா உக்காந்து பேசி
யிருக்கான். என் மேல ஏதாவது தப்பா, எம் பொண்டாட்டி ஏதாச்சும்
சொல்லிட்டாளா, சோத்துத் தட்டை நங்குன்னு வச்சுதானாம். அவ உத்
தமி. ஒண்ணும் பண்ணாதன்னுட்டாங்களாம்'' டாக்டர் நீட்டி முழக்கிப்
பேசினார்.
''கடைசியா அலுத்துப்போய் எந்திரிக்கும்போது செண்பகா புரு
ஷனை வரச்சொல்லி ஆள் அனுப்பு ரெண்டு வார்த்தை பேசிட்டுப்போய்
சேர்ந்துடறேன்னு சொல்லியிருக்கு.''
''தம்பி எங்கக்கா உங்களை மனசுல ரொம்ப கொண்டாடறாங்க. உங்
களால புரிஞ்சுக்க முடியுதோ இல்லையோ எங்களுக்குப் புரியுது. எப்ப
வும் மாப்பிள்ளைக்கு இது புடிக்கும், அத புடிக்கும், இத செய்யணும்,
அத செய்யணும்னு ஏதாவது சொல்லிக்கிட்டிருக்கும். இப்பவும் ஏதாவது
வேண்டுதலா கேக்கலாம். ஆசைப்பட்ட பொருளா, காரியமா ஏதனாச்சும்
கேக்கலாம். தப்பா நினைக்காத?'' செண்பகாவின் தாய்மாமன் வருத்தக்

குரலில் பேசுகையில் பன்னீர் இடைமறித்தான்.

''நீங்க பேசறது தப்புங்க, எனக்கு தாயார் இல்ல.நினைவு தெரிஞ்சு அம்மா முகம் பார்த்ததில்லை. நான் எங்கம்மாவா உங்க அக்காவை நினைக்கிறேன்னிலே...''

பன்னீர் உள்ளே போய் பேசு. ஆறுதலா நாலு வார்த்தை சொல்லு. எல்லாம் சரியாயிடும்.'' டாக்டர் இடை வெட்ட திண்ணையிலிருந்து அனைவரும் உள்ளே நுழைந்தனர்.

ஹாலில் கிழவி சுருண்டு படுத்துக் கொண்டிருந்தாள். செண்பகாவின் கையை எடுத்து நெற்றியில் வைத்துக் கொண்டிருந்தாள். மேலே இடுப்பு வரை கம்பளி தெரிந்தன. அவள் முகத்தில் ஒரு கடுமை வேதனை பரவியிருந்தது. மருந்து பாட்டில்கள் இருந்தன. பன்னீர் ஹாலுக்கு வந்து தொண்டையைச் செருமினான்.

கிழவி பரபரத்தாள் செண்பகாவின் கையை எடுத்து விட்டு உற்றுப் பார்த்தாள்.

''அவங்க வந்திருக்காங்க. பாக்கணும்னியாமே.'' செண்பகா உரத்துப் பேச, தடுமாறி எழுந்திருந்தாள். இடக்கையால் போர்வையை உயர்த்தித் தன்னைச் சுற்றிக் கொண்டாள்.

''சும்மா இருங்க. எதுக்குக் கஷ்டப்பட்டுக்கிட்டு.'' டாக்டர் குரலை லட்சியம் பண்ணாமல் உட்கார்ந்து கொண்டாள். செண்பகாவின் கையைத் தட்டினாள்.

''என்னம்மா...''செண்பகா மறுபடி உரத்துக் கேட்க விழித்துப் பார்த்தாள்.

''என்ன வேணும்?''

''எந்திரிடீ மொதல்ல. வூட்டுக்காரர் உள்ள நுழையும் போது உக்காந்துக்கிட்டிருக்கறது மரியாதையா...'' கிழவி நடுங்கும் குரலில் சீறினாள்.

''நான் பொண்ணு வளர்த்த லட்சணம்னு காரி எம் மூஞ்சில துப்புறதுக்கு முன்னால எந்திரிச்சுப் போடி உள்ளாற...தடிமாடு.''

செண்பகா விலுக்கென்று எழுந்து உள்ளே போனாள்.

''என்னாங்க அத்தை...என்ன இது...மருந்து சாப்பிடாத அடம் பிடிக்கிறீங்களாம்'' பன்னீர் அருகில் வந்து நின்றான்.

## 11

கிழவி தரையைத் தட்ட அருகே உட்கார்ந்தான்.

''டாக்டரு இருக்காரா-''

''இங்க இருக்கேன்.''

''இது எங்க மாப்பிள்ளை. நம்மூர் புள்ளைங்க மாதிரி இல்லீங்க. தங்கமான குணம். இவங்கம்மாவை எனக்குத் தெரியும். சின்னப்பலேர்ந்து தெரியும். தீமிதில வளையல் வாங்கி ஒருத்தருக்கொருத்தர் குடுத்துக்குவோம். இவங்களை வயித்துல சுமந்துக்கிட்டிருந்தப்பக் கூட பாத்துருக்கேன். உன் கல்யாணத்துக்கு பத்திரிக்கை வைட, வரவேன்னுச்சு. பத்திரிக்கை வச்சோம். ஆனா வர முடியும்? பாவம், பச்சை உடம்புக்காரி வெளிய வரக்கூடாதுன்னுட்டாங்களாம். ரொம்ம நல்ல குணம், டாக்டர் இருக்காரா.''



''ம்...கேட்டுக்கிட்டுதான் இருகேன்''!

''நீங்க வரச்சொன்னதா சொல்லியனுப்பச்சோம். வந்திருக்காரு.''

''ஆமா பேசணும்னு கூப்பிட்டேன்.''

''எதிரில உக்காந்திருக்காரு. பேசுங்க.''

''என்னால எழுந்து நிக்க முடியல. உடம்பு தளர்ந்து போச்சு. முதுகு நிக்கல. துணி நிக்கல. மனசு நிக்கல.'' கிழவி அழுதாள்.

''அட என்ன இது...''டாக்டர் அருகே வந்தார்.''அமைதியா இருங்கம்மா.'' நெருங்கி நின்று ஆறுதல் சொன்னார்.

''நிறைய பேசணும்.''

''பேசுங்க. மொள்ள நிதானமா பேசங்க.''

''தம்பி, டாக்டருக்கு பீஸ் குடுத்துட்டியா? பயறு இருந்தா நாலு படி பைல போட்டு குடுத்துரு.''

டாக்டர் நிமிர்ந்தார். சிரித்தார்.

''யோவ் ரொட்டிக்கடைக்காரரே...வெளியே வா. உங்கக்கா மாப்பிள்ளைகிட்ட ஏதோ தனியா பேசணும் போல இருக்கு.''

பன்னீர் சகலரையும் பார்த்துப் பார்த்து விழித்துக் கொண்டிருந்தான் ஹால் வெறிச்சோடிற்று செண்பகா அருகில் வந்தாள்.

''மச்சுக்குப் போய் பெருக்கிட்டு படுக்கை தட்டிப்போடு ராத்திரி தங்கிட்டுப்போலாம்.''

''அப்புறம் போட்டுக்கறேன். திண்ணைல நல்லா காத்து வரும்.''

''எழுந்து போய் பெருக்குடீன்னா எதுத்து பேசறியே.''

''செண்பகா போ.அவங்க சொல்றதக் கேளு. '' பன்னீர் அவளைத் திருப்பி அனுப்பினாள்.

கிழவி சுவரில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டாள்.

''என்னம்மா, என்ன கஷ்டம் உங்களுக்கு...''பன்னீர் மெல்ல கிழவியின் கையைப் பிடித்துத் தட்டிக்கொடுத்தான்.

கிழவி விசித்து விசித்து அழத் துவங்கினாள்.

''என்னம்மா... எதுக்கு, அழுவணும்...உடம்பு என்னத்துக்காவும்? என்ன வேணும் சொல்லுங்க.நான் செய்கிறேன்.'' ''என் உடம்புக்கு ஒண்ணுமில்லய்யா. மனசு விட்டுப் போச்சு.''

''புரியலியே?''

''உங்கம்மா நேத்து இங்க வந்து நின்னாங்க. சண்டையான சண்டை போட்டாங்க செத்தவங்க இத்தினி கிட்ட வந்து நிக்கறது நல்லதில்ல. அவங்க கோவப்படறதும் நல்லதில்லைய்யா.''

''என்ன சொல்றீங்கன்னே தெரியலியே.''

''எங்கய்யா வாசல்ல உக்காந்து எனக்கு ஒலை பின்றாரு. எல்லாம் ரெடி கௌம்புங்கறாரு.''

பன்னீர் முழங்கை ரோமங்கள் சிலிர்த்து எழுந்தன. பயமும், கலவரமும் தொண்டைக்குழியில் சுழன்றன.

''உங்கம்மா கண்டபடி கத்தறாங்க. எனக்கு என்னாடி செஞ்சேன்னு கேள்வி. மலங்க முழிக்கிறேன். வூடுபூரா வரட்டி வாசனை. மஞ்சக்கிழங்கு சுட்டுப் பொசுக்கற மாதிரி வாசனை.''

பன்னீர் உறைந்து போனான்.

''எனக்கு வேளை வந்துருச்சய்யா. எனக்கு ஒரு வாக்குக்குடுப்பியா.''

''சொல்லுங்கம்மா''

''எம் பொண்ணு நல்லா குணமா நடந்துக்கறாளா?''

''சொக்கத் தங்கம்மா அது''

''சந்தோஷம்தானா.''

''ரொம்ப சந்தோஷம்.''

''உங்கப்பாகிட்ட மரியாதையா நடந்துக்கறாளா?''

''ரொம்ப மரியாதை. மாமா மாமான்னு பாத்துப் பாத்து செய்யும்.''

''சின்ன கெடுதல் கூட இல்லியே''

''என்னம்மா இது. நான் தான் சொக்கத் தங்கம்னுட்டேனே. அதுக்கு மேலே என்னா..''

''தள்ளி வச்சிறமாட்டீங்களேய்யா?''

''தள்ளி வெக்கிறதா... எதுக்கும்மா.. செம்பாகிட்ட ஒரு தப்பும் இல்லியே.''

''புள்ளை பெறலியே தம்பி. அது குத்தம் இல்லியா?''

''அட என்னம்மா நீங்க, என்னைப் பாத்தா அவ்வளவு கெட்டவனாவா தெரியுது.''

''தள்ளி வச்சிட்டீங்கன்னா நாறிடும்பா எங்க வம்சம்''

''நீங்க இப்படியெல்லாம் பேசக்கூடாதும்மா, சரியில்ல.''

''உங்கக் கல்யாணம் ரொம்பக் கஷ்டப்பட்டு பல சங்கடத்துக்கப்புறம் நடந்தது...''

''தெரியும். அதெல்லாம் முடிஞ்சு போன கதை.''

''இந்த வூடு உங்க சம்பந்தத்துக்கு ஒத்துக்கவேயில்ல. இன்னிக்கும் அரசல்புரசலா கொஞ்சம் கோவம் இருக்கு.''

''தெரியும்''.

''நாளைக்கு நீ எம் பொண்ணத் தள்ளி வச்சுட்டே.. எம்பேரச் சொல்லி காரித் துப்புவாங்க.''

''எப்படி இப்படியெல்லாம் உங்களுக்குத்தோணுது. யார் சொல்லிக் குடுத்தாங்க?''

''ஒருத்தரும் சொல்லிக் குடுக்க வேணாம் தம்பி. நானே நல்லா யோசனை பண்ணித்தான் சொல்லுறேன்.''

''குழம்பறீங்க.''

''குழம்பறதெல்லாம் வாழறபோது, சாவற நேரம் வந்தா தெளிவாயிடும். இன்னிக்கு உங்க மனசுல கல்லு விழலேன்னாலும் நாளைக்கு.... இன்னும் நாலு வருஷம் கழிச்சு யாரும் கல்லு போடலாம். கண்ணுல மண்ணு தூவலாம். எல்லாரும் மனுஷங்கதான் தம்பி. பேரனில்லாத போறேமேன்னு உங்கப்பா உங்களுக்கு இன்னொரு பொண்ணு தேடலாம்.''

''எங்கப்பா அந்த மாதிரி ஆளில்லம்மா.''

''இல்ல தம்பி. யாரையும் தப்பு சொல்லல. எனக்குப் புள்ளையிருந்து இப்பிடி நடந்தா என் மனசும் இப்பிடி அல்லாடலாம்.''

''எங்களுக்கு யாருக்கும் அந்த நெனைப்பே இல்லை''

''நெனைப்புக்கு விவஸ்தையில்ல. எதிர்வூட்ல புள்ளை பொறந்தா



நம்ம வீட்ல கதவு திறக்கக் கூச்சப்படும். புள்ளையில்லாதவங்க மனசு என்னென்னமோ நினைக்கும்.''

''இந்த நிமிஷம் வரைக்கும் அப்படியில்லம்மா''

''இனிமேயும் வரக்கூடாதுங்கறதுதாம்பா என் கவலை''

''வராது''

''ரொம்ப கஷ்டம்பா அது''

''செண்பகா மேல உசிரை வச்சிருக்கோம்மா. எப்படி மாற முடியும் சொல்லுங்க.''

''அதப் பாக்கறப்பதான் மனசு கெடந்து அடிச்சுக்குது. ரத்தினமா மாப்பிள்ளை கெடச்சும் சொக்கத்தங்கமா பொண்ண வளர்த்தும் பாழாப் போயிடுமோன்னு பயமா இருக்குப்பா.''

''ஏம்மா இல்லாதது பொல்லாததெல்லாம் நெனைச்சுக்கிட்டு கஷ்டப்படறீங்க. நான் என்ன செய்யணும்னு சொல்லுங்க செய்யறேன்.''

''ஒரு சத்தியம் செய்து குடுங்க தம்பி''

''என்ன செய்யணும் சொல்லுங்க.''

''இன்னொரு கல்யாணம்... இன்னொரு சகவாசம் கூடவே கூடாது. நான் நின்னு உங்க மனசுக்குப் பிடிச்ச விதமா உங்க கல்யாணம் பண்ணி வச்சதுக்கு நன்றியிருந்தா... சத்தியம் பண்ணுங்க தம்பி.''

''சத்தியமா செம்பகா தவிர இன்னொரு பொண்ண மனசால் கூட நெனைக்க மாட்டேன். உங்க மேல சத்தியம். இந்த மண்ணு சத்தியமா நான் இன்னொரு பொம்பளை சகவாசம் நெனைக்க மாட்டேன். போதுமா...'' பன்னீர் உறுதியான குரலில் சத்தியம் செய்தான்.

''முருகா-'' கிழவி அவன் கையைப் பிடித்துக் கொண்டாள் விடுவித்தாள். இரண்டு கைகளையும் உயர்த்தி அவன் தலையில் வைத்தாள். சுருண்டு படுத்துக் கொண்டாள். 'போய் தூங்குங்க. யார்கிட்டயும் நான் பேசினத சொல்ல வேணாம். செண்பகாகிட்டக் கூட சொல்ல வேணாம். நான் செத்துப்போனப்புறம் அவசியமானா சொல்லுங்க.''

மறுநாள் விடிந்து பல் தேய்த்து காபி குடித்து கிழவியிடம் விடை பெற்ற போது, இடக்கையிலிருந்து மோதிரத்தைக் கழற்றி, ''இது எங்கய்யா எனக்குப் போட்டது. நீங்க வச்சுக்கங்க.'' பன்னீரிடம் கொடுத்தாள். ஒரு பாம்பு தலைப்பகுதியில் வால் தொட வளையமாய் நின்ற டிசைனில் மோதிரம். மங்கிய பசும்பொன் நிறமாய் மின்னிற்று. இருவரும் விழுந்து நமஸ்கரிக்க, எழுந்து தள்ளாடி சுவர் பிடித்தபடி நின்று நடுங்கும் கையால் நெற்றியில் திருநீறு பூசினாள். விடை கொடுத்தாள்.

வீடு வந்து பலகாரம் முடிந்து வயலுக்குக் கிளம்புகையில் ஆள் வந்தது. எவ்வளவு தடுத்தும் கேளாமல் கிழவி பச்சைத் தண்ணீரில் குளித்தாளாம். குளித்த பத்து நிமிடத்தில் பிராணன் போய் விட்டதாம்.

பன்னீர் வலது புறங்கையை விரித்துப் பார்த்தான்.

பசும்பொன் நிறத்தில் பாம்பு மோதிரம் மின்னிற்று.

## 12

அம்மா இல்லாத கொடுமையை பன்னீர் வாலிப வயசுக்குள் பலமுறை அனுபவித்திருக்கிறான்.

அம்மா கையால் பன்னீர் சோறு சாப்பிட்டதில்லை.

ஆனால் தினமும் பன்னீர் அம்மாவுக்கு சோறு படைப்பான். சாப்பிடும் முன்னர் கவளம் சோறு எடுத்து வந்து காக்கைக்குப் போட்டு விட்டு, எந்த காக்கை அம்மாவுக்கு சோறு எடுத்துப் போகும் என்று காத்திருப்பான்.

பன்னீர் அம்மாவை முழுக்க தரிசித்தது செண்பகாவின் தாயிடத்தில், நிறைத்நிறை சாப்பாடு பரிமாறுகையில், அவன் சின்ன தலைவலிக்குக் கூட நூறு கை வைத்தியம் செய்கையில், தலைமுடி விழுந்த பலகாரத் தட்டை வாங்கி விட்டு இன்னொரு தட்டு பலகாரத்துக்கு வீடு முழுக்க அதட்டின உபசரிப்பில் அம்மா தெரிந்தாள்.

பன்னீருக்கு ஓடி ஓடி பதிலுக்கு மாமியாருக்கு ஏதாவது செய்வது நன்றி காட்டத்தோன்றிற்று.

பலமுறை அவள் காலைத்தொட்டு கும்பிட்டிருக்கிறான். கிழவி நயக்கத்தோடு இழுத்துக் கொள்வாள். கால்கட்டை விரல் நுனியைத் தொட்டால்கூட கூச்சமாய் நிற்பாள். அவ குலப் பெண். பல நூற்றாண்டுகளாய் வளர்ந்த நாகரீகத்தின் சின்னம். பிள்ளையானாலும் தோளுக்கு மிஞ்சி வளர்ந்தவன் காலைத் தொட்டாலும் அச்சம்தான். இங்கே அவளுக்குப் பாசமும் நேசமும் சொல்லாய் செயலில் தான் வெளிப்படுமே தவிர, அண்மையில் நிற்றல் தகாது. தொடல் இங்கு இயல்பில்லை. தீண்டல் புருஷனுக்கு மட்டுமே சொந்தம்.

அந்தக் கிழவியின் கால் கட்டை விரலை பன்னீர்தான் இறுக்கக்கட்டினான். வீட்டு ஆண்கள் எல்லாம் துக்கத்தில் தவிக்க, அப்பாவும் பிள்ளையும் மற்ற காரியங்களைப் பம்பரமாய் சுற்றி கவனித்தார்கள்.

பின்னர் செல்வம் நாற்பது பக்க நோட் வாங்கி பிள்ளையார் சுழி போட்டு செண்பகாவின் தாயார் திருமதி. பெரியநாயகி காரியச் செலவு என்று எழுதி, வரவு, செலவு கணக்கும், அக்குள் இடுக்கில் பணப்பையுமாய் அலைந்தான்.

''பன்னீரு, நான் சுடுகாட்டுக்கு வரலை. எம் முன்னாடி அழுது புலம்ப இந்த வூட்டு ஆம்பளைங்க கூச்சப்படலாம். தெருவோட தங்கிடறேன். நீ தலைக்கு ஊத்திக்கிட்டு வூட்டுக்கு வா'' அப்பா நகர்ந்துவிட்டார். வாய்க்கரிசி போட அழைத்தார்கள். பிடி அரிசியோடு கிழவியை நெருங்குகையில் அதுவரை இல்லாத துக்கம் முகுமுகுவென்று முட்டியது. முகம் தெரியாத அம்மா மனசுக்குள் வந்தாள். பல நூறு காக்கைகள் கண்ணுக்குள் பறந்தன. கவளம் கவளமாய் கொத்திக் கொண்டன.

''என்தாயே.. எங்கம்மா'' என்று தரையில் அரிசியை நழுவவிட்டான். மறுபடி யாரோ அரிசி கொடுத்தார்கள். கையைப் பிடித்து வாயருகே அழைத்து குவியலாய் போட வைத்தார்கள்.

பன்னீருக்குக் கிழவியின் வாய் முழுக்க அரிசிக் குவிலாய் இருப்பது வேதனையாய் இருந்தது. மூக்கு விளிம்பு உறுத்துமோ என்ற பேதமை வந்தது. மெல்ல குனிந்து அரிசியைத் துடைத்தான். நெற்றியை நீவினான்.

''யம்மா... யம்மா..''

பன்னீர் நெகிழ்ந்து சிதறினதை செண்பகாவுக்கு யாரோ சொல்லியிருக்க வேண்டும். விவரமாய் விளக்கியிருக்க வேண்டும்.

''எங்கம்மா மேல இத்தினி இஷ்டமா உனக்கு. அதுக்கும் உம்மேல ரொம்ப உசிரு. இங்க வரப்பல்லாம் நீ சாப்பிடாத பச்சத் தண்ணிகூட குடிக்காது. அரிசிஎல்லாம் துடைச்சியாமே உன் கையைக் கொண்டா இப்பிடி. இந்த கைதான துடைச்சது எங்கம்மா முகத்தை'' விரல் முழுக்க முத்தமிட்டாள். மார்பில் பதித்துக் கொண்டாள். ''எங்கம்மா மறுபடி பொறப்பாங்க. நம்ம குழந்தையா பொறப்பாங்க. எங்க ஊர்ல உன்னை ஒஹோன்றாங்க எல்லாரும். எவ்ளோ பெருமையா இருக்கு தெரியுமா எனக்கு. நான் தான் அப்பப்ப கடிச்சுகடறேன் இல்லை... அம்மா குடுத்த மோதிரம் கழட்டமாட்டியா. உனக்கு அம்மா இல்லேங்கறதுனால எங்கம்மா மேல ரொம்ப ஒட்டுதல் வந்துருச்சில்ல... யார் போனா என்ன... நான் இருக்கேன் உனக்கு அம்மாவா.. எம் புள்ளை தான் நீ. நீதான் என் செல்லப்புள்ளை...''

''அன்னிக்கு என்ன பேசின எங்கம்மாகிட்ட... சொல்லவேயில்லியே நீ எதுனா ரொக்கம் நிலம் எழுதி வச்சுதா. அதுக்குத்தான் கூப்பிட்டனுப்பிச்சாங்களா? அந்த மாதிரி உடம்பு இருக்கப்ப பச்சத் தண்ணிய தலைல ஊத்திருக்கு பாரேன். வைராக்கியம் புடிச்ச பொம்பளை. ஒரு ஆளைப் பிடிக்கலேன்னா கோடி கோடியா கொட்டிக் குடுத்தாக்கூட சீண்டாது. புடிச்சுப் போச்சு போட்டு மிதியேன். விலகாது சரி, என்னா சொல்லுச்சு எங்கம்மா.''

''செண்ம்பகாவ நல்லபடியா வச்சுக்கோன்னு சொன்னாங்க.''

''இப்ப என்ன அடிச்சுக் கொன்னுகிட்டா இருக்காங்க. இத சொல்றதுக்கா அத்தினி அவசரமா கூப்பிட்டாங்க.''

இவளிடம் என்ன சொல்வது. உடனே சொல்ல வேண்டாம் என்று கிழவி கேட்டுக் கொண்டிருக்கிறாள். செத்த பிறகு அவசியமானால் சொல் என்று சொல்லியிருக்கிறாள்.

இப்போது என்ன அவசியம். மரணத்தறுவாயில் கொடுத்த வாக்கை ஏன் மீற வேண்டும்.

''சரி... போதும் வுடு.''

''உன் கிட்ட என்னவோ சொல்லியிருக்கு. உன் மனசு நோகற மாதிரி எதுவோ சொல்லியிருக்கு.''

''ஒண்ணும் பேசலை''

''அன்னிக்கு என்னை எதுக்கு வெரட்டணும். படுக்கை போடுறீன்னு மாடிக்குத் தொரத்திட்டு நான் என் புள்ளை பெறலைன்னு உன்கிட்ட கேட்டுருக்கும்.''

'அதப்பத்தி பேசசேயில்லை''.

குசுகுசுன்னு பேசிட்டிருந்தீங்களே என்னான்னு கேட்டா பளிச்சின்னு சொல்லிட வேண்டியதுதான். தாலி கட்டினவளுக்குக் கூடத் தெரியாத அப்பிடி என்னய்யா ரகசியம்.''

''யார் சொன்னாங்க ரகசியம்னு. நீயா ஏதாவது பொலம்பிக்கிட்டிருந்தா...நான் என்ன பண்றது.''

''சரி.. நான் ஒண்ணும் கேக்கலை. வந்து படு வா.''

''எனக்குத் தூக்கம் வரலை.''

''அதுக்குன்னு இந்த அர்த்த ராத்திரியில் எங்க போற.. பூச்சி பொட்டு உலாத்தற நேரம். அதெப்படி பொசுக்குன்னு அவ்வளவு கோவம் வரும். காத்தால உங்கப்பாரு நாக்கப் புடுங்கிக்கிற மாதிரி ஏதாவது கேட்டு வைப்பாரு, எனக்கு இருக்கற இம்சை போதும்பா வந்திரு. உன்னை ஒண்ணும்

கேக்கலை. உன் வழிக்கே வரலை, போறுமா. வந்து படு''

பன்னீர் சட்டையை வீசிவிட்டு கட்டிலில் விழுந்து மல்லாந்தான்.

செண்பகா புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள். சட்டென்று எழுந்தாள். ''எனக்கு தூக்கம் வரலைப்பா. உன்னைக் கட்டிக்கிட்டு தூங்கட்டா. கோச்சுக்க மாட்டியே. இந்தக் கைய மட்டும் கட்டிக்கிட்டு தூங்கிடறேம்பா.''

பன்னீர் மெல்ல சிரித்தான். இடது கை விலக்கி. அவளை அருகே அழைத்து இறுக்கிக் கொண்டான். மனைவியின் வெம்மையில் மனசு தூக்கம் மறந்து கிறங்கத் துவங்கியது.

## 13

அய்யாசாமிப் பிள்ளை அசையாது எதிர்வீட்டு சுவரைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார். விழிதான் சுவர் மீது படிந்திருந்ததே தவிர, பார்வை வெகுதூரம் நிலைத்திருந்தது.

சாவுச் சடங்கில் இப்படி நெருக்கமாய் நின்று, ஊர் பெண்கள் அலறலுக்கு நடுவே ஊமையாய் நின்று நாளாயிற்று. இந்த மரணம் ஏனோ ஒரு பயமுறுத்தலாய் போய் விட்டது. ஒரு நாள் உன் காலையும் இப்படித்தான் இறுக்கிக் காட்டுவார்கள். விலாவில் மூங்கில் சிம்பு குத்த உன்னையும் அசைத்து, அசைத்து இப்படித்தான் தூக்கிக் கொண்டு போவார்கள். சுள்ளென்ற வெயில் வானம் பார்த்து இமைகள் மூடி முகத்தில் கடுமையேறி நீயும் ஒரு நாள் யாத்திரை போவாய் என்கிற நினைப்பே அடிக்கடி வந்தது.

வாழ்நாளில் நிறைய சாவுச் சடங்குகள் பார்த்தாயிற்று. மனைவி இறந்த போது அவளின் கிரியை நாளில் கிட்டத்தட்ட புத்தி பேதலித்துப் போயிற்று. அவளை வாசலில் கிடத்தி கயிறால் பிணைத்துக் கொண்டிருக்கிற போது யாரோ பெரிய சொம்பில் நீர் கேட்டார்கள். மனைவியின் பெயரைச் சொல்லி அழைத்து, ''அம்மாடி ஒரு பெரிய சொம்புல தண்ணி கொண்டா'' என்று அவர் கூவிய நேரம் பேதலித்ததின் உச்சகட்டம். வாசலில் சடலம் கிடந்தும் மனைவி இறந்து போனது உறைக்கவேயில்லை. வாய்க்கு வாய் அவளை அழைத்துக் கொண்டிருந்த பழக்கம் நாக்கு தப்பி அந்த நேரமும் வந்து விட்டது.

''பிள்ளை.... சுதாரிச்சுக்கங்க'' என்று நண்பர்கள் தோள் உலுக்கிய போது விம்மி விம்மி அழுதார். ஏனோ சம்பந்தியம்மாள் சாவு அந்த நாட்களையே அதிகம் நினைவுபடுத்திற்று.

கிஞ்சித்தும் பயமின்றி கிழவி மரணம் ஏற்றிருக்கிறாள். எதனால் சாத்தியம் இது? நான் எப்படி எதிர்கொள்ளப் போகிறேன். மரணத்தை உடம்பு தவள ஆரம்பித்து விட்டது. முழங்கால்கள் ஒத்துழைக்க மறுக்கின்றன. மனசு சிறிய வேதனைகளுக்குக் கூட தவித்துப் போகிறது. மனசு பலமிழந்து உடலைப் பாதிக்கிறதா... உடல் வலுவிழந்ததால் மனசு துவள்கிறதா..

ஆனால் மரணம் வேண்டாமென்று அந்த நினைவை ஏதோ தள்ளுகிறது. பூர்த்தியாகாத ஒரு இடம் இருக்கிறது. வம்ச விருத்தியில்லாத வெறுமை வர வர அதிகம் தாக்குகிறது. இந்தத் திண்ணையும், கூடமும்



முற்றமும் தன் பெயர் சொல்லாது. வேறு எவருக்கோ தங்குமிடமாய் போகும் நாலு தலைமுறை பெயரை தான் நினைவு கொண்டிருந்தது. தன்னோட போகும்.

'என் வாரிசு இங்கே' என்று ஒரு குஞ்சை நெஞ்சில் சூடாய் அணைத்துக் கொள்ள முடியாத வாழ்க்கை வெறுமை, பாவம்.

மகா பாவம் என்று எதையும் செய்ததில்லை. எவர் உணவையும் பறித்ததில்லை எவர் குடித்தனமும் முறித்ததில்லை. என்ன கெடுதல் செய்கிறோம். யாரை பதிலுக்கு அடித்திருக்கிறோம்.

மறுபடியும் திருமணம் செய்து கொள்ளவில்லையே தவிர, உடம்பு வேகம் தீர்க்க பல பெண்கள் உதவியிருக்கிறார்கள். ஒரு கலம் நெல்லுக்கு இரண்டு வாழைத்தாருக்கு, கைச் செலவுக்கு விருப்பப்பட்ட பெண்கள் நாடியதுண்டு. கடல் கடந்து போன புருஷனுக்கு இவரிடம் கடித எழுத வந்தார்கள். வீட்டு சண்டையை முறையிட வந்த பெண்களை சமாதானம் செய்து வைத்த கம்பீரத்தால் கவரப்பட்டு 'சாப்பிட வாயேன்' என்று கூப்பிட்ட அழைப்பை ஏற்றதுண்டு.

இந்த ஆட்டமும் ஒரு வயசோடு நின்று போயிற்று. காசுக்கோ, காமத்துக்கோ அழைக்கிற பெண்களிடம் ஈடுபாடு குறைந்து போயிற்று. வாசலில் உட்கார்ந்து மனைவியோடு பின்னிரவில் பேசிக் கொண்டிருக்கிற ஆண்களைப் பார்த்தால் ஏக்கம் பொங்கிற்று. இந்த பேச்சுத் துணையற்ற வெறும் செய்கைக்கான உறவு வீண் என்று தோன்றிற்று.

பிள்ளையும், மருமகளும் குடித்தனம் நடத்தும் அழகு நெஞ்சை நிரப்ப, உடம்பாட்டத்தில் மனசு அறவே விலகிவிட்டது.

நாலு பசங்க பொறந்தா நாலுக்கும் பேர் சொல்றா மாதிரி செத்துப் போகணுமில்ல என்று பறந்து பறந்து செல்வம் சேகரித்தது விரக்தியாய் போயிற்று. ஆள முடியாதபடி அகண்ட நிலமும், தோப்பும் இப்போது அயர்ச்சியாய்படுகின்றன.

அய்யாசாமிப் பிள்ளைக்கு வியர்த்தது. மின்விசிறி சுழன்ற போதும் முதுகு முழுக்க வாய்க்கால் ஓட்டமாய் வியர்வை வழிந்தது.

என் கால் கட்டை விரல்களையும் இறுக்கிக் கட்டி, வாயில் நார் அடைத்து வெயில்பட தூக்கிக் கொண்டு, போவார்கள். உயிர் போகும் உஷ்ணத்தில் என்ன தோணும் யார் வருவார்கள். மரணத்துக்குப் பிறகு என்ன.. வெட்ட வெளி.. ஒளிப்பிழம்பு என்ன தெரியப் போகிறது எனக்கு.

மரணம் வலிக்குமா, உயிரேபோகாதே என்று உடம்பு கெஞ்சுமா.... ஒவ்வொரு தஸ்யாய் அறுத்து அமைதியாய் உயிர் நகர எனக்கு என்ன தெரியும். அதை இப்போதே தெரிந்து கொள்ள முடியுமா?

## 14

நாலு நாளாய் உட்கார்ந்து யோசிக்கும் வண்ணமாகவே பொழுது போகிறது. முடிவில்லாத யோசிப்பாய் பின்னிப்பின்னி வாழ்ந்த வாழ்க்கை முழுவதும் நாள் நாளாய், மணி மணியாய் அசைபோட்டு உட்கார்ந்திருக்கத் தான் முடிகிறது. எதிரே வந்தனம் சொல்லிவிட்டு தெருவோடு போகிறவனுக்கு அனிச்சையாய் பதில் வந்தனம்

செய்ய முடிந்ததே த்விர, யார் வந்தது, எப்போது எதற்கு வணங்கினான்.. எதுவுமே மனதில் பதியவில்லை.

கும்பலாய் வந்தார்கள். தெரு முழுக்க கூச்சல் போட்டுக் கொண்டு, கை உயர்த்தி பேசிக் கொண்டு கிராமத்து ஜனங்கள் வந்தார்கள்.

'ஹா' என்கிற அதிர்ச்சியால் சிந்தனை கலைந்து அறுந்து போயிற்று.

''என்னய்யா இது... திபுதிபுன்னு எரி கொள்ளிக் கூட்டம் மாதிரி...என்னாச்சு....''

''ஊர்ல ஒரு தப்பு நடந்து போச்சுங்க.'' மணியக்காரர் முன் வந்து சொன்னார்.

''எது தப்பு.. எது ரைட்டு... யார் சொல்றது இதை... ரெண்டா பிரிச்சு..?''

''பாதிக்கப்பட்டவன் சொல்றான். பஞ்சாயத்து கூட்டுறான். நேரா கோயிலாண்ட போறோம். உங்களையும் கையோட கூட்டிக்கிட்டுப் போலாம்னு வந்திருக்கோம்.''

''நீங்களே முடிச்சுக்கங்க. எனக்கு புத்தி ஒண்ணும் தெளிவாயில்ல...''

''அப்படி சொல்லிவிட்டு ஒதுங்கறது நல்லதில்லீங்க. சுத்தியிருக்கிற நாலு ஊர்க்காரனும் நாக்கப்புடுங்கற மாதிரி கேட்டா, பேச்சுல முடியாத அடிதடி ரகளையாயிடும்.''

''என்ன நடந்துச்சு?''

''சுப்பையாப் பிள்ளை பொண்டாட்டி ஊரை விட்டு ஓடிட்டா.''

''ஒழிஞ்சு போவட்டும்.''

''அதில்லீங்க, அடுத்தூர்ல நடவாளோட சேர்ந்துகிட்டு இருக்கா.''

''என்னடா சொல்றீங்க.''

''அசிங்கமாத்தான் இருக்கு.''

''அசிங்கத்துக்கு என்ன பஞ்சாயத்து? சேர்ந்துட்டாளில்ல, அப்புறம் என்னா... குளத்துல தலை முழுகிட்டு சுப்பையாவூட்டுக்குப் போவச்சொல்லு.''

''அதில்லீங்க, சுப்பையா போய் கூப்பிட்டிருக்காரு அந்தப் பொம்பளைய.அங்க இருக்கற பயலுவ வேல் கம்பு உருவி மிரட்றானுங்களாம். அசிங்கமில்லையா இது? இந்த அடாவடிய தட்டிக் கேக்காத போயிடறதா?''

''அப்புறம் எந்தப் பொம்பளைகிட்டயாவது மீசை முறுக்கிக் காட்டினா... அட போடா எனக்கும் இருக்குது மீசைன்னுடுவா.''

பெண்பிள்ளை ஓடிப்போனது கூட அசிங்கமில்லை. அவளைத் தூக்கிப் போய் காபந்து செய்து வைத்திருக்கிறவனை எதிர்க்காததுதான் அவலம். அதற்குத் தான் கூட்டம். பயத்தில், மிரட்சியில் வந்த கோபம். வெட்டுப்பட்டு சாவறதா இருந்தாலும் எல்லோரும் ஒண்ணா சாவோம் என்கிற கூட்டு. இது சுப்பையா விஷயமில்லை. கிராமத்து விஷயம். இவள் சுப்பையாவின் மனைவி மட்டுமில்லை.

இந்த க்ஷணம் இங்கே சகலவருக்கும் உரிமையுள்ளவள். உறவானவள்.பொதுச் சொத்து.

நிலம் போல, கறவை போல பொண்ணும் சொத்து. ஒருத்தருக்கொருத்தர் ஆயிரம் பகை இருப்பினும் அடுத்த ஊரான் இந்த



ஊர் பெண்ணை ஆண்டால் அது பொறுத்துக் கொள்ள முடியாத விஷயம்.

''சுப்பையா, பொண்டாட்டிக்கிட்ட பஞ்சாயத்து விஷயம் சொல்லிட்டீங்களா.''

''சொன்னோம், நீங்களே பஞ்சாயத்தாரை மாத்தி மாத்தி நக்கிக்கிட்டு கிடங்கன்னுட்டா''

அய்யாசாமிப்பிள்ளை முகம் இருண்டது.

''அந்த நடவாள் யாரு?''

''வேலு''

''அவனைக் கூப்பிடு''

''வரமாட்டானுங்க''

''ஏய்.... சைக்கிள் எட்ரா..'' யாரோ சைக்கிள் கொடுத்தார்கள். அய்யாசாமிப் பிள்ளை உதைத்து ஏறினார். மூன்று சைக்கிள்கள் பின் தொடர்ந்தன. கேரியரிலும் முன் பாரிலுமாய் ஆட்கள் தொத்திக் கொண்டனர். ஒரு சைக்கிள் வேகமாய் பிள்ளையைக் கடந்து வழிகாட்டிற்று.

மெயின் ரோடு ஏறி கிராமம் கடந்து, இடப்பக்கம் மண்ரோட்டில் அழுந்தி ஒற்றையடிப் பாதையில் திரும்பி, குடிசைகள் நிரம்பிய இடத்துக்கு சைக்கிள்கள் பயணப்பட்டன.

அய்யாசாமிப் பிள்ளைக்கு குடிசை காட்டப்பட்டது. சைக்கிளை விட்டு இறங்காது பிள்ளை காலூன்றி நின்றார். முன்பக்கம் நகர்ந்து குடிசையின் ஓரம் இருந்த மண் திண்ணையில் கால் வைத்தார்.

''ஏய்... யார்ரா உள்ற.. இன்னும் அரை அவர்ல எங்க ஊர் பஞ்சாயத்துக்கு வரல... கை வேற கால் வேறயா வெட்டிப் போட்ருவேன்... அந்தப் பொட்ட நாயும் வந்து பஞ்சாயத்துல நிக்கணும், சரியா அரை அவர்ல உங்க ரெண்டு பேர் தலையும் தெரியல... எத்தினி பொணம் வுழும்னு எங்கொப்பரான தெரியாது. சொல்லிட்டேன்.''

''டேய்... செவத்தான்.. போய் உங்க பஞ்சாயத்து பிரசிடென்ட் கிட்ட நான் வந்து போனதாச் சொல்லிடு.''

கோழிகள் ஆள் வரது கண்டு இறக்கையடித்து ஓடுவது போல, குடிசை ஜனங்கள் இடதும், வலதுமாய் ஓடினார்கள். சைக்கிள்கள் வட்டமடித்து திரும்பின. பஞ்சாயத்து, கோவில் முற்றத்தில் கூடிற்று. காத்திருந்தது.

கிராமத்து சாலையோரம் நின்றிருந்த இளவட்டங்கள் திபுதிபுவென உள்ளே நுழைந்தனர். ''ஆளுவருது. ஆளு வருது.''

''எத்தினி பேருடா.''

''அவங்க இரண்டு பேரு மட்டும் முன்னாடி வராங்க. குடிசை ஜனம் வயக்காட்டு வழியா வராப்பல.''

''வரட்டும்''

''வூட்டுக்குப் போய் இருக்கற கம்பு அரிவாளெல்லாம் எடுத்துக்கிட்டு வாங்கடா.. எதுக்கும்.'' மணியக்காரர் கிறீச்சிட்டார்.

''அடச்சே பொட்டக் கோழிய அடிக்க கம்பு அருவா எதுக்குய்யா.. சும்மா கிடங்கடா.''

வேலு உள்ளே வந்தான். கூட்டம் பிரிந்து வழிவிட்டது. கூட்டத்துக்கு அப்பால் பூவரசம் செடி வளைவில் அவள் பதுங்கி நின்றாள்.

''வாப்பா வேலு என்ன இப்பிடி பண்ணிட்ட.''

''நீங்க வெட்டுவேன் குத்துவேன்கறது நல்லா இல்லீங்க.. எங்க ஊர்
வந்து என்னை வெட்டறதுக்கு..''
''ச்சு.. பேச்சு மதிக்க வந்துட்ட. ஆளுக்கு உண்டான மரியாதை உனக்
கும் தருவோம். ஓரமா இரு. அந்தப் பொம்பளை எங்க..?வரச் சொல்லு.''
அவள் வந்தாள். மேல்துணியை தோள் சுற்றிப் போர்த்திக் கொண்டு,
போர்த்தின முந்தானையால் முகத்தைப் பாதி மூடிக் கொண்டு, நெற்றி
மட்டும் தெரிய நின்றாள்.
''என்னம்மா.. என்ன குறை உனக்கு..'' அய்யாசாமிப் பிள்ளை நிதா
னமாய் ஆரம்பித்தார்.
அவள் விசும்பத் துவங்கினாள். கூட்டம் காத்திருந்தது.
''பிராது குடுத்தவருகிட்ட மொதல்ல கேக்கணும். அதான் முறை.''
கூட்டத்தில் யாரோ குரல் எழுப்பினார்கள்.
''அவரு குறை சொல்லத்தான் கூடியிருக்கோம். அப்புறம் என்னா..
பொம்பளைய கேப்போம். த்த.. அழுவறத நிறுத்திட்டு என்னா ஏதுன்னு
சொல்லு.''
''எனக்கு அவரு வேணாம். என்னைய வுட்ருங்க.''
''யாரு உன்னைப் புடிச்சு வச்சுக்கிட்டா. என்ன ஏதுன்னு தெரிஞ்சுக்
காம எப்பிடி வுடறது. பஞ்சாயத்து விஷயம் வந்தாச்சுனா, அம்புட்டயும்
சொல்லிடணும்'' மணியக்காரர் எழுந்து நின்று அதட்டினார்.
''ஒரு நாளப்போல அடி, உதை, ஒரு நாளு கிழமைல கூட வாயில
நல்ல வார்த்தை வராதுங்க. எங்க அப்பன் ஆயியக்கூட அசிங்கமா பேச
றாருங்க. எத்தினி நாளுதான் பொறுத்துப் போவுறது. என்னால முடியா
துங்க இனிமே.''
''எங்கக்கிட்ட சொல்றது தான.. நாங்க கண்டிக்க மாட்டமா..'' மணி
யம் கால் மேல் கால் போட்டுக் கொண்டார்.
''நீங்க எல்லோரும் தான பொண்டாட்டிய அடிக்கறீங்க. கெட்ட
வார்த்தைல கூப்பிடறீங்க. யார்கிட்ட சொல்றது?''
''யாரைச் சொல்லற நீ...?'' அய்யாசாமிப் பிள்ளை அதட்டினார்.
''உங்களைச் சொல்லலீங்க.''
''புருஷன் ரெண்டு தட்டுத் தட்டிட்டா வூட்ட வுட்டு ஓடுறதா.. இன்ன
காரணம், இன்ன சண்டைன்னு ஊர்ல நாலு பேர்க்கிட்ட சொல்றதில்
லையா.''
''வூட்டுக்காரர் செருப்பால அடிக்கிறார்னு ஊர்ல நாலு பேர்கிட்ட
சொன்னா.. அந்த நாலு பேர் செருப்புக்குமில்ல பயப்பட வேண்டிருக்கு.''
''தாயம்மா என்ன பேசற நீ?''
''இந்தப் பஞ்சாயத்துல யாரும் சுத்தம் இல்லை. இங்க முறையிட்டு
தீர்க்கற மாதிரி எதுவும் இல்லை.''
''அடுத்தூர் ஆள்கூட ஓடிப் போயிட்டா உன் பிரச்சனை தீர்ந்து
போச்சா.''
''என்ன வாச்சும் ஆவுது.. இந்தூர் ஆளுக்கு ஒரு பயம் வருமில்ல..
அவங்க பொண்டாட்டிய மரியாதையா நடத்துவாங்கல்ல..?''
''என்னடி வாய்க்கொழுப்புல பேசற...'' மணியக்காரர் எழுந்து அதட்
டினார்.



''இல்லீங்க.. இது..'' தாயம்மாவின் புருஷன் வேட்டியை மடித்துக்
கொண்டு எழுந்தான்.
''உக்காருடா..'' அய்யாசாமி பிள்ளை அதட்டினார்.
''சரி. நீ போகலாம்.'' தாயம்மாளை நோக்கி விரல் அசைத்தார்.
''என்னாங்க இது..?''
''பஞ்சாயத்து சுத்தம் இல்லைன்னுட்டப்புறம் விசாரிப்புக்கு அர்த்த
மில்லை. தாயம்மா புருஷன் போலீஸுக்குப் போவட்டும்.''
''எனக்கு போலீஸ் எதுக்கு. அருவா போதும் வெட்டிப் போட்டுர்
றேன்.''
''ஊருக்கு இது இன்னும் நல்ல பாடமா இருக்கும், உடனே செய்.''
''பிள்ளை... என்ன இது. கூட்டம் கூட்டிட்டு.. அலுத்த மாதிரி பேச
றீங்க. இதான் முடிவா?''
''என் முடிவுக்குக் கட்டுப்படறது உங்க இஷ்டம்.''
''ஊர்ல அத்தினி பொம்பளைங்களும் துருத்துரு வாளுங்க.''
''அது உங்க தலையெழுத்து.''
''உமக்கு பொண்டாட்டியில் லேங்கறதுனால பேசறீராக்கும்.''
''பொண்டாட்டி இல்லேன்னா என்னா.. மருமவாஇருக்குல்ல, அது
வாசப்படி தாண்டிச்சுன்னா...''
அய்யாசாமிப் பிள்ளை துண்டை உதறி எழுந்தார். கூட்டத்தை பிளந்து
வெளியே வந்தார்.
''எல்லார் வீட்டிலயும் பொஞ்சாதி, பொண்ணு, மருமவ,மனிதன்னு
உண்டு. ஒற்றையங்குல உயர வாசப்படிய எவவேணா தாண்டலாம். தாண்
டறவ காலை உடைக்கறதுக்கு முன்ன உங்கக்காலு எவ்வளவு சுத்தம்னு
கேட்டுக்கங்க. அந்தப் பொம்பளை சொல்றது அதுதான். இந்தக் கேள்
விய பொம்பளை கேட்டப்புறம் பஞ்சாயத்துல நான் உட்கார்றதுல அர்த்த
மில்லை. இனி உங்க இஷ்டம் பஞ்சாயத்துன்றது நம்ம நல்லது கெட்ட
துக்கு என்கிற மாதிரி. கட்டுப்படறவனுக்கு பஞ்சாயத்து. கட்டுப்படாதவ
னுக்குப் போலீஸு எப்படின்னா போங்க.''
கூட்டம் என்னாவாயிற்று என்று தெரியவில்லை.
ஆனால் நெஞ்சில் ஒரு வலி. புத்தியில் ஒரு வேதனை பொங்க ஆரம்
பித்து விட்டது.

## 15

''உங்க தீர்ப்புக்கு இந்தப் பஞ்சாயத்து கட்டுப்ப
டல.''
''சந்தோஷம்.''
''இப்படி பாதில உதறினாப்புல தீர்ப்பு சொல்லிட்டு
கூட்டம் கலையறதுக்கு முன்ன வூட்டுக்குப் போற பிரசிடென்டு சரியாப்
படலை எங்களுக்கு.''
''கூட்டம் கலைஞ்ச பிறகு புள்ளையார் கோயிலைக் கூட்டி குப்பை
யள்ளி போட்டுட்டுப் போவணும்கறியா?''
''இனிமே இந்தப் பஞ்சாயத்துக்கு...''
''வுட்ருங்கப்பா. எழுதிக் குடுத்துடறேன்.''

''வுட்டுறோம். ஆனா நீங்க மெம்பரா இருக்கலாம். ஓட்டு உண்டு உங்களுக்கு.''

''ஓட்டை வச்சுக்கிட்டு என்னா செய்ய. எனக்கு எதிலையும் நம்பிக்கையில்ல. ஒரு விஷயம் தவிர.''

''என்ன விஷயம் அது?''

''மரணம் நானும் சாவப்போறேன். நீயும் சாவப்போற சுப்பையா பிள்ளையும் சாவப்போறான். ஒரு நாள் ஓடிப்போன பொம்பளையும் மூச்சு நின்னு போய் சுடுகாட்டுக்குப் போகப்போறா...''

''அதனால...''

''பஞ்சாயத்து, தேர்தல் குடித்தனம், புருஷன் பொண்டாட்டி, கூத்தியா, நல்லது கெட்டது எதுலயும் நம்பிக்கையில்லை. சாவு. சாவுதான் நிச்சயம். அதுதான் சத்தியம்.''

''என்ன ஆச்சு அய்யாசாமிப்புள்ளை? என்னமோ மாதிரி பேசறீங்க... புரியலியே.''

''உன் உடம்புலயும் ரத்தம் சுண்டி உதறி உதறி நிக்கற பாரு... அப்ப புரியும்.''

''உங்களைப் பார்த்தா ரத்தம் சுண்டின ஆளு மாதிரி தெரியலியே.. வீசிப் போட்டுல்ல நடக்கறீங்க.''

''சுண்டறதுக்கு முன்னாடியே தெரிஞ்சது என் பூர்வ ஜென்ம புண்ணியம்.''

''வுட்ருங்கய்யா அவரை. ஏதோ வீட்ல மனஸ்தாபம். நம்மகிட்ட காட்றாரு.''

''என்னாங்க அய்யாசாமிப்பிள்ளை, அப்பிடியா?''

''எப்படின்னா வச்சுக்க. ஆளை விடு.''

ஒரு பக்கப் புல்வெளியிலிருந்து அடுத்தப் பக்கப் புல்வெளிக்கு காதுகளை ஆட்டிக் கொண்டு நகரும் பகல் நேரக் கறவைகள் போலக் கூட்டம் கலைந்தது.

''காபி தண்ணி எடுத்தாரட்டா...'' கதவுக்குப் பின்னால் குரல் கேட்டது. செண்பகா எட்டி மாமனாரைப் பார்த்தாள்.

பிள்ளை பேசாமலிருந்தார்.

காபி டம்ளர் திண்ணையில் வைக்கப்பட்டது.

''நான் ஏதா தப்பா நடந்திருந்தா மன்னிச்சுக்கணும்.''

''ஏன்னா?''

''உங்க பேச்சு நல்லாவேயில்லை.''

''வுடு. ஏதா உளப்பம்..''

''வீடுன்னா சண்டை, பூசல் இருக்கத்தான் செய்யும். மனசுல வச்சுக்கப்படாது.''

''உன்னை ஒண்ணும் சொல்லலை தாயி.''

''என்னை சொன்னாதானா.. வீட்ல பெரியவங்களுக்கு மனசு சரியில்லைன்னா எல்லோருக்கும் கஷ்டம் தான்.''

''யாருக்கும் கஷ்டம் குடுக்கக் கூடாதுன்னு முடிவு பண்ணிட்டேன்.''

''இன்னிவரைக்கும் குடுத்ததா தெரியவில்லையே.''

''இன்னொரு மனச மதிக்காத எவனும் வாழ்ந்திட முடியாது. நடக்க



றப்ப நாலு புல்லு, ரெண்டு பூ நசுங்கின மாதிரி... கடவுளே, அதுகூட செய்துடக்கூடாது.''

''தப்பு பண்ணினா கண்டிக்கலாம்.''

''யாரு யாரைக் கண்டிக்கறது.. எது தப்பு, எது சரி''

''புருஷனை வுட்டுட்டு ஓடிர்றது தப்பில்லியா?''

''அடிச்சான், ஓடிட்டா.''

''ஒருத்தன் அடிச்சான்னு இன்னொருத்தன்கிட்ட ஓடினா அவன் அடிக்க மாட்டானா... சதா நேரமும் கொஞ்சிக்கிட்டிருக்க முடியுமா?''

''அவனும் அடிச்சா இன்னொருத்தன் கிட்ட ஓடுவாளாயிருக்கும்.''

''நாளைக்கு நாலு பெத்தவளும் ஓடலாம், புருஷன் சரியில்லைன்னு. அவங்கவங்க செய்யறது அவங்கவங்க நியாயம்னா புள்ளைங்க கதி?''

''அப்பன் ஆயி வளர்த்தாதானா பசங்க வளரும்.''

''கருவேப்பிலை செடியும், வேலிக்காத்தானும் ஒண்ணா?''

''எல்லாந்தான் வேணும்.''

''நல்லாருக்கு நீங்க சொல்றது. அப்ப அடுத்த வெளைச்சலுக்கு வேலிக்காத்தான் பயிர் பண்ணிடலாமா? ஓடிப்போன பொம்பளைய இழுத்து வச்சு அதட்டி சேர்த்து வைக்க முடியலை. பொம்பளைய கை நீட்டி அடிச்சே பொலி போட்ருவேன்னு சொல்லத் தெரியலை. ஓடினா ஓடட்டும்னா எதுக்குக் குடித்தனம். எதுக்கு பஞ்சாயத்து? கல்யாணம் கார்த்தி வேணாமோ.''

''கட்டிக்கிட்டவன் என்ன வாழ்ந்தான்.''

''கஷ்டம் தான். அதுக்காக கலைச்சுட முடியுமா? எட்டு வேலி நிலம் சேர்த்து வச்சதால தான் உக்காந்து சாப்பிட முடியுது. படிக்க வச்ச பிள்ளை எட்டை பத்தா மாத்துச்சு.

தோள்ல போட்டு சிமிட்டுக் கம்பம் எடுத்தாந்தீங்களாம். உங்க செலவுல கிராமத்துக்கு ஒயர் போட்டீங்களாம். ஊர்ல எத்தனை குழந்தைங்க படிச்சு பாஸ் பண்ணலை. வெள்ளை சட்டையும் பேண்டுமா உத்தியோகம் போகலை. எனக்கென்னான்னு இருக்கவா பொறந்தோம். அடுத்த தலை முறைக்குத் தானே இத்தினி கஷ்டமும். நாளைக்குக் கட்ற பொண்ணுக்கு நம்பிக்கையா குடித்தனம் பண்ணத்தான் இத்தினி சட்டம்.''

கிழவர் பேசாதிருந்தார்.

''என்னப்பா பஞ்சாயத்துல கூச்சலாமே. சரிதான் போங்கடானுட்டீங்களாம். எல்லோரும் எங்கிட்ட வந்து கத்தறானுங்க.'' பன்னீர் படியேறினான்.

''ம்ம்ம்.''

''நான் வேலுகிட்ட பேசினேன். இருக்க இடம் கொடுத்தேன். வேற ஒண்ணும் செய்யலேன்னு சத்தியம் பண்றான், பொம்பளைகிட்ட பேசினா சரியாயிடும்னு தோணுது.''

''சுப்பையா பிள்ளை தலைல நாலு போடுங்க. அதென்ன பொம்பளைய கை நீட்டி அடிக்கிறது.'' செண்பகா இடைமறித்தாள்.

''கூட்டத்துல அத்தினி பேரும் சுப்பையாவைச் சுத்திட்டானுங்க. சுப்பையா அவளை வரச் சொல்லுங்கனுட்டான். அடுத்த தடவை கம்ப்ளை

யின்ட் வந்தா பஞ்சாயத்துலயே பிரிச்சு வச்சுடறதுன்னு பயமுறுத்தி வச்சிருக்கோம். சும்மா பிரிக்கிறது கூட இல்லை. சொத்துப் பத்து அத்தினியும் சரிபங்கா பிரிச்சிடுவோம்னு சொல்லிட்டோம். பொம்பளைய வேலூட்ல தங்காம செண்பகா தாய்மாமான் வீட்ல ஒரு வாரம் இருக்கச் சொல்லிடப்போறோம்.''

''ம்ம்ம்..''

''என்னப்பா ஒரு மாதிரியா இருக்கீங்க.''

''இதுனாலெல்லாம் ஒட்டிருமா... விரிசல் விரிசல்தான்....''

''ஏம்பா இப்படி பேசற...''

''தெரியலை. ரொம்ப நொந்து போச்சு.''

''வுடுங்க... ஏதோ போக்கத்தது.''

''அவமட்டுமா போக்கத்த பிறவி, நாம கூடதான்.''

''இதென்ன ஏடாகூடம்.''

''உள்ளே போடா.''

''வாங்க... அவங்ககிட்ட பேசி புண்ணியமில்லை.''

பன்னீர் படிதாண்டி உள்ளே போனான்.

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பளிக்கும் களிப்பே.. உள்ளே சேகண்டி அடித்து யாரோ பாடினார்கள்.

உடம்பு துவண்டது.

வியர்வை ஆறாய்ப் பெருகிற்று.

நெஞ்சு வலித்தது.

பின்பக்கம் சுற்றிக் கொண்டு போனார். வயிறு கலங்கி பேதியாயிற்று. நடக்க முடியாதபடி ஒரு துவளல் ஏற்பட்டது.

திண்ணைக்கு வந்து கண்களை மூடிக் கொண்டார். கழுத்தில் தொங்கிய உத்திராக்ஷ கயிறு கனத்தது.

பாக்கு வெட்டியால் உத்திரா கயிறை அறுத்தார். சுற்றி தலையில் வைத்துக் கொண்டார்.

உடம்பு லேசாயிற்று.

தாயம்மாள் - பிள்ளை பெறாத தாயம்மாள் புருஷனை விட்டு ஓடினால். ஓடட்டும் என்று தோன்றுகிறது. தாயம்மா இதே கிராமத்துப் பெண். இங்க யாரும் சுத்தம் இல்லை. எவன்கிட்ட கேக்கறது நியாயம் என்றாளே. எவ்வளவு வெறுப்பில் சொல்லில், அதுதான் தைத்து விட்டது.

தாயம்மாள் எதிர் வீடு. சுப்ரமணியத்தின் தமக்கை. அவளுக்கு சில ரகசியங்கள் தெரியும். ''

''எல்லோரும் தான் பொண்டாட்டிய அடிக்கறீங்க.''

''யாரைச் சொல்ற நீ''

''உங்களைச் சொல்லலீங்க.''

அய்யாசாமிப் பிள்ளைக்குத் தலை வலித்தது. மூச்சுத் திணறிற்று. மீண்டும் வியர்த்தது.

''எங்கம்மா விதை நெல்லு ஒரு மூட்டை கேட்டுச்சு.'' எட்டு வயசு தாயம்மாள் வந்து நின்றாள்.

''வாங்கிட்டுப் போ.''

.''எங்கம்மா உழவு மாடு இன்னிக்கு வருமான்னு கேட்டுச்சு.''



''வரும்னு சொல்லு போ.''

''நடவாளு தகராறு பண்றாங்களாம். ஆளுக்கு எட்டணா கூட கேக்கறாங்க''

''எம் பேரச் சொல்லு. கேக்க மாட்டாங்க.''

''உங்க பேரு சொன்னோம். கூட ஒரு ரூபா கேக்கறாங்க.''

''கூலி அய்யாசாமிப் பிள்ளை தருவார்னு சொல்லிடு.''

''எங்கம்மா ரைஸ் மில்லுக்கு வண்டி கேட்டாங்க.''

''என் வண்டி போவுது அதுல போட்டுறச் சொல்லு.''

''பொங்கல் வச்சிருக்கிறோம். படையலுக்கு வருவீங்களான்னு கேக்கச் சொன்னாங்க.''

''பலக்க மணியடிக்கச் சொல்லு. இங்கிருந்தே கும்புட்டுக்கறேன்.''

தாவணி சுற்றி குளத்துக்குப் போகையில் அவர் எதிர்ப்பட, அந்தப் பெண் ஒதுங்கி நிற்கும்.

''என்ன வேணும்?''

''ஒண்ணும் வேணாம்.''

''நீ பாட்டுக்கு போக வேண்டியதுதானே. எதுக்கு நிக்கற வெக்கப்பட்டுக்கிட்டு, என்னக் கண்டா அத்தினி வெக்கமா.''

''ஏன்... என் மூச்சுக்காத்து விஷமா போயிடுச்சா.''

''எல்லாருக்கும் எங்காத்தா மாதிரி விறைச்ச உடம்பா. எனக்கு விஷம்தான்.''

''சரி அப்ப நான் விலகி நின்னுக்கறேன். நீங்க போங்க..''

அடுத்து நிற்பவருக்கு நெல் முனையளவு கூட தெரியாத பூடகம்.

சொல், செயல், நடப்பு எல்லாமே பூடகம்.

இந்தப் பஞ்சாயத்து ஒண்ணும் பண்ணாது என்கிற தைரியம். அதன் ஆணிவேர் தாயம்மாளின் முதல் சொல்லிலேயே புரிந்து விட்டது. உதற காரணமாயிற்று.

பொம்பளை கெட்டுப் போறதுக்கு ஆம்பிளையும் காரணம்னு பளிச்சென்று சொல்வாள். உதாரணம் காட்டுவாள்.

பொம்பளையாம நீ என்று கூச்சலிட்டால், எங்க ஆத்தாளைக் கேளு.. சொல்லும் என்று போய் விடுவாள்.

வாழ்க்கையை, தவறுகளே திசை மாற்றுகின்றன. உலுக்குகின்றன. தவறுகள் பல தலைமுறைக்குத் தொடர்கின்றன. தொடரத் தொடர விஸ்வரூபம் எடுக்கின்றன.

மீண்டும் நெஞ்சு வலித்தது.

வியர்த்தது.

ஒரு கயிறை தூணில் சுற்றி இரண்டு முனைகளையும் பிடித்து முறுக்கிக் கொண்டிருக்க, மெல்ல மெல்ல முறுக்கு ஏறுமே அந்த நிதானத்தில் நெஞ்சுவலி அதிர்ந்தது. மார்பில் நடுக்குழியில் வலி 'விண் விண்' என்று தெறித்தது.

## 16

என்ன நடக்கிறது என் உடம்புக்குள்.. அய்யாசாமிப் பிள்ளை மனசு முழுவதையும் குவித்து உள்ளே உடம்புக்குள்ளே தேடினார். தோள்பட்டைக்குள் நடு

எலும்பில் ஏதோ நகருகிறது. அது நகர நகர வலி பரவுகிறது. முழங்கை வலி சுற்றிக் கொள்கிறது. கீழே இறங்கிக் கை முழுவதும் குடைகிறது. உள்ளங்கையைத் தாக்குகிறது. புறங்கையில் பரவுகிறது. மோதிர விரலில் முதலில் வலி. பிறகு ஆள்காட்டி விரலில். பிறகு நடு விரலில் இடது கை மொத்தமும் வலிக்கிறது.

மெல்ல கையை அனிச்சையாய் மடக்கிப் பிரித்து, மடக்கிப் பிரித்து வலியை விரட்ட முயற்சித்தார். முயற்சியை வலி வலுவாய் எதிர்க்கிறது. அதிகம் கூடுகிறது. அதே நேரம் நெற்றிப் பொட்டில் ஒரு வேதனை... அழுத்தம்... கண்களைத் திறக்க சகலமும் இரண்டாய்த் தெரிகின்றன.

நெஞ்சு கனத்துக்குத் தெரிகிறது. பெரிய சுமையாய் நெஞ்சில் சுவாசம் ஏறி இறங்குகிறது. முதுகு ஈரம் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. துடைத்துக் கொள்ளலாம் என்று எழுந்த போது, யாரோ தள்ளிவிட்ட மாதிரி மறுபடி தலையணையில் தலைமோத விழுந்தார். புரிந்து விட்டது. இனி இப்போதைக்கு நடமாட முடியாது. உள்ளே பெரிய பிசகு நடந்து கொண்டிருக்கிறது.

''பன்னீரு'' கூட முற்பட்ட போது குரல் தடுக்கிற்று.

''பன்னீரு..'' மறுபடி முயற்சி குளறிற்று. வாசல் நாய்க்கு கூட கேட்கவில்லை. ரேழி தாண்டி ஹால் கடந்து படியேறி மாடியில் ஒலிக்க வேண்டும். முடியாது அத்தனை வலுவாய் குரல் எழுப்ப நெஞ்சு நிச்சயம் பளக்கென்று வெடித்து விடும். 'பன்னீரு...'' அவனை எப்படிக் கூப்பிடுவது.

வலது கையால் அருகில் இருந்த தாம்பூல தாலத்தைப் பற்றினார். உதறினார். வெங்கலம் திண்ணையிலிருந்து விழுந்து உருண்டு தரையைத் தொட்டது. வாசலில் படுத்திருந்த நாய் விலுக்கென்று ஓடிவந்து மறுபடி படுத்துக் கொண்டது. யாரும் வரவில்லை. கிழவர் பயந்தார்.

''பன்னீரு.. பன்னீரு...'' பயத்தில் தொண்டையடைக்கக் கூவினார். இன்னும் சற்று கை நீட்டி கைக்கம்பை எடுத்தார்.

''உன்னைப் பாத்துட்டு சாவணும்டா பன்னீரு... உம் மடில சாவணும்டா பன்னீரு...'' கண்ணில் ஜலம் கட்டிற்று. கைக்கம்பு பிடிபட்டதும் மெல்ல உயர்த்தினார். ஜன்னலை நோக்கி அடித்தார். கொம்பு ஜன்னலில் பட்டு தரையில் மோதிற்று. பிடியை விடாது மறுபடி தட்டினார்.

''யாராது..'' எதிர்வீட்டிலிருந்து குரல் கேட்டது. சுப்பிரமணி பெண்டாட்டியின் குரல். மறுபடி தட்டினார். சுப்பிரமணியின் மனைவி பூவனம் தெருவின் நடுவில் வந்து 'யாரது..'' என்று மறுபடி குரல் கொடுத்தாள். தலையை இடப்பக்கம் திருப்ப நெஞ்சுவலி மேலேறியது.

''யாழுழுது..'' கிழவருக்குப் பதில் குரல் வாய் குளறி வந்தது.

அவள் நெருங்கி அழிக்கம்பியைப் பிடித்துக் கொண்டு பார்த்தாள். கிழவர் மறுபடி ஜன்னலைத் தட்டினார்.

''என்னங்க சின்ன பண்ணை.. செண்ம்பகா. உங்கப்பாரப் பாரு.... கதவ வேற தாழ்போட்டுக்கிட்டு.... ஏ செண்ம்பகா.. எங்கிருக்கிற நீ?''

அங்கங்கே விளக்கெரிந்தன. ஆட்கள் அரவம் கேட்டது. கிழவர் தடியைக் கீழே போட, மறுபடியும் சப்தம் எதிரொலித்தது.

யாரோ கதவசைத்தார்கள். மேலே அரவசம் கேட்டது. கிழவர் பெரிதாய் சுவாசம் விட ஆரம்பித்தார். பன்னீர்... பன்னீர் வந்துருவான் என்று



நெஞ்சுவலி படபடக்க அழுத்துவதை எதிர்த்து காத்திருந்தார்.

ரேழிக்கதவு திறந்தது. பன்னீர் வெளியே வந்தான். செண்பகா பின்னால் வந்தாள்.

''கதவ திறந்து பார். அப்பாரு என்னவோ மாதிரி கிடக்கார். லைட் போடு.''

விளக்கெரிய பன்னீர் தந்தையருகில் வந்தான். கிழவன் மூக்கில் சிறிய அளவு ரத்தம் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

போர்வையை உருவ பனியன் தெப்பலாய் இருந்தது. அப்பாவைத் தூக்க முற்படுக்கையில் 'வேண்டாம்' என்று கையசைத்தார். நெஞ்சுவலி என்று சாடை காட்டினார்.

ஹார்ட் அட்டாக்.

பன்னீர் காரை வெளியே எடுத்து நிறுத்தினான். தண்ணீர் செம்புடன் வந்த செண்பகாவை 'சும்மா இரு... கொடுக்காதே' என்று மிரட்டினான். செண்பகா மணியக்காரர் வீட்டுக்கு ஓடினாள். அவர் போட்டுக் கொள்ளும் சிறிய நெஞ்சுவலி மாத்திரை வாங்கி வந்தாள். கிழவர் வாயில் போட்டு தேக்கிக் கொள்ளச் சொன்னாள். கிராமம் வாசலில் கூடியிருந்தது. சில்லென்று அந்த சிறிய மாத்திரை வாயில் கரைய கிழவர் மிடறு விழுங்கினார்.

அசையாமல் வெளியே எடுத்து வந்து கார் பின்ஸீட்டில் கிடத்தினார்கள். செண்பகா உள்ளே ஏறி தலையை எடுத்து மடியில் வைத்துக் கொண்டாள். மணியமும், சுப்பையாவும் ஏறிக் கொள்ள, 'மாயவரம் போறேன்' என்று கூறிவிட்டு காரை பின்னோக்கி எடுத்தான். கார் குலுங்கிற்று. தார்சாலை தொடும் வரை கவனமாய் ஓட்டினான். தார்சாலை ஏறி மாயவரம் ரோடில் திரும்பியதும் அறுபதும் எண்பதும் அலட்சியமாய் தொட்டான்.

வழியில் இன்னொரு சிறிய மாத்திரை ஊட்டப்பட்டது. மாயவரம் நர்ஸிங் ஹோமில் கிழவர் உதடு வறண்டு கனமான எச்சில் கம்பிகள் இழுபட்டன.

ஆக்ஸிஜன் மூக்கில் பொருத்தியதும் அந்த சுகத்தில் கிழவர் தூங்கிப் போனார். டாக்டர் ஊசி போட முனகினார்.

''மாஸிவ் அட்டாக் பன்னீர் செல்வம். ரெண்டு நாள் கழிச்சுதான் எதுவும் சொல்ல முடியும்.''

''நினைவு இருக்கா டாக்டர்''

''இல்லாதது நல்லது. தூங்கட்டும். முழிச்சா மறுபடி ஊசி போட்டு தூங்கப் பண்ணிடுவேன். அவரைப் பார்க்க வேண்டாம். எமோஷனலா அழக்கூடாது. வாசல்லயே இருங்க.''

விடியலில் மாயவரம் நண்பர்கள், அரிசி வியாபாரிகள், தரகர்கள் சூழ்ந்து கொண்டார்கள். ஆளுக்கொரு யோசனை சொன்னார்கள். பன்னீர் வயிற்றில் ஒரு வேதனையை உணர்ந்தான்.

செண்பகாவின் தாய்மாமன் கார்சாவியை வாங்கிக் கொண்டார். ஒரு நாளைக்கு பத்து தடவை கிராமத்துக்கும் மாயவரத்துக்கும் கார் வந்தது. இரண்டாம் நாள் அப்பா பேசினார். திருநீறு கேட்டார். வலக்கை பிரித்து 'சிவோஹம்' என்று இட்டுக் கொண்டார்.

''செண்ம்பகம் எங்கே?''

வரச் சொல்லி தலைமாட்டில் உட்கார வைத்தார்.

''யாருமில்லையே..'' சுற்றிப் பார்த்தார். பன்னீர் சிறுபிள்ளை மாதிரி கேவினான். ''என்னை வுட்டுட்டுப் போயிடாதீங்கப்பா'' என்று அரற்றினான்.

பன்னீர் கேவி அழுவது பார்த்து அய்யாசாமிப்பிள்ளை முகமும் கோணிற்று.

''ச்சு.. போதும்...'' செண்பகா அடிக்குரலில் அதட்டினாள். அந்த மெல்லிய அதட்டல் கூட அய்யாசாமிப் பிள்ளைக்கு அந்த நேரம் பிடிக்கவில்லை.

''எதுக்கு அதட்ற அவனை. அழுவட்டும்.... அழுவற பையனா அவன். அஞ்சு வருஷம் குடித்தனம் பண்ணிருக்கியே தவிர, அப்பனுக்கும் புள்ளைக்கும் உள்ள உறவு தெரியுமா உனக்கு.''

''அவனைத் தோள்ல போட்டு வளர்த்தேன். நானே உடம்பு முழுக்க எண்ணெய் போட்டு உருவி குளிப்பாட்டி எல்லாம் நான்தான். இன்னொரு பொம்பளை வந்தா பையனைப் பிரிச்சுடுவாளோன்னு பயந்து நானே சோறு ஊட்டினேன். எனக்குன்னு அழுவதற்கு எம் புள்ளை தான்.. அவனை ஏன் அதட்டற?''

''நான்.. நான் ஒண்ணும் சொல்லலை அதிகமா பேசாதீங்க மாமா.''

''பேசத்தான் பொழச்சு பொரண்டு கெடக்கேன். பேசாதீங்கன்னா எப்படிம்மா?''

''நான் அழுவலப்பா வுட்ரு பேசாத.''

''பேசணும்டா பன்னீரு. உங்க ரெண்டு பேர்கிட்டயும் மனசார ஒரு விஷயம் பேசிடணும். தபசு மாதிரி வேற கட்டாத உன்னை வளர்த்ததுக்குக் காரணம், உன் சந்ததிக்கு என் நடத்தையால கெட்ட பேரு கூடாதுன்னு தான். உனக்குப் புள்ளை பொறந்தா வேற எவ குடும்பமும் பங்கு போட வரக்கூடாதுன்னுதான்.. டேய்... புள்ளை பொறக் கலையேடா.. நெய்ப் பந்தம் தூக்க பேரன் பொறக்கலியேடா.''

''முருகா.... முருகா...'' கிழவர் முணுமுணுத்தார்.

''அவளைக் கூப்பிடு இப்படி. இங்க உக்கார வை.'' படுக்கையைத் தட்டிக் காட்டினார். செண்பகா போர்த்தின புடவையோடு அவர் அருகே கட்டிலில் உட்கார்ந்தாள்.

''உனக்கொரு கஷ்டம் தரப்போறேன். தாங்கிக்கிறியா.''

செண்பகா தலையசைத்தாள்.

''எனக்காக தாங்கிக்க, வேற வழியில்லாத இதச் சொல்றேன். உம் மேல எனக்கு எந்தக்குறையும் இல்ல. எந்தக் கோவமும் இல்ல. உன்னை மாதிரி ஒரு மருமவ கெடைக்கக் குடுத்து வச்சிருக்கணும். ஆனா உனக்குக் குடுப்பினையில்ல. ஒண்ணு பெத்து எம் மடில போட்டிருந்தா.. உன்னை தலைல வச்சு கொண்டாடிருப்பேன். கால்ல வுழுந்து அழுதியே ஞாபகம் இருக்கா.. பயப்படாதே போ... எம்புள்ளை உனக்குத்தான்னு ஊருக்குத் திருப்பி அனுப்பினேனே ஞாபகம் இருக்கா.... பேச்சு மாறாத உங்க வூட்டுப் படியேறி பொண்ணு கேட்டேன். உங்க ஊரே எகிறிக் குதிச்சது. நீயா கட்டினா மருவாதி, எம்புள்ளை இழுத்துட்டுப் போனா உனக்குத் தான் அசிங்கம்.... எனக்கு ரெண்டும் சரிதான்னு சொன்னேனே ஞாப



கம் இருக்கா. ஜோசியம் பாக்காத.. ஜாதகம் பாக்காத... சாமி முன்னை பூப் போட்டு கேக்காத.. எம்புள்ளை உன்னைத் தொட்டான்ற ஒரே காரணத்துக்காக உரமா நின்னேன். இப்பவும் சொல்றேன். உம்மேல எனக்கு ஒரு குறையும் இல்ல. ஆனா நெய்ப்பந்தம் புடிக்க ஆளில்லாத போச்சே...''

''என் வம்சம் வளரணும். எனக்குப் பேரன் வேணும். உன்னால இது முடியல. டாக்டர் சொன்னாரு. நர்ஸ் பாத்தாங்கங்கறதைல்லாம் நான் நம்பத் தயாரா இல்ல. இப்ப டாக்டரா என்னைப் பொழைக்க வச்சான். எனக்கு ஓலை வந்தாச்சு. கொஞ்சம் இருடான்னு தாவா கேட்டு உங்கிட்ட பேசறேன்....''

''மாமா...''

''பன்னீரு வா இப்படி. நம்ம வம்சம் வளரணும். நீ இன்னொன்னு கட்டு... கூத்தியா வச்சுக்க. எதுவேணா செய். என் வம்சம் வளரணும். செய்றேன்னு சத்தியம் பண்ணு. என்நெஞ்சில் அடிச்சு சத்தியம் பண்ணு.''

''செய்யல நான் பேயா வந்து உங்களை ஆட்டி வைப்பேன். சத்தியம் செய் பன்னீரு. சத்தியம் வம்சம் வளர வழிசெய்வேன்னு சொல்லு. இந்தப் பொண்ணைத் துரத்துன்னு சொல்லல. தள்ளி வைன்னு சொல்லல. எப்பிடியாச்சும் எனக்குப் பேரக்குழந்தை குடுன்னு கேக்கறேன். சொல்லுடா.''

'' அப்பா? ''

'' மாட்டே இல்ல. நான் செஞ்சு வச்ச கல்யாணமா இருந்தா, என் கட்டுக்கு நிக்கும். நீயா கட்டிக்கிட்டது தானே அப்பன் கேட்டதைத்தர முடியாதுன்னு தோணும். ''

'' அப்படியில்லைப்பாப. ''

'' வேற எப்படிடா செம்பகா கூடாதுன்னுட்டா. அவ்வளவு தான். வேணாம் போங்கடா. வேணாம் பண்ணையாரா இருந்தாச்சு. கொஞ்ச நாள் பேயாவும் இருந்தடறேன். ''

'' புரியாது பேசாதீங்கப்பா? ''

'' பொட்டச்சிக்குப் பயந்து நீ பொலம்பற. ''

'' இன்னொன்னு வச்சுக்கிறது அசிங்கம்பா. ஊரு துப்பும் காரி ''

'' பதிலுக்கு நீ துப்புடா. எந்த ஊர்ல ரெண்டு பொண்டாட்டி இல்லை. ஊர் என்னா பெரிய ஊர். நம்ம ஊர்லயே நாலு குடித்தனம் காட்டுவேன் இதுமாதிரி. எதிர்வூட்டு தாயம்மாவோட தாயார் தெரியுமா உனக்கு? ''

'' ஆமாம்பா பெரிய கிழவின்னு வாங்க. ''

'' இன்னிக்கு கிழவி. முப்பது வருஷம் முன்ன என்னோட இருந்தவ. அவ புள்ளை சுப்பிரமணி தெரியுமா உனக்கு. ஊருக்குப் போய் உத்துப் பாரு என் மூஞ்சி தெரியும். சந்தேகம் இருந்தா மணியக்காரரக் கேளு. தாயம்மாளைக் கேளு. நாலு பெரிய மனுஷங்களைக் கேளு சொல்வாங்க. உங்கம்மா செத்தப்புறம் அவ தான் எனக்கு சோறு ஆக்கிப் போட்டா. அவளுக்குப் புருஷன் இல்லை. எனக்குப் பொண்டாட்டி இல்ல. இல்லாது போயிட்ட துக்கம் பாயில் பரிமாறிக்கிட்டோம். கிழவியக் கேட்டுராதே. கேட்ட வேகத்துல பொக்குன்னு போயிடப் போவுது. அன்னிக்கு நம்ம ஊரு. கிடக்கட்டும் போன்னு தான் விட்ருச்சு. இன்னிக்கு உனக்கும் சொல்லும். ''

'' அப்பா... ''

'' சத்தியம் பண்றா. இன்னி ராவு தாண்டாது எனக்கு தெரிஞ்சு போச்சு. சத்தியம் பண்ணு. அடி நெஞ்சு எரிய ஆரம்பிச்சுடுச்சு. மூச்சு திணறுது எனக்கு. சத்தியம் பண்ணிடு. வம்சம் வளரணும்டா. ''

'' எனக்கு தப்பாப் படுதுப்பா. ''

''செண்பகா '' இரைந்தார். மருமகள் ஓடி வந்து கையைப் பிடித்துக் கொண்டாள்.

'' இந்த நன்றி கெட்டவன் கிட்ட கேக்கறதவிட உங் கிட்ட கேக்க றேன். உனக்கு நன்றியிருக்கில்லியா. இந்தக் கிழவன் உன்னை எம் மவு னுக்கு கட்டி வச்ச நன்றியிருக்கு இல்லையா. சொல்லு அவன் கிட்ட பேசி சத்தியம் பண்ணச் சொல்லு. ''

'' சொல்லிட்டேன் மாமா. சத்தியம் பண்ணுங்க. ஒண்ணும் தப்பில் லைன்னு சொல்லிட்டேன். ''

'' என் ராசாத்தி அய்யாசாமிப் பிள்ளை மருமவளா கொக்கா. தாயே நெஞ்சுல வைச்சுக்க. உன்னை ஒண்ணுமில்லாத பண்ணிட்டேன்னு நெனைக்காத உயிலு படிச்சுப் பாரு. டேய். ரத்தினம்டா அது. ''

'' அது தெரிஞ்சுதாம்பா முடியாதுங்கறேன். ''

'' முடியாதுங்கிறியா, முடியாதுங்கிறியா. எனக்கு நெஞ்சு வேகா துடா.'' செண்பகா மெல்ல கிழவர் வாயைப் பொத்தினாள். ''மாட்டேங் கறானே! மாட்டேங்கறேனே! '' கிழவர் வாய் விட்டு அழுதார்.

செண்பகா விசும்பினாள். பன்னீர் விசும்பினான். செண்பகா மெல்ல தன் ஒரு கையை விடுவித்துக் கொண்டு பன்னீர் வலக்கையை பற்றி எடுத்து கிழவர் மார்பு மீது வைத்தாள்.

'' அப்பா கேட்டதுல தப்பில்ல. சரின்னு சொல்லுங்க. என்ன தான் நான் வாக்கு கொடுத்தாலும் சமாதானமாகாது. நீங்க வாயத்தொறந்து சரின்னு சொல்லுங்க. '' பன்னீரை வற்புறுத்தினாள்.

'' என்னால முடியல செண்பகா. ''

'' அவங்க மனசு நொந்து கேக்கறப்ப பிடிவாதம் பிடிக்கிறீங்களே. ''

கிழவர் கண் சொருகினார். தன் வலது பக்கத்தில் இருந்து பன்னீரின் கையை விலக்கி தலை மாட்டில் வைத்திருந்த திருமூலர் திருமந்திரம் எடுத் தார். நெஞ்சில் வைத்துக் கொண்டார்.

'' அப்பா கேட்டதுல தப்பில்ல. சரின்னு சொல்லுங்க.

'' அப்பா... அப்பா '' பிள்ளை அழைத்தான். மெல்லிய கீற்றாய் கிழ வர் கண் திறக்க,

'' அப்பா என்னால எப்படி முடியுமோ அந்த விதமா நம்ம வம்சத்தை வளரச் செய்றேம்பா. சத்தியமா செய்றேன். '' குழைந்து பேசினான்.

கிழவர் மென்மையாய் சிரித்தார். மகனின் கையை வருடினார். '' சந் தோஷம் '' என்றார்.

'' யான் பெற்ற இன்பம் பெறுக இவவையகம்
வா்ன் பற்றி நின்ற மறைப் பொருள் சொல்லிடின்
ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப்பற்றத் தலைப்படும் தானே...''

மெல்லிய குரலில் பாடியபடி, தலையணையில் நன்கு தலையை அழுத்திக் கொண்டு தூங்கிப் போனார். மகனும் மருமகளும் வெகுநே ரம் அருகில் இருந்தார்கள். நர்ஸ் தர்மா மீட்டருடன் வந்து எழுப்பிய போது



தலை புரண்டு விட்டது. எப்போது போனார் என்பது புரியவில்லை. நர்ஸ் மூக்கு வழியாகவே உயிர் பிரிந்திருக்கிறது என்றார். பன்னீர் செண்ப காவை இறுகப் பற்றிக் கொண்டான்.

## 17

'' உங்கப்பாரு உன்னைக் காட்டிலும் முன் யோசனையான ஆளு. நீயா ஒண்ணும் தர வேணாம். உயில் படிக்கிறேன். அப்ப சொல்லு உன் யோச னையை. ''

'' நெல் வயல்கள் சரி பாதியாகப் பிரித்து செண்ப காவுக்கும் பன்னீருக்கும் டூரிங் டாக்கீஸ் பன்னீருடை யது. அரவை மில் செண்பகாவுக்கு. வாழும் வீடு பன்னீருக்கு. எதிர்பக்க வீடு செண்பகாவுக்கு. மாந்தோப்பு பன்னீருக்கு. தென்னை மரங்கள் செண்பகாவுக்கு.

செண்பகாவின் தாய்மாமன் வாய் பிளந்தார். ''நகைகள் அனைத்தும் செண்பகாவுக்கு. ரொக்கம் பன்னீருக்கு. ''

'' ஊர் பிள்ளையார் கோயிலுக்கு ஒரு ஏக்கர் நன்செய் பள்ளிக்கூடத் துக்கு மதில் சுவர் எழுப்பி, உணவுக்கூடம் கட்ட முப்பதாயிரம் தனியே. பள்ளியில் கொடி மரமும், கல்மேடையும் கட்டி அவர் பெயர்ப்பலகை வைக்க மூவாயிரம் தனியே. ''

பந்தி உட்காருவதற்கு குறிப்பிட்ட நான்கு பேர் முன்பு வக்கீல் உயில் படிக்க, ஹெட்மாஸ்டர் முகம் பொத்திக் கொண்டு அழுதார்.

இரண்டு பிரதி உயிலை செண்பகாவுக்கும், பன்னீருக்கும் வக்கீல் கொடுக்க செண்பகா அதை அப்படியே பன்னீரிடம் கொடுத்தாள்.

சாப்பிட்டு கையலம்பும் போது பெண்கள் கூட்டத்தினிடையே இந் தப் பங்கு விஷயம் பரவிவிட்டது.

''எதுக்கு உங்கப்பா இப்படி மெனக்கெட்டு ரெண்டா சரிசமமா பிரிக் கணும்? ''

இரவு நேரத்தில் பால் ஆற்றிக்கொண்டே செண்பகா கேட்டாள்.

'' என்கிட்டே சத்தியம் வாங்கணும்னு தீர்மானம் பண்ணிட்டாரு. ''

'' அதுக்கு? ''

'' அப்படி வாங்கி நான் இன்னொன்னு கட்டி உன்னை கவனிக்காம நீ அனாதையா நின்னுடக்கூடாதில்ல? ''

'' புருஷன் கட்டின தாலியை எறிஞ்சுட்டு நிலத்துக்கு வாக்கப்பட ணுமா? ''

'' ஒரு காபந்துதான். ''

'' உங்கப்பாரு செஞ்சு குடுத்த சத்தியம் என்ன முடிவு பண்ணின. ''

'' எனக்கு இஷ்டமில்லை. பின்னாடி பார்த்துக்கலாம். ''

'' ஒஞ்சு போனப்புறம் எவன் பொண்ணு தருவான். ''

'' நல்லதா போச்சு. பொண்ணு தரலைன்னு உக்கார்ந்துடலாம். ''

'' உங்கப்பா என்னா சொன்னாருன்னு ஞாபகம் இருக்கில்ல. ஆவியா வந்து எல்லாத்தையும் தலைகீழா உருட்டுவேன்னுருக்காரு. ''

'' செய்யட்டும் ''

'' ராமக்கா பொண்ணு ஒண்ணு பார்த்தேன். பதினெட்டு வயசு ரெண்டு தடவை எஸ்.எஸ்.எல்.சி. பெயில். ஆனாவெட வெடன்னு

வளர்த்தியா இருக்கு.''

''அசிங்கமா இருக்கு. செண்பகா. புள்ளை பொறப்புக்குன்னு ஒருத்திய கட்டிக்கிறதுக்கு.''

''ஏன் என்ன அசிங்கம்?''

''அந்தப் பொண்ணு உள்ள நுழையறப்பவே. அது கையைப் பிடிக்கிறப்பவே நீ இதுக்குத்தான்னு மனசுல பட்டா என்ன இம்சை இது.'' ''வேற எதுக்கு பொண்டாட்டி?''

''கொண்டாடணும். எல்லா இடத்துலயும் எல்லாத்தையும் பகிர்ந்துக்க. இது நமக்குத் துணைன்னு ஒரு பாசம் வரணும். அந்தப் பாசத்தோட கொண்டாடணும்.''

''அவ மேல பாதி... உன் மேல பாதி... எப்படி அது. எனக்கு வராது செண்பகா. உன்னை விட்டு என்னால நகர முடியாது.

''ஒரு நாள் அவ... ஒரு நாள் நான்.''

''பொலிகாளை உத்யோகம்கறது அதுதான்.''

''சரி உன் இஷ்டத்துக்கு இரேன்.''

''முடியாது. சொல்ற அளவு சுலபமில்லை அது. ஈடுபாடில்லாத, இன்னிக்கி இவகிட்ட படுக்கணும்னு தோணி திரும்பற நேரம், கடமையா நினைக்கிற நேரம். மனசுக்குள் வலு போயிரும். ஆசை அறுந்துடும்.''

''ஊர்ல ரெண்டு பொண்டாட்டி கட்டினவன் எத்தினி பேரு இல்லை.''

''இருப்பான். உரப்பு புடிச்சவனுங்க இருப்பானுங்க. படுத்து பத்து நிமிஷம் பொம்பளைய ஆள்றதோட சரின்னு நினைச்சுக்கிட்டு இருப்பான்.''

''நான் ஒண்ணு பெத்திருந்தா இந்தக் கஷ்டம் இல்லை. பெறலியே.''

''போவுது. ஊர் குழந்தைங்க எல்லாமே நம்ம குழந்தைங்கன்னு வச்சுக்கலாம்.''

''அப்ப உங்காப்பாருக்கு குடுத்த சத்தியம்.''

''கிடக்கு விடு.''

''நான் விடமாட்டேன்.''

''சும்மா அனத்தாத போ.''

''ஊர்ல நாலு பேர்கிட்ட சொல்லி நியாயம் கேக்கறேன்.''

''என்னன்னு?''

''உங்கபீபாருக்கு நீ செஞ்சு குடுத்த சத்தியத்தை நீ இப்ப மாட்டேன்னு சொல்றதை''

''சத்திய தேவதை, தர்மபத்தினி, குலக்கொடி அடடா மனுஷாளுக்கு எப்படியெல்லாம் வேஷம் போடத் தோணுது பாத்தியா? நாலு பேர் முன்னாடி டிராமா போடறதுக்கு எவ்வளவு ஆசை நமக்கு.''

''நான் நாடகம் போடலை. எந்த பேருக்காகவும் செய்யலை. உங்கப்பாருக்கு செஞ்ச சத்தியம் எனக்கு முக்கியம்.''

''எழந்து போடி.''

''விரட்டியடிச்சா ஆயிடுச்சா.''

''ஆயிரம் சத்தியம் பண்ணியிருக்கேன். அத்தினியும் முடியாது என்னால்'' சட்டென்று பன்னீருக்கு உள்ளே பொறி தட்டியது. செண்பகா



வின் தாயார் கொடுத்த பாம்பு மோதிரம் ஞாபகம் வந்தது. ''கடவுளே... கடவுளே'' என்று திடுக்கிட்டுக் கூவினான். இடது பக்கம் ஒரு கயிறும், வலகு பக்கம் ஒரு கயிறும் போட்டு தன்னை விதி இரண்டாகப் பிரிப்பதை உணர்ந்தான்.

## 18

நாலரை அடி உயரத்துக்கு அப்பாவின் போட்டோ மாயவரத்திலிருந்து வந்து நாலு அங்குல சட்டமிடப்பட்டிருந்தது.

அப்பா நின்றிருந்தார்.

பன்னீர் திருமணத்தின் போது எடுத்த போட்டோ அது. நடுநாயகமாக அப்பா நிற்க பின்னால் முப்பது பேர். விதவிதமான முகபாவத்தில் இருந்தனர். பின்பக்க ஆட்களையெல்லாம் அழித்து விட்டு ஒரு அரண்மனை ஹாலில் புத்தக அலமாரிக்கும் பூந்தொட்டிக்கும் அருகே நிற்பது போல, போட்டோ வரையப்பட்டிருந்தது. புருவத்தில், மீசையில் மெல்லிய கருப்பு சாயம் அழகுக்காக ஏற்றியிருந்தார்கள். அங்கவஸ்திரத்தில் தங்க ரேக்கு ஒடியிருந்தது. கையில் வாக்கிங் ஸ்டிக். அப்பா சிரித்துக் கொண்டிருந்தார்.

திண்ணையில் வைத்துப் பிரிக்கிற போதே நாலைந்து பேர் கூடிவிட்டார்கள். வாசலில் கூட்டம் பார்த்து இன்னும் சிலர் வீட்டு வாசலை விட்டு இறங்கி வந்தார்கள். ''மாட்டறதுக்கு முன்னாடி வாசல்லியே அப்பா படுத்த இடத்திலேயே நாலைந்து நாள் வச்சிரு. நாலு பேர் தொட்டு கும்புடட்டும்.'' யாரோ யோசனை சொன்னார்கள்.

வாசலில் நிறுத்தி விட்டு பன்னீர் வயலுக்கு போனான். வாடகை டிராக்டர் டவுள் வீல்பரோ கட்டி உழுவதை மேற்பார்வையிட்டான். நீர் பாய்ச்சியிருந்தது. மண் மாதிரி எடுத்துக் கொண்டான். புதிய ரக விதை நெல்லுக்கு மனு கொடுத்தான்.

எல்லா இடத்திலும் அப்பாவின் மரணத்தை மறுபடி விசாரித்தார்கள். அவர் குணத்தைப் புகழ்ந்தார்கள். பள்ளிக்கு உதவியதைப் பாராட்டினார்கள். ஊரு கம்பீரமும் போச்சு. அதட்டலே தவிர, குணம் தங்கம் என்றார்கள்.

கிராமத்துக்குச் சம்பந்தமேயில்லாத பூச்சி மருந்து வியாபாரி கூட விசாரித்தான்.

பன்னீர் மரநிழலை விட்டு அந்தத் தோப்புக்கு நடக்க, எதிரே தாயம்மா விதை நெல் மூட்டையுடன் நடந்து வந்தாள். பன்னீர் அவளைக் கடந்தான். திரும்பி மெல்லப் பார்த்தான்.

தாயம்மாள் அவனையே கவனித்துக் கொண்டிருந்தாள். முந்தானையைச் சும்மாடாக்கித் தலையில் வைத்து அதன் மேல் மூட்டை அழுந்திக் கிடந்தது. அவன் நிற்பதைப் பார்த்து வாயில் துணியை அடைத்துக் கொண்டாள். மூக்கும், உதடும் முகவாயும் துணி மறைத்தது. சும்மாடும் நெல் மூட்டையும் நெற்றியை மறைத்தன. விழிகள் மட்டும் பளபளத்து உருள்வது தெரிந்தது.

பன்னீர் மேல் துண்டால் முகம் துடைத்துக் கெண்டான்.

''வீட்டுக்கு மூத்தவராயிட்டீங்களா...'' தாயம்மாள் துக்கம் கேட்டாள்.

பன்னீர் ஆமென்று தலையசைத்தான். தகப்பன் இறந்த பிறகு வீட்
டின் மூத்த மகனே தலைவன். அப்பா இறந்தாரா என்று கேட்பது நாகரீக
மில்லை. வீட்டுக்கு மூத்தவராயிட்டீங்களா என்று கேட்கும் போதே
தந்தை இழப்பு சொல்லப்பட்டு விடுகிறது.
'' ஆண்டு எல்லாம் அனுபவிச்சவங்க தான். இருந்தாலும் பொரும
லோட போயிருக்காங்க. பேரப் புள்ளைங்க பார்க்கலைன்னு ரொம்ப
நொந்தாங்களாம். ''
பன்னீர் மவுனமாய் இருந்தான்.
'' உன்னைப் பத்திக் கூட சாவறதுக்கு முன்ன பேசிட்டு இருந்தாங்க
தாயம்மா. ''
'' என்னையா? ''
'' பேச்சுவாக்குல ஏதோ சொன்னாங்க. ஒண்ணும் புரியலை ''
தாயம்மாள் நெல் மூட்டையை தரையில் போட்டாள். சும்மாடு உதறி
முகம் துடைத்துக் கொண்டாள். மண் தரையில் உட்கார்ந்துகொண்டாள்.
வரப்பை அப்பாவின் உடல் போல் பாவித்து இரண்டு கைளையும் அதன்
மேல் பதித்து தலையிலடித்துக் கொண்டாள்.
'' இந்தக் கையால் இந்தக் கையால உங்கப்பாகிட்ட எத்தினி பண்
டம் வாங்கியிருக்கேன் தெரியுமா? நாலு பேருக்கு முன்னாடி நெஞ்சுல
அறைஞ்சுக்கிட்டு அழ முடியலை. தனியா கொல்லப்பக்கம் உக்காந்து
அழுதேன். ''
'' உங்க ஆத்தாகிட்டே சொன்னியா? ''
'' புரியலை எது சொன்னாலும் புரியாம நிக்குது. இழுத்துக்கிட்டு
வந்து தலைல தண்ணி ஊத்தி துவட்டி படுக்க வச்சிட்டேன். ஏண்டி கிழ
விக்கு தண்ணி ஊத்தறன்னு கேட்டாங்க. என் ஊட்டுல ஊரு தீட்டுன்னு
சொல்லிட்டேன். ஊரு தீட்டா... உறவு தீட்டா கடவுளுக்குத் தான் தெரி
யும். ''
'' உனக்கு ஏதும் கஷ்டம்னா எங்கிட்ட சொல்லு தாயம்மா. ''
'' சொல்ற மாதிரி பொறப்பா இல்லையே. அவன் கிட்டே என்னடி
பஞ்சாயத்தான்னு நாலுபேர் கேப்பாங்க. அசிங்கம் பண்ணுவாங்களே. ''
'' உடம்பொறந்தான்னு சொல்லு. ''
'' வேணாம். வேணாம். '' தாயம்மா கை கூப்பினாள். '' நான் உங்கப்
பனுக்குப் பொறந்தவனும் இல்ல. நீ என் உடம்பொறந்தவளும் இல்ல.
அதெல்லாம் வேற ஆளு கதை. ''
'' வுடு போனவங்களைப் பத்தி எதுக்குப் பேச்சு மூட்டைக்கு ஒரு கை
குடு. ''
பன்னீர் குனிந்து மூட்டையைத் தூக்கி அவன் தலையில் வைத்தாள்.
'' என் உடம்பொறந்தாத்தான் பஞ்சாயத்துல செருப்ப கழட்டிக்கிட்டு
அடிக்க வந்தான். நீ என்னன்னா எவ்வளவு உதவின்னாலும் செய்றேங்
கறே. அவனும் அவர் புள்ளை தான். நீயும் அவர் புள்ளை தான். விதை
ஒண்ணு போட்டா சுரை ஒன்று முளைக்குமான்னுவாங்க. விதை மட்டும்
கெத்தா இருந்தா போதுமா? மண்ணுக்கேத்த குணந்தானே பயிருல இருக்
கும். அஞ்சு பத்துக்கு ஆத்திரப்பட்டு அவுத்தவளுக்கு அல்லாடற புள்ளை
தான் பொறக்கும். ஊர் பெரிய மனுஷாளுக்கு பொறக்கறதை விட உத்த
மிக்கு புள்ளையா பொறக்கத்தான் குடுப்பினை வேணும். நடுக்கூடத்துல



பயமில்லாத தாயார்க்காரி பால் குடுத்தாத்தான் நல்ல குணம் வரும். மூன்
டச்சி பெத்தது. ஒளிச்சு ஒளிச்சுப் பெத்தது தண்டமாத்தான் போவும். ''
'' ச்சே என்ன பேச்சு பேசற. ''
'' தைக்கணும்னுதான். பேசறேன். செண்பகத்துக்கு புள்ளைப் பேறு
இல்லேன்னு தட்டுக்கட்டு போவேணாம். ஊர்ல வேலையத்தவன் இன்
னொன்னு கட்டி வைக்க வருவானுங்க. நாலைஞ்சு தலைமுறையாக உங்க
ஊட்ல தவங்கெடந்து புள்ளை வாங்கறதுதான் நடக்குது. உனக்கு அப்ப
டியே ஆவும். ஏடாகூடமா ஏதாவது செஞ்சிட்டு உங்கப்பாரு மாதிரி
பொருமி சாவறதவிட சுத்தமா சந்தோஷமா சாவறதுதான் பாக்கியம். ''
தாயம்மாள் தலைச்சுமையுடன் நடந்தாள்.
''ஊர்ல நாலு பேர் நல்லது சொன்னா கேட்டுக்கணும். ''
'' சரி நீங்க பேசுங்க. நானும் பேசறேன். ''
'' உங்க மாமாகிட்டயும் பேசுவோம். ''
'' ஏன் பேசணுமா. அவர் தான் உன்னைத் தாரை வார்த்துக் குடுத்தி
ருக்கிறார். ''
'' குடுத்து பின்பக்கம் கை துடைச்சு எப்பவோ காஞ்சு போச்சு.
எனக்கே அந்த வூட்டோட சம்பந்தமில்லை. நீங்க எதுக்கு அங்க படியேறி
இதைக் கேக்கணும். ''
'' கேக்கணும் ''
'' ஏன்? ''
'' நான் கட்டுப்பட்டவன். ''
'' என் மாமனுக்கா. ''
'' ஆமாம் உன் மாமனுக்கு, உன் தாயாருக்கு. ''
'' ஏன் என் பாட்டி... கொள்ளுப்பாட்டி எல்லோரையும் சொல்லுங்க
ளேன். ''
'' அவங்களையெல்லாம் தெரியாது. தெரிஞ்சிருந்தா அவங்களுக்கும்
கட்டுப்பட்டவன். ''
'' நம்ம கல்யாணத்துக்கு முந்தின நாள் வரைக்கும் உங்களை அடாபு
டான்னு பேசின கூட்டம் அது. ''
'' நீ எத்தினி உதறினாலும் அவங்க வூட்டு பொண்ணு நல்லா இருக்க
ணும்னு கவலைப்பட்டு பேசினது அது. ''
'' அவங்கவங்க கவலையை அவங்கவங்க பார்த்துக்கட்டும். என்
னைக் கட்டிக் குடுத்தாச்சில்ல. அப்புறம் என்னா... எப்படியோ போவட்
டும்னு விட வேண்டியது தான். ''
'' உனக்குப் புள்ளை பொறக்கலையேன்னு அவங்க கவலைப்பட
மாட்டாங்களா. ''
'' யாரு என் மாமனா? ''
'' அவருக்கு கவலை இருக்கோ என்னவோ. ஆனா உங்கம்மாவுக்கு
இந்தக் கவலைன்னால தான் உயிர் போச்சு. ''
''கவலைன்னாலயோ வேற எதுனாலயோ... போய்ச் சேர்ந்தாச்சல்ல.
அப்புறம் என்ன? ''
'' போறதுக்கு முன்ன எங்கிட்ட பாரம் இறக்கிட்டுல்ல போயிருக்
காங்க. ''

'' என்ன அது. ''

'' இன்னொரு பொண்ணு கட்டாதேன்னு சத்தியம் வாங்கிட்டாங்க.
''

'' எப்போ ''

'' சாவறதுக்கு ஆறு மணி நேரம் முன்னாடி ''

'' யார்கிட்டே? ''

'' எங்கிட்டே ''

'' நெசமா தானா? ''

'' சத்தியமா ''

'' அதான் குசுகுசுன்னு பேசின விஷயமா. ''

'' ஆமா ''

'' அடிப்பாவி சாகற நேரத்துல குடி கெடுத்துட்டுப் போயிருக்காங்களே'' செண்பகா முகத்தில் அறைந்து கொண்டு அழுதாள்.

பன்னீர் அப்பாவை வெறித்துக் கொண்டு நின்றான்.

## 19

செண்பகா ஹாலில் ஒரு தூணில் சாய்ந்து கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

பன்னீர் ஒரு முறை ஹால் விளக்குக் குமிழைத் தட்டி விட்டு வெளிச்சம் போட்டு விட்டுப் போனான். மறுமுறை வந்து அப்பாவின் போட்டோவுக்கு வலப் பக்கம் இருந்தே பிறையில் உள்ள காட்சி விளக்குத் திரியை திரித்து விட்டு ஏற்றினான். சமையலறைக்குள் நுழைந்து தட்டையெடுத்து தானே சோறு பரிமாறிக் கொள்கையில் செண்பகா எழுந்தாள்.

'' உடம்புக்கு முடியலைன்னா வேணாம் செண்பகா கஷ்டப்படாதே. நானே எடுத்துப் போட்டுக்கிறேன். ''

செண்பகா பதிலே பேசவில்லை. கைத் தட்டைப் பிடுங்கித் தரையில் வைத்து விட்டு மணை துடைத்துப் போட்டுத் தண்ணீர் சொம்பு வைத்தாள். பன்னீர் சாப்பிட்டு எழுந்ததும் சாதத்துப் பானையில் தண்ணீர் ஊற்றினாள்.

'' என் தண்ணி ஊத்துற... உனக்கு சாப்பாடு ''

'' பிடிக்கலை ''

'' அசடா இருக்கியே செம்பகா. படிச்ச பொண்ணா தெரியலையே உன்னைப் பாத்தா. ''

'' படிச்சு என்னங்க புண்ணியம். சூட்சுமம் வரலியே. எல்லாரையும் விட நல்லா படிக்கணும். நல்லா படிச்சதுக்கு அடையாளம் நல்ல பெண்ணா இருக்கணும்னு ஆசைப்பட்டேன். படிச்சதுல இருந்த கெட்டிக்காரத்தனம் மத்த விஷயத்துல இல்ல. அப்பன் 'ம்ம்' கொட்றதுக்கு முன்னாடி எழுந்து நிக்கற புள்ளை சத்தியம் பண்ண, இத்தினி தடவு தடவுதேன்னு யோசிக்கவேயில்ல. புஸ்தகப் படிப்பு புண்ணியமில்லீங்க. ஜனங்களைச் சுத்தியிருக்கிற மனுஷாளை படிக்கத் தெரியாதவுட்டுட்டேன். ''

'' என்டா என்னென்னமோ பேசறே? ''



'' அந்த கிழவி மண்டைய போடற நேரத்துல இப்படி ஏடாகூடமா ஏதாவது கேக்கும்னு எனக்குத் தோணவே இல்ல பாருங்க. தோணிருந்தா உங்களை தனியே வுட்ருக்க மாட்டேன். ''

'' இப்ப எதுக்கு பொறுமற செண்பகா? ''

'' பொறுமாம பின்ன? என்ன தான் சொல்லுங்க. ஆம்பளை ஆம்பளைதான். மருமவளை வெளியே போன்னு சொல்லிட்டு மந்திரம் ஓதாம உங்கப்பா என்னையும் நிக்க வச்சு எங்கிட்டயும் விவரம் சொல்லில்ல சத்தியம் வாங்கினாரு. அவரு குணம் எப்பிடி, இந்த அம்மா குணம் எப்பிடி. இந்தம்மவுக்கு என்ன பொண்ணைப் பத்தி மட்டும் தான் கவலை. நமக்கு நம்ம வம்சத்தைப் பத்தியுமில்ல கவலை. நமக்கு நம்ம வம்சத்தைப் பத்தியுமில்ல கவலை. சரி நான் ஒன்னு கேக்கனும், பதில் சொல்றீங்களா?
''

'' கேளு செண்பகா ''

'' என்கிட்ட ஒரு வார்த்தை பேசாத, நம்ம வாழ்க்கை பத்தி எங்கம்மாகிட்ட எப்பிடி நீங்க சத்தியம் செய்யலாம்? ''

'' அதுவந்து யார்கிட்டயும் இதுபற்றி.... முக்கியமா உங்கிட்ட இது பத்தி...''

'' சொல்லக்கூடாதுன்னு சொன்னாங்களா? ''

பன்னீர் தலையாட்டினான்.

'' அவங்க சொன்னாங்கன்னு நீங்களும் கம்முன்னு இருந்துட்டீங்க வெக்கமா இல்ல... அப்புறம் என்ன புருஷன் பொண்டாட்டி. ''

'' என்ன உளர்றே செண்பகா. அந்தம்மா கண்ணெல்லாம் சொருக கையப் புடிச்சு கெஞ்சும் போது, இருங்க எம் பொண்டாட்டிகிட்ட ஒரு வார்த்தை கேட்டுட்டு வர்றேன்னா சொல்ல முடியும். அவங்க கைல இருந்த பாம்பு மோதிரம் கழட்டிக் கொடுத்தாங்க. ''

'' ஆமா அது ஒண்ணுதான் குறைச்சல். கொண்டாங்க அத இப்படி. ''

'' ஏன் என்ன செய்யப்போறே? ''

'' உங்க தலைய சுத்திவிட்டு கெணத்துல போடப்போறேன். ''

'' ச்சு ''

'' பின்ன என்ன எனக்கு கல்யாணம் ஆனப்புறம் எனக்கும் அந்த வூட்டுக்கும் சம்பந்தமில்லை. அது என் வூடு இல்ல. என்னையே அந்த வூடு கட்டுப்படுத்த முடியாதுன்னா உங்களை எப்படி கட்டுப்படுத்தும்? எங்க அம்மா சத்தியம் கட்டி வைக்குமா? கொண்டாங்க அதை. ''

'' மோதிரம் வச்சுக்க. ஆனா செஞ்சு குடுத்த சத்தியம் மாறாது. மோதிரத்தை எங்க வேணா தூக்கிப்போடு. அக்கறையில்லை. ஆனா உங்கம்மாவை நான் ஏமாத்த முடியாது. ''

'' உங்கப்பாவை ஏமாத்த போறீங்களா. அவருக்கு கொடுத்த வாக்கை காத்துல வுட்ருவீங்களா? ''

'' பெரிய வேதனை அதுதான் செண்பகா. இது நடந்தது உன்னால தான். சத்தியம் பண்ணு, சத்தியம் பண்ணுன்னு அந்தக் கிழவன் அழுது புலம்பி மிரட்டி உருட்டி காரியத்தை சாதிச்சுக்கிட்டாரு. ''

'' ஓ அப்படியா... சரி கடைசியா ஒரு கேள்வி. இப்ப ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டிய கட்டாயத்துல இருக்கோம். என்ன செய்யப்போ

நீங்க? ''

'' புரியலியே? ''

'' இன்னொன்னு கட்டப்போறீங்களா இல்லியா? ''

'' இல்ல அதுல எனக்கு இஷ்டமில்ல ''

'' அப்பிடீங்களா? சரி நீங்க மேல மாடிக்கு போங்க, படுக்கறதுக்கு நான் வரல. எனக்கு இனிமே ராத்திரில சாப்பாடு கிடையாது. ''

'' நீ எங்க படுக்கப் போறே? ''

'' இதோ என் மாமனார் கால் கீழ படுத்துக் கிடப்பேன். அப்பா உனக்கு எம் புருஷன் செய்து கொடுத்த சத்தியம் பொய். எங்களை மன்னிச்சிடு. அதுக்காக என்ன தண்டனை வேணா எனக்கு குடுன்னு இங்கயே கிடப்பேன். ''

பன்னீர் அவளை வெறித்துப் பார்த்தான். கையலம்ப போனான். திரும்பி வந்தான்.

'' சரி நாளைலேர்ந்து எனக்கு காலைல டிபன் வேணாம். மத்தியானமும் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வரமாட்டேன். ராத்திரி மட்டும் தான் வீட்ல சாப்பாடு. முடிஞ்சா செஞ்சு வை. ''

'' எட்டிக்கு போட்டியா. எம்மேல கோவம்னா சாப்பாட்டுல ஏன் காமிக்கணும். ''

'' உன் மேலயே காட்டலாம். தாயம்மா புருஷன் அவளைப் பொரட்டி, பொரட்டி உதைக்கறாப்பல, இப்ப நீ சோத்துல தண்ணி ஊத்தினதுக்கு உன்னை இழுத்துப் போட்டு நாலு சாத்து சாத்தியிருக்கலாம். பொண்டாட்டியை கை நீட்டி அடிக்கிறது பாவம்னு நினைக்கிறவன் நான். உன்னை நீ வருத்திக்கிட்டா என்னை நான் வருத்திக்குவேன். ஆனா ஒரு விஷயம் செண்பகா. ஒண்ணுக்கு ரெண்டா சத்தியம் செய்தவன் நான் தான். எதிரும், புதிருமா சத்தியம் செய்தவன் நான் தான். இது எம் பிரச்சனை. எந்த முடுக்குக்கும் என்னைத் தள்ளாத. ஒரு இக்கட்டுல சிக்கிக்கிட்டிருக்கேன். வெள்ளத்துல விழுந்தவன் வேலிக்காத்தானை இறுக கட்டிக்கிட்ட மாதிரி நெஞ்சு முழுக்க ரணமா இருக்கேன். வேலிக்காத்தான் கீறி அறுக்கற மாதிரி உங்கம்மாகிட்ட செஞ்ச சத்தியம். நோகுதேன்னு கைவிட்டா வெள்ளம் பொரட்டிக்கிட்டுப் போயிடும். எந்த நேரமும் புருஷனுக்கு உதவியா இருக்கணும்னு புரிஞ்சுக்க செண்பகா. தண்ணிய வடிச்சுட்டு சாப்புடு. ''


செண்பகா சோற்று நீரை தட்டு போட்டு வடித்தாள். கலத்தில் சோறும் தயிரும் போட்டுக் கொண்டாள். பிசைந்து ஒரு கவளம் உண்டாள். பன்னீர் அமைதியாய் அவள் சாப்பிடுவதை பார்த்து விட்டு வெளியேறினான்.

இரவெல்லாம் வடக்கத்தி மழை உலுக்கிற்று. '' புயல் வருதாமில்ல '' கிராமத்து மக்கள் அவரவர் வயல் மழையை தடுக்க முடியாமல் வேடிக்கை பார்த்து விட்டுத் திரும்பினர். புல்வெளிக்கு போக முடியாத கால்நடைகள் விழுந்த மரங்களை வெறுப்போடு மேய்ந்தன. இரண்டு படிகள் உடைந்து தெருவில் மழைநீர் வாசல் குறட்டில் அலையாய் அடித்தது.

'' யார் அது திண்ணைல? '' பன்னீர் கதவை திறந்து வெளியே வந்தான். கூட்டம் போர்த்தியபடி எழுந்து நின்றது.

'' யாரு மச்சக்காளையா? என்ன மழைக்கு ஒதுங்கினாப்போலயா? ''





'' ஊடு முழுக்க ஒழுவுதுங்க. இங்க வந்து குந்திக்கிட்டிருக்கோம். ''

'' பசங்க எங்க? ''

'' உங்க எதிர் வீடு பூட்டிருக்கில்ல. அங்க ஒதுங்கி இருக்காங்க. பொண்டாட்டி புள்ளைங்கள்ளாம். ''

'' செண்பகா எதிர்வீட்டு சாவி கொண்ணாந்து திறந்து விடு ''

'' அடட வேணாங்க. இவனுங்களுக்கு பொம்பளையாளுங்க பக்கம் இடம் குடுத்தா பொஞ்சாதியோட போய் தாப்பாப் போட்டுக்குவானுங்க. சாமி இடம், சமையலறை ஏதும் பாக்கமாட்டானுங்க. ''

தெருவில் முழங்கால் அளவு தண்ணீர் ஓடியது. திரும்பி அரைக்கால் டிரவுசரும், ஜெர்க்கினும் மாட்டிக் கொண்டு நகர திண்ணை ஜனம் பின் தொடர்ந்தது. கதவு திறந்து விட குளிருக்கு அடக்கமாய் ஆணும் பெண்ணுமாய் உள்ளே அடைந்தார்கள். மற்ற திண்ணையில் உட்கார்ந்திருந்த நடவாட்களும் சேர்ந்து கொண்டார்கள்.

'' மச்சக்காளை, பின்பக்கம் கொட்டா போட்டு வெறகு அடுக்கியிருக்கும். நனையாத வெறகு இருக்கா பாரு. ''

'' மேல் வெறகு நனையலீங்க. ''

'' பாத்திரமும், அரிசியும் தரேன் பொங்கிக்கிறீங்களா? ''

'' விருந்தே போட்டுருலாங்க. ''

தலைச்சுமையில் அரிசி வர, பரங்கியும், உப்பும், மிளகாய்த்தூளும் கோணியில் சுற்றி எடுத்து வர.

அரை மணியில் சோறு கொதித்தது.

கொதிக்கும் போதே வாழ்த்து சொன்னார்கள். '' அப்பாரு குணம், கேட்டுச் செய்யணும்னே நினைக்கிறதில்லை, சாமி குறுவை அறுத்திட்டுங்களா? ''

'' ம்ம்... முடிச்சுட்டேன். பொங்கறது அதான். புது அரிசி குழைஞ்சிடும். பாத்து இறக்குங்க. ''

'' அடடே இரு வரேன். '' ஹெட்மாஸ்டர் வீட்டுக் கதவு உலுக்கி விசாரிக்க, பெரிய விவசாயிகள் வீடுகளில் கூட பொங்குவதில் உள்ள சிரமம் தெரிந்தது. ஈரமில்லாத விறகு கேட்டவருக்கெல்லாம் வழங்கப்பட்டது. வானம் மேலும் இருட்டிக் கொண்டு வந்தது. மின்சாரம் துண்டிக்கப்பட்டது. மண்ணெண்ணை பிரச்சனை விஸ்வருபமாயிற்று.

'' இருளோன்னு போய்ட்டா புள்ளைங்க பயப்படுமில்ல. ஒரு சிம்னி சிமெண்ணை வேணும். '' யாரோ ஒரு பெண் குரல் கொடுத்தாள்.

'' யாருக்கு சிம்னி விளக்கு வேணுமாம். சிம்னி வெளக்கு வச்சுத்தான் இத்தினி புள்ளைங்கள பெத்தீங்களோ? ''

'' அட யாருது... எங்களுக்குப் பகல் நேரந்தான் வசதின்னுட்டா வாயில் வயித்துல அடிச்சுக்குவீங்களோ. உன்னிய மாதிரி பொண்டாட்டி செத்தவனுக்கு எந்நேரமும் இருட்டு தான். ''

'' வுடுங்க பேச்சை. பெரியவங்க முன்னாடி மட்டு மரியாதை இல்லாம. ''

சைக்கிளில் நன்னிலம் போக ஒரு ஆள் முன் வந்தான். கேரியரில் உட்கார்ந்து மண்ணெண்ணைய் டின் பிடித்துக் கொள்ள சிறுவயசாய் ஆள் தேடினான்.



'' அந்த சுப்ரமணி புள்ளையைக் கூப்பிடு. நல்ல நீச்சக்காரன் அந்த புள்ளை. ''

மெயின் ரோடு வரை பன்னீரும் நான்கு ஆட்களும் துணை போனார்கள். பேருந்து சாலையில் தண்ணீர் இல்லை. மழை வலுப்பெற்றது.

நாலு மணி நேரத்தில் சுப்ரமணியின் மகன் மண்ணெண்ணையோடு திரும்பி வர, வீட்டுக்கு அரை லிட்டர் வழங்கப்பட்டது.

மழை மேகம் கூடிற்று. தண்ணீர் வாசல் குறடு தாண்டி நிலைப்படியில் மோதியது. ஜனங்கள் கூப்பிட்ட குரலுக்கு போக வேண்டுமென்று நிலைக்கதவை அடைத்து விட்டு பன்னீர் ஹாலில் படுத்துக் கொண்டான். செண்பகம் தலையணையுடன் அருகில் வந்து குளிருக்கு அவனை ஒட்டிக்கொண்டாள்.

ஹாலில் அவனுக்கு கிடைத்த அரை லிட்டர் மண்ணெண்ணை சிம்னி விளக்கு எரிந்து கொண்டிருந்தது. பன்னீர் செண்பகாவை இறுக அணைத்துக் கொண்டான். எரியும் சிம்னியை பார்த்தான்.

'' ஏன் செண்பகா சுப்ரமணி பையனை நல்லா பார்த்திருக்கியா அப்பா ஜாடை தெரியுதுல்ல? ''

'' செண்பகா அவன் பக்கம் திரும்பினாள்.

## 20

“ சுப்ரமணியன் புள்ளையைப் பத்தி அப்புறம் பேசலாம். என் நெஞ்சுல இருக்கிறதை கொட்டிறப் போறேன் இப்ப. ''

'' மறுபடி ரெண்டாம் கல்யாணம் தான் பேசப் போறே ''

'' இல்லப்பா வுட்டேன். இன்னி முழுக்க உக்காந்து யோசிச்சு சுத்தமா அந்த நெனைப்பையே வுட்டுட்டேன். ''

'' என்னடா இது எங்க ஊட்டு எம்.எல்.ஏ. கட்சி தாவுறாங்க. ''

'' எங்கயும் தாவலப்பா எனக்கு ரெண்டு பொறந்து நீ எவ கிட்டயாச்சும் போயிருந்தேன்னா என்ன செஞ்சிருப்பேன். கத்தி கூச்சல் போட்டு அமர்க்களம் பண்ணியிருப்பேன். எங்கிட்ட என்ன குறைன்னு சட்டையைப் புடிச்சு இழுத்திருப்பேன். டிராமா போட்டிருப்பேன். இப்ப எங்கிட்ட குறை இருக்கு. அதனால வேற மாதிரி டிராமா போடுறேன். புரியுதுப்பா. சும்மா நம்மளையே நாம ஏமாத்தியிருக்கா. ''

'' அடி சக்கை நம்ம ஊட்ல எந்தப் பக்கம் போதி மரம்? '' பன்னீர் எழுந்து உட்கார்ந்தான். ''

'' எனக்கு மாடி ஜன்னல் தான் போதி மரம். அடை மழைல முழங்கால் தண்ணில யாரும் கூப்புடாமலேயே நீ இறங்கிப் போய் விசாரிக்கிறதைப் பார்த்ததும் தான் உள்ள பொறி தட்டுச்சு. ''

'' புருஷன் ஊர் உதவிக்குப் போறதப் பார்த்ததும் அப்படியே காதலாய்ட்டுங்களா? ''

'' ஆமாம்பா ''

'' ஏய் கஷ்டப்படுகிற நேரத்துல காசு இருக்கிறவன் உதவி செய்ய லேன்னா திட்டுவான். செஞ்சா நமக்கும் ஒரு திருப்தி. டொனேஷன்னு எவன் செய்யறதுக்கும் அடிப்படை காரணம் முதல்ல பயம். ரெண்டாவது கர்வம் ''

'' இருக்கட்டும் ஏதோ காரணம். செய்யற இல்ல. செய்யணும்னு மொத ஆளா போற இல்ல. வேற என்ன செய்யலாம்னு யோசிக்கிறியே எனக்கு இது வரலியே. ''

'' இரக்க குணம் பொம்பளையை விட ஆம்பளைக்கு அதிகம். ஆம்பளை ஒரு அசடு செண்பகா. சுலபமா ஏமாத்திடலாம். செக்ஸ், முகஸ்துதி ரெண்டு பாணம். போதும் அவனைக் கீழே சாச்சுடலாம். ''

'' அப்ப இன்னொரு பொம்பளை வேணாம்னு பிடிவாதம் பிடிக்கிறது ''

'' பயம். செக்ஸ் பத்தி பயம். அதுக்கு பொறக்கலேன்னு வச்சுக்க. ஊர்ல என்னை ஒம்பதுன்னுவாங்களேன்னு பயம். பொறந்துச்சுன்னா என்னங்கிறியா? அவ கை ஓங்கி அவளுக்குப் பரிஞ்சு வந்து உங்கிட்ட கோபத்த காமிச்சு, உம் முன்னாடி சிறுத்து நிக்கணும். இப்ப என்ன நமக்கு புள்ளை பொறக்காதா? சரிவுடு. கிட்டாதாயின் வெட்டென மற. ''

'' ரெண்டு சத்தியம் எதுக்குப்பா பண்ணின? ''

'' தப்பு தான். சறுக்கிட்டேன். உங்கம்மாகிட்டே பேசினதெல்லாத்தியும் உங்கிட்ட வந்து சொல்லியிருக்கணும். அப்பாக்கிட்ட அதை என்னை விட பக்குவமா எடுத்து சொல்லியிருப்ப. அப்பா சாகறப்ப உண்டான இக்கட்டான நிலைமையை சமாளிச்சிருப்ப. உங்கிட்ட சொல்லாம இருந்ததோட பலன் எங்கப்பா என்னைக் கீழே தள்ளிட்டாரு. ''

'' வுட்ருப்பா. நான் இனிமே அதைப் பத்தி பேசலை. உன்னை வற்புறுத்தலை. நீ சொன்ன மாதிரி அது உன் பிரச்சனை. உன் பிரச்சனையை தீர்க்க என்னால என்ன செய்ய முடியுமோ, அதை செய்வேன். எங்கிட்ட குறையை வச்சுக்கிட்டு உன்னைப் பிடுங்கறதும் ஓயாத சண்டை போடறதும் இனிமே இல்லை. நீ என்ன பண்ணினாலும் சரி. ''

'' உங்கிட்டே ஒரு குறையும் இல்ல செண்பகா. நம்ம நேரம் சரியில்லை. சூழ்நிலை நமக்கு எதிரா வேலை செய்ற போது நாம பிரிஞ்சு நின்னுடக்கூடாது. ''

'' கரெக்ட் செண்பகாகிட்டேர்ந்து ஒரு முணு முணுப்பு கூட வராது. ''

'' இந்தப் புத்தி நிலைச்சு நிக்கணுமே. ''

'' அடுத்தவங்க பேச்சுக்கேட்டு ஆடினாத்தான் புத்தி மாறும். இன்னிக்கு முழுக்க மழையா? வேலையே ஓடலை. உக்காந்து ஜன்னல் வழியா வேடிக்கை பார்த்துக்கிட்டே யோசனை பண்ணினேன். பளீர்னு தோணிச்சு. ''

'' நாம மாந்தோப்புல 'லவ்' பண்ணின காரியம் இன்னிக்கு தான் செம்பகா முழுசாச்சு. ''

'' படுக்கலையா? உள்ளங்கால் சிலீர்னு குளிருதே. முழங்கால் வரைக்கும் குளிர்ல கடுக்குது. ''

'' தண்ணில நின்னுருப்ப. காலைக் கொண்டா இப்படி பரபரன்னு



தேய்ச்சுடறேன். எனக்கு தூக்கம் வரலை. ''

'' ஐய்யய்யோ வேணாம்பா. ''

'' எல்லாம் செய்யலாம். கூச்சல் போடாத இரு! ''

'' ச்சீய்... கால் பிடிச்செல்லாம் வேணாம். கஷ்டமா இருக்குப்பா விடுங்க. ''

'' இதுவும் ஒரு வகை டிராமா தான். ''

'' கூச்சப்படறதா. இல்லப்பா நெஜமாத்தான். ''

'' சொல்லிக் குடுத்துட்டாங்க. புருஷன் தொட்டாலும் கூச்சப்படுன்னு இதமா இருக்குதுல்ல? ''

'' ம்...ம்.. ''

'' அனுபவி ஏன் நெளியணும்? ''

'' ஏய் ''

'' சொல்லு செண்பகா ''

'' வந்து படுய்யா. ''

'' யப்பா என்ன பேச்சு எகிறுது? ''

'' கூச்சம் வுடுன்னு சொன்னேன்ல. பொம்பளை கூச்சம் வுட்டுட்டா தங்க முடியுதான்னு பாரு. ''

'' நெருப்புல விரல வைக்கிறதோட கூட சுகம்னு சொல்லிட்டாங்க. நம்ம மதத்துல பொம்பளை அதட்டி ஆள்றது வேதனையாயிடும். ''

'' என்னை பிடிச்சிருக்கா உனக்கு. '' தன் மீது கவிழ்ந்து முகம் மட்டும் நிமிர்த்தி செப்பு சிலையென கண்ணிலும் உதட்டிலும் கன்னத்து பளபளப்பிலும் காமமும் காதலுமாய் நிற்கிறவளை வியப்புடன் பன்னீர் பார்த்தான்.

'' ஆனந்த வெள்ளம் நீயன்றோ. '' பண்ணைபுரத்து இசைச்சித்தன் குரல் நெஞ்சுக்குள் இழைந்தது.

மனைவி தான் தேவதை.

காமம் தான் பூஜை.

அவள் இரங்கும் வண்ணம் போற்றலே வேதம்.

அவளோடு இயைந்து நடத்தலே காமம்.

இந்த கணம் நடக்கும் கூடல் சங்கீதம். மரணம் வரையில் தன்னுள் அலை அலையாய் பரவுதலே விமோசனம்.

இங்கே வரம் எதற்கு? பிள்ளை வரம் எதற்கு? பிரிந்து பிடமேறினால் அல்லவோ வணக்கமும் வரமும். நானின்றி நீயில்லை. நீயின்றி நானில்லை என்ற பின் விளைவென்ன? ''

உடம்பா கூடுகிறது. இது உயிர்க்கல்வி இல்லை மனசு. அதற்கும் மேல் ஏதோ ஒன்று. என் நெஞ்சுக் கூட்டுக்குள்ளே நிறைமதியாய் நிற்கும் சந்தோஷம். இவள் நெஞ்சுக் கூட்டுக்குள் இருக்கும் ஒளி வட்டத்துடன் அந்த ஒளி வட்டத்திற்கு என்ன பெயர். ஆத்மா. ஆத்மம். சுகத்தில் கண் சொருக தரையே ஆடிற்று. அந்தரத்தில் எழுந்தது. எந்தப் பிடிப்புமே இல்லாது லேசாயிற்று.

இதுதான் சக்தி உபாசனையா?

இந்திரியங்கள் நடக்கின்றது வேள்வியா?

அம்மா வெட்கம் விடுவது எத்தனை உத்தமம். விட்ட பிறகு என்ன விநோதம். வெட்கம் என்ற பட்டை கட்டிக்கொண்டு ஒருவர் பின் ஒருவராய் உலகம் தெரியாமல் மடிவதில் என்ன லாபம்?

சக்தி ஆனந்தக் கூத்தாடினாள். சிவன் கண் மூடிக்கிடந்தான். சக்தி எக்காளமிட்டாள். சிவன் அமைதியாய் இருந்தான் சக்தி அமைதியானாள். சிவன் சிரித்தான். அவனை அடையாக்கி சயனித்தாள். சிவன் சம்மதித்தான்.

அன்பில் அடங்குவதோ ஆளுவதோ என்று என்ன...

நித்திரையுமின்றி விழிப்புமின்றி மோன நிலையில் இரவு நகர்ந்தது.

'' அரசலாறு மதகு பிச்சுக்கிச்சுங்க. மதகு உடைஞ்சிட்டதால வெள்ளம் எதிர்க்கரைப் பக்கம் பொங்கிடுச்சுங்க. ''

சேதாரம் அதிகம் தான். வெளுக்கத் தொடங்கியதும் நடமாட்டம் அதிகரித்தது. பெண்கள் கூட வீடுகளை பூட்டி விட்டு வயல் அழிவை பார்க்கப் போனார்கள். கிராமத்தை இணைக்கும் ரோடு பாலம் மீது மூன்றடி தண்ணி விரைவாய் ஓடிற்று.

'' பாலம் இருக்கான்னே தெரியலை. ரோடுக்குப் போறது எப்படீங்க. ''

'' இடுப்புல கவுறு கட்டிக்கிட்டு அக்கரைக்கு போயிடணும். அந்தக் கரை மரத்துக்கும் இந்தக்கரை மரத்துக்கும் இறுக்கத் தாம்புக்கயிறு போட்டுட்டா புடிச்சுக்கிட்டு ஆள் ஆளா நகர்ந்துடலாம். ''

'' கவுறு கட்டி இறங்கறவன் யாரு? ''

'' சுப்பிரமணி மவன் இறங்குவான். ''

'' போவானா? ''

'' கூப்புடு அவனை''

'' பாலத்துப் பக்கம் பன்னீர் வந்த போது, சுப்ரமணியன் மகன் காமாட்சிநாதன் பாதி பாலம் தாண்டிவிட்டான்.

'' என்ன கொடுமையடா இது. ''

'' உரமான பையங்க. ''

'' கொன்னுடுவேன். சுப்ரமணி விளையாடறீங்களே. டேய் பார்த்துடா... ''

பாலம் பழுதாகவில்லை. தண்ணீர் வேகம் தான் ஆளை அமுக்கிற்று. பையன் அக்கரை போய் மரத்தில் கயிறு போட்டு இறுக்க, அதைப் பிடித்தபடி மறு ஆள் போனான். இன்னொரு கயிறு போட்டு இறுக்கினான். இடுப்பு பக்கம் ஒரு கயிறு, தோள் பக்கம் ஒரு கயிறு. இக்கரைக்கும் அக்கரையுமாய் ஆள் போயிற்று.

## 21

**ப**ன்னீர் அந்தப் பையனை இறுக அணைத்துக் கொண்டான். முகம் நிமிர்த்திபல் பார்த்தான்.

அந்தக் கண்களில் முகவாய் வெட்டில் புருவ வளைவில் நெற்றிப் பொட்டில் அப்பாவின் முகம் தெரிந்தது.



தன் பிள்ளையைப் பார்க்கிற உணர்வு வந்தது.

வரம் கிடைக்காவிட்டால் என்ன... எடுத்துக் கொள் என்று உள்மனம் கட்டளையிட்டது.

'' எங்க வூட்டுக்கு வாரியாடா சாப்பிட? ''

பையன் தலையசைத்தான்.

செண்பகா இலை போட்டு பரிமாறினாள். ''இன்னும் சாப்பிடு'' என்று மீன் துண்டு வைத்தாள்.

'' செண்பகா ''

'' ம்...ம்...ம்? ''

'' இந்தப் புள்ளையைத் தத்து எடுத்துக்கிட்டா என்ன? ''

பன்னீரையும் அந்தப் பிள்ளையையும் செண்பகா மாறி மாறிப் பார்த்தாள்.

'' ஊறுகா வைக்கட்டுமாடா? '' செண்பகா திசை திருப்பினாள். பையன் வாய் நின்ற சோறோடு தலையசைத்தான். வேண்டுமென்கிறானா, வேண்டாமென்கிறானா என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

மெல்ல கவளத்தை மென்று விட்டு பல் தெரிய சிரித்தான்.

'' ஊறுகா கொஞ்சம் போல என்ன போடறேன். நல்லா வைங்க. கொஞ்சம் போல சாப்பிடு. ''

இரண்டு விரலில் விழுது வழித்து இலையில் விட்டாள்.

பையன் கலந்து அள்ளி சாப்பிடுவதை புருஷனும் மனைவியும் சந்தோஷமாய் பார்த்தார்கள். கையலம்பி பின்புறம் நிக்கரில் துடைத்துக் கொண்டு மறுபடி சிரித்தான்.

'' சாப்பாடு நல்லா இருந்ததுங்க. ஆறு தாண்டி மறுபடி மெயின் ரோடு போவணும்னா சொல்லுங்க போய்ட்டு வரேன். ''

'' ஏலே ஆறு தாண்டினதுக்கா சோறு போட்டது... '' பன்னீர் இரைய...

'' ஆமா அதுக்குத்தான். நீ போய் விளையாடுறா... '' செண்பகா அவன் முதுகு தொட்டு முன்னே தள்ளி துரத்தினாள். '' ஏன் துரத்திட்டே? பத்து வயசுப் பையன் கிட்டே ஏதாவது பேச, அவன் ஒண்ணும் புரியாம ஒண்ணுக்கு ரெண்டா வெளியே சொல்ல, எதுக்கு விபரீதம். ''

'' தத்து கேக்கறதுல என்ன விபரீதம் வரப்போவுது. ''

'' வேணாம் இது நல்லதில்ல ''

'' இந்தப் புள்ளை தத்துக்கு வேணாம்கறியா... இல்ல... ''

'' உங்க வம்சமா இருக்கிறது தான் தத்துக்கு நல்லது. உங்களுக்கு அண்ணன் புள்ளையோ, உங்கப்பாருக்கு அண்ணன் புள்ளையோ நல்லது. ''

'' பயலுக்கு நம்ம அப்பா சாயல் நிச்சயம் இருக்குது செண்பகா. ''

'' சுப்ரமணிக்கு மீசை போட்டுப்பாருங்க மனசுக்குள்ள இன்னும் நெருக்கமா சாயல் இருக்கும். அதனாலேயே மீசைய எடுத்தார்னு நான் நெனெக்கிறேன். மொத்தமும் மழிக்கிற பிள்ளைமார் ஆளை நான் பார்த்ததில்லை. இவரு தவிர, ''

'' பாலத்துல மார் ஆழம். இடுப்புல கயிறு சுத்தினதும் கை போட்டு நீஞ்சறான். பாலம் பிடிச்சுக்கிட்டுப் போடான்னு ஜனம் கத்தினாலும் கட்டைச்சுவரு பிடிச்சுக்கிட்டு சரசரன்னு எதிர்க்கரை போயிட்டான். இடுப்பு

கவுறு இல்லாதயே போயிடுவா போல. நெஞ்சுரப்புப் புடிச்ச பய. நம்ம அப்பா மாதிரி. ''

''வுட்ருங்க. வேணாம். ''

''உக்காந்து சாப்பிட்ட வண்ணம் பாத்தியா. ''

''ம்... ஊறுகா கலந்து கிட்ட வேகத்தில் சில்லுன்னு அப்பா தெரிஞ்சாறு. பல்லு தெரிய சிரிக்கிறப்ப. ''

''அப்பிடியே நம்ம அப்பா எக்காளம். என்னோட வூட்டுக்கு வரியாடான்னேன். முழங்கை பிடிச்சுக்கிட்டு உடனே கூட நடக்கறான். ''

''அவனோட வூட்டுக்குள்ளே நீ நுழைஞ்சதுமே நெனைச்சேன்.. உனக்குப் பாசம் பொங்கிடுச்சுன்னு''..

''உனக்குப் பொங்கலையா செண்பகா.''

''பொங்கறதெல்லாம் பொம்பளை வெளிய சொல்ல முடியாதய்யா.'' செண்பகா தூணில் சாய்ந்தபடி பெருமூச்சு விட்டாள்.

''ஏன் தயங்கற''...

''முள்ளுச் செடில துணி சிக்கின விஷயம் இது. எத்தினி பக்குவமா எடுத்தாலும் பொத்தல் இல்லாம போகாது''.

''ஊர் கூட்டம் போடப் போறதில்ல செம்பகா. இது என்ன எப்பன்னு காதோட காதா..''

''இங்கு ஒரு ஆள்கிட்ட பேசினா ஊர் கூட்டிப் பேசற மாதிரி. மனசு விட்டு வெளியே வந்தா ரகஸ்யமில்லை எதுவும்?''

''ஒரு முடிவுக்கு வா செண்பகா.''

''எனக்கு இப்படி போறதுல இஷ்டமில்லை. மூஞ்சில கரிபூசி அனுப்பப் போறாங்க''

''துக்கிரி.. துக்கிரி.''

''உள்ளதைச் சொன்னா பொத்துக்கும்.''

''இவ எல்லாம் தெரிஞ்சவ..''

''ஏதோ எனக்குத் தெரிஞ்ச நியாயம்.''

செண்பகா கதவைப் பிடித்தபடி எதிர் வீட்டைப் பார்த்தாள். சுப்பிரமணியின் எட்டு வயதுப் பெண்ணும் ஆறு வயதுப் பையனும் திண்ணையில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். சுப்பிரமணியின் மனைவி கைக் குழந்தையுடன் வெளியே வந்தாள். செண்பகாவைப் பார்த்தாள். தெருவில் இறங்கி. ''டேய் காமாட்சி.'' என்று கூவினாள். ''இவங்க அப்பாரையும் காணோம். இவனும் ஓடி ஓடிப் போயிடறான். டேய் - காமாட்சி'' குரல் எடுத்துக் கூவினாள்.

செண்பகா சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தாள். பெரிய எவர்சில்வர் டேக்சா திறந்து அதிரசமும் லட்டும் பத்து எண்ணி எடுத்துக் கொண்டாள். சம்புடத்தில் போட்டு கதவைத் தாழிட்டுக் கொண்டு எதிர் வீடு நோக்கி நடந்தாள்.

## 22

**ப**டியேறி வந்த செண்பகத்தை சுப்பிரமணியத்தின் மனைவி 'வா' என்று கூப்பிடவில்லை. கூப்பிட மறந்தவள் போல் வாய் பிளந்து பார்த்துக் கொண்டிருந்



தாள்.

புகுந்த வீடு வந்து இத்தனை காலத்தில் செண்பகா எதிர்வீட்டு படியேறியதில்லை. தீபாவளி பலகாரங்களோ, பொங்கல் கரும்போ பையன்களைக் கூப்பிட்டு கொடுப்பது வழக்கம். அய்யாசாமிப் பிள்ளை துக்கம் விசாரிக்க சுப்பிரமணிமட்டும் வந்தான். வாசல் திண்ணையில் சற்றுப நேரம் உட்கார்ந்த விட்டு, ''எதுனா வேணும்னா கேளு பன்னீரு'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

பிள்ளையைத் தூக்கிப் போகும்போத சுப்பிரமணியன் மனைவி தெரு இறங்கி வாய் பொத்திக் கொண்டு நின்றாள். கிராமங்களில் உள்ள வீடுகளில் ஏனோ பரஸ்பரம் ஒரு இனம் தெரியாத பொச்சரிப்பு இருந்தது. புருஷன் மனைவியாய் கிளம்பினால் கூட உற்று உற்றுத் தெருமுனை வரை பார்ப்பார்கள். ஏன், எங்கே என்கிற கேள்விகள் எல்லார் கண்ணிலும் தொக்கி நிற்கும்.

'மாயவரம் வரைக்கும் போய்விட்டு வரேன்' என்று கண்போடுகிற கேள்விக்குப் பதிலாய் வாய் திறந்து சொன்னால்..

''சரி' என்று வெறும் தலையாட்டலாய், 'என்னிடம் எதற்கு சொல்கிறாய்' என்கிற விட்டேத்தியாய் முகம் மாறும் உன்னைக் கேட்டேனோ என்கிற மாதிரி பதில் இருக்கும்.

பிறர் வீடு பற்றி சகலமும் தெரிந்து கொள்ளும் ஆவலும், விவரம் வலியச் சொன்னால் எனக்கு வேண்டாம் உன் விவகாரம் என்கிற போலி ஒதுங்கலும் தெரியும். பன்னீருடன் செண்பகா இதுபற்றி விவாதித்திருக்கிறாள்.

''எதிர் வீடு சுப்பிரமணி பொண்டாட்டி எப்படி..''

''தெரியாது செண்பகா. அவங்கப்பாவுக்கு அஞ்சாவது பொண்ணோ ஆறாவது பெண்ணோ. பொறந்த இடம் கஷ்டப்படற இடம். இங்க சுப்ரமணியும் ஒண்ணும் சம்பாதிக்கிறதா தெரியல. எப்பவும் ஒரு வெறுப்பு தெரியும் மாரியம்மன் கோயில் தீ மிதியில் இதுதான் முதல்ல ஓடும் எனக்கு அந்த ஓட்டத்துல கூட ஒரு வெறுப்பு, கோவமம் தெரியும்.''

''சுப்பிரமணி?''

''முட்டாள், மூர்க்கன், இடதுன்னா வலதுன்னுவான். கொசகொசன்னு, தான் சொன்னது தனக்கே விளங்காம பேசுவான். கொஞ்சம் புரியாத பய. இவன் கல்யாணத்துக்கு மொத நாள் மல்லு வேட்டி கட்டி, வெள்ளைச் சட்டை போட்டு வயலோரமா போயிருக்கான். எதிர் வயல்லேர்ந்து நடவாளுங்க திபு திபுன்னு இவன் பக்கமா ஓடியாந்தாங்களாம்.

வேட்டி பாக்கத்தான் ஓடி வராங்கன்னு பீடி பத்தவச்சுட்டு 'மொன்ன வாங்க இங்கேயே நிக்கிறேன்'னு நின்னுக் கிட்டிருந்திருக்கான். வந்த ஆளுங்க இவனைத் தாண்டி ஓடியிருக்காங்க. இவனுக்கு ஒண்ணும் புரியாம 'ஏண்டா பயந்து ஓடறீங்க'ன்னு கேட்டுருக்கான். டமார்னு ஒரு வெடி கிணத்துப்பாறைக்கு வெடி வச்சுட்டு வந்துருக்கானுங்க. காத்து இவன் பக்கமா... வுழுந்து பொரண்டு மாதிரி வேட்டி முழுக்கப் புழுதி.''

ஓடின ஒரு ஆள் சட்டையைப் புடிச்சு. ''ஏண்டா வெடி வச்சத சொல்லலை''ன்னு கேட்டிருக்கான்.

''அவனவன் துண்டக் காணம், துணியக் காணம்னு ஓடறப்பவே புரி

யலியா, ஒண்ணா கூச்சல் வேற போட்டமே. ஏன் நின்னுக்கிட்டிருந்தேன்னானாம் ஒடினவன்.''

''அன்னிலேர்ந்து ஒருத்தனை ஒருத்தன் வயக்காட்டுல துரத்திப் புடிக்க விளையாடினாக் கூட எழுந்து நின்னுடறான்.''

''இதுதான் கிராமம் செண்பகா. இது என்ன புத்தி வெகுளியா, பேதமையா, அறிவீனமா. சுப்பிரமணிய பயமுறுத்தனும்னா தப தபன்னு ஒடுங்க. போறும்னுவாங்க பஞ்சாயத்துல. அன்னிக்கு சம்பவம் சரித்திரமாவே போயிடுச்சு ஊர்ல..''

மிரண்டு நிக்கிற சுப்பிரமணியனை நினைவில் வரைந்து செண்பகா சிரித்தாள்.

''என்ன செம்பகா என்னா.. வந்தே நிக்கிற.. நீயே சிரிக்கக்கற என்ன வேணும்?''

''உங்களைப் பார்க்கத்தான் வந்தேங்கா.''

சுப்பிரமணி மனைவி வியப்போடு பார்த்தாள்.

''வா, உள்ளே வா.''

இரண்டு கட்டு வீடு.. முற்றத்தில் நார் கட்டில், அதன் மீது அழுக்கேறிய தலையணை பெட்ஷீட்.. கூடம் குப்பையாய் கிடந்தது. ஓட்டுக் கூரையின் கீழ் சடை சடையாய் ஒட்டடைகள் தொங்கின.

குழந்தைகள் உடைகள் குவியலாய் தரையில் கிடந்தன. சுப்ரமணியத்தின் மனைவி, செண்பகா வீட்டை உற்று பார்ப்பதை உணர்ந்தாள். ''மழைக்கு முன்னாடி மாயவரம் போனாரு..''

''உங்கண்ணன்.''

தன் புருஷன் என்று சொல்வதைவிட தன் கணவனை எதிர் வீட்டுப் பெண்ணின் சகோதரனாய் சொல்வதில் ஒரு காபந்து இருக்கிறது. புருஷன் பெயர் சொல்லாதது மட்டுமில்லை. தன் புருஷன் என்று செல்வது கூட ஒரு கர்வம் என்று ஒதுங்கி விடுகின்றனர். இவங்க அப்பாரு என்று கொஞ்சம் வளர்ந்து முதிர்ந்தவள் பேசுவாள். ஆனால், இத்தனை அடக்கம் காட்டுகிற பெண் கணவனோடு சண்டை வந்தால் அவன் மீது இறைக்கிற மரண வசவுகளுக்கு கணக்கேயிருக்காது.

''என்ன வந்த.. சும்மா நிக்கிற.. உக்காரேன், டேய் பாய் போடுடா.''

''இருக்கட்டும். மாயவரத்துல என்னா..'' செண்பகா தரையில் உட்கார்ந்தாள்.

''உரத்துக்கு கடன் தராங்கன்னு போனாரு. இன்னும் ஏன் வரலைன்னு தெரியலை.''

''ரோடு உடைஞ்சிருக்கும். வந்துருவாரு. பாங்க்ல தராங்களா.''

''பாங்குல.. தருவான். தந்ததுக்கு வட்டி கட்டலயே. இது சேட்டுக் கடைக்குப் போயிருக்காப்பால.''

''காமாட்சி பாலம் கட்டினதா சொன்னாங்க, எங்க பையன்?''

''ஆமா, பாலம் கட்டினான். பெரிய ராமர் பாலம். ரெண்டாள் தண்ணில பையனை வுட்ருக்காங்க. அவருவ ரட்டும். அப்புறம் பாரு ரகளைய.ப அவனைப் போட்டுக் கொல்வாரு.. நீ ஏண்டா அங்க போனன்னு.''

''அதான் வந்தேன். இந்தாங்க, இது பொண்ணா.'' செண்பகா டிபன் பாக்கலை நீட்டினாள்.

''ஆமா என்ன இடுப்பு..''

''சும்மாதான்.. அதிரசம்தான்.''

''அதான் பையனுக்கு சோறு போட்டியே.. இது வேற எதுக்கு.''

''இருக்கட்டும்.''

''அவங்கப்பா இதுக்கெல்லாம் மசிகிறவரு இல்ல. கோவம் வந்தா ஒரே அடிதடிதான்.''

''சொன்னாங்க வூட்ல. கொஞ்சம் முன்கோபம். ஆனா நல்ல மாதிரின்னாங்க.''

''போனா போன இடம். வந்தா வந்த இடம் எங்கபோவுது. எப்ப போவுதுன்னு ஏதாவது தெரியுதா.. இப்ப போனதே நடவான் சொல்லித்தான் தெரியும். பின்பக்கம் கொட்டா பொத்துக்கிட்டு ஒழவுது. ஒண்டி பொம்பளை என்ன செய்வேன். மாட்டை அவுத்து வுட்டேன். அதுவா எங்கினையாச்சும் ஒதுங்கிக்கட்டும்னு. அதப் பாரு ஓடு சுவராண்டைய நிக்குது.''

''எங்க கொட்டாய்க்கு அனுப்பிடுங்களேன் மாட்டை..''

''வேணாம்ப்பா. கத்துவாரு வந்து.''

''ரொம்ப பயப்படாதீங்க அவருக்கு.''

''உம் மாதிரி ஆவுமா செண்பகா. அந்த விரலும் ஒண்ணா சொல்லு. எனக்கு வாச்சது அப்படி. பயப்பட்டுதான் தீரணும்.''

''உங்க பையன் பெரிசாவிட்டா எல்லாம் சரியா போயிடும். அதிரசம் எடுத்துக்கங்க.''

''இருக்கட்டும் இதுக்கோசரமா வந்த..''

''இல்லக்கா. இன்னொரு விஷயமும் கூட...''

''என்னாது.''

''இல்லக்கா..'' செண்பகா தலை குனிந்து கொண்டாள். ''போன வாரம்தான் குளிச்சேன்.''

''இத்தினி குடுத்து வச்ச கடவுளுக்கு இது குடுக்கத் தெரியல, பாரேன். பட்டணமெல்லாம் போய்ட்டு வந்தீங்க போலிருக்கு.''

''ஆமா.''

''என்ன சொல்றாங்க?''

''பொறக்கும். மிஸ்டேக் ஒண்ணுமில்லேனுட்டாங்க. எங்க மாமிக்குக்கூட பன்னெண்டு வருஷம் கழிச்சுத்தான் இவரு பொறந்தாராம்.''

''வாஸ்தவம். அந்தக்கால பொம்பளை. பதிமூணு வயசுல கட்டிக்கிட்டா. பன்னெண்டு வருஷம் கழிச்சுப் பெத்துக்கிட்டா. உன் கதை அப்படியில்லியே நீ படிச்சு முடிக்கிறப்ப உனக்கு இருபத்தி ரெண்டா.. இப்ப என்னா..''

''இருபத்தியேழு.''

''இன்னும் பன்னெண்டா.. யம்மா.. நல்ல டாக்டருதான். சாமி குத்தம் ஏதாவது இருக்கான்னு கேட்டுப் பாக்கறதுதான்..''

''கேட்டுட்டமே.. ஒண்ணுமில்லைன்னுட்டாங்க.''

''முப்பதுக்கு மேல கஷ்டம்னு வாங்களே.''

செண்பகா தலைகுனிந்து உட்கார்ந்திருந்தாள்.

''சரி வுடு. வீட்டுக்கு வீடு வாசப்படி. எனக்கு வயித்துல பசி. உனக்கு நெஞ்சல பசி உனக்கு வாரி வாரி பணம் காசு குடுத்தவன் புள்ளை குடுக்கல. எனக்கு காலைல கேப்பக்களி சாப்டுட்டு போன மனுஷன் இன்னும் வரல. கடிக்கக்க மொளகா கூட இல்ல. இவன் பொறந்த நேரம் சோத்துக்கு பறக்கணும்னு எழுதியிருக்கு.''

''பாவம் புள்ளைய ஒண்ணும் சொல்லாதிங்க.''

''சரி நீ கூப்பிட்டு அவனுக்கு இன்னிக்கு ஒரு வேளை சோறு போட்டுட்ட. நாளைக்கு.. இங்க எங்கிட்ட வந்து குதிப்பான். குழம்பு ரசம்னு வக்கனை தேடுவான், எங்க போவட்டும்னு சொல்லு.''

''சொல்லணும்தான் வந்தேன். காமாட்சி நல்ல பிள்ளை. துறுதுறுப்பு. அவனைக் காய விடறது கேக்கவே கஷ்டமா இருக்கு. எனக்கோ வயத்துல ஒண்ணும் தங்கலை. ஊர் குழந்தையை ஊட்டி வளர்த்தாலாவது எனக்குப் பொறக்குமோன்னு செய்கிறேன். நீங்க சொல்ற மாதிரி ஒருநாள் போட்டா தீருமா? தினமும் நானே சோறு போடறேனே காமாட்சிக்கு..''

''புரியலியே..'' குழந்தை தவழ்ந்து ஆவலுடன் டிபன் பாக்ஸை உருட்டிற்று. செண்பகா அதைத் திறந்து நெய்மணக்க அதிரசம் எடுத்து அதன் கையில் கொடுத்தாள்.

''காமாட்சிய எனக்குக் குடுத்துருக்கா. உன் பிச்சப் பசங்களுக்கு என்னால ஆனதை செய்றேன். ரொக்கமோ நிலமோ தரச் சொல்றேன். உனக்கும் விடிஞ் மாதிரி இருக்கும். எனக்கு வயிறு குளிரும். புள்ளைங்களும் கஷ்டப்படாது.

''தத்து கேக்கிறயா.''

''தத்தா குடுத்தாலும் சரி.. என் வீட்ல, என் கை சோறு தின்னு என் புள்ளையா வளர்ந்தாலும் சரி.''

''உங்க வீட்டுக்காரர்கிட்ட கேட்டியா?''

''ராத்திரி பேசினோம். கேக்கலாம்ங்கற மாதிரிதான் சொன்னாங்க.''

''எந்திரி''

''அக்கா''.

''எந்திரி சொல்றேன்.''

''ஏன்கா?''

குழந்தை கையிலிருந்து அதிரசத்தைப் பிடுங்கி சுப்பிரமணியத்தின் மனைவி வீசி தரையில் அடித்தாள்.

''ஏண்டி.. என்ன கொழுப்பு உனக்கு. பணியாரம் குடுத்து புள்ளையா கேக்குற.. என்ன நெஞ்சழுத்தம். புள்ளைய விக்கிறோம்னு போர்டா மாட்டி வச்சிருக்கோம். வாசல்ல. திறந்த வூட்ல நாய் நுழைஞ்சா மாதிரி.. எந்திரிச்சுப் போ வெளியே..''

''அக்கா, நான் என்ன தப்பா சொல்லிட்டேன்.''

''கொழுப்புடி. காசு கொழுப்பு.''

சுப்ரமணியின் மனைவி இரைந்தாள். அவள் குழந்தை வீறிட்டு அழுதது. வாசலில் போவோர் தயங்கி நின்றனர்.

கூடத்தில் செண்பகா நிற்க, சுப்ரபிமணியத்தின் மனைவி வெளியே நின்று கூவ ஆரம்பித்தாள்.

மழை குறைந்து வெளுக்கத் துவங்கிய நேரம். அந்த கிராமத்தில் இடி



இடித்தது. மின்னல் சீறியது. செண்பகாவின் தலையில் இறங்கிற்று. செண்பகா இரண்டு கூறானாள்.

## 23

சுடானது உடம்பு இல்லை, மனசு.

இருந்த இடத்தில் நின்றபடி பூங்காவனத்தை சமாதானப்படுத்துவதா? இல்லை ஓடிப்போய் வீட்டுக்குள் தாழ் போட்டுக் கொள்வதா?

இருந்தால் என்ன ஆகும்.

ஓடினால் என்ன ஆகும்.

வந்தது புருஷன் வார்த்தையை மீறி அல்லவா, காதும் காதும் வைத்தது போல ரகஸ்யமல்லவா. கோட்டைக்குள் புகுந்து திருட முயற்சித்தவன் கூச்சல் கேட்டதும் ஓடுவானா.. எதிர்த்துத் தாக்குவானா?

தாக்கிவுட்டு ஓடுவான். பதட்ட முள்ளவன், மாட்டிக் கொண்டோம் என்கிற ஆத்திரம் கிலியும் நிரம்பியவன் தாக்கிவிட்டு ஓடுவான்.

செண்பகா இதைச் செய்தாள்.

''பூங்காவனம் கூச்சலை நிறுத்து.. என்ன கேட்டுட்டேன்னு இப்படி கூவற. எனக்குத் தோணினதைச் சொன்னேன். இஷ்டமிருந்தா சரின்னு சொல்லு. இல்லாட்டி முடியாதுன்னு சொல்லு. ஏன் கூச்சல் போடற.. என் புத்திய செருப்பால அடிக்கணும். குணம் தெரிஞ்சும் வந்து குலாவினேன். பாரு. ஐயோ பாவம் நாலு புள்ளைங்களை வச்சுக்கிட்டு சோத்துக்குத் திண்டாடறாங்களேன்னு நெனைச்சேன்பாரு. என்தப்பு. வுட்ருமா புண்ணியவதி. நீயா எங்கிட்ட வருவ. அப்ப பாத்துக்கறேன்.''

வார்த்தைகளைப் பதட்டத்தில் தோளில் படர்ந்த பூச்சியென உதறியெறிந்து விட்டு, தெருவில் இறங்கித் தன் வீட்டுப் படியேறி, கதவு திறந்து நின்று, எதிர் வூடு பாத்து தடால் என்று அறைந்து சாத்தினாள். தெரியாமல் உள்ளே நுழைந்ததுகூட பெரிய குற்றமில்லை. கூச்சல் கேட்டு தாக்கிவிட்டு தப்பித்ததே பெரிய குற்றம். திருட முயற்சித்தது மட்டுமில்லை... கொலைக்கும் துணிவு பாதகம். இதன் விளைவு பெரிதாகும். தண்டனை கடுமையாகும்.

ஆயிற்று.

பூங்காவனத்தின் கூச்சல் கேட்டு நின்ற தெரு ஜனங்கள் செண்பகா அவளிடம் எதிர்த்துப் பேசியதையும், எவரையும் மதியாமல் மிரட்சியுடன் தன் வீட்டுக்குள் ஓடியதையும், தங்கள் முகத்திலடிப்பது போல தடார் என்று கதவு சாத்தியதையும் கண்டார்கள். முகம் சுளித்தார்கள்.

தணல் ஊதப்பட்டது. சருகுகள் பற்றத் துவங்கின. நெருப்பு சடசடத்து எரிந்ததும், புகை தெரு முழுவதும் மண்டிற்று. ஊர் ஜனத்தில் பாதி பூங்காவனத்து வீட்டு வாசலில் வசதியாய் நிழல் பார்த்து நின்று கொண்டது. வசவுகளை சந்தோஷமாய் செவி மடுத்தது. அவள் மூச்சிரைக்க நிறுத்திய போது தலையாட்டி 'தப்புதான்' என்று தாளம் போட்டது.

''நாங்க ஏழைங்கதான். இல்லாதவங்கதான். இல்லேன்னு உன் வீட்டு வாசப்படியேறி மடியேந்தினேனா.. இல்லை. எம் புள்ளைங்க உன் வீட்டு சாப்பாட்டுக்கு நாக்கத் தொங்கப்போட்டு அலைஞ்சதுங்களா.. என்ன

திமிர் இருந்தா, வீட்டு வாசப்படி தாண்டி உள்ள வந்து கேள்வி கேப்ப..'' பூங்காவனம் கை நீட்டி ஒரு பெண்ணிடம் பேசினாள். ஆடுகளை இழுத்துக்கொண்டு போன அந்தப் பெண், கூச்சல் கேட்டு ஆட்டுக் கயிற்றைத் திண்ணைக் கம்பத்தில் கட்டிவுட்டு நிழலாய் உட்கார்ந்து முகம் துடைத்துக் கொண்டாள்.

''பாத்திரமா பண்டமா, நெல்லு மூட்டையா.. தூக்கி குடுக்கறதுக்கு... ஓராயிரம் அடி, உதை பட்டாலும் கட்டினவனோட ஒழுங்கா குடித்தனம் பண்ணி பெத்திருக்கறத சோத்துக்கில்லேன்னு தூக்கிக் குடுத்துருவேனா.. என்னா திமிரு என்னா திமிரு.. அப்பிடியே எரிஞ்சு போவுது எனக்கு.. கஞ்சிக்கில்லேன்னா.. புள்ளைய வித்திருவாங்களா? நீ மாந்தோப்புல அவுத்துப்போட்டு மயங்கின... ஊருவுட்டு ஊரு வந்த... அய்யாசாமிப் பிள்ளை சொத்துக்கு யாரும் பங்கு இல்லைன்னு கணக்குப்போட்டு பல்லு காட்டின. நாங்க மானி. செத்தாலும் ஆம்பளை நேர்கொண்டு பார்க்க மாட்டோம். வூட்டு ஆம்பளை தெரு திரும்பினதும் தான் வீட்டைப் பூட்டிட்டு படியிறங்கி பின்னால நடப்போம். அத்தினி மருவாதி. சோடி போட்டுக்கிட்டு, சிலிர்த்துக்கிட்டு போறவங்க இல்ல. வூட்ல அடுப்பு பத்து நாள் பத்த வைக்காம இருந்தாக்கூட எம்புள்ளைங்க வெளிய மூச்சு காட்டாம இருக்கும். யாருக்கு மனசு வரும். உனக்கு பெத்துக்க வக்கில்லேன்னா புள்ளைக் குடுன்னா.. என்னா திமிரு.. அந்தத் திமிருக்குத்தான் ஆண்டவன் அப்பிடிவச்சிருக்கான். ஆட்டுக்கு வாலை அளந்துதான் வச்சிருக்கான் ஆண்டவன். என்னடா இப்பிடி போய் கேக்கறமே...அவங்க மனசு என்ன பாடுபடும்னு தோணாது ஒரு பொம்பளைக்கு. என்னதான் படிச்சிருந்தாலும் காசிருந்தாலும் இந்தத் திமிரு ஆவாதுடீம்மா. என்ன நான் சொல்றது?'' ஆட்டுக்காரியைப் பார்த்து இரைந்தாள்.

''அதான'' ஆட்டுக்காரி தலையசைத்தாள்.

'' அவ கேட்டது தப்பில்லையாம். நான் கத்தினது தப்பாம். எப்பிடி இருக்கு பாத்தியா.. இவ புள்ளையக் குடுன்னு கேப்பா. நான் வாய்ப் பொத்திக்கிட்டிருக்கணும். இல்ல.. இந்தாம்மா புள்ளைப கூட்டிக்கிட்டுப் போன்னு பல்லை காமிக்கணும். நீயே கேளு நியாயத்த.. என்னா நான் பாட்டுக்கு சொல்லிக்கிட்டிருக்கேன். நீ கம்முன்னு உக்காந்திருக்கிற..''

''ஏதோ அறியாதது. வுட்டுரு. என்னவோ கூறு கெட்டுப்போய் கேட்டிடுச்சு.'' ஆட்டுக்காரி குறும்பாய் அவளைப் பார்த்து சமாதானம் சொன்னாள். பூங்காவனம் விடமாட்டாள் என்று தெரியும். விடு என்று சொன்னால் பற்றிக் கொண்டு மேலும் எரியும் என்பது உலக ஞானம். புரட்டிப் போட தீநாக்கு மேலும் உயரும்.

''ஏன் வுடணும்.. ஏன் வுடணுங்கறே. உன்னைக் கேட்டா நீ வுட்ருவியா.. காசுக் கொழுப்பு.. இவ காசுக்கு மயங்கி உசிர வச்சு உசிரா பெத்ததை இந்தாம்மா கூட்டிக்கிட்டுப் போன்னு சொல்லிடுவமா.. இங்க என்ன புள்ளை விக்கிறோம்னு போர்டு போட்டிருக்கமா.. இவ பசப்பிப் பசப்பி அக்கா அக்கான்னு இழைஞ்சப்பவே எனக்கு சந்தேகம் தூக்கிகிட்டு வராளேன்னு.. என்னடா நம்ம கதையே பெரிய கதையா இருக்கு.. இவ வேற வந்து பொலமம்புறாளேன்னு நெனைக்கறப்பவே பட்டுன்னு கேட்டாளே ஒரு கேள்வி..''



''என்ன... அதிரசம்.''

''ம்ம்.. நெய்யிலயே பண்ணினது.. இங்க அதிரசம் இல்லேன்னு யார் அழுதா.. உள்ளே நுழைந்து சிதறிக் கிடந்ததைத் திரட்டி டிபன் பாக்ஸில் அடைத்து வாசலுக்கு வந்து ஊர் பார்க்கத் தெருவில் எறிந்தாள். டிபன் பாக்ஸ் மோதி பளீரென்று துள்ளித் தெருவில் விழுந்து உருண்டது. பண்டங்கள் சிதறின.

ஊர் மணியம் கூட்டத்திலிருந்து மெல்ல நகர்ந்து, தெருதாண்டி, நடையை விரைவாக்கி பாலத்துப் பக்கம் ஓட்டமாக, ஓடி பன்னீர் செல்வத்தைத் தேட...

''யோவ் உன்னைத்தான் தேடறேன். எங்க ஒழிஞ்சிரு.''

''உனக்குத் தெரியுமா.''

''என்னாது.''

''என்னதா.. என்ன விஷயம்.. எதுக்குத் தேடின சொல்லு.''

''எங்கப்பா ரகசியமா ஒன்னு சொன்னாரு சாகறப்ப அதுபத்தி கேக்கணும்.''

மணியம் கணக்குப் போட்டார். ''ஒன்னும் ஒன்னும் இரண்டு. இரண்டு இரண்டும் நாலு. ராஜா ராணி ஜாக்கி ஜோக்கர். அட்றா சக்கை இன்னும் ஒன்னு இறக்கி ஒன்னு சேத்தா டிக்ளர்.''

''எதிர்வீட்டு சுப்ரமணியனைப்பத்தி..''

''என்னய்யா டக்குன்னு குறி சொல்றமாரி கேக்கற. ஊர்ல நாலு பேருக்குத்தான் தெரியும்னாரு உன்னையும் சேர்த்து தான் சொன்னாரா.. ரகசியம்னாரு, உனக்குத் தெரிஞ்சிருக்கு.''

''நேத்தி வரைதான் ரகசியம்.''

''இன்னிக்கு என்ன..''

''உடைஞ்சு சிதறிப் போச்சு லட்டு மாதிரி.''

''புரியலியே.''

''வீட்டுப்பக்கம் போய்ப்பாரு.''

''என்னய்யா பேசற பூடகமா..''

''பூடகமா இல்லை. பச்சை பச்சையாய் கேக்கறாங்க.''

''யாரு.''

''பூங்காவனம்''

''சுப்ரமணியன் பொண்டாட்டியா? யாரைக் கேட்டாங்க.''

''உன் பொண்டாட்டிய..'''

''எப்ப.''

''அங்கேயிருந்துதான் வரேன். அந்தக் கூத்த ஏன் கேக்கற போ..''

''என்னாச்சு.. சொல்லித் தொலையுமேன்.''

''த்தே பாரு, பன்னீரு. வூட்டுப் பொம்பளை அடக்கமா இல்லேன்னா அதுக்குண்டானதை ஆம்பளை தான் அனுபவிக்க வேண்டிவரும். போ. போய் அனுபவி.''

''அடிச்சேன்னா.. தாவங்கட்டை பேந்துரும். ஒழுங்கா சொல்லு.''

''என் தாவங்கட்டைய பேத்து என்ன புண்ணியம்.. நீயில்ல.. உங்கப்பன் இருந்திருந்தாக்கூட இந்த நேரம் ஒண்ணம் பண்ணியிருக்க முடியாது. செண்பகா பண்ணினது தப்புதான். பெரியதப்பு.''

''என்ன பண்ணினா.''

பூங்காவனத்துக் கிட்ட போய் புள்ளைய தத்து குடுக்கிறியான்னு கேட்டிருக்கா. சும்மாவாய் வார்த்தையா ஏதோ பேச்சுவாக்குல கேட்டிருந்தாக் கூட பவாயில்லை. டப்பாவுல லட்டு அதிரசம் எடுத்துக்கிட்டு போய் புள்ளை கேட்டா. இல்லாதவங்கதான், இருந்தாலும் தப்பில்லையா..

இப்பிடியா பட்டுன்னு கேட்டுர்றது. நீ ஒரு கூறுகெட்டவன்.. பொம்பளைக்கு ஒரு இடம் ஒதுக்கி இதான்டீன்னு வைக்கணும், இல்லன்னா சிரிச்சிடும். போ.. போய் உண்டானத வாங்கிச்சு.. தாவங்கட்டை மட்டும் இல்ல.. உடம்பு முழுக்க பேந்து போவப்போவுது.''

''அடிப்பாவி, கேக்காதன்னு சொல்லிட்டு வந்தேனே.''

''உன் சொல்லுக்கு அத்தனை மரியாதை.''

''கெடுத்தாளே பாவி..'' பன்னீர் தலையில் அடித்துக் கொண்டான்.

''நான் எத்தினியோ தடவை உங்கப்பாக்கிட்ட சொன்னேன்.. மருமவளை எதிர உக்கார வச்சு இதெல்லாம் பேசாதன்னு. போடா பைத்தியக்காரா.. அது படிச்ச பொண்ணுடான்னுட்டாரு. இப்ப படறது யாரு.''

''என்னா சொன்னா பூங்காவனம்.''

''அத ஏன் கேக்கற.. காது குடுத்து நின்னு கேட்டதே பெரிய விஷயம். அத என வாயால வேற சொல்லணுமா.''

''செண்பகா?''

''ஓடிப்போய் உள்ள தாழ்போட்டுக்கிட்டு எல்லாத்தையும் கேட்டுக்கிட்டிருக்காப்ல.''

''யோவ் மணியம், கூட வாய்யா.''

''நான் வரலப்பா.. உங்களுக்கு நடுவ நான் மாட்றது நல்லதில்ல..''

''அட வாய்யான்னா..''

''நான் ரோசக்காரன் பன்னீரு.. பொம்பளை ஜாஸ்தி பேசினா இழுத்துப் போட்டு மிதிச்சிருவேன். எனக்குப் பொறுமை கம்மி.''

''புடுங்கினீரு.. வாய்யா எழுந்து..''

''ஏன் என்கிட்ட கூவுற இத்தோட போச்சா.. இன்னும் சுப்பிரமணி வந்தோ.. என்னென்ன ஆவப்போவுதோ.''

''காத்தாலதான் சொல்லிட்டு வந்தேன், போய் கேக்காதடி, நான் நாலு பேரைக் கேட்டுட்டு வரேன்னு. இப்படி செஞ்சிட்டாளே.''

''செய்தது தப்பில்லை.''

''எங்கப்பாவ சொல்றியா.?''

''அந்தாளுக்கு என்ன, சாகற நேரத்துல ஆத்திரம் தீத்துக்கிட்டாரு. போய் சேந்துட்டாரு. இப்ப இங்க எல்லாம் கூறுகெட்டுப்போய் நடக்குது.''

''பூங்காவனம் என்ன சொன்னா. அத மட்டும் சொல்லு.''

''தெருல கைகோத்துக்கிட்டுப் போனீங்களாம். உன் பொண்டாட்டி மரியாதை கெட்டவளாம். உங்களுக்குப் பெத்துக்க துப்பில்லலையாம்.''

''சரி.. போறும். மிச்சத்தை நானே போய் கேட்டுக்கிறேன்.''



''இன்னும் இளக்காரமா போயிடும்.''

''தப்புன்னு ஒத்துக்கிட்டா கூச்சல் வராதுல்ல.''

''அதெப்பிடி..''

''தப்பு பண்ணிட்டதாலதானய்யா கூச்சல்.''

''அதுக்கு மட்டுமில்ல பன்னீரு.''

''இன்னும் என்ன..''

''பொச்சரிப்பு. நீ உன் பொண்டாட்டிய நடத்தற விதம் அதான் எரிச்சல். ரெண்டு பேரும் சீவி சிங்காரிச்சுக்கிட்டு அடிக்கடி கார்ல கிளம்படறீங்க.''

''இருக்குய்யா போறேன்.''

''சரி, எனக்கு இல்லை, கூவறேன். அவகிட்ட மாட்டினது உன் தப்பு.. உன் பொண்டாட்டி தப்பு.''

''அவகிட்ட இன்னும் என்னதான் சொல்றது. படிச்சுப் படிச்சு சொல்லிட்டு வந்தேன். நான் பார்த்துக்குறேன், நீ சும்மாக்கிடன்னு.''

''கண்டிச்சு வை. அதான் சொல்லலாம். எதிர்த்து ஆ ஊன்னா வாயில போடு.''

''ச்சு.. இருக்கிற ரோதனைல இது வேறயா.''

''தத்து கேக்கறது பெரிய புள்ளையவா கேப்பாங்க. ஒரு வரைமுறை வேணாம்.''

''யாருக்குய்யா தெரியும். நானாதான் இந்தப் பேச்சை ஆரம்பிச்சேன். காமாட்சி பாக்க பளிச்சுன்னு இருக்கான். அப்பா ஜாடை இருக்குன்னு..''

''உள்ளுக்குள்ள ஆயிரம் பேசிக்கலாம், வெளியே இறைச்சிடறதா.. எங்கப்பா ஜாடை இருக்க.. குடுத்தா என்னன்னு கேக்க முடியுமா?''

''தப்புதான்.''

''புரிஞ்சா சரி, ஊர்ல நாலு பெரிய மனுஷன் எதுக்கு இருக்காங்க.''

''அதான்யா சொன்னேன். மணியம்கிட்ட பேசிட்டு வரேன். நீயா ஒண்ணும் பண்ணிடாதன்னு.''

''பொம்பளைக்கு வெவரம் போறாதுய்யா.. உம் பொண்டாட்டிக்கு என்னைக் கண்டா எப்பவும் ஒரு எள்ளலு.''

''அப்படியில்லய்யா.. கோச்சுக்காத..''

''தெரிஞ்சா சரி.''

பன்னீர் மணியத்தோடு தளர்ந்து கனத்த கவலையோடு வீடு நோக்கி நடந்தான். மணியம் உள்ளுக்குள்ளே சிரித்துக் கொண்டார்.

காலம் பலவீனமானபோது எதிரே உள்ள சருகுகள் சிரிக்கும். சப்தம் போடும். மிரட்டும். உபதேசிக்கும், கட்டளையிடும். நானே காலம் என்று கடிந்து கொள்ளும். ஆணவம் காட்டும். இவைகளை மவுனமாய் சகித்துக் கொள்ளும் திறமை உள்ளவனே, வெற்றி நோக்கி நகர முடியும். தெரு முனையிலேயே பன்னீருக்கு பூங்காவனம் குரல் கேட்டது. பன்னீர் நகர முடியாமல் தவித்தான்.

## 24

'என்ன செண்பகா இப்பிடி பண்ணிட்டே.' கதவைத் திறந்து மறுபடி மூடி சுவரோரமாய் நடையிருட்டில் நின்று கொண்டிருந்தவளை பன்னீர் கேட்டான்.

செண்பகா வாய் திறக்கு முன் பூங்காவனத்தின் கூக்குரல் நடுத்தெருவுக்கு வந்துவிட்டது. படியிறங்கி சேறான தெரு மண்ணில் கால் பரப்பி அவள் நின்று கொண்டிருப்பது கதவு இடுக்கு வழியே தெரிந்தது.

''நின்னு என்னு கேக்காதே.. போறாரே, பெரிய மனுசன்தானா இவரு.. தெரிஞ்சுதான ஓடி வந்திருக்கு.. உள்ள பூந்து பூட்டிக்கிட்டா வுட்டுருவமா. எங்க இந்த மணியக்காரன்.. வாய்யா இங்க.. நான் கூப்புடறேன்னு அந்தாள் கிட்டப் போய் இங்க. நான் பஞ்சாயத்துக்கு நியாயம் கேக்கப் போறோம்னு சொல்லு. போய் கூட்டிக்கிட்டு வா?''

''அதான் கையோட கூட்டிட்டு வந்துட்டேனே. இரு வருவாங்க.''

''இருக்கிறது என்ன. வாசல்ல நின்னு கத்திக்கிட்டிருக்கேனே காதுல விழல. மூஞ்சியத் தூக்கிக்கிட்டு உள்ள போயிட்டாரு. தகிரியமான ஆம்பளையா இருந்தா என்ன செய்யணும்.. ஏம்மா வூட்டு வாசல்ல நின்னு இப்பிடி கத்தறன்னு கேக்கணும்.''

''நீ எதுக்குக் கத்தறன்னு தெரிஞ்சுதான் வந்திருக்காரு, கொஞ்சம் பொறு, வருவாரு.''

''யார் வரணும்..?' பின்னால் குரல் கேட்டது. மணியம் திரும்பிப் பார்த்தார். சுப்பிரமணியன் நின்று கொண்டிருந்தான்.

''வா.. சுப்பிரமணி.. மாயவரத்துல மாட்டிக்கிட்டியாமே மழைக்கு எப்படி.. அங்கியும் மழைதானா..''

''வாசக்கல்லு உருட்டுடிக்கிட்டுப் போறப்பக் கொல்லைப் பக்கம் வைக்கலு ஈரமாச்சான்னு பாக்கச் சொன்ன மாதிரி என்னய்யா கேள்வி..''

''ஆமா.. '' மணியம் இளித்தாள். ''சேதமாயிருச்சா ரொம்ப..''

''பஸ் ஸ்டாண்டு பொத்துக்கிட்டு விழுந்துருச்சு.. புதுப்பாலம், கொரநாடு எல்லாம் முழங்கால் முட்டும் தண்ணி.''

''இங்க ஆள் உயரம். சுப்ரமணி''

''ஓஹோ? அதான் எம் ்ள்ளைய வுட்டு ஆழம் பாத்தீங்களா. ஏன்யா, என்ன நெனைப்பு உங்க மனசுல. ஏண்டி, முண்டம்.. உனக்கு எங்கடி போச்ச அறிவு.'' மனைவியை நோக்கி உருட்டி விழித்தான்.

''அது மட்டும்தானா.. இடுப்புல கயிறு கட்டி ஆத்துலவுட்டாங்க.. இறங்கிக் கட்டின கயத்துப் பாலத்துக்கு அவன் பேரு வச்சுட்டாங்க. நடுவூட்ல அவனை உக்கார வச்சு மணக்க மணக்க சோறு போட்ருக்காங்க.. எங்க ஆம்பளைக்கு நாதியில்லியே ஏன்னு கேக்க.. எல்லாத்தியும் செஞ்சிட்டு இன்னொன்னும் கேட்டாங்க..''

''என்னாது?''

''புள்ளைய வித்துடிறியா.. பத்தாயிரம் தரேன்னாங்க.''

''யாரது?''

''எதிர்வூட்டு பெரும் பணம்.''

''பன்னீர் செல்வமா?''



''அவருதானா கேட்பாரா? புள்ளைய தள்ளி ஆறு ஆழம் பாத்த மாதிரியே பொண்டாட்டி அனுப்பிய நம்ம யோக்கியதைய ஆழம் பாத்தாரு.''

''அந்தப் பொண்ணா கேட்டுச்சு. நீயேண்டி அங்க போன..''

''நான் ஏன் போறேன்.. அந்த வீட்டு வாசப்படி ஒரு நாளும் நான் ஏறினதில்ல.''

''பொறவு..''

''அவங்களா வந்தாங்க.. அதிரசம், லட்டுன்னு அள்ளிக்கிட்டு வந்து ரொம்ப தன்மையா பேசிக்கிட்டிருந்தாங்க. தன்னோட குறைய சொல்லி பொலம்பினாங்க. ஐயோ பாவம்னு நானும் கேட்டுக்கிட்டிருந்தேன். சமாதானம் சொன்னேன். உடனே காமாட்சியை என்கிட்ட குடுத்துரு. பணம் தரேன்.. நிலம் தரேன். வச்சு பொழைச்சுக்கங்கன்னாங்க. அப்பன்காரன் கையாலாகாதவன்னா ஆளாளுக்கு எகத்தாளமாதான் பேசுவாங்க. அப்பன்காரனுக்கு வக்கில்லங்கறதுனாலதான் ஊருகூடி புள்ளை புடிச்சு ஓடற தண்ணில தள்ளிருக்கு.''

'' எலேய் காமாட்சி..'' சுப்பிரமணி பல் கடித்துக் கூவினான். ஆட்டுக்கார கிழவி கையில் வைத்திருந்த அரசங்கிளையைப் பறித்துக் கொண்டு வீட்டிற்குள் புகுந்தான். பையன் தலை முடியைக் கத்தையாகப் பிடித்துக் கொண்டு அவன் திறந்த முதுகில் அரசங்குச்சியால் விளாசியபடியே வெளியே வந்தான். வலி தாங்கமால் பையன் கதற, தெரு ஜனம் பாய்ந்து பையனை விலக்கி தள்ளிப் போக வைத்தது.

''விடு சுப்பிரமணி, ஏதோ நடந்து போச்சு..''

''எவன்டா என் புள்ளைய தண்ணில தள்ளியது.''

''யாரும் தள்ளலை. அவனா ஒத்துக்கிட்டான். சரின்னு இடுப்புல கயித்த கட்டி பத்திரமா பாலம் தாண்டச் சொன்னோம்.''

''ஏன்.. உம் புள்ளைய தாண்ட வுடறதுதான.. வாட இங்க.. பொறுக்கி நாயே.. பையனிடம் முன்னேற, பையன் பயத்தில் கதறினான்.

எதிர் வீடு திறந்தது.

பன்னீர் வாசலுக்கு வந்தான். தெருவில் இறங்கினான்.

'' ஏம்பா சுப்ரமணி.. என்ன கலாட்டா பண்ற இங்க, உன் பையனை யாரு தள்ளிட முடியும் ஓடற ஆத்துல..''

''ஏன் தள்ள மாட்டீங்க. புள்ளை இல்லாதவன் இல்லியா இந்த ஊர்ல.. அடுத்தவன் பெத்த புள்ளயை ஆத்துல தள்ளறதுக்கு..''

''யோவ்.. யாரைச் சொல்ற.. பாத்துப்பேசு.''

''தள்ளின கம்மனாட்டிய சொல்றேன். உனக்கேன் பொத்துக்குது. நீஞ்சு வந்துட்டான், வூட்ல வச்சு சோறுபோட்டீரு. ஆத்தோட போயிருந்தா கருமாதி பண்ணிருப்பீரா. அதுக்கு அப்பன் வரணுமில்ல.. அப்ப தூணைப் புடிச்சுக்கிட்டு வேடிக்கை பாத்திருப்பீங்க..''

''உங்க புள்ளை நீச்சலடிச்சது பாத்துட்டுத்தான் கேட்டாங்களாம் அவரு வூட்டம்மா, தானே விலை போட்டு வாங்கிக்கிறேன்னு.''

''பூங்காவனம், தப்பா என் பொண்டாட்டி ஒண்ணும் கேட்டுறல.''

''அடி என் கூத்தே. ஏன்யா மணியம், உம் புள்ளைக்கு என்ன விலை போட்டு தருவ சந்தைல.. சொல்லு பார்ப்பம்.''

''அது சரிதான் வுடுங்க.''

''என்னய்யா வுடறது, எத வுடறது,'' சுப்பிரமணி இறங்கி மணியக்காரர் சட்டையைப் பிடித்துக் கொண்டான்.

''ஊட்டுப் படியேறி பெத்த பள்ளைய, அதுவும் மூத்த புள்ளைய கேட்டுங்களாமே.. நியாயமா இது.''

''தத்து எடுத்துக்கணும்னு நினைக்கக் கேட்டிருப்பாங்க. நீங்க சொல்ற மாதிரி விலைக்குக் குடுன்னு கேககலையாமே. நீ எனக்கு உதவி செய். பதிலுக்கு நானும் செய்யறேன்னு தான் சொன்னாங்களாம்.''

''அவனவன் வயத்தை அவனவனுக்குக் கழுவத் தெரியும். அடங்கியிருக்கச் சொல்லுங்க. கொடி வேத்தறதுக்கு பள்ளிக்கூடம் போறதோட நிறுத்திக்கச் சொல்லுங்க. எதிர் ஊட்டுக் கூரையெல்லாம் வேற வேயப் பாக்கறாங்களா.''

''சுப்பிரமணி, நாக்கை அடக்கிப் பேசு.'' பன்னீர் கோபத்துடன் அதட்டினான்.

''இவன்கிட்ட எனக்கொரு பேச்சும் இல்லைன்னு சொல்லுய்யா. பொண்டாட்டிய அடக்கி வைக்கச் சொல்லுங்க. முதல்ல முந்தானைய பிடிச்சிக்கிட்டு இவரு சுத்தி சீரழியட்டும். எங்களுக்கென்னா.. அய்யாசாமிப் பிள்ளை வயலை மடக்கிப் போட்டு வாங்கினாப்பல எல்லாத்தையும் வாங்கிட முடியாது. ஊர் மொத்தமும் அந்தக் கிழவன் கிட்ட ஏமாந்திருக்கலாம். இந்த சுப்பிரமணி ஏமாற மாட்டான். படிச்ச பொம்பளைன்னா ஊர்ல இருக்கிற ஆம்பளை துண்டை இடுக்கிக்கிட்டு நிப்பானா? இவனுக்குத் தலையெழுத்து, எனக்கென்னா.''

''சரி, வுடு ஏதோ தெரியாம பேசிட்டாங்க.''

''புள்ளை வேணும்னா புருஷன்கிட்ட கேக்கணும். புருஷனுக்கு முடியலைன்னா சாமிகிட்ட கேக்கணும். அதவுட்டுட்டு எதிர்வூடு வந்து கேக்கறது என்னா நியாயம்'' பூங்காவனம் நொடித்து நீட்டி முழக்கி பேசினான்.

''புள்ளை வரம் சாமி வந்தா குடுக்க முடியும். ஆசாமிதான் தரணும். நாங்க பெத்துக் குடுக்கறதா இல்லை. எதிர்வூட்டம்மா இனி பெத்துக்கறதுக்கு ஏதும் வழி பண்ணலாம்.''

''டேய் சுப்ரமணி...''

''சரிதான் போடா. மாட்டாதவனெல்லாம் கூச்சல் போட்டுக்கிட்டு.. அவசியம் உன் பொண்டாட்டிக்குப் புள்ளை வேணும்னா நான் இருக்கறப்ப அனுப்பு. தரேன்..''

பன்னீர் பாய்ந்து அவன் சட்டையைப் பிடித்து இழுத்து அறைய, தெருவில் சேறு தெறித்தது. சுப்ரமணி உதறி விடுவித்துக் கொண்டு உள்ளே ஓடினான். அரிவாளோடு திரும்பி வந்தான்.

''வெட்டி வெறிஞ்சுடுவேன் படவா.. மேலயா கை வைக்கிற'' கூட்டம் அவனை மடக்கி நிறுத்திற்று.

''பொண்டாட்டிய சுமக்க வைக்கத் தெரியாதவனெல்லாம் வெள்ளை வேட்டிக்கட்டிக்கிட்டு அலையறான். சும்பப் பயலுங்க. சட்டையவா பிடிக்கற நீ..''

பன்னீரைக் கூட்டத்தில் பெரும் பகுதி அமைதியாக்கி உள்ளே தள்ளிற்று.

''அனுப்புடா உன் பொஞ்சாதிய... ரெண்டு நாள் அனுப்பு. நான் சில்



லறை இல்லாதவன்தான். அழுக்கு வேட்டிதான். என்னால முடியும்டா. ரெண்டு நாள் அனுப்பு. புள்ளை குழந்தை கோண்டி.''

பளிரென்று கதவைத் திறந்து கொண்டு செண்பகா விளக்குமாறு எடுத்துக்கொண்டு சுப்ரமணியனை நோக்கி ஓடினாள்.

ஆட்டுக்கார கிழவியும், ஊர் பெண்களும் அவளை மடக்கி இழுத்துக் கொள்ள, சுப்ரமணி மீசை மீது கை போட்டு சிரித்தான். செண்பகா விளக்குமாறை வீசி அவன் மீது எறிந்தாள். அவன் குனிந்து கொள்ள, விளக்குமாறு திண்ணையில்பட்டு விழுந்தது. பூங்காவனம் உள்ளே போய் கழுநீர் கொண்டு வந்து வீச, ஊர் ஜனத்தில் பாதி புளிப்பு நாற்றத்தில் நனைந்தது.

பன்னீர் விடுவித்துக் கொண்டான். அழுது வெந்து உறுமும் செண்பகாவை கழுத்தில் கை வைத்துத் தள்ளினான். இடுப்பு பெல்ட்டை உருவி சுளீர் சுளீரென இடதும் வலதுமாய் அடித்தான். தலைமுடியைக் கொத்தாய் இடக்கையால் பிடித்து வலக்கையால் அறைந்தான். நெட்டித் தள்ளிக் கொண்டு போய் கூடத்தில் தள்ளினான். எழுந்திருக்க முயன்றவளை எட்டி உதைத்தான். மற்றவர் அடித்துக் கொள்ளும்போது ஓடித்தடுத்த ஊர் ஜனம், புருஷன் மனைவியை வதைக்கையில் சுற்றி நின்று வேடிக்கை பார்த்தது. வெறுமே கை கட்டிப் பரிதாபப்பட்டது.

மனைவியை அடித்து இம்சிப்பது இந்த தேசத்து மரபுகளில் ஒன்று. இதைச் சடங்கு போல் கை கட்டி கவனிப்பது இவர்களின் காலம் காலமான வழக்கம். பிறன் மனை சுகிப்பவன் மட்டும் சண்டாளன் இல்லை. தன் மனைவியை அடித்து ஹிம்சிப்பவன் சண்டாளன் தான்.

## 25

**நா**ன்கு நாட்கள் இந்த சம்பவத்தை நினைக்க நினைக்க உடம்பு கூசிப் போயிற்று. உன் மனைவியை அனுப்பு இரண்டு நாள் என்று சுப்ரமணி பேசியது கூட கூச்சமில்லை. செண்பகா துடைப்பத்துடன் தெருவில் இறங்கி வந்ததும், ஊர் ஜனம் மீது கழுநீர் வீசப்பட்டதும் கூட கூச்சமில்லை. மனைவியை கைநீட்டி ஊர் ஜனம் முன் அடித்த கொடூரம் இருக்கிறதே அதுதான் பெரிய கூச்சம். இறுக்கி இறுக்கி வைத்துக் கொள்கிற பெண்ணை, கொஞ்சிக் கொஞ்சி சீராட்டுகிற துணைவியை, உடையோடும் உடைகளின்றியும் பார்த்துப் பார்த்து வியந்த மனைவியை வியப்பு, கொஞ்சல், கூடல் எல்லாம் மறந்து ஹிம்சித்தது கூச்சமாய் போயிற்று.

இனி எப்படி வியக்க முடியும், இனி எப்படி கூட முடியும், என்ன சொல்லி கொஞ்ச முடியும் என்று வேதனை வந்தது.

கொஞ்சலும் கூடலும் வேண்டாம். உணவு உண்ண வேண்டியிருக்கிறது. சண்டை போட்ட முக்கால் மணியில் ஏதாவதொன்று சாப்பிடவோ, குடிக்கவோ தேவையாய் இருக்கிறது. இதற்கு மனைவி வேண்டியிருக்கிறது.

'சே.. என்ன முட்டாள்தனம், மனைவியை அடிப்பது ரொம்ப முக்கியமெனில் எதற்கு குடித்தனம். எப்பேர்ப்பட்ட தவறு செய்திருந்தாலும்

கை நீட்டி அடிக்கும் தைரியம் எப்படி வரும்? பதிலுக்கு மனைவி பல்லை உடைக்க மாட்டாள், அடி வாங்கி சுருண்டு கொள்வாள் என்கிற தைரியம் தானே' யார் மேலேயோ இருக்கிற ஆத்திரம் கடைசியில் மனைவி மேல் தானே திரும்புகிறது.

ஆனால் செண்பகா, உனக்கெதற்கு எதிர் வீட்டுப் பொல்லாப்பு, படித்துப் படித்து சொல்லிவிட்டுப் போயிருந்தும் எப்படி போய் பிள்ளை கேட்டாய். திருமணமான பிறகு சந்தோஷம் மட்டும் கூட்டு விஷயமில்லை செண்பகா அவமானம் கூட கூட்டாய்தான் ஏற்படும்.

அழுது கொண்டிருந்த செண்பகாவை பன்னீர் தூக்கி நிறுத்தினான். மெல்ல அணைத்துக் கொண்டான். வரிவரியாய் படிந்திருந்த காயங்களுக்கு களிம்பு போட்டான். கன்றியிருந்த கன்னம் பார்க்கிறபோது வேதனையில் வயிறு குழைந்தது.

சோறோ தண்ணீரோ சந்தோஷமோ சிரிப்போ எதுவுமின்றி, புருஷனும் மனைவியும் படுக்கைக்குப் போனார்கள்.

பயத்தில், பயம் கொடுத்த அதிர்ச்சியில் செண்பகா தூங்கிப் போனாள். நடுநடுவே அதிர்ந்து புலம்பினாள். முதுகு தட்ட மறுபடி தூங்கினாள். நடுநிசியில் விழித்துக் கொண்டு புருஷன் மடியில் முகம் புதைத்து அழுதாள்.

''ஸாரி செண்பகா அழுவாத.. நான் மடையன் மாதிரி நடந்துக்கிட்டேன். வுட்டுரு செண்பகா. இனி இந்த ஜென்மத்துக்கும் இப்படி உன்னை அடிக்கிற தப்பைச் செய்ய மாட்டேன்.''

''அது இல்லப்பா. நீ அடிச்சா என்னா.. நான் அதுக்கு அழுவலை.''

''ரொம்ப அசிங்கம்தான் செண்பகா நான் செஞ்சது. ஐயா இருந்தா என்னைக் கூறு போட்டுருப்பாங்க.''

''அசிங்கம் பண்ணினது நான்தான். அந்த பொம்பளை இப்பிடி பேயாட்டம் ஆடுவாள்னு தெரியாது எனக்கு.''

''எனக்கு அந்தப் பயம் இருந்தது. செண்பகா. அதனால தான் வேணாம்னேன்.''

''எனக்குப இருந்துச்சு. கத்தினா, தப்புதான் மன்னிச்சுக்கன்னு திரும்பிடலாம்னுதான் போனேன். அவ மன்னிப்புக்கு மசிறவளா தெரியலை. மாட்டினியா எங்கிட்ட உன்னைத் தொலைச்சிடறோம் பாருன்னு பொங்குறா.''

''வாஸ்தவம். இது உள்ளாற நேற என்னவோ இருக்கு செண்பகா. வேற ஏதோ கோவம் இருக்கு பூங்காவனத்துக்கு.''

''போறாத காலங்க.''

''தப்பு எம்பேர்லதான். எதிர்வீட்டு காமாட்சி பையனைப் பத்தி உன் நெஞ்சுல ஆசை தூண்டியிருக்கக் கூடாது. என்னோடயே வச்சிக்கிட்டு நானா செஞ்சு முடிச்சிருக்கணும். முடியாத போனா சரின்னு வுட்டுட்டு நகர்ந்திருக்கணும். ஆனா ஆட்டக்கடிச்சு, மாட்டக்கடிச்சு நம்மையும் கடிச்சிட்டானே சுப்ரமணி.. எரிஞ்சு போச்சு எனக்கு. அவனை அழுத்தி மிதிக்க முடியலையேன்னு வெறி, உன்மேல கை வச்சுட்டேன்.''

''சரி வுடுங்க.''



''விடற விஷயமில்லை செண்பகா. அப்பாவுக்கோ, எனக்கோ வெட்டுப்பழி குத்துப்பழின்னு இந்தக் கிராமத்துல யாரும் ஆள் கிடையாது இன்னிவரைக்கும். இப்ப சுப்ரமணி முறைச்சிருக்கான். முதல்ல வயித்துல அடிக்கப் போறேன். அஞ்சு ரூவா குடுத்தா போறும் மாட்டை நாலு ஊர் தாண்டி ஓட்டிக்கிட்டுப் போயிருவானுங்க. சவுக்குத் தோப்புல கட்டி எருமைய வெட்டி தோலுரிச்சிருவானுங்க. உரிஞ்சதோல் அடையாளம் சொல்லாது. நாலு எருமைக்கு இருபது ரூபா. எருமைலேர்ந்து ஆரம்பிக்கிறேன். எல்லா இடத்தையும் அடைக்கிறேன். என் பொண்டாட்டியவா படுக்கக் கூப்புடற.. உன்னை ஊமையாக்கிப் பார்க்கல, நான் பன்னீர் செல்வம் இல்ல.''

''வுடுப்பா.. ஏன் அதையே நினைச்சு பெரிசு பண்ற.''

''புள்ளை இல்லாதவ தத்து எடுக்கக் கேக்கறதுல என்ன தப்பு. குடுக்க இஷ்டமில்லேன்னா முடியாதுன்னு சொல்லிரணு மேயன்னில, படுக்க அனுப்புன்னு புருஷன்காரன் கிட்டயே தெனாவட்டா பேசறான். நல்ல பொறப்பு இல்லேன்றது தெரியுது பாரு.. அவங்கம்மாக்காரி காசுக்கும் அரிசி பருப்புக்கும்தானே... இவனைப் பெத்தா. இவன் புத்தி எப்படி இருக்கும்.''

''வேண்டாம் விடுப்பா. நம்ம மேலயும் தப்பு இருக்கு.. நான்தான் மூளை கெட்டுப் போய் அங்க நின்னேன். அதனால வந்ததுதான்..''

''இருக்கலாம் செண்பகா புள்ளைய கேக்கறானேன்னு கோவம் வரலாம். நாயே பேயேன்னு திட்டு. மிஞ்சினா மலடின்னு ஏசிட்டுப் போ. நடுத்தெருவுல நின்னுட்டு உம்பொண்டாட்டிய அனுப்புடான்னா.. என்னதெனா.. உள்ள வேற ஏதோ வெஞ்சினம் இருக்கும் அந்த ஊட்டல. நீ கேட்டதுக்கு மட்டும் ஆத்திரபட்டாப்பல தெரியல. இதுதான் சாக்குன்னு பழி தீர்க்கற மாதிரில்ல படபடன்னு பேசிட்டாங்க ரெண்டு பேரும்.''

''நம்ம அப்பா மேல கோவம் இருக்குமோ சுப்ரமணிக்கு.'' செண்பகா கேட்டாள்.

''தெரிஞ்சிருக்கும்கிறியா.''

''இருக்கலாம். தாயம்மாளுக்குத் தெரிஞ்சு அவளுக்கும் அவனுக்கும் பேச்சு வார்த்தையேயில்ல. தாயம்மாளைக் கூப்பிட்டு கேப்பமா.''

''வேணாம்பா. ஊர்ல எவ சங்காத்தமும் வேணாம், ஒருத்தியும் இந்த வீட்டு வாசப்படி ஏற வேணாம், நாமளும் எவக்கிட்ட போயும் நிற்க வேணாம். வுட்டுரு.''

''எனக்கு ஆறல செண்பகா. ஆள் வச்சி அடிச்சுப் போட்டுருவமான்னு கூட தோணுது. சொன்னா போறும். தபதபன்னு போட்டுட்டு வந்துருவானுங்க.''

''அதெல்லாம் வேணாம் வுடுப்பா.''

''அந்த நேரம் கூட அவ்வளவு வெறுப்பில்லை. இப்ப நெனைக்க நெனைக்க கொலையே பண்ணிடலாமான்னு இருக்கு. அவன் மூஞ்சிய பாரேன்.. அருளே இல்லாத முகம். அவன் உடம்பும் துணியும். நாறக்கம்மனாட்டி.''

''அவுங்க வீடும் அப்பிடித்தான். ஒரே ஒட்டடை குப்பை, என்னதான் பண்ணுவாளோ, இல்லாத வீடுன்னா கூட வீட்ட சுத்தமா வச்சுக்க

வேணாம்?''

''ஒரு சவுக்காரக் கட்டிக்கு வக்கில்லாத பய. நெஞ்ச நிமித்திக்கிட்டுல்ல அசிங்கமா பேசினான். உன்கைலேருந்து விளக்குமாத்த வாங்கி நான் அவனை அடிச்சிருக்கனும்.''

''சரி. வுடுங்கன்றேனில்ல.. சும்மா அதையே போட்டு உழப்பிக்கிட்டு.''

''அவன ராவோட ராவா வீடு பூந்து வெட்டிப்போட ஆள் ஏவி வுட்ருக்கனும்.''

''தப்பு எம்பேர்ல..''

''இருக்கலாம். ஆனா அவன் பேசின பேச்சு.. அத்தினி பேசின வாய நிரந்தரமா மூட வேணாம்?'

''கடவுள் இருக்காரு வுடுப்பா.''

''இல்ல செண்பகா. கடவுள்னு யாரும் இல்லை. இத்தினி குடுத்துட்டு ஒரே ஒரு புள்ளைப் பூச்சி குடுக்க மறந்துட்டவனை ஏன் நினைக்கனும். அப்பா அழுதது தப்பேயில்லை. இத்தினி சொத்து.. இத்தினி வசதி.. யாருக்கு நமக்கா.. அர்த்தமேயில்ல செண்பகா இந்த பயம் தாங்காம போய் தத்து கேட்டா.. கேட்ட பொம்பளைய சட்டுன்னு கேவல மாக்கிட்டானே.''

''ஒருவேளை புள்ளைய ஆத்தில இறக்கின கோவமோ.?''

''நான் இறங்கச் சொல்லலை செண்பகா. மணியக்காரர் தான் இறங்கி விட்டாரு. நான் சோறு போடச் சொன்னத பையன் சந்தோஷத்துக்கு.''

''அதான் தப்பாப் போச்சு.''

''சோறு போட்டவன்தான் கயிறு கட்டி ஆத்துல இறக்கினான்னு ஆயிடுச்சு.''

''அவனுக்கு ஏதாவது ஒன்னு செஞ்சு, நாம யாருன்னு புரிய வைக்கனும். ஆள் பலம் தெரியாத ஆடறான். இப்பிடியே பேசாம வுட்டா இன்னும் திமிர் ஜாஸ்தியாயிடும்.''

''என்ன செய்யப் போறீங்க?''

''கார்த்தால அவனைக் கதவைத் தட்டி எழுப்பி செமசாத்து சாத்திடனும்.''

''ஆமா.. இன்னிக்கு ஊர் சிரிச்சது போறாதாக்கும். இன்னும் வளர்த்துக்கிட்டே போவணுமாக்கும்.''

''எதுனா செய்யனும் செண்பகா.''

''சரி இப்ப தூங்குங்க. அப்புறம் பாக்கலாம்.''

தூக்கம் இல்லை. வந்தாலும் திடும் திடும் என்று முழிப்போடு வரும் தூக்கமாய் இருந்தது. தூக்கத்தில் கூட நறநறத்து பல்லைக் கடிக்க வைத்தது.

சண்டை நடந்த வாசலைப் பார்க்கிற போதெல்லாம் உஷ்ணம் உடம்பில் ஏறிற்று. கண்களில் வெறி ஏறிற்று. தனித்துக் கெட்ட வார்த்தைகள் பேச வைத்தது. கோபத்தில் தடுமாறுகிற போது பன்னீரை அமைதிப்படுத்தினாள்.

''ஆரம்பிச்சது நாமதான். சாக்கடைல கல்லெறிஞ்சிட்டு மேல தெறிக்குதேன்னா எப்பிடி.. வுடுங்க ''என்று வற்புறுத்தினாள்.



மெல்லிய நூல் கயிறு பிணைக்கப்பட்ட விலங்கென பன்னீர் உறுமிக் கிடந்தான். விலங்கின் கோபத்துக்கு கயிறு ஒரு தடையில்லை. கயிற்றை மீறக்கூடாது என்கிற கட்டளையை உடைக்கவும் முடியவில்லை.

நாலு நாட்கள் கழித்து தினசரிபேப்பரைப் பிரித்து உட்கார்ந்திருக்க, செண்பகா அவனைத் தாண்டி எண்ணெய்க் கிண்ணத்துடன் தெருமுனைக் கோயிலுக்கு போனாள். தலையங்கம் படித்துவிட்டு, வெள்ளி, தங்கம் விலை பார்த்து இன்றைய நிகழ்ச்சிகள், நாள் பலன் வரை படித்துவிட்டு பேப்பரை வைக்க, வாசலில் இரண்டு மூன்று வேகமான குரல்கள் கேட்டன. எழுந்து வாசல் குறடுக்கு விரைந்தான்.

செண்பகா தெருமுனையிலிருந்து ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டிருந்தாள்.

பன்னீர் பதற்றத்துடன் படியிறங்கினான். செண்பகாவை நெருங்கி, ''என்னடா.. ஏன் ஓடியாற..'' என்று பிடித்து நிறுத்தினான். பின்னால் யார் என்று கோபத்துடன் பார்த்தான்.

''என்ன பண்ணீங்க அந்த ஆளை.'

''எந்த ஆளை?''

''சுப்ரமணிய.''

''நான் ஒன்னும் பண்ணலியே, உள்ள உக்காந்து பேப்பர் படிச்சிட்டிருந்தேன். எங்கயும் போவலியே.''

'' ஆள்விட்டு செஞ்சிருக்கீங்க.''

''ச்சீ.. என்ன சொல்ற.''

''அவனை அடிச்சுப் போட்டுருக்கு.. வரப்புல.''

''யார். அடிச்சது?''

''தெரியல. நீங்க ஏதாவது பண்ணீட்டிங்களா,, உள்ளதச் சொல்லுங்க.''

''சத்தியமா செண்பகா, நான் ஒன்னும் பண்ணலை, ஆளையும் ஏவி வுடல.''

''டேய் பன்னீரு.'' மணியம் ஓடி வந்தார். ''சுப்ரமணியத்தயாரோ குத்திப்போட்டுருக்காங்க வயக்காட்டுல. வேல்கம்புல குத்திட்டிருக்கான். மார்ல பாஞ்சு முதுகுல நீட்டியிருக்கு.ஊரே அங்கதான் ஓடுது.''

''இதோ வந்துட்டேன் மணியம்.'' உள்ளே ஓடினான். சட்டையை உருவித் தோளில் போட்டுக் கொண்டு செருப்பு தேடினான்.

படீரென்று வாசற்கதவை செண்பகா அடைத்தாள். குறுக்கே மறித்துபோல் நின்று கொண்டாள்.

## 26

''வேல் கம்பால் நான் குத்திட்டேன்னு நினைக்கிறியா செண்பகா'' மனைவியின் முகத்தை நிமிர்த்தி பன்னீர் செல்வம் கேட்டான்.

''நான் குத்தலை, ஆள் விட்டும் அடிக்கச் சொல்லலை. ஆனா இந்த கணம் வரைக்கும் அந்த ஆசை இருக்கு. எவனோ குத்திப்போட்ட வேல் கம்பை அந்தக் கயவாளி உடம்பு

லேர்ந்து உருவி ஆறங்குலம் தள்ளி மறுபடி முதுகுபக்கமா வேல் கம்பு வரும்படியா குத்தி தூக்கனும்னு ஆசை இருக்கு. கால்போட்டு நெஞ்சல மிதிச்சு குத்தின வேலை உருவி தொண்டைக் குழில ரத்தம் பீச்ச இன்னொரு குத்து குத்தணும். அய்யா இல்லாத போய்ட்டாங்க. அந்தக் கிறுக்கன் தலை தெருவுல உருண்டிருக்கும். வழி வுடு செண்பகா. போய் கண் குளிரப் பாத்துட்டு வரேன்.''

''என்யா இந்தக் கொலை வெறி. படிச்ச மனுஷன்தான நீங்க. கோவம் அடக்கத் தெரியாத படிப்பு எதுக்கு.''

''அன்னிக்கு நான் கோவம் அடக்கலேன்னா சொல்ற.. ரொம்ப கஷ்டப்பட்டு அடக்கிக்கிட்டேன். உம் பொண்டாட்டிய படுத்துக்க அனுப்புன்னு ஒருத்தன் எகத்தாளம் பண்ணிய பிறகும் என் பக்கம் தப்புன்னு தெரிஞ்சு ரொம்ப வேதனையோட அடங்கிட்டேன். உன்னை பெல்ட்டால் அடிச்சுத் தணிச்சுக்கிட்டேன். என் சொல் பேச்சு மீறி எதிர்வீட்டுக்குப் போய் நீ புள்ளை கேட்டது மகா தப்பு. எந்தப் பஞ்சாயத்துக்குப் போனாலும் நம்ம மேலதான் காரித்துப்புவாங்க. ஆனா அதுக்காக உம் பொண்டாட்டிய அனுப்புன்னு கூசாம சொன்னான் பாரு. அதுக்குப் பஞ்சாயத்துல செருப்பால அடிப்பாங்க.''

''ஐயா.. செண்பகா கை கூப்பினாள்.

''திடீர் திடீர்னு பொங்குது செண்பகா. அட, கடிஞ்சு பேசாத பொண்டாட்டிய அடிக்கும்படி ஆயிடுச்சேன்னு பதறுது. பாவி. காத்திருந்து காத்திருந்து கவுத்து வுட்டுட்டாளேன்னு பதறுது. என்கிட்ட வந்து என்ன பன்னீரு, இப்படி உங்க வீட்டுல இப்படி கேக்கறாங்க, நியாயமா இதுன்னு கேட்டிருந்தா, அவன் கால்ல வுழுந்திருப்பேன். உன்னையும் வுழச் சொல்லியிருப்பேன். அபராதமா எத்தினி கேட்டாலும் கட்டியிருப்பேன். வெக்கமில்லாம ஊர் ஜனம் முன்னாடி கை கட்டி நின்னுருப்பேன். தப்புதான்னு மனசாரச் சொல்லியிருப்பேன். பொச்செரிப்பு புடிச்ச பய. உன்னை பெண்டாளனும் அவனுக்கு. புருஷன் பொண்டாட்டி ஒத்துமையா தெருவுல நடந்தா உடம்பு ரோமமெல்லாம் எரியுது அவனுக்கு. அவனைநான் தண்டிக்க முடியலியே. இந்தக் கோவம் இப்பக்கூட வெறியா ஏறுது செண்பகா.''

''ஐயா வேணாம். வுட்ருங்க.நான் மலடியா இருக்கறதுனாலதான இத்தினி பேச்சு. இருந்துட்டுப் போறேன். என் தலையெழுத்து. ஆனா நான் அறுத்துட்டு நிக்க முடியாது. வயத்துல பூச்சி வைக்காது போனா போவட்டும். ஆனா பூவும் பொட்டுமா போய் சேரணும். நான் செஞ்சத தப்பு. அதுக்கு நீங்க அடிச்சிங்க. நமக்குள்ள நடந்த விஷயம். எனக்கு வருத்தமேயில்ல. நான் செஞ்ச காரியத்துக்குக் கோவத்துல என்னை தள்ளி வச்சாக்கூட எனக்கு இது வேண்டியது தான்னு அனுபவிப்பேன். ஆனா யாரையும் கொன்னுட்டு என்னை அல்லாடவுட்ராதீங்க. உங்களைக் கையெடுத்துக் கும்பிடறேன். அறுத்துப்போனவளா பண்ணிடாதீங்க. கோவத்தை வுட்ருங்க. சாமி சத்தியமா, உங்க அப்பா மேல சத்தியமா, வெளியே போகாதீங்க என் பேச்சைக் கேளுங்க.''

''ச்சீ.. எதுக்கு சத்தியம் பண்ணிக்கிட்டு.''

''பதறிப் போச்சுப்பா. நாலுநாள் முன்ன சண்டை போட்டிருக்கோம்



அவன்கூட. இப்ப அவனைக் குத்திப்போட்டிருக்கு. ஊர்ல யார்மேல சந்தேகப்படுவாங்க. ஜனங்கவெறி புடிச்சிப் போய் உங்க மேல பாஞ்சிடப் போவுது. அங்க போக வேணாம்.''

''சரி நான் போகலை. எங்கயும் போகலை. யாரையும் பார்க்கலை. ஆனா ஒண்ணு செண்பகா. இன்னிக்கு பாயசம் வச்சு சாப்பிடணும். நாம ரெண்டு பேரும். தெய்வம் நின்னு கொல்லும்னு வாங்க. நாலு நாள்ல கொன்னுடுச்சு பாரு. பூங்காவனம் பொம்பளையா அவ. என்ன வார்த்தையெல்லாம் பேசிட்டா. கழனித் தண்ணிய விசிறியடிச்சு ஊத்தினா மேல.. இப்ப பாரு. நாலே நாலு நாள்ல நாறிப்போச்சு பாத்தியா அவ வாழ்க்கை.''

''சரி விருங்கப்பா உள்ளபோங்க.''

பன்னீர் ஹாலில் அலைந்தான். செண்பகா நெஞ்சு சுமை தாங்காது தூணில் சரிந்து உட்கார்ந்து கொண்டாள். ''பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்.'' பெருமைக்குக் கருமம் கட்டளைக் கல்லாய் இருக்கலாம். சிறுமை எந்தக் காரியமும் செய்யாமல் மனிதர் மீது விழுவதுண்டு. காக்கை எச்சமிட்ட தலை போல, வேதனைகள் வேர் இல்லாதபடி விழுவதுண்டு. அப்படியொரு சிறுமை வருமோ என்று செண்பகா பயந்தாள்.

யாரோ வாசற் கதவைத் தட்டினார்கள். உழவுக்கு டிராக்டர் ஓட்டுகிற பையன் வாசலில் நின்றிருந்தான். செண்பகா கதவு திறந்தாள். பன்னீர் அவள் பின்னால் குமைச்சலுடன் வந்து நின்றான்.

''கார் கேட்டு எடுத்தாரச் சொன்னாங்க, மணியமும், ஹெட்மாஸ்டரும். உடம்புல கொஞ்சம் சூடு இருக்காம். மாயவரம் போனா வேல் கம்ப இடைஞ்சலில்லாத புடுங்கிடலாம்னு சொல்றாங்க. ரத்தம் வராத அடைச்சிட்டாங்க. காரு கேக்கறாங்க. சாவி குடுத்தீங்கன்னா நானே எடுத்துப் போயிட்டு திரும்பி பத்திரமா..''

''காரா.. எங்கிட்டியா இல்லேன்னு போய்ச் சொல்லுடா..'' பன்னீர் சீறினான்.

''யார் உசிரு. நாலு நாள் முன்னாடி நாக்குல நரம்பில்லாம பேசின பய உசுருதான.. மன்றாடத்தான் செய்யும், பத்தினி சாபம்னு சொல்லு போ.''

''அப்படி சொல்லப்படாதுங்க..'' பின்னால் யாரோ குரல் கொடுத்தார்கள்.

''உம் பொண்டாட்டிய அனுப்புன்னு சொன்னவனுக்கு நீ என்னல்லாம் தருவ. எனக்குச் சொல்லு...''

''அத வுட்ருங்க. இந்த நேரத்துல...''

''ஏன் வுடணும் அவன் உசிர வுடச் சொல்லு போய்யா.''

''பன்னீர்செல்வம்,'' ஹெட்மாஸ்டர் படியேறி வந்தார்.

''நடந்தது நான் கேள்விப்பட்டேன். பழச மறந்துருப்பா. கண் சொருகிடுச்சு. அரை மணிக்குள்ள எடுத்துட்டுப்போனா ஏதாவது செஞ்சு பார்க்கலாம். வஞ்சத்தை மனசுல வைக்காம கார் குடுத்தியானா உசிரு பொழைச்சாலும் பொழைச்சுக்கும்.''

''உங்கவில் வண்டி எடுத்துக்கங்க ஹெட்மாஸ்டர்.''

''மனுஷனா பேசுப்பா.''

''அவன் மனுஷனா பேசலியே. நான் ஈவு இரக்கம் இல்லாதவனில்ல. நடவாளுக்கு, தலையாரிக்கு, நீர்சால் தைக்கிறவனுக்கு என் வண்டி போயிருக்கு. இதுக்கு வராதுங்க என் வண்டி''

''பன்னீர் செல்வம் தப்பு பண்ற...''

''இல்லீங்க, ஒருவேல் கம்புதான் அவன் நெஞ்சலுதைச்சிருக்கு. என் நெஞ்சலு நாத்துக்கணக்கால்ல அன்னிக்குக் குத்தினான். நானும் துடிச்சிக்கிட்டுதான் இருக்கேன்.''

''வஞ்சம்.. தீத்துக்கறியா..''

''அடடே.. தீர்க்கறவனா இருந்தா அன்னிக்கே வெட்டியிருக்கணும். பெட்ரோல் ஊத்தி கொளுத்தியிருக்கணும். என் பொண்டாட்டி கேட்டது தப்புதான். இதான் இத்தினிக்கும் காரணம்ன்னு ஒதுங்கிட்டேன்.''

''நாளைக்கு ஊரு உன்னை துப்பா பேசும்பா.''

''இந்த ஊரா, மானங்கெட்ட பய ஊருங்க இது. இந்த ஊர்ல ஏண்டா இப்படிக் குடித்தனம் பண்ற. பொம்பளைய வாய் கூசாத கூப்பிடறேன்னு அந்த நேரமே எவனாச்சும் அவன் வாய் மேலே ரெண்டு போட்டானா..''

''அவன் பேசினது தப்புதான். அதுக்காக.''

''அனுபவிக்கட்டுங்க. சொல்லுங்க எல்லார்கிட்டயும்.. இதுநல்ல பொம்பளை சாபம்னு.''

''நான் கேட்டுகூட தரமாட்டியா.''

''கடவுளே வந்து கேட்டாலும் கிடையாதுங்க.''

''என்னங்க.'' செண்பகா திரும்பிக் கெஞ்சினாள்.

''சும்மா இரு செண்பகா. தயவு செஞ்சு இதுல நீ தலையிடாத, வூட்டுக்குள்ள போ.'' பன்னீர் கதவைத் திறந்து வாசலுக்கு வந்தான். திண்ணையில் உட்கார்ந்தான்.

ஊர் ஜனம் சுற்றி நின்றபடி அவனை வேடிக்கை பார்த்தது. தெரு முனையில் அவனைத் தூக்கி வர திரும்பிப் பார்த்தது.

சுப்பிரமணியத்தை தலைக்கு மேல் ஆறு ஆட்களாய் தூக்கி வந்தார்கள். வேல் கம்பு நெஞ்சில் பதிந்து ஆடிற்று. பூங்காவனம் அலறியபடி பன்னீர்கால்களில் விழுந்தாள்.

பன்னீர் பாதங்களைத் தூக்கி விலக்கிக் கொண்டான்.

''என் உடம்பொறப்பா கேக்கறேன். கை வுட்றாத தம்பி. அறியாத பேசிட்டேன்.''

''அறியாது பேசறதா. நீயா. எத்தினி ஆங்காரம் அன்னிக்குப் பேச்சுல. மாட்டாதவன் முடியாதவன்னு சொன்னவளாச்சே.. பொம்பளையாட்டமா பேசின. நடுத்தெருவுல கழனித் தண்ணிய ஊத்தினவளாச்சே.. உனக்கு நான் உடம் பொறந்தவனா. என்ன சொன்ன.. நீ புள்ளை வேணும்னா புருஷன்கிட்ட கேக்கணும். புருஷனால முடியலேனா சாமிக்கிட்ட கேக்கணும்னேயில்ல. போ. போய் சாமிகிட்ட இப்ப நீ போய்க் கேளு.''

''ஐயோ.. மாட்டேங்கறாங்களே..''

''நான் மாட்டாதவன்தான்னு அன்னிக்கேதான் ரெண்டு பேரும் குத்திகாமிச்சிங்களே, காலை வுடு. காரு இல்லை..''

''ஐயோ.. வஞ்சம் வச்சுக் கழுத்தறுக்கறாங்களே.'' பூங்காவனம் தரையில் புரண்டு அழுதாள்.



''எனக்கு என்ன வஞ்சம் உம்மேல. உன் கெடுபுத்தி உன்னை அறுத்திருக்கு. ஒரு நல்ல பொம்பளையப் பாத்து நாக்கூசாம பேசினியே அதுக்கு கெடச்ச பலன் இது. போ. உம் புருஷனைத் தூக்கிட்டுப் போக ஹெட்மாஸ்டர் வில் வண்டி தருவாரு. பொழுது சாயறதுக்குள்ள மாயவரம் போயிடலாம்.''

''பன்னீரு..'' மணியம் படியேறினார்.

''யார் வந்து கேட்டாலும் தர முடியாது. நீங்க எல்லோரும் போலாம்.'' பன்னீர் சீற்றத்துடன் எழுந்து கூட்டத்தை முறைத்தான்.

ரணப்பட்ட புலியிடம் தேவ கோஷம் எடுபடாது. எதிர்த்து அடிக்கத்தான் செய்யும். மனிதன் சகல நேரமும் நல்லவனில்ல. இருத்தல் கடினமும் கூட. அவன் நெஞ்சடியில் எப்போதும் ஒரு மிருகம் உண்டு. அந்த மிருகத்திற்குக் குரோதம் என்று பெயர். காமத்தால் மட்டும், காமம் என்று அழைக்கப்படுகிற ஆசையால் மட்டும் குரோதம் வருவதில்லை. அவமானமும் குரோதம் வளர்க்கும். மான அவமானமற்று நிற்பது பெருஞ்செயல். ஞானிகளுக்கு உண்டான விஷயம். ரத்தத்திற்கு ரத்தம். உயிருக்கு உயிர், பழிக்குப் பழி, மனித சரித்திரத்தில் காலம் காலமாய் வரும் விஷயம். உள்ளே இருக்கும் அகக்கண் மூட, காலத்தின் தொலைவு தெரியாது போகும். நாலு நாட்கள் கழித்து, நாற்பது வருடங்கள் கழித்து, இப்படி ஒரு செயல் 'நானா செய்தேன்' என்கிற நினைப்பு வந்தாலும் செயல் நடத்த வேண்டிய நேரத்தில் சிந்தனை மழுங்கி நிற்கும் வாய்ப்பே அதிகம்.

''ஒழிஞ்சு போவுது. குடுத்துருங்க.'' செண்பகா மெல்ல பன்னீர்செல்வத்தின் புஜத்தை உலுக்கினாள்.

''முடியாது செண்பகா, அவனுக்கு இதுதான் தண்டனை.''

''ஆபத்துக்கு உதவாதது பாவங்க. எந்த ஜென்மத்துலயோ பண்ணின பாவத்துக்குத்தான் இப்ப அனுபவிக்கிறமே போறாதா. இது வேறயா.''

''சரிதான் போடி உள்ள..''

''முடியாது. கார் சாவி குடுக்கத்தான் போறேன்.''

''கொன்னுருவேன் உன்னை''

''பரவாயில்லை. தாலி கயித்துக்கு ஒருத்தி மன்றாடறப்ப கல்லு மாதிரி இருக்க பொம்பளையால முடியாது. இந்தாப்பா.'' செண்பகா கார் சாவியை டிராக்டர் ஆளிடம் நீட்டினாள்.

''என்ன.. அவ்வளவு திமிரா உனக்கு. என்ன மீறியா போறே..''

''போட்டும் வுடுங்க.''

''உள்ளே போடி முதல்ல.'' பன்னீர் அவளை பின்னுக்குத் தள்ளினான். செண்பகா ணங்கென்று நிலைப்படியில் இடித்துக் கொண்டாள். வலியால் சீற்றமானாள்.

''ஆத்திரத்துக்கு அளவு வேணும்.''

''அது இந்தப் பொட்டக் கழுதைக்குக் தெரிஞ்சிருக்கணும். மண்ணு வாரி தூத்தினப்ப தெரிஞ்சிருக்கணும்.''

''தெரியாட்டி போவுது. அப்புறம் அவங்களுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம். எனக்குத் தெரிஞ்சதை நான் செய்யறேன். விடுங்க.''

''என்னை மீறி ஒரு காரியமும் பண்ணாதன்னு சொன்னா புரிய மாட்டேங்குது உனக்கு. உன்னால வந்ததுதான் இந்த அவமானம்.''

''அது வேற. இதுவேற. மனுஷங்க நொந்து அழுவறப்ப வேடிக்கை பாக்கறது அரக்கத்தனம்'' செண்பகா மறுபடி கார் சாவியை டிராக்டர் பையனிடம் நீட்டினாள்.

பன்னீர் ரௌத்திரமானான்.

சாவியைப் பிடுங்கிக் கொண்டான். செண்பகா அதை அவனிடமிருந்து விடுவிக்கப் போராடினாள். நகம் பதிய அவன் மூடிய விரல்களோடு அதை பிரித்தாள். அவனை மறித்துக் கொண்டு கார் சாவியைக் கூட்டத்தில் வீசினாள்.

பன்னீர் மடை திறந்தது போல, அவளை அடித்து நொறுக்கினான். நகம் கீறிய எரிச்சல், மனைவி மற்றவர்கள் முன்தன்னை மீறும் ஆத்திரம் நான்கு நாளாய் குமைந்து குமைந்து எதிர்வீட்டை நெஞ்சில் எரித்து சாம்பலாக்கிய வேகம் சேர்த்து மனைவியை நொறுக்கினான்.

செண்பகாவின் தாய்மாமன் கூட்டத்தைப் பிளந்து கொண்டு ஓடி வந்தார். புருஷன் மனைவிக்கு நடுவே புகுந்து விலக்கினார். டிராக்டர் ஆள் கார்சாவியை வீசி ரேழியில் எறிந்தான். கூட்டம் திரும்பியது சுப்பிரமணி வில் வண்டியில் தெரு கடந்து கிராமம் விட்டு அசைந்து அசைந்து எடுத்துப் போகப்பட்டான்.

தாய்மாமன் நெஞ்சில் சரிந்து செண்பகா கதறி அழுதாள். மாமன் முகம் கோணி விசும்பினார். பூ மாதிரி வளர்த்தேனே, பூ மாதிரி வளர்த்தேனே என்று விசும்பினார்.

தன் மகள் தன்னெதிரே புருஷனால் கொடுமைப்படுத்தப்படுகிற காட்சியைக் காண்கிறவன் மகா பாபி. நூறுயானை மிதித்து கூழாக்கினாலும் வராத வேதனை, தன் பெண் குழந்தை புருஷனால் ஹிம்சிக்கப்படுகிற போது வரும். மீட்கவும் முடியாமல், மீளாது ஒழியட்டும் என்று விடவும் இயலாமல் வெற்று வேதனை, இயலாமை நெஞ்சைக் கவ்வும்.

பன்னீர் சட்டையைக் கழட்டி வீசிவிட்டு மாடிக்குப் படியேறினான். செண்பகா ரேழியில் மாமன் மடியிலேயே படுத்து சூடுபட்ட குழந்தை மாதிரி கதறினாள்.

அந்த வில்வண்டி கிராமம் எல்லைவரை போய் விட்டு மெல்லத் திரும்பியது. சுப்பிரமணி வேல் கம்பு பிடுங்கப்படாமலேயே இறந்து போனான்.

## 27

தெரு ஜனம் உறைந்து போயிற்று,

அலறக்கூடத் தோன்றாது வில் வண்டியை வெறித்துப் பார்த்தது.

கொலை என்பது ஆத்திரத்தில் ஏற்படுகிற கொடூரம்தான். உதவி தேவைப்படும் நேரத்தில் சிரித்துக் கொண்டு சும்மா இருப்பது கூட கொலை முயற்சிதான்.

சுப்பிரமணியை யார் கொன்றார்கள், எதற்கு என்பது ஊருக்கு மறந்து போயிற்று. காலில் விழுந்து மன்றாடிய போது, பூங்காவனத்துக்கு தாலிப்



பிச்சை மறுக்கப்பட்ட காட்சியே மனசில் படமாயிற்று.

''பணக்காரன். அவன் புத்திய காமிச்சிட்டான். பாத்தியா. கொடியேத்தி பொங்கல் போடறதும், கருமாதிக்குப் புடவை கொடுக்கறதும் டிராமா. பூங்காவனம் துக்கிரி துண்டம்தான். ஆனா தெருவுல வுழுந்து அழுதப்ப உள்ள பொங்கிடுச்சு. அடுத்த தரம் அவன் காரு வெளிய வரட்டும். 'ணங்'குன்னு ஒரு கல்லு வுட்ற வேண்டியதுதான்.''

''அவன் பொண்டாட்டி பாவம் நல்ல பொண்ணுப்பா. இத்தினிக்கும் அவளதான் சுப்ரமணி அசிங்கமா பேசிட்டான். அதக் காட்டிக்காத காரு சாவி கொண்டாந்துச்சு. இந்தப் பயதான் புடுங்கி எறிஞ்சு அடிச்சு நொறுக்கிட்டான்.''

''யோவ் மணியம். ஒட்டுமொத்தமா ஊரு அவனை ஒதுக்கி வச்சரணும். என்ன சொல்ற.''

''உங்களுக்கு ஒண்ணும் தெரியாது. சும்முன்னு கிடங்கடா எல்லாரும். போலீஸுக்குப் போனவன் என்ன ஆனான்னு பாருங்க.''

''மணியத்துக்கு எப்பவும் துட்டுன்னா பல்லைக் காமிக்கணும். அதுவும் பன்னீர் செல்வம் துட்டுனா..''

மணியம், சொன்னவன் துண்டை இழுத்துப் பிடிக்க, மறுபடி வாசலில் ரகளை ஆரம்பித்து.

சுப்பிரமணி இறந்து போனான் என்று தெரிய, பூங்காவனம் மயங்கி விழுந்தாள். நீர் தெளித்து மூர்ச்சை தெளிவிக்க, பெரும் ஓலம் வீட்டிற்குள்ளிருந்து எழுந்தது. பெண்கள் ஓடிவந்து பூங்காவனத்தைச் சூழ்ந்து கொண்டார்கள். தலை முடியைப் பிரித்துக் கொண்டார்கள். நெஞ்சிலறைந்து ஒப்பாரி வைத்து அழ ஆரம்பித்தார்கள். ஆண்கள் மெல்லக் கூட, சுப்பிரமணியத்தின் பெரிய பையன் கூட்டம் பிளந்து வெளியே வந்தான். தெரு தாண்டி பன்னீர்செல்வத்தின் வீட்டுக் கதவைத் தட்டினான். கதவு திறந்த பன்னீர் செல்வத்தின் சட்டையைப் பிடித்து இழுத்தான்.

''எங்கப்பாரைக் கொன்னுட்டியே. காரு குடுக்காம எங்கய்யாவை கொன்னுட்டியே'' என்று கதறினான்.

தெரு ஆட்கள் பாய்ந்து இழுக்கக் கிடாரிக் கன்றாய் திமிறினான்.

''காரு வச்சிருக்கிற திமிருதான். உன் காரை இல்லாம பண்ணிடறேன் பாரு..'' திமிறி கூட்டம் விலக்கி, இரண்டு மூன்று கல்லெடுத்து வீட்டு ஜன்னலை நோக்கி சரமாரியாய் வீசினான். கூட்டம் மறுபடி பாய்ந்து அவனை அழுத்திக் கொண்டது.

செண்பகா வெளியே ஓடி வந்தாள். தெருவில் இறங்கி பையனிடம் போனாள். கூட்டம் பையனை நழுவவிட, பாய்ந்து அவனைத் தழுவிக் கொண்டாள்.

'யக்கா யக்கா' என்று கதறின பிள்ளையை வாரிக் கொண்டு அழுதாள்.

''எனக்குக் குழம்பு சோறு போட்டுட்டு எங்கப்பாவைக் கண் முன்னாடி கொன்னுட்டீங்களே.. எனக்கு எங்கப்பா வேணும், என்னைக் கொன்னாக்கூட பரவாயில்லை. எங்கப்பா வேணும்.''

பிள்ளை புரளலில் தெரு முழுவதும் அழுதது. அவன் கதறல் பலரை விம்ம வைத்தது.

''உன்னை மாதிரி ரெண்டு புள்ளைங்க பெத்திருந்தா, அவனுக்கு இந்த அருமை பெருமையெல்லாம் தெரிஞ்சிருக்கும், பட்ட மரத்துல பால் வராதுடா, முறிச்சு அடுப்புலதான்.

போடணும். என் ராசா அழுவாத... உங்கம்மா பாரு.. எப்படி கதறுது. அழுவாதன்னு தைரியம் சொல்லு என் ராசா வா' பையனை தெண்பகாவிடமிருந்து பிரித்து ஒரு கிழவி உள்ளே அழைத்துப் போனாள். உள்ளே ஓலக்குரல் பலத்தது.

பன்னீர் நடுங்கினான்.

இந்தப் பையனை மறந்து விட்டோம். சுப்ரமணிக்குக் குழந்தைகள் உண்டு என்பது உறைக்காமல் போய்விட்டது. வண்டி கொடுத்திருக்கலாம். ஊர் மொத்தமும் வெறித்து முறைப்பது முக்கியமில்லை. இந்தப் பையனின் அழுகை நெஞ்சைக் குடைகிறது. இவன் அலறல் ஆட வைக்கிறது.


வுட்ருங்க. நான் தனியா போறேன்' என்று மார் ஆழத்தில் ஒற்றைக் கம்பியைப் பிடித்து தென்னை மரம் புரண்டு வரும் வெள்ளத்தில் இடுப்புக் கயிறோடு அங்குலம் அங்குலமாய் முன்னேறி பாலம் போட்டவன். அந்தக் கயிற்றுப் பாலம் போட அன்று அவனில்லையெனில் கிராமம் மண்ணெண்ணைக்கு நாயாய் அலைந்திருக்கும். தொடர்பு முற்றிலும் அற்றுப் போய் கலவரம் அதிகமாகியிருக்கும். இன்று அவன் வாழ்க்கைக் கயிறு அறுந்து போய் விட்டது. தாயும், தந்தையும் இருக்கிற போதே இந்த ஊரில் பாதிக் குழந்தைகள் அநாதைகளாய்த் திரிகின்றன. மேய்ப்பனின்றி அலைகின்றன. 'கடவுளே என் நெஞ்சில் ஏன் இப்படி நெருப்பு படர்ந்து விட்டது. நான் பட்டமரம் தானா, அதனால் தான் தீப்பிழம்பாய் சற்று முன் தாண்டவமாடி விட்டேனா..' பால் பிடித்து கதிர் வளர்வதற்குள் நெற் பயிர் சாம்பலாயிற்று.

எனக்கு சுப்ரமணி மீது கோபம். பூங்காவனத்தின் மீது ஆத்திரம். நாய் கடித்தது என்று பதிலுக்கு நானும் கடித்திருக்கிறேன். இந்தக் குழந்தைகள் நினைவு வரவேயில்லை. ஒரு கணம் கூட இவர்கள் வாழ்க்கை என் மனதில் உணரப்படவில்லை.

தவறு. இமாலயத்தவறு. பூமி பிளந்து விழுங்க வேண்டிய தண்டனை எனக்கு. ச்சே.. புத்தியில் ஆத்திரம் ஏற, இடது வலது தெரியாமல் போகிறது. வண்டி கொடுத்து சுப்ரமணி பிழைத்திருந்தால் நாணியிருப்பான் தன் பேச்சுக்கு. நாண நன்னயம் செய்யத் தெரியாத புத்தி. வன்முறைக்கு வன்முறை காட்டும் வம்சம். வஞ்சனைக்கு வஞ்சனையென்கிற கணிதம். விடை சூன்யம். இந்த சூன்யம் இனி சாகிறவரை என் நெஞ்சில் அடிக்கடி எழும். என்னைக் கொன்று போடும்.

ஈட்டி நெஞ்சிலிறங்குவதை விட, வேதனையாய் பையனின் அழுகை இறங்குகிறது. ச்சே.. தவறு, இமாலய தவறு நாளை... இல்லை நாலு வருடம் கழித்து இந்தப் பையன் என்னங்க சின்னப் பண்ணை சவுக்கியமா என்று சிரித்தால், நெஞ்சில் இந்த சூன்யம் கிளம்பும். மூச்சு முட்டத் திணறடிக்கும். பதில் கூற முடியாது வெளிறும்படி வரும். அவன் கட்டின கயிறு பாலத்தைத் தொடுகிறபோது கை கூசும். எந்தப் பையன் வேண்டுமென்று ஆசைப்பட்டேனோ, அந்தப் பையனே வெறுக்கும்படி செய்து விட்டேன்.





எவனை நத்து கேட்க நினைத்தேனோ, அவனெதிரே சண்டாளனாகிப் போனேன். சபிக்கும்படி நடந்து கொண்டேன்.

தவறு.. பூமி பிளந்து விழுங்காதா என்கிற வேதனை. பன்னீர் தலையைக் கையால் பிடித்துக் கொண்டான். யாரோ தோளைத் தொட்டார்கள். ஹெட்மாஸ்டர்.

'மனசுல ஒண்ணும் வச்சுக்காதீங்க பன்னீர் செல்வம். பையன் ரெண்டுங்கெட்டான். ஏதோ துக்கத்துல பேசறான்.

'இல்லீங்க சார்'. ''அவனுக்கு நிறைய விஷயம் தெரியல''.

'நான் பண்ணினது'.

'தப்புன்னு படுதா. இல்லை மறந்துடுங்க. உங்களை வண்டி கேக்கச் சொன்னது நான்'

'குடுத்திருக்கலாம் நான்தான்'

'எல்லாம் ஒண்ணுதான்'

'பேசின நேரத்துக்கு மாயவரம் போயிருக்கலாம்'

'போய்... என்ன செய்யறது...ஆஸ்பத்திரில பாடி கேட்டுக்கிட்டு மல்லாடணும்'

'பொழைச்சிருக்கலாம் ஒரு வேளை...'

'முடியாது. சுப்ரமணி வரப்புலியே செத்துப் போயிட்டாரு'

'என்னது'

'நான் தான் பூங்காவனத்துக்கிட்ட சமாதானத்துக்கு சூடு இருக்கு. வண்டி கேளுங்கன்னு ஆளு அனுப்பினேன். பொம்பளைக்கு ஒரு ஆறுதலாயிருக்கட்டுமேன்னு, ஆஸ்பத்திரி வரைக்கும் ஊர் ஜனம் கூட்டிட்டுப் போச்சு. போயும் இப்பிடி நமக்கு தலையெழுத்து இருக்குன்னு அதுக்கு ஒரு சமாதானமா இருக்குமேன்னு சொன்னேன்.'

'வரப்புலியே போச்சுன்னா...'

'கால்ங்காத்தாலியே இருட்டிலயே குத்தியிருக்கான்..'

'யார் குத்தினது?'

'வெள்ளைச்சாமி. குத்திட்டு மாயவரம் போலீஸுக்குப் போய் சரண்டராயிட்டானாம். இப்பத்தான் சொன்னாங்க. இவனைக் குத்தினது மட்டுமில்லை. வெள்ளைச்சாமி பொண்டாட்டியை வேற வெட்டிப் போட்டுருக்கான் ரெண்டு துண்டமா.'

'அய்யோ. எங்க அது...'

'அவன் வூட்டுல..'

'சுப்பிரமணிய எதுக்கு...'

'இந்தப் பயலுக்கு வெள்ளைச்சாமி பொண்டாட்டியோட சகவாசம். ராத்திரி அங்க படுத்திருக்கான். நாலுநாளா ஊர்ல வெள்ளம்னு அங்கேயே பாலம் தாண்டி இருந்திருக்கான். மாயவரம்னது பொய். வீட்ல வெள்ளைச்சாமி இல்லை. காலைல கதவு தட்டினா உள்ள சுப்ரமணி. கதவு தொறந்த பொண்டாட்டியை அங்கேயே அலங்கோலமா வெட்டிப் போட்டுட்டு, இவனைத் துரத்திக்கிட்டு வயக்காட்டு வரைக்கும் விரட்டிட்டு வந்து வேல்கம்புல குத்திட்டு நேர மாயவரம் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயிட்டான்..'

'என்னங்க இது அசிங்கம்...'



'அசிங்கம்தான். அதுக்குண்டான பலன்தான் இது. நடவாள் பொம்பளைங்க சகவாசமெல்லாம் இப்பிடித்தான் முடியும்..'

'ஊர்ல எல்லாரும் என்னை ஒரு மாதிரில்ல பாக்கறானுங்க...'

'போலீஸ் வருது. வெள்ளைச்சாமியோட, அப்ப பாரு. பார்வையே வேற மாதிரி போயிடும். நீ மனச போட்டு அலட்டிக்காதே.'

'இருந்தாலும் நான் பண்ணினது...'

'தப்புன்னு படுதா. படணும். கார் சாவிய நீட்டினதுக்காக உன் பொண்டாட்டிய போட்டு அடிச்ச பாரு. அதுக்காகப் படணும். அது சொக்கத் தங்கம். நாலு நாள் முன்ன நாக்கூசாத பேசினவனுக்கு, அவன் பொண்டாட்டிக்கு இரக்கப் பட்டு பதறுச்சே. அது மனுஷத்தனம். உன்கிட்ட அது இல்லை. உன்னை விட உன் பொண்டாட்டி உசந்துட்டா, அதைப் போட்டு தெருவுல அடிச்ச பாரு...அந்தக் கேவலம் உனக்கு உறைக்கணும். செண்பகா தாய் மாமன் பாவம். ரொம்ப துடிச்சுப் போயிட்டாரு. நான் உன்னைக் கவனிச்சுக்கறேன்னு சொல்லி அவரை சமாதானப்படுத்தி அனுப்பிச்சிட்டேன்.'

'ஆத்திரத்துல புத்தி கெட்டுப் போச்சு...'

'இருந்தாத்தான் கெடறதுக்கு. புள்ளை பொறக்கலேன்னு ஆத்திரத்துல குறுக்கும் நெடுக்குமா யோசனை பண்ணி இழை தப்பி முடிச்சு விழுந்ததும் என் தப்பில்லை உன் தப்புன்னு அவளைக் கை நீட்டி அடிச்சது புத்தியிருக்கறவன் பண்ற காரியமா...நீயெல்லாம் ஆம்பிளையா. படிச்சவனா.. உனக்கும் படிப்பறிவே யில்லாத நடவாளுக்கும் என்னய்யா வித்தியாசம்...'

'எனக்குப் புள்ளை வேணும்னு ஆத்திரமில்ல ஹெட் மாஸ்டர் சார். ஒண்ணுக்குள்ளே ஒண்ணு நிறைய நடந்து போச்சு..'

'ரெண்டு தெரு, எழுவது வீடு இருக்கிற கிராமத்துல ஒண்ணுக்குள்ள ஒண்ணுதான் விஷயம் வரும். சுப்ரமணி சண்டை இன்னிக்கு நேத்து நடந்த விஷயமா. அவன் கத்தினது உன்னையா, உன் பொண்டாட்டியையா. அவனுக்கு உங்கப்பா மேல ஆத்திரம். அதை உங்க மேல காமிச்சிட்டான்..'

'சார் நீங்க...'

'உங்க ஐயா பெத்த புள்ளைதான் சுப்ரமணி. பங்காளிச் சண்டைதான் நடந்தது இங்க. அன்னிக்கே உங்கப்பாக்கிட்டே வேணாம், அறுத்துப் போனவ சகவாசம்னேன். கேக்கலை. நீ மாட்டிக்கிட்டு முழிக்கிற. எழுந்து உள்ளே போ. தலைல தண்ணி ஊத்திட்டு படு. இப்ப நீ வெளிய வர வேணாம். செண்பகாவைச் சமாதானப்படுத்து. போலீஸ் கேள்வி விவகாரம், எதிலயும் நீ பட்டுக்க வேணாம். நான் பேசி அனுப்பறேன். உள்ள போ. பூங்காவனம், அவ பையன் எல்லாருக்கும் சேதி தெரிஞ்சு தழைஞ்சு போறப்ப மிச்சம் பேசிக்கலாம் உள்ளாற போ..'

சகலமும் கேட்டபடி இருந்த செண்பகா வெளியே வந்தாள். அழுது வீங்கிய முகத்தைப் புடவை தலைப்பால் துடைத்துக் கொண்டாள். எழுந்திருந்த ஹெட்மாஸ்டரைக் கடந்தாள்.

'ஐயா, ஒரு நிமிஷம், எதிர் வீட்ல சாவு நடத்திருக்கப்ப நான் போகாம இருக்கக்கூடாது. அவரு வேணா, வர வேணாம், நான் போறேன். தப்பு என் புருஷன் பேர்ல மட்டுமில்ல. எங்கம்மா, இவங்கப்பா எல்லாம்

சேர்ந்து அவரை அலங்கமலங்க அடிச்சிடுச்சு. என்னைப் போக வேணாம்னு அவா தடுக்காத இருக்கச் சொல்லுங்க...'

தலையைக் குனிந்து ஹெட்மாஸ்டரிடம் பேசினாள்.

'நீ போ தாயி. பூங்காவனத்துக்கு உன்னைப் பாத்தாவது புத்தி வரட்டும். அதெல்லாம் இவன் ஒண்ணும் சொல்ல மாட்டான். வேதனை வாப்ப உரப்பா நிக்காம உடைஞ்சிட்டான். நீ போம்மா.

செண்பகா மேலும் தயங்கி நிற்க.

'என்ன... உங்க வூட்டுக்காரர் போகச் செல்லலியேன்னு தயங்கறியா. அவன் சொல்ற மாதிரி இல்லை. பையன் வுட்ட வுடுல வேல் கம்பு இவன் நெஞ்சல குத்திட்டிருக்கு இப்ப. ஆயிரம் சண்டை போட்டாலும் செத்த பிறகு தீர்ந்து போச்சு. போறதுதான் நல்லது. போ. பன்னீரு சொல்லுப்பா.

செண்பகா படியிறங்கினாள். எதிர் வீடு ஏறினாள். ரேழி தாண்டி முற்றம் இறங்கி ஒட்டடை மிகுந்த அந்த ஹாலில் துணி போர்த்திக் கிடந்த சுப்ரமணி அருகே போய் நின்றாள்.

'ஒரு நல்ல பொண்ணை நாக் கூசாம பழி சொன்னேனே. என் தலைல இடி இறங்கிடுச்சே...' பூங்காவனம் நிமிர்ந்து கதற, செண்பகா சரிந்து அவள் மீது விழுந்து அவள் வாயைப் பொத்தினாள். கட்டிக் கொண்டு அழுதாள்.

பன்னீர் செல்வத்தின் காதிலும் பூங்காவனம் கதறல் விழுந்தது. பன்னீர் எழுந்து உள்ளே போய் அப்பாவின் போட்டோவை வெறித்துப் பார்க்க, தெருவுக்குள் போலீஸ் ஜீப் நுழைந்தது.

ஹெட்மாஸ்டர் உள்ளே நுழைந்து கார் சாவியை எடுத்துக் கொள்ள, ஊரின் முக்கிய நபர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கும், மாயவரம் அரசு மருத்துவமனைக்கும் அதில் அலைந்தார்கள்.

இரண்டு நாள் கழித்து சுப்ரமணி ஊர் சுடுகாட்டில் எரியூட்டப்பட, துவண்டு காட்டில் விழுந்த பையனை பன்னீர் தோளில் போட்டுக் கொண்டு வீட்டில் சேர்த்தான்.

பதினாறு நாள் சுப்ரமணி குழந்தைகளுக்கு செண்பகா சமைத்துப் போட்டாள்.

வெள்ளத்தில் உடைபட்ட பாலத்தை சுத்தமாய் இடித்து விட்டு அதன் மீது தற்காலிகமாய் ஒரு மரப்பாலம் அரசு கட்டிக் கொடுத்தது. பழைய பாலத்திலிருந்து நாற்பதடி தள்ளி புதுப்பாலத்துக்கு வேலை துவங்கப்பட்டது.

## 28

ஆண்டாண்டு அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ என்கிற பாடலோ, அதன் தத்துவமோ பூங்காவனத்துக்குத் தெரியாது. ஆனால் இரண்டே நாட்களில் அழுகை அடங்கிப் போனது.

தன் புருஷன் மரணம் தனக்கொரு தண்டனை என்கிற மாதிரி அதிசயம் படர்ந்து விட்டது அவளுக்குள். இதையும் தவிர அவளுக்கு சுப்ரமணியன் புருஷன் தான். பிரியமுள்ளவன் இல்லை. புருஷன் பிரியமுள்ளவனாக இருப்பதோ பிரியமுள்ளவனே புருஷனாக அமைவதோ ஆயிரத்தில் ஒன்றுதான். சுப்ரமணியன் பூங்காவனத்துக்குக் கடமை சமூக நிர்ப்பந்தம். பூங்காவனத்துக்கும் அவ்வாறே. இங்கே நிறைய பேர் வாழ்க்கை இப்படித்தான். தெருவுக்குப் பயந்து நடக்கிற குடித்தனம் தான்.

பதினைந்தாண்டு குடித்தனத்தில் பூங்காவனம் சந்தோஷப்பட்ட நாட்கள் வெகு சொற்பம். சமையலுக்குப் பாராட்டோ, சந்தோஷப்பட்டு கூடலோ அவளுக்கு நடக்கவேயில்லை.

'என்னடி பூங்காவனம் தலைல கட்டு?'

'மீன் குழம்பு புடிக்கலைன்னு தட்டத் தூக்கி அடிச்சிட்டு போயிடுச்சி. மஞ்சபத்து போட்டுருக்கேன்...'

'அதுக்குத் தட்டத் தூக்கி அடிப்பானேன்...'

பூங்காவனத்துக்கு இதுதான் சந்தோஷமான நேரம். தன் துக்கம் பத்தி முகவாயில் கை வைத்து வாசல் பக்கம் நின்று பக்கத்து வீட்டுப் பெண் விசாரிப்புக்கு நொந்து கொண்டு பதில் செல்வதே பெரிய விடுதலை. அப்படி யாரும் கேட்கவில்லையெனில், இதைக் கேட்கக்கூட நாதியத்துப் போயிட்டேனே என்று தானே புலம்பிக் கொள்வது சிறிய விடுதலை.

இதைத்தாண்டி நாலு குழந்தைகள் பெற்றதெல்லாம் புருஷன் அதட்டலுக்குட்பட்டுதானே ஒழிய, தான் கிளர்ந்து கண் சொருகியதில்லை. அப்படி ஒரு கிளர்ச்சி உடம்பில் உண்டு என்று தெரிந்ததேயில்லை.

மரம் வச்சவன் தண்ணி ஊத்தாமலா போயிடுவான் என்கிற முட்டாள் வேதாந்தமே வாழ்க்கையாயிற்று. ஊர் சுற்றியுள்ள கருவேல மரங்களில் ஒன்றாய் பூங்காவனமும் வாழ்ந்தாள். குடித்தனம் செய்தாள். பயிர் செய்யாது அடுத்தடுத்து வளரும் கருவேலஞ்செடி போல பூங்காவனமும், குழந்தை பெற்றாள்.

'பூங்காவனம்னா என்னாடி?'

'எனக்கு என்னா தெரியும். பெரியவங்க வச்ச பேரு...'

அவள் மகிழ்ந்து பூக்காதவனம். வெறும் முட்புதர். அந்த புதரில் ஒரு சிறிய நட்பு மலர் பூத்தது.

அறுத்தவளை சமைக்கச் சொல்வது தவறு என்று பதினாறு நாளும் செண்பகம் எதிர் வீடு போய் சமைத்து குழந்தைகளுக்கும் மூலையில் கிடக்கும் பூங்காவனத்துக்கும் சோறு பரிமாறியபோது, தன் வாழ்க்கை மொத்தமும் புரட்டிப் பார்க்க நேரம் கிடைத்தது. அந்த நினைவு புழுக்கத்தில் ஒரு நட்பு பூ மலர்ந்தது.

இப்பேர்ப்பட்ட பெண்ணை தெருவுல நின்னு தப்பா பேசிட்டேனே என்று புலம்பல் வந்தது. தன் வீட்டுப் பருப்பும், அரிசியும், கொண்டு வந்து கொட்டி சமைக்கிறவளைப் பார்க்க இப்படி ஒரு பிறவியா, இந்த புத்தி எனக்கு வருமா என்று கேள்விகள் எழுந்தன.

நல்ல பொம்பளைய நாக்கூசாம பேசிட்டதுல வந்த வினையா...உடனே சூடு பட்டிருச்சா. படுக்க வாடின்னு கூப்பிட்டவன் ஒரே அடியா படுத்துட்டது இதனாலதானா..

தெய்வம் நின்னு கொல்லுன்னுவாங்க. நாலு நாள்ல கொன்னுடுச்சு. நரம்பு இழுத்து அப்பவே போயிருக்க வேண்டியது. மன்னிப்பு கேட்டுருன்னு நாலு நாள் தாவா குடுத்துச்சு தெய்வம். கேக்கலை. கொன்னுருச்சு. பெண் பாவம் சும்மாவா.

இப்ப மன்னிப்பு கேட்டுருவமா. என்னை மன்னிச்சிருடி செண்பகால்னு கால்ல விழுந்து அழுதுருவம்மா.

பதினாறு நாளும் பல்வேறு விதமாய் பூங்காவனம் புழுங்கித் தவித்தாள்.

படையல் போட்டு நடு காலுக்கு பூஜை செய்து கற்பூரம் ஏற்றி மலையேறுகிற போது, ஊர் கூட்டத்துக்கு நடுவே செண்பகாவின் காலில் விழுந்து அழுதாள்.

'என்னை மன்னிச்சிடு தாயே... உன்னைக் குறை சொல்லி நான் குறைபட்டுப் போயிட்டேன். உன்னைக் கேடு கெட்டவள்னு பேசி நான் கெட்டழிஞ்சு நிக்கிறேனே. உன்னை அசிங்கமா பேசிட்டு அறுத்துப் போயிட்டேனே... மலையேறதுக்கு முன்னாடி என்னையும் எம். புருஷனையும் மன்னிச்சிடு செண்பகா...' என்று அழுதாள்.

செண்பகம் பதறினாள். 'ஐயோ' என்று பின்னால் நகர்ந்தாள். 'உம் புள்ளைங்க சத்தியமா நான் உனக்கு இப்படி வரணும்னு நினைக்கலேக்கா. உன்னை அடிக்கணும்னு தோணிச்சே தவிர, நீ அறுத்துப் போகணும்னு நான் ஆத்திரப்படலக்கா. ஐயோ...எல்லாம் கிடக்க, நீ என் கால்ல விழுந்து... என்ன இது..எந்திரிக்கா...'

ஊரும் சமாதானப்படுத்திற்று, 'கெட்ட நேரம், பேசினது, சண்டை போட்டது, அப்பால நடந்தது எல்லாம் கெட்ட நேரம், வுட்ரு..'பூங்காவனம் போட்ட சண்டையை மறந்து போனார்கள். நாலு இரண்டும் கெட்டான் குழந்தைகளுக்கு இனி அவள் தாயாக மட்டும் இருக்க வேண்டிய நிலை குறித்து வருந்தினார்கள். பாவம் வேற வழி இல்லை என்று கலைந்தார்கள்.

'அப்பன் இல்லாத புள்ளைடா அவனை அடிச்சுடாதீங்க' என்று தன் குழந்தைகள் காமாட்சி நாதனோடு ஆட்டத்தில் சண்டையிட்டதை விசாரணையின்றி தீர்ப்பு சொன்னார்கள்.

கொலையாளியே சரணடைந்து நேர் வாக்குமூலம் கொடுத்த காரணத்தால் வெட்டியதுக்கும், குத்தியதற்கும் நேரில் பார்த்த சாட்சியத்தால் போலீஸ் கேஸ் பத்து நாளில் முடிந்தது. மன ஆவேசத்தில் நடந்த கொலை என்று கோர்ட் தீர்ப்பு சொல்லிற்று.

சுப்ரமணியத்தின் சிறிய நிலத்தை அவன் மூத்த மகன் காமாட்சி நாதனுக்கு மாற்ற ஊர் உதவி செய்தது. குத்தகைக்கு நேர்மையான ஆளைத் தேர்வு செய்து கண்காணித்தது.

பட்டா மாறிய மறுநாள் பூங்காவனம் தெரு இறங்கி செண்பகம் வீட்டுத் திண்ணைக்குப் போய் நின்றாள். கணக்கு எழுதிக் கொண்டிருந்த பன்னீர் தலை நிமிர்ந்தான்.

'வாங்க' என்றான்.

அவன் எதிரே இருந்த நடவாட்கள் பெண் பிள்ளை பேச வருவது பார்த்ததும் இறங்கி விலகி, நாலு வீடு தள்ளிப் போய் உட்கார்ந்து கொண்டார்கள்.

'உள்ளே வாங்க' பன்னீர் எழுந்தான்.

'அது முறையில்லை. இன்னும் ஒரு வருஷத்துக்கு வேற வூட்டுக்குள்ளே போகக்கூடாது...'



'சரி.. சொல்லுங்க. பட்டா வந்திருச்சில்ல...'

'வித்திறலாம்னு வந்தேன்'

'ஏன் விக்கணும். அதான் நல்ல நடவாளுங்களப் போட்டிருக்கே'

'ரெண்டு போகம் குத்தகை போக மிச்சம் வச்சிகிட்டாக்கூட ஆறு மாசம் போறது கஷ்டம்.

'ம்ம்... வித்துட்டா அந்த ஆறு மாசமும் பட்டினி தானே?'

'பாங்க்ல வட்டிக்கு விட்டா மாசா மாசம் கிடைக்கும்'

'யார் சொன்னா இந்த யோசனை..'

'மணியக்காரர் சொன்னாரு..'

'அவரு கிடக்காரு. சும்மா இருங்க, புள்ளை பெரிசாச் சுன்னா நிலம் நேரடியா பாத்துக்குவான்...'

'அது முட்டும் தாங்காது எனக்கு..'

'எல்லாம் தாங்கும். நாங்க இருக்கோம். போங்க.

'இது வரைக்கும் செஞ்சதைத் திருப்பிக் குடுக்கவே எனக்கு வக்கில்லே. அரிசி, பருப்பு மிளகாயா நூத்துக் கணக்குல செலவழிச்சிருக்கீங்க..'

'யாரு உங்களைத் திருப்பிக் கேட்டா...'

'கேக்காத கொடுத்துறது நல்லதில்லையா'

'உடம்பொறந்தானா நினைச்சுக்கிட்டு மறந்துருங்க...'

'தாயும் மகளுமா இருந்தாக்கூட வாயும், வயிறும் வேற...'

'வாஸ்தவம்..'

'நீங்க உடம்பொறந்தான் இல்ல...'

'அதனால...'

'நிலத்தை வாங்கிக்கிட்டு பணத்தைப் பேங்க்ல போட்டுறணும்'

'வேற வழி சொல்லுங்க. வட்டி நூறு ரூபா வரும். அது போறாதே உங்களுக்கும் உங்க புள்ளைங்களுக்கும்...'

'அதுக்கு உதவியா வேற எதுனா செய்யணும். பொட்டைப் பசங்க. ரெண்டையும் உங்க வீட்ல பத்து தேய்க்க வச்சுக்கணும். பெரியவனைப் பள்ளிக்கூடம் நிறுத்திடப் போறேன். உங்க நிலம், நீச்சு மாடு கன்னு கவனிச்சுக்கட்டும்..'

'செண்பகா' உள்ளே திரும்பி பன்னீர் குரல் கொடுத்தான். செண்பகா வெளியே வந்தாள். 'வாங்கக்கா' என்று மலரச் சிரித்தாள். 'திண்ணைல உக்காரலாம். தோஷமில்ல. உக்காருங்க' என்று உபசரித்தாள்.

'அவங்க வந்த விஷயம் கேட்டா, நீ கூட உக்கார மாட்டே. அவங்க பசங்களை நாம நம்ம கழனி வேலைக்கு சேர்த்துக்கணுமாம்..'

'ஏங்க்கா...என்ன இது..' செண்பகா முகவாயில் கை வைத்து அதிசயப்பட்டாள்.

'அவரு இருக்கறப்பவே இழுபறி குடித்தனம் செண்பகா. உனக்குத் தெரியும். இப்ப....'

'நாங்க. இருக்கோமில்ல....'

'அதான் நானும் சொன்னேன். நிலத்த வித்துவிப்பு பணத்த பேங்க்ல போடப் போறாங்களாம்...'

'பையன் பெரியவனாயிட்டா பொழைப்புக்கு என்ன பண்ணுவ....'

'பெரிசாகறப்ப பார்த்துக்கலாம் செண்பகா. அதுக்குள்ள பொழைப்பு நாறிப் போயிடும் போல இருக்கே. எத்தினி நாள் உன் வீட்டு சோறு திங்க றது...'

'அதனால பையனை கழனி வேலைக்கும், பொண்ணுங்களை பாத்திரம் தேய்க்கவும் அனுப்பறாங்களாம். செண்பகா, அவங்களை நிழல்ல வந்து நிக்க சொல்லு... இல்ல..இப்பிடி திண்ணைல உக்காரச் சொல்லு...'

பூங்காவனம் படியேறி நிழலான நடையில் ஒதுங்கினாள்.

'உக்காருங்க..'

திண்ணை விளிம்பில் உட்கார்ந்தாள்.

தெருவில் நடந்து போன ஆள் நின்றான். 'என்னா சுப்பிரமணி வூட்டம்மா? பட்டா மாறிடுச்சா.. என்னா விஷயம்' என்று குரல் கொடுத்தான்.

'மாறிடுச்சு. போய்யா வேலைய பார்த்துக்கிட்டு ரெண்டு பேர் நின்னு பேசினா போச்சு. உடனே துண்டு விரிச்சு உக்காந்துருவானுங்க' பன்னீர் அதட்டினான்.

'அப்ப நான் வாரேங்க...' நின்றவன் கடந்து போனான்.

'அதான் உள்ள வந்து உக்காந்து பேசுங்கன்னேன்...'

பூங்காவனம் தலையாட்டி மறுத்துவிட்டு, அமைதியாய் இருந்தாள்.

'நிலம் விக்கறதும் பசங்கள வேலைக்கு அனுப்பறதும் இருக்கட்டும். நான் ஒரு கேள்வி கேக்கறேன். பழசு கிளறப் போறேன். பதட்டமில்லாத பதில் சொல்லுங்க....'

பூங்காவனம் நிமிர்ந்தாள்.

'எங்க அய்யா சாகறப்ப சிலது சொல்லிட்டு செத்தாரு. அது பத்தி கேக்கணும். ரகசியமா ஒண்ணுமில்ல. ஊர்ல நாலு பேருக்குத் தெரியும்னாரு. உங்களுக்குத் தெரியுமான்னு கேக்கணும்....'

'கேளுங்க...' கேள்வியும் பதிலும் தெரிந்தவளாய் பூங்கா வனம் கண்களை மூடி பின்பக்கத் தூணில் தலை சாய்ந்தாள்.

'சுப்பிரமணி எங்க அய்யாவுக்குப் பொறந்தவனா, அதாவது அவன் அய்யாசாமிப் பிள்ளை மகனா?'

'ஆமா..'

'இது உங்களுக்கு எப்ப தெரியும்?'

'எனக்கும் அவருக்கும் கல்யாணம் பேசின நாள்லேர்ந்து தெரியும்...'

'இது சுப்பிரமணிக்கும் தெரியுமா...'

'தெரியும்...'

'தனக்கும் அப்பன் அய்யாசாமிப் பிள்ளைன்னு தெரியுமா..'

'தெரியும்..'

'எப்பத்திலேர்ந்து?'

'அதுக்கு விவரம் தெரிஞ்சு நாள்லேர்ந்து தெரியும்...'

'யார் சொன்னா...'

'அவங்க அம்மா...'

'அடப்பாவி. தெரிஞ்சா எங்கிட்ட சண்டை போட்டான்...'

'தெரிஞ்சு வேணும்னே போட்ட சண்டைதான் அது?'

'எதுக்கு சண்டை போடணும்? அப்படி என்ன ஆத்திரம்?'

'எனக்கும் காரு, கண்ணுக்கெட்டினவரைக்கும் நிலம், கழுத்துல



மைனர் செயின் எல்லாம் இருந்திருக்கும். நானும் ஒழுங்கான பொறப்பா இருந்தா. பன்னீருக்கு இருக்கறதவிட அதிகம் கிடைச்சிருக்கும்னு தினமும் பொறுமும்.

'எதுக்கு பொறுமணும்? நேர்ல வந்து பங்கு கேட்டிருக்கலாமே...'

'தேவடியாத்தனத்துக்குப் பொறந்தா ஊர் சபைல சொல்ல முடியுமா? சிரிக்க மாட்டாங்களா?'

ஊர் சபைக்கு வருவானேன். என் காதோட போட்டிருக்கலாமே விஷயத்த...'

'உங்களுக்கும் தெரிஞ்சிருக்கும்னு நினைச்சோம்...

'நீங்க கூட நினைச்சிங்களா...'

'நான் என்னென்னவோ நினைச்சேன்...'

'புரியல...'

'அதெல்லாம் செத்துப்போன சமாச்சாரம். முடிஞ்சி போன கதை. வுடுங்க...'

'நீங்க இன்னமும் ஏதோ வன்மத்தை மனசுல வச்சிட்டிருக்கிங்க போல இருக்க...'

'என் வன்மம்தான் என்னை வாரி எறிஞ்சு மூலைல போட்டுருச்சே...'

'உங்களுக்கு வன்மம் வராப்பல நான் என்ன செஞ்சேன்....'

'நீங்க செய்யல...'

'ம்ம்...பொறவு...'

'உங்கப்பாரு செய்தாரு.'

'என்னாது...'

பூங்காவனம் ஒரு சிறிய கதை சொன்னாள். விதி தன்னை வெட்டி நகர்த்தியதைச் சொன்னாள். அன்று நடந்த சண்டையின் அடிவேரைப் பிடுங்கிக் காட்டினாள்.

பன்னீர் வேதனையில் தவித்துப் போனான். செண்பகா கண் கலங்கினாள்.

## 29

அறுத்துப் போனவ கொழுப்பெடுத்துப் பேசறான்னு நெனைச்சுக்க வேணாம். இனி ஆம்பளையில்லையென்ற ஆத்தாமைல பேசறாள்னு தோணிறப் போவுது.

கல்யாணம் பண்ணி ஒரு வருஷம் வரைக்கும் நானும் கனாவுலதான் இருந்தேன். மொதப்புள்ள பொறந்தப்புறம் அதெல்லாம் சுத்தமா கரைஞ்சு போச்சு.

என்னை மரக்கட்டை மரக்கட்டைன்னுவாரு காமாட்சியப்பா. அடிக்கடிக்கூட சொல்வாரு. ஆனா மரக்கட்டை அவருதான். யார் சொல்றது இதை. உதை வாங்கிட்டு கம்முன்னு கிடப்பேன். குடிச்சிட்டு வந்தாலும் சரி, குடிக்காத வந்தாலும் சரி... என்னைப் பொறுத்த வரைக்கும் ஒண்ணுதான்.

ஆனா உங்க ரெண்டு பேரையும் பார்க்கும் போது நோவும்... செண்பகாவைப் பார்க்கும் போது மனசு எரியும்.

உங்க ரெண்டு பேரையும் வெட்டிப் போட்டுறேன்னு வீராவேசமா உங்கப்பாரு அருவா எடுத்துக்கிட்டு மாந்தோப்புக்கு போய்ட்டு....அங்க என்னா நடந்துச்சோ. எனக்குத் தெரியாது. நேர எங்க வூட்டுக்கு வந்தாரு. நான் அப்போ கேவுரு அரைச்சிக்கிட்டிருந்தேன். எங்கப்பாரைக் கேட்டாரு.

நான் அரைச்சதை அரைப்படி போட்டுட்டு கொல்லப்பக்கம் போய் கூட்டியாந்தேன்.

'டேய் என்னை மன்னிச்சிடு. எம்புள்ளை ரொட்டிக் கடைக்காரர் பொண்ணு மேல கை போட்டுட்டான். உம் பொண்ணுக்கு வேற இடத்துல நானே நின்னு கல்யாணம் பண்ணி வைக்கிறேன்...'

அவ்ளோதான். எனக்க ஜூவனத்துப் போச்சு. எங்கய்யா பாவம், அவரு பின்னாலேயே ஓடினாரு. யாருக்கும் தெரியாம பூவரசமரத்துக்குப் பின்னாடி போய் அழுதேன்.

எங்கய்யா ரெண்டாயிரம் ரொக்கம். இருவது பவுன் நகை கொண்டு வந்தாரு. உங்கய்யா என் கல்யாணத்துக்குக் குடுத்ததாம். போறதா எங்க வீட்டு சனத்துக்கு. நாய்க்கு ரொட்டித்துண்டு போட்ட மாதிரி உங்கப்பா வார்த்தை மாறினதை சரிக்கட்டிட்டாரு. அதுங்களுக்கு ஏதோ கிடைச்சா போறதா. அய்யாசாமிப் பிள்ளையபோல உண்டான்னு பல்லைக் காட்டிட்டாங்க. இதுவாவது கெடைச்சதேன்னு இல்லாம ஏண்டீ மூஞ்சி தூக்கி வச்சுக்கறேன்னு எங்கம்மா இடிச்சாங்க. லவ்வு லொசுக்குன்னெல்லாம் சொல்ல வரலை. நான் என்னவோ ஒரு ஆசை. கொஞ்சம் படிப்பு வாசனை உள்ளவனா எம் புருஷன் இருக்கணும்னு. பத்து பேர் மத்தியில் நின்னு பேசறவனா. பத்திரம் எழுதத் தெரிஞ்சவனா வரணும்னு நெனைச்சேன். ம்...எங்க பரம்பரையில் யாரும் பள்ளிக்கூடத்த எட்டிக்கூடப் பார்த்ததில்லை.

என்னைவிட எந்த விதத்துல உசத்தின்னு, ஓடிப்போய் செண்பகாவை எட்ட நின்னு பாத்தேன். கைல புஸ்தகம் எடுத்துக்கிட்டு எங்கேயோ போய்க்கிட்டு இருந்தே நீ. பெரிய பெரிய புஸ்தகம். சரிதான். இனம் இனத்தோடன்னு தேத்திக்கிட்டேன்.

உங்கப்பா அதோட விட்டாரா. வேற ஏதாவது ஊர்ல கண் காணாத இடத்துல என்னைக் கட்டி வைச்சிருக்கக்கூடாது. இவனும் என் பையன் மாதிரிதான்னு காமாட்சி அப்பாவை கூட்டியாந்தாங்க. சம்மதம்னா கூட பத்துப் பவுன் போடறேன்னாங்க. கல்யாண செலவு, துணிமணி, நகை நட்டு எல்லாம் அவங்களுது தான். தாராளமா செலவு செய்ய ஆள் கிடைச்ச ஜோர்ல சம்மதமாடீன்னு என்னைக் கேக்கத் தோணலை யாருக்கும். கல்யாணம் முடிஞ்ச கையோட என்னை இந்த எதிர் வூட்ல குடித்தனம் வச்சாரு. அதுவும் உங்கப்பாரு வேலைதான்.

கொடுமைதான் இது. எங்கயாவது கண் மறைவா இருந்தா கொஞ்ச நாள்ல நான் சரியாயிருப்பேன். இந்த வூட்டுக்கு வந்த மொத நாள் ராத்திரி என்னை ஜன்னல் பக்கம் இழுத்துக்கிட்டு வந்து, உங்களைக் காட்டி இவனைத் தெரியுமான்னாரு.

தெரியாதுன்னேன்.

எனக்கு உடம் பொறந்தான்னாரு.



புரியலையேன்னேன்.

அவங்கம்மா கெட்டுப் போன கதைய எனக்கு விலாவாரியா சொன்னாரு. மொதல் ராத்திரி புருஷன் பொஞ்சாதி பேசிக்கிற விஷயம் பாத்தீங்களா.

மனசால வேற ஒருத்தனை நெனைக்கிறது கூட துரோகம் தான்னு சொல்லுவாங்க. ஆனா கிட்ட வந்து தட்டிப்போய் கண்ணுக்கெதிர்லயே ஆள முடியாத படி இருந்தா. அனுபவிச்சவளுக்குதான் தெரியும் அந்த வேதனை. மறக்க வேண்டியது எதிர்க்க இருந்தா மறக்க முடியுமா? காமாட்சி வயத்துல இருக்கும் போது நான் உங்களைத்தான் நெனச்சுக்கிட்டிருந்தேன். இந்த நிமிஷம் வரைக்கும் இத வேற யார்கிட்டயும் சொன்னதில்லை. சொல்லவும் முடியாது மனசுக்குள்ளே நெனைக்கறத யாரால வது தடுக்க முடியுமா. இப்ப உங்கக்கிட்ட இத சொல்றது கூட இதனால ஒண்ணு குடி முழுகிப் போயிடாதுங்கற தைரியத்துலதான்.

எனக்கு இப்பிடி ஒரு வேதனை. எம் புருஷனுக்கோ தான் அய்யாசாமிப் பிள்ளைக்கு முறையா பொறக்கலையேன்னு வெறி...

இந்த ஊர்லயே உங்கய்யா பயந்தது என் நாத்தனார் தாயம்மாளுக்குத்தான். என்யா.. ரெண்டு மரக்கா நெல்லைக் காட்டிதான் எங்கம்மாவை கவுத்துட்டேன்னு என் காது பட தாயம்மா கேட்டுருக்கா.

அன்னிக்குப் பஞ்சாயத்துல உங்கய்யா தீர்ப்பு சொல்ல முடியாதுன்னு போனப்ப நானும் எம் புருஷனும் வாய் விட்டுச் சிரிச்சோம்.

அநியாயமா வயிறு எரிஞ்சதுக்கு அனுபவிச்சாச்சு போறும். எம்புள்ளைங்களாவது தலை நிமிரணும்னு ஆசைப்படறேன். பரிகாரம் தேடிக்கணும்னுதான் உங்க வூட்ல வேலைக்கு வுடறேன். உங்களுக்கும் காமாட்சி மேல ஒரு பிடிப்பு வுழும்.'

'அன்னிக்கே சுப்பிரமணி இதெல்லாம் விவரமா சொல்லியிருந்தா....' பன்னீர் பேச...

'ச்சு.. அதெல்லாம் முடிஞ்ச கதை, தெரிஞ்சிருந்தாலும் பேசியிருக்க மாட்டாங்க. அவங்க பேசியிருந்தாலும் நீங்க அப்ப காது குடுத்தும் கேட்டிருக்க மாட்டீங்க...'

'யார் சொன்னது. நான் அப்படிப்பட்ட ஆளுன்னு'

'மனசுல பட்டதச் சொன்னேன் ஏன்.. காமாட்சியப்பா உங்க வூட்டுப் புள்ளைன்னு உங்கய்யா செத்துப் போனதும் தெரிஞ்சதுதான்... உடனே எங்களை வந்து கேட்டிருக்கலாமில்ல..'

'அப்பிடி சட்டுன்னு கேட்டுர்ற விஷயமா இது...'

'ரெண்டு வீட்லயும் எல்லாத்தியும் மனசுக்குள்ளேயே வச்சிகிட்டிருந்ததுதான் பிரச்சினை...'

'ஆனா சத்தியமா உங்களை எனக்குப் பேசினது தெரியாது... எங்கிட்ட வந்து சொல்லியிருக்கலாமே..'

'உங்கய்யா அருவாளைத் தூக்கிட்டு வரவா...'

'அதுவும் சரிதான்....'

'செண்பகாவப் பார்த்ததும் இவதான் உங்களுக்கு சரின்னு பட்டுப் போச்சு. காமாட்சியப்பா சரியா இருந்து ஒரு காணிய நாலு காணியா பண்ணியிருந்தா நானும் தேறியிருப்பேன். அடப்போன்னு எல்லாத்தையும்

மறந்து போயிருப்பேன். அந்த மனுஷன் சரியில்லாததுனாலதான் இந்த நெலமைக்கு வந்திருக்கேன்...'

'சுப்பிரமணிக்கு ஏன் கெட்டிக்காரத்தனம் போறல...'

'பொறாமைப்படத் தெரிஞ்ச அளவு போட்டிப் போடத் தெரியல. திரும்பித் திரும்பி உங்க வயலையே பார்த்துக் கிட்டிருந்ததால எங்க வயலு தரிசா போச்சு...'

'ச்சே...' பன்னீர் தலையைப் பிடித்துக் கொண்டான். செண்பகா கண் கலங்கினாள்.

'நெஞ்சுல இருக்கிறது அத்தினியும் கொட்டுங்கன்னு கிருஷ்ணரு கேட்டப்ப, பாஞ்சாலி எனக்கு கர்ண மகாராஜா மேலயும் ஆசைன்னாளாம். அது மாதிரி வஞ்சனை ஒழியட்டும்னு மனசுல இருக்கிறது அத்தினியும் கொட்டித் தீர்த்துட்டேன் போறும்... இப்ப மனசு சுத்தமா தெளிவா இருக்கு.. இனிமே எனக்கு என்ன இருக்கு... ஏதோ இந்தப் புள்ளைங்களை நல்ல படியா கரை சேர்க்கணும். அதுக்கு உங்களைத் தவிர வேற யார்கிட்ட நின்னு உதவி கேக்க முடியும். பசங்களுக்கு ஏதாவது வேலை போட்டுக் குடுங்க. நானும் கூலி வேலைக்குப் போய் என்னால முடிஞ்சதை...'

'போறும்''

'இஷ்டமில்லேன்னா சரி'

'அய்யாசாமிப் பிள்ளை பேரன்தான் காமாட்சின்னு ஆயிடுச்சில்ல. இப்ப..'

'வேர் பிடிச்சிக்கிட்டே போனா அப்பிடித்தான். வேர் பார்க்கறேன்னு பயிறு புடுங்கிடக் கூடாது. இது பூமிக்கடியில் புதைஞ்சு போன விஷயம்...'

'புதைஞ்சே இருக்கட்டும். அய்யாசாமிப் பிள்ளை பேரன்னு எனக்குத் தெரிஞ்ச பிறகு, அவன் மாடு மேய்க்க,

கழனி பாக்கப் போவேணாம். உங்க பொண்ணுங்க பத்து பாத்திரம் தேய்க்க வேணாம்...'

'வேற கதி...?'

'ஸ்கூல் போகட்டும். படிப்புச் செலவு, குடும்ப செலவை நான் பாத்துக்கறேன். என்ன செண்பகா சரி தானா....?'

'ஆமாக்கா... இது வரைக்கும் நீங்க கஷ்டப்பட்டதெல்லாம் போதும்...'

'எதுக்கு இத்தினி கரிசனம். ஊர் கேக்காதா...?'

'என் தம்பி சம்சாரம்னு சொல்றேன். என்ன செண்பகா...'

'வெளிச்சத்துல போடறதுதான் சரி. இது வரைக்கும் நடந்ததெல்லாம் போகட்டும். இப்போ செய்யறத சரியா செஞ்சுடணும் ஆமா.. கோடி ஊடு நம்மளுதுதான். அங்க போய் இருந்துக்கங்க. அது பெரிய வீடு. எதிர்வீட்ட ஒத்திக்கு விட்டுருங்க. பசங்க படிக்கட்டும். நஞ்சை புஞ்சையா எனக்குண்டானதுல சரிபாதிய உங்களுக்கும் காமாட்சிக்கும் சேர்த்து எழுதி வைக்கிறேன். அதுல வரத வச்சி உங்க பசங்களை படிக்க வைங்க....'

'எதுக்கு இத்தினி..'

'நியாயமா உங்களுக்கு செய்ய வேண்டியதைத்தான் செய்யறேன். அப்



பதான் என் பாரம் குறையும்...'

'செண்பகா, உனக்கு நாளைக்குப் புள்ளை பொறந்தா?'

'பொறக்குமா தெரியலை. பொறக்கலைன்னாலும் ஆச்சரியப்படற துக்குமில்லை...'

'சரி.. இந்த வாரம் பஞ்சாயத்து கூடறப்ப உங்களுக்கு சொல்லி அனுப் பறேன். எல்லாத்தையும் பஞ்சாயத்துல சொல்லி பத்திரம் மாத்திடலாம்...'

'நான் கேட்டது அரை வயித்துக் கஞ்சி. அது போறும் அதிகமா குடிச்சா செரிக்காது...'

'நான் திங்கறது எனக்கு செரிக்க வேணாமா...'

'தானா தருமத்துக்கு ஒரு அளவு வேணாமா?'

'நான் பண்றது தருமம் இல்ல, கடன். வட்டிப் போட்டு திருப்பித்தர்ற கடன். அந்தக் கடனை உங்க வீட்டுக்காரர்கிட்ட திருப்பித்தந்திருக்கணும். அவன் போய் சேர்ந்துட்டான். உங்ககிட்ட திருப்பித்தர்றேன்.

'நொந்து போன மாதிரி பேசறீங்க..'

'இல்ல. உங்க முன்னாடி அழ முடியல. யார் குடிய கெடுத்தமோன்னு நானும் செண்பகாவும் மெட்ராஸ் போனப்ப புலம்பிட்டிருந்தோம். எங்களுக்குத் தெரியாம குடி கெடுத்திருக்கோம்னு தெரிஞ்சு போச்சு. நேர் பண்ண வேணாமா?

'இருக்கட்டும். இப்படியே இருக்கட்டும். பத்து நாள் வீட்ல இருந்த படி யோசிங்க. அப்புறம் ஊருக்குச் சொல்லலாம். நாலு விதமும் யோசனை பண்ணி முடிவு எடுக்கலாம். எனக்கு இனிமே நெறைவோ, குறைவோ எதுவுமில்லை. எம் பசங்களை உங்ககிட்ட சேர்த்துடணும்னு தோணிச்சு...'

'போறும். இனிமே செய்ய வேண்டியத நான் பாத்துக்கறேன். செண்பகா. அவங்களை அனுப்பிட்டு அரிசி, பருப்பு எடுத்துக் கொண்டு போய் குடு. பசங்களுக்கு சரியா ஆக்கிப் போடச் சொல்லு. கூரையப் பார்த்துக்கிட்டு உக்காந்திருக்க வேணாம்...'

செண்பகா எழுந்து நிற்க, பூங்காவனம் எழுந்து பன்னீர் கால்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள். அமைதியாய் நடந்து தன் வீடு போனாள்.

காமாட்சிநாதன் ஒரு பழைய சைக்கிளில் அரை பெடல் அடித்தபடி அவர்கள் வீட்டைக் கடந்தான்.

'இந்தப் புள்ளை என்கிட்ட பேசுவானா செண்பகா..'

'ஏன் கேக்கறீங்க...?'

'இவன் கூடப் பேசறதுக்கு எனக்குப் பயமாயிருக்கு. போடா நீயும் உன் நிலமும்னு சொல்லிடுவானோன்னு தோணுது...'

'அதுக்கு என்னங்க தெரியும் பாவம். ரெண்டுங் கெட்டான். பதினைஞ்சு நாளா இதமா கவனிச்சு சோறு போட்டேன். ஈரத்துணியா ஒட்டிக்கிச்சு. நான் கூப்பிடறேன் பாருங்க. டேய் காமாட்சி. இங்க வாடா' செண்பகா படியிறங்கிக் கூப்பிட்டாள்.

பையன் ரவுண்ட் அடித்துத் திரும்பினான். வேகமாய் மிதித்து அருகில் வந்தான். பல் தெரிய சிரித்தான்.

'உன்னை சாப்பிட்டுப் போகச் சொல்றாரு இவரு...'

பையன் முகம் மாறிற்று. தலையைக் குனிந்து கொண்டான்.

'என்னடா வரயா இல்லியா?'

'வேணாம்.'

'ஏன்?'

'எனக்குப் பயமா இருக்கு..'

'என்ன பயம்?'

'அவங்களை நான் அசிங்கமா திட்டிட்டேன். எதுனா திட்டு வாங்களோன்னு பயமா இருக்கு...'

'டேய் உள்ள வாடா...' பன்னீர் எழுந்து உள்ளே போனான்.

'இங்க வாடா..' தொட்டி எதிரே குத்திட்டு உட்கார்ந்தான்.

பையன் நெருங்க, பித்தளை சொம்பை எடுத்து அவன் கையில் கொடுத்தான். 'இதுல தண்ணி மொண்டு என் தலைல ஊத்து...'

'என்னங்க...'

'சும்மா இருடீ. ஊத்துடான்னா...'

பையன் மொண்டு சொம்பை உயர்த்தி தண்ணீர் ஊற்ற தலை வழியே நீர் வழிந்து சட்டையை நனைத்துத் தரையில் விழ... 'ஹோ' என்ற பிளிறலுடன் பன்னீர் குலுங்கிப் பையனைக் கட்டிக் கொண்டு அழுதான். செண்பகா முகம் பொத்திக் கொண்டாள். பையனிடம் நெருங்கி இன்னொரு சொம்பு தண்ணீர் கொடுத்து தானும் புருஷன் அருகில் உட்கார்ந்து கொண்டாள். பையன் அவள் தலையில் தண்ணீர் ஊற்றினான்.

சுப்பிரமணி என்கிற உடன் பிறந்த உறவு அங்கே நெருப்பாய் எரிந்து, நீராய் அடங்கியது. தலை வழியே வழிந்து உடம்பெல்லாம் படர்ந்து தலையில் விழுந்து ஜலதாரை வழியே மறைந்தது.

30

'இத்தினி தூரம் வந்துடுச்சு இல்ல. அப்ப நேர் பன்னிடு..'

ஹெட்மாஸ்டர் நீண்ட யோசனைக்குப் பிறகு பேசினார்.

'நேர் பண்றதுன்னா...'

'தத்து எடுத்துக்கோ..'

'அப்பனில்லாத புள்ளைக்குத் தாரை வாக்கறது யாரு...'

'சடங்க சித்தப்பன் செய்யணும். இல்லைன்னா புள்ளைக்கு நெருங்கின உறவு செய்யணும். தாயம்மா புருஷன் தாரை வார்க்கலாம். ஆனா கோர்ட்டுப் பத்திரத்துல கையெழுத்துப் போடறதுதான் முக்கியம்..'

'சடங்கா செய்யணுமா...குத்து கொலைன்னு போய் ஊர் முழுக்க தெரிஞ்சு...'

'என்ன ஆயிப்போச்சு இப்ப... அவன் குத்துப்பட்டதுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம். அது வேற இது வேற... ஆனா பன்னீரு. வேல் கம்போட சுப்பிரமணியத்தப் பார்த்ததும் நான் கூட இது நீ செஞ்சதுதான்னு நெனைச்சேன்...'

'கெட்ட நேரங்கறது இதுதான். ஆனா பூங்காவனம் குறைபட்டது இன்னும் பெரிய கொடுமை. நாளைக்கு ஏமாந்துட்டமோன்னு நினைச்சுக்கப்



போவுது. எல்லாவிதமாகவும் நேர் நெஞ்சுரு பன்னீரு. கோர்ட்ல தாக்கல் பண்ணி சட்டப்பிரகாரம் தகப்பனாயிரு. சடங்க அப்புறம் வச்சுப்போம்...'

'ரெண்டும் வேணுங்களா..'

'ஏன், என்ன கஷ்டம் உனக்கு?'

'சபைக்கு முன்னால நிக்கறச்ச உதறுங்க எனக்கு...'

'அடடே, சபைக்கு முன்னாடிதான பொஞ்சாட்டிய உதைச்சே...'

'அதையே சொல்லிக் காட்டாதீங்க சார்...'

'உன்னைப் பத்தி வச்சிருந்த அபிப்ராயமே செத்துப் போச்சு பன்னீரு...' ஹெட்மாஸ்டர் தலையை உலுக்கிக் கொண்டார்.

'எதுக்கு வெந்த புண்ணுல வெந்நீர் ஊத்துறீங்க, வுடுங்க அந்தப் பேச்சை..' செண்பகா வாசல்படியில் வந்து நின்றாள். 'இனிமே நடக்கறதுக்கு உண்டான வழியச் சொல்வீங்களா, முடிஞ்ச கதைய முனகிக்கிட்டுக் கிடக்கீங்களே ரெண்டு பேரும்...'

'சரி கோர்ட்ல தாக்கல் பண்ணப் போறோம்கறத ஊர் பஞ்சாயத்துல உட்கார்ந்து சொல்லிடு. அதுக்கு முன்னாடி தாயம்மாகிட்ட, அவ புருஷன்கிட்ட, இன்னொரு தடவ பூங்காவனத்துக்கிட்ட நேர் பதிலா கேட்டுரு..'

'யார் கேக்கறது...நானா...நீங்களா..'

'நான் என் பொண்டாட்டிய கூட்டிக்கிட்டு கூட வரேன். புருஷன் பொஞ்சாதியா ரெண்டு பேரும் படியேறி கேட்டுருங்க..'

தாயம்மா புருஷன், 'அதுக்கென்னங்க செய்துருவம்' என்று உடனே தலையாட்டினான். தாயம்மா சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள். வெகுதூரம் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'என்ன அக்கா பேசமாட்டேங்கறாங்க. எதுனா கஷ்டம்னா சொல்லட்டும்...' பன்னீர் கூரையைப் பார்த்துப் பேசினான்.

'சின்னப் பண்ணைக்குப் புள்ளைங்க இல்லை. வாஸ்தவம். வந்து கேக்கறாரு. அம்மாகூடதான் இல்லை. உள்ள வந்து இந்தக் கிழவிய எட்டிப் பார்க்கக்கூடாதா? இது ஒண்ணும் கொண்டாடிக்கிற மாதிரியான பொம்பளை இல்லதான். ஆனா உங்கய்யா மேல உசிரை வச்சிக்கிட்டு இருந்தாங்க...'

'எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை..' பன்னீர் எழுந்தான். செண்பகா பின் தொடர்ந்தாள்.

பன்னீர், கிழவியின் சுருக்கம் நிறைந்த கைகளைப் பிடித்துக் கொண்டான்.

'நான் உங்களை நோகடிக்கணும்னு சொல்லலை தம்பி.

இந்தம்மா பேரனை தத்து எடுக்கறீங்க சரி. இந்தம்மா உசிரோடதான் இருக்கு. இதக் கொண்டு போய் வீட்டோட வச்சு கடைசி காலத்துலனாச்சும் கவுரவத்தக் குடுங்க. கிழவி நெஞ்சு வேகும். இவளுக்கில்லாதது பேரனுக்கு எதுக்கு? ஆடு பகை, குட்டி மட்டும் உறவா..'

பன்னீர் குண்டு கட்டாய் குழந்தையைத் தூக்கிக் கொள்வது போல் கிழவியை எடுத்துக் கொள்ள, செண்பகா கிழவியின் துணிமணிகளை வாரி எடுத்துக் கொண்டாள். தெருவில் போகும்போது ஊர் ஜனம் திகைத்து நின்றது.

தண்டோரா போட்டு பஞ்சாயத்து கூட்டி செய்தி சொல்லும் அவசி

யமே இல்லாது போய்விட்டது.

கிழவி அப்பாவின் படம் பார்த்து கைகுவித்தாள். குமுறினாள். பேச்சு எதுவும் புரியவில்லை. 'பன்னீரு பன்னீரு' என்கிறது மட்டும் புரிந்தது.

உடம்பை வெந்நீரில் துடைத்து, புதுப்புடவைச் சுற்றி, உடம்பெல்லாம் பவுடர் தூவி, புதுப்பாயும் ஜமுக்காளமும் விரித்து, நெற்றியில் திருநீறு பூசி, கிழவி சுவரில் சாய்ந்திருந்தாள்.

காமாட்சி நாதனும் மற்ற குழந்தைகளும் பாட்டியைப் பார்க்க வீட்டிற்கு அடிக்கடி வந்தார்கள். பள்ளிக் கூடம் இல்லாத நேரங்களில் செண்பகாவுக்கு உதவி செய்தார்கள். மாடியிலும் கொல்லைப்புறத்திலும் ஆட்டம் போட்டார்கள். கோலம் கலைத்தார்கள். படுக்கையை அழுக்காக்கினார்கள். வைக்கோல் போரை சரித்தார்கள். ஊஞ்சலில் வீசி ஆடினார்கள். கரியில் மீசை எழுதி, நெற்றியில் பொட்டு வைத்து, தோளில் பன்னீரின் அங்கவஸ்திரம் போட்டு விசிறிக்கொண்டு நடு ஹாலில் காமாட்சி நிற்க, செண்பகா வாய்விட்டுச் சிரித்தாள்.

'செண்பகா சோறு வை' அடிக்குரலில் காமாட்சி நடித்துக் காட்ட, பன்னீரும் மெல்ல சிரித்தான்.

வரப்பில் எதிரே வந்த தாயம்மாவைப் பார்த்துவிட்டு நின்றான்.

'பசங்க வந்து போய்க்கிட்டு இருக்கா...செண்பகாவோட பழகிடுச்சுங்களா' என்று அவள் கேட்டதும், முகம் சுருங்கிப் பார்த்தான்.

'சொத்து குடுத்து புள்ளை வாங்கறத விட எங்கம்மாவ கவுரவப்படுத்தறதுதான் நல்லது....உங்களையும் ஊரு ஓஹோன்னு சொல்லும். கிழவிக்கும் ஆத்தாமை தீரும். பையனுக்கும் அவன் பாட்டியும் அந்த வூட்ல இருக்கறதுனால ஒட்டுதல் சீக்கிரம் வரும். செண்பகா என்ன சொல்லுது?'

'நீயேன் அம்மாவப் பாக்க'வரல...'

'கூடாது. அம்மாவ முன்னாடி அனுப்பிட்டு பின்னாடியே பொண்ணு சீராடப் போயிட்டான்னு ஊர் சொல்லும்..'

'நான் உடம்பொறந்தவனா உம் மனசுக்குப் படல. வேத்தாளத்தான் என்னை நீ நினைக்கிற...'

'சொன்னாலும் சொல்லாட்டியும் நீயும், நானும் வேற வேறதான். உங்கய்யா வேற... எங்கய்யா வேறதான். நீ எங்கம்மாவை, தம்பி புள்ளைங்களை-காபந்து பண்ற பாரு...அது என் நெஞ்சுல இருக்குப்பா. நான் மறக்க மாட்டேன். செண்பகாவை விசாரிச்சதா சொல்லு. உன்னை மாதிரி அதுவும் தங்கமான பொண்ணு. கெட்டிக்காரப் பொண்ணு. இந்த ஊர்ல தனக்குப் புடிச்சவனைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு நெனைச்ச மொத பெண்ணு அது. செண்பகா நல்லா இருந்தா, ஊர் நல்லா இருக்கும். ஊர் பொண்ணுங்க நல்லா இருக்கும். புரியுதா நான் சொல்றது..'

தாயம்மா சேற்றில் இறங்கி, அவனைத் தாண்டி வரப்பு ஏறிப் போனாள்.

'தாயம்மா பூங்காவனத்துக்கு நேர். ஊர்ல பொண்ணுங்களுக்குத் தனக்குப் புடிச்சவன் அமையலேன்னா ஒரு குறையாத்தான் இருக்கும். எனக்கு அமைஞ்சது பூங்காவனத்துக்கு எரிஞ்சு போச்சு. தாயம்மா அப்பிடி இல்ல. லவ் மேரேஜ் பண்ணிக்கிட்ட மொத பொண்ணுன்னு சொல்லியிருக்காங்க பாருங்க. இது நிறைய வரணும்னு ஆசைப்படறா



பாருங்க...'

'யப்பா. பட்டணத்துப் பொம்பளை மாதிரி சூட்சுமம்..'

'பட்டிக்காடாவது. பட்டணமாவது. பொம்பளை எங்கிருந்தாலும் சூட்சுமம்தான்...'

'உன் சூட்சுமம் எது?'

'உங்கக்கிட்ட நடுத்தெருவுல உதைப்பட்டபுறமும் சரிதான் போவுதுபோன்னு துடைச்சுக்கிட்டு உட்கார்ந்து பேசறேனே அது. தாய்மாமன் போறும்மா, நீ நம்ம வூட்டுக்கு வந்துடு. கடைசி வரைக்கும் நான் காப்பாத்துறேன்னு சொன்னதுக்கும், அதெல்லாம் கூடாதுன்னு உக்காந்திருக்கே அது..'

'ஐயம் ஸாரி செண்பகா...'

'அடடே அப்புறம்..'

'ரியலி ஸாரி..'

'ம்... மேற்கொண்டு..'

'மட்டமான ஆள் நான்..'

'அதான் தெரியுமே புதுசா ஏதாவது...'

'இனிமே அது மாதிரி செய்ய மாட்டேன்..'

'இது தப்பு..'

'ஏன்..'

'இது கோவமோ சந்தோஷமோ வாரி இறைச்சிடணும் அதே மாதிரி...'

'அதே மாதிரி..'

'எனக்குக் கோவம் வந்தாலும் சந்தோஷம் வந்தாலும் அத வாய மூடிக்கிட்டு வாங்கிக்கணும்...'

'இப்ப உனக்கு கோவமா சந்தோஷமா செண்பகா..'

'ரெண்டும்தான்...'

ரொம்ப சந்தோஷமும் கோபமும் வந்து கணவனை படுக்கையில் வம்பிழுக்கிற பெண் அற்புதமான அனுபவம். கனிந்திருக்கிற பலாப்பழம், ஒரு கீறு கீறினவுடனே சுளை வாசனை மூக்கைத் துளைக்கும். முள்ளிலிருந்து சடை விலக்கி முழுச்சுளையாய் வாயில் போட்டுக் கொள்ள, உடம்பு முழுக்க தித்திப்பு பரவும்.

பன்னீர் மல்லாந்து கண்மூடிக் கிடக்கிற மனைவியைப் பார்த்து சிரித்தான். அவள் வெறுமே குவியலாய் மார்பில் போட்டுக் கொண்டிருந்த சேலையை எடுத்து தன் முகத்தையும் கழுத்தையும் துடைத்துக் கொண்டான்.

'சும்மாவா ஊடலுக்குன்னு ஒரு அதிகாரம் எழுதியிருக்காரு வள்ளுவரு...' திடுமென்று சொன்னான்.

செண்பகா கண் திறந்து சிரித்தாள்.

## 31

'ஐயரு வேணாங்க' பன்னீர் ஹெட்மாஸ்டர் ஆலோசனைக்கு மறுத்துவிட்டான்.

'எனக்குப் புரியலைங்க அது. ஒரே புகை. சூடும் சண்ணெரிச்சலுமா இருக்கே தவிர, மனசுக்கு பாந்தமா இல்லை. ஆதீனத்துலேர்ந்து பண்டார சன்னதி கூப்பிட்டுக்குவோம். அவங்க வந்து திருவாசகம் பாடி, நாலு நல்ல சொல்லு சொல்லி, நடத்திக் குடுப்பாங்க. பேசறது புரியும். சடங்கு மனசுக்கு நிறைவாயிடும்..'

சப் ரெஜிஸ்ட்ரார் அலுவலகத்தில் நாலு மணி நேரம் காத்திருந்து, அரை மணியில் விவகாரம் முடிந்து விட்டது. உங்களுக்கு ஆண் பெண் சந்ததிகள் ஒன்றும் கிடையாதாகையால் நீங்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் என் மகன் திருமணமாகாத சுமார் 10 வயதுள்ள காமாட்சிநாதன் என்பவனை உங்களுக்கு தத்து மகனாக இருக்கும்படி மேற்படி சுபதினத்தில் நான் உங்களுக்குக் கொடுத்து நீங்கள் உங்கள் மனைவியின் சம்மதத்துடன் பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள். அது முதல் மேற்படி காமாட்சி நாதன் என்பவன் உங்கள் தத்து கொடுத்து நீங்கள் எடுத்துக் கொண்டதை நான் இதனால் ரிஜிஸ்டர் செய்து கொடுக்கிறேன்.

இந்தப்படிக்கு நான் எழுதிக் கொடுத்த 'தத்து எடுப்புப் பத்திரம்-காலஞ்சென்ற சுப்பிரமணி மனைவி பூங்காவனம். காலஞ்சென்ற அய்யாசாமிப் பிள்ளை மகன் பன்னீர் செல்வம். சாட்சியாக செண்பகாவும் அவள் தாய்மாமனும் கையெழுத்திட்டனர்.

பையன் காமாட்சிநாதன் ரிஜிஸ்ட்ரார் எதிரே நடந்து பன்னீர் செல்வத்துக்கும் செண்பகாவுக்கும் நடுவே போய் நின்றான். பூங்காவனம் முகம் துடைத்துக் கொள்கிற சாக்கில் கண்களில் பொங்கிய நீரைத் துடைத்துக் கொண்டாள்.

சப் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸுக்கு வெளியே வந்து பையனை உச்சி முகர்ந்தாள்.

'நல்லா படிக்கணும். நல்ல பிள்ளைன்னு பேர் எடுக்கணும். பன்னீர், செண்பகா ரெண்டு பேருக்கும் பிரியமா, ரெண்டு பேர் சொல்லும் மீறாத நல்லபடி நடந்து நல்ல பேர் எடுக்கணும்...'

'உன் வூட்டுக்கு வரலாமா..' பையன் மலங்க விழித்தபடி கேட்டான். தத்து நடவடிக்கைகள் அவனைப் பயமுறுத்தியிருந்தது புரிந்ததும் புரியாததுமான வாசகம் கலவரத்தைக் கொடுத்திருந்தது.

'எங்க வேணா போலாம். எப்ப வேணா வரலாம். காமாட்சி, எல்லாம் நம்ம வீடுதான்...' செண்பகா அவன் தலை கோதி பதில் சொன்னாள்.

இருப்பினும் வாசலில் நின்று தன் தாயார் இருக்கும் வீட்டை எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். தம்பி தங்கைகள் வந்ததும் தன் வீட்டு ஊஞ்சலில் கும்பலாய் உட்கார்ந்து ஆடினான்.

'பத்துநாள். மிரட்சியாதான் இருக்கும். அவனுக்குப் போகப் போக புரியும்...' என்று பெரியவர்கள் பேசிக் கொண்டார்கள்.

அறுப்பு வேலைகள் மும்முரமாய் இருந்தன. காமாட்சியும், பன்னீரும் வயல் வயலாய் சுற்றினார்கள். நெல் மூட்டைகள் பிரித்து இரண்டு



வீட்டுக்கு அனுப்பினார்கள். கொள் முதலுக்கு அதிகாரி வர, அளந்து போட்டு காசோலை வாங்கினார்கள்.

பேங்க் அக்கவுண்ட் பற்றி பூங்காவனத்துக்கு செண்பகா சொல்லிக் கொடுத்தாள். பூங்காவனம் விருப்பப்படி சுப்ரமணியின் படம் பெரிய சட்டம் போட்டு தரப்பட்டது.

இரண்டு வீட்டுக்குமே பொங்கல் பண்டிகை இல்லை. மாடுகளுக்கு மட்டும் குளிப்பாட்டி, வண்ணம் பூசி அமுது படைத்தார்கள்.

பண்டிகை இல்லாத குறைக்கு பன்னீர், செண்பகா, பூங்காவனம், குழந்தைகளோடு ராமேசுவரம் பயணப்பட்டான்.

ஆதீனத்திலிருந்து ஆள் வரச்சொல்லி ஏழைகளுக்கு சோற்றுப் பொட்டலம் கொடுத்தான். செண்பகாவின் கை பிடித்தபடி கடலில் முங்கிக் குளித்து லிங்க பூஜை செய்தான். ஈரம் சொட்டச் சொட்ட கோயிலின் எல்லா கேணிகளிலும் பக்கெட் பக்கெட்டாய் தண்ணீரைத் தலையில் ஊற்றிக் கொண்டு பாவம் தீர்த்தார்கள். சில்லென்று ஒரு கேணி, சூடாய் ஒரு கேணி, கலங்கலாய் ஒன்று, ஸ்படிக நீராய் ஒன்று... ஊற்றி குளிக்க மனசு தாபம் அடங்கிற்று.

ஊர் முழுக்க பிரசாதம் இட்டுக் கொண்டது.

கல்கண்டு சுவைத்தது. சுவீகாரப் பத்திரிகை அடித்து சகலருக்கும் கொடுத்துப் பந்தல் போட, பூங்காவனம் மட்டுமே அத்தனை அதிரசத்துக்கும் மாவு இடித்தாள். சலித்து சலித்து பன்னீர் வீட்டுக்கு அனுப்பினாள்.

வாசல் பந்தலில் நாற்காலி போட்டு ஊர் பெரியவர்கள் உட்கார, ஆதீனத்திலிருந்து வந்த காவியுடைப் பெரியவர் 'நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க' என்று பாடினார். கூட்டம் எழுந்து கைகூப்பி நின்றது.

காமாட்சியின் கையை எடுத்து பன்னீர் கைகளுக்குள் பொருத்தி, தாயம்மாளும் அவள் புருஷனும் காவிரி நீர் கொண்ட செம்பைக் கவிழ்த்துத் தாரை வார்க்க, செண்பகா புருஷனைத் தொட்டபடி நிற்க.

தாயம்மா ஊற்றுகிற போதே முகம் கோணி அழ, செண்பகா விசும்ப, பன்னீர் கண்களில் நீர் வழிந்தது.

வாசலில் மேளம் அதிர்ந்தது.

வந்த பையனை அணைத்தபடி வீட்டுக் கூடத்து கடவுள் படங்களிடம் போய் பிறையில் கைவிட்டு அவனுக்கு விபூதி பூசி, மாலை அணிவித்து அந்த வீட்டில் காது குத்தி கடுக்கன் போட்டதான ஒரு சம்பிரதாயத்துக்கு பையன் காதில் பூவால் மெல்ல ஒற்றி எடுத்து, அவனுக்கு வாயில் இனிப்பு ஊட்ட பையன் காமாட்சிநாதன் தன் புதிய பெற்றோர்களான பன்னீர், செண்பகாவை விழுந்து வணங்கினான்.

'ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவனடி போற்றி..'

ஓதுவார்கள் நான்கு பேர் விடாமல் பாடிக் கொண்டிருந்தார்கள்.

பூங்காவனம் சகலமும் கொல்லைப்பக்கம் போகும் இடது பக்க வழி ஜன்னலிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

உள்ளே செண்பகா அல்லாடிக் கொண்டிருந்தாள். சமையலுக்கு ஆள் போட்டாலும் கூட பந்தி பரிமாறும் போதும் வேலைத் தேக்கம் ஏற்பட்

டது.

கிராமத்துப் பெண்கள் நாலு பேர் பரிமாறினார்கள். ஆனால் கை காயும்படி இரண்டு வரிசை முடங்கிற்று. சபையில் நின்ற அரைமணி நேரம் உன் வேலை அசையாமல் நின்று போய்விட்டது. ரசம் போடும் போது தான் உள்ளே அப்பளம் பொரிந்தது. அதட்டினால் அச்சாணியாய் போகும் என்று அவளே அடுப்புத் தணலை ஊதிப் பெரிதாக்கினாள்.

அடுப்பின் எதிரே உட்கார, தலைபாரம் முன்னுக்குத் தள்ளியது. எப்பம் நெஞ்சில் அடக்கி அடக்கி எழுந்தது. வயிற்றை அழுத்தி இரண்டு முறை விட்ட போதும் தொண்டை அடைத்தது. இஞ்சி சாறு குடிக்க வேண்டும். அப்பளத் தட்டுடன் எழுந்திருக்க தலை சுற்றிற்று. சுவர் தள்ளாடி அருகில் வந்தது. தட்டு நழுவி கீழே விழுந்தது அப்பளங்கள் பறந்தன.

'ஐயோ' என்று குனிய செண்பகா கண் சொருகிக் கீழே விழுந்தாள். நெஞ்சுகப்பென்று பிடித்துக் கொள்ள, கண் சொருகிற்று. எழுந்து ஊன்றி உட்கார முயன்று தடாரென்று மீண்டும் விழுந்தாள். மூர்ச்சையானாள். கை உதறி முதலில் ஓடி வந்தவள் தாயம்மாள்தான்.

வாசலில் பேசிக் கொண்டிருந்த பன்னீர், தாயம்மா விரைவைக் கண்டு உள்ளே ஓடினான். பந்தி எழுந்திருக்க அமைதிப்படுத்தினான். அதற்குள் முகத்தில் தண்ணீர் அடித்து உசுப்பி விட்டுவிட்டார்கள்.

செண்பகா எழுந்து சுவரோரம் உட்கார்ந்து கொண்டாள்.

ஹெட்மாஸ்டர் டாக்டரோடு நாலு வீடு தள்ளி பேசிக் கொண்டிருந்ததை காமாட்சிநாதன் பார்த்துவிட்டு தெருவில் இறங்கி ஓடினான்.

டாக்டர் தட்டுச்சுற்று வேஷ்டியை மடித்துக் கட்டியபடி ஓடிவந்தார்.

காற்றோட்டமாய் அவளைத் தூக்கி வரச் சொன்னார். கொல்லைப்புறம் தூக்கிக் கொண்டு போனார்கள். பன்னீர் பந்திக்கு மோர் பரிமாறினான்.

'ஒண்ணுமில்ல, மயக்கம், புகை ஜாஸ்தி, முழிச்சிட்டா' என்று சமாதானம் சொன்னான்.

கூட்டம் பந்தி முடிந்து கையலம்ப, பின் பக்கம் விரைந்தான்.

டாக்டர் எதிர்ப்பட்டார்.

'கை குடுய்யா..'

'என்ன..'

'ஷி இஸ் பிரக்னென்ட்'

'டாக்டர்'

'தள்ளிப் போயிருக்குங்கறாங்க. உன் கிட்ட சொல்லவேயில்லையா.'

'சில சமயம் அப்படி தள்ளிப் போகும் டாக்டர்.'

'பல்ஸ் தெளிவா பேசுது. இந்தத் தடவை உறுதியா சொல்ல முடியும். எதுக்கும் டெஸ்ட் செய்துருவோம். வேலை செய்ய விடாதே. ரொம்ப களைப்பா இருக்கும் செண்பகாவுக்கு.'

பெண்கள் கூட்டம் விலகிக் கொள்ள, செண்பகாவை விசித்திரமாய்ப் பார்த்தான்.

செண்பகா விழித்து ஒரு முறை பார்த்துவிட்டு கண்களை மூடிக் கொண்டாள். 'கடைசில கடவுள் கண்ணைத் தொறந்துட்டான்' தாயம்மா



அவளை அணைத்து உச்சி முகர்ந்தாள்.

'செம்பகா என்னடா...' பன்னீர் உட்கார்ந்து கொள்ள, மெல்ல அவளை விடுவித்துவிட்டு தாயம்மா தள்ளி நின்றாள்.

'இப்படி ஆவும்னு ஒரு கனா மாதிரி எனக்குள்ள அடிக்கடி நெனைப்பேங்க. நடந்திருச்சு..'

'நிசந்தானா..'

'அப்படித்தான் படுது..'

சொல்லவேயில்லை எங்கிட்ட.'

'எல்லாம் முடிஞ்சு டாக்டர்கிட்ட போகணும்னு நெனைச்சேன்..'

'ராமேசுவரம் போய்ட்டு வந்தது..'

'இல்லீங்க, புள்ளைக்கு பூங்காவனம் சரின்னாளே அன்னிக்கே எனக்கு மலர்ந்து போச்சு உடம்பு, மனசு எல்லாம்.'

'தப்பை நேர் பண்ணிட்டமே, அதனாலயா.'

'இருக்கும்.'

'செண்பகா, ஜெயிச்சுட்டமா.'

'ஜெயிச்சுட்டோம்.'

'யார் வாழ்க்கையும் மீறாத, உங்கம்மா சொல் மீறாத என் அப்பாரு சொல் மீறாத ஜெயிச்சுட்டமா. கடவுளே இது காமாட்சி வந்த வேளையா.. நிசந்தான்னு உறுதியாயிட்டா என்ன வேணா நேர்ந்துக்கலாம் செண்பகா.'

'ஒண்ணு நேர்ந்துக்கலாம்.'

'சொல்லு செய்துடலாம்.'

'அது செய்துடலாம். வேற ஏதாவது...கோயில் குளத்துக்கு.'

'இது நூறு கோயில் கட்டினா மாதிரி.'

'ஏம்மா நெசம்தானா நீ உண்டாயிருக்கிறது?'

'நெசம்தான்னு தோணுது.'

'என்ன செய்யுது உடம்பு?'

'புரட்டியெடுக்குது. தலைச்சுத்தல் வேற மாதிரி இருக்குது. சரியா சொல்லத் தெரியலை.'

அன்று அந்திப் பொழுதில் பன்னீரும் காமாட்சிநாதனும் காரில் உட்கார்ந்தபடி மாயவர லேடி டாக்டர் வீட்டு வாசலில் காத்திருந்தார்கள்.

உள்ளிருந்து செண்பகா வந்தாள்.

'என்ன இத்தினி நேரம். டாக்டரம்மா என்ன சொன்னாக.'

''அது சொல்லமாட்டேன். நினைச்சது சரிதான்னுட்டாங்க. இப்பதான் யூரின் டெஸ்ட் ரிப்போர்ட்டும் வந்திருக்கு. உங்களையும் உள்ள கூப்பிட்டாங்க.''

'காமாட்சி, வண்டியிலேயே இரு..'

இருவரும் திரும்பியபோது முகம் மலர்ந்திருந்தது. பன்னீர் செண்பகாவின் கையை இறுகப்பற்றி குலுக்கினான்.

'தேங்க்யூ.''யம்மாவ், நான் உனக்கு கை குடுக்கறேன்.' முன் சீட்டில் இருந்தபடி காமாட்சி வலக்கரம் நீட்ட, அவன் கையையும் செண்பகா கை குலுக்கினாள். சிரித்தாள்.

'அப்ப.. நான் என் வீட்டுக்குப் போயிடலாமா.'

'ஏண்டா.'

'உங்களுக்குத்தான் குழந்தை பிறக்கப்போவுதே..'

'ஆமா, அதுக்கு நீ ஏன் போவணும். அப்படின்னா பொறக்கற பைய னுக்கு யார் பாடம் சொல்லித்தராது? யார் நீச்சல் கத்துக் குடுக்கறது. யார் வயக்காட்ட காட்டறது. யார்மாடு மடக்கி கூட்டி வர சொல்லித்தராது. அதுக் குத்தான் அண்ணங்காரன் உன்னைக் கூட்டி வச்சிருக்கோம்.'

காமாட்சி நகம் கடித்தான்.

'என்னடா சொல்லித் தரியா..'

'தரேன். தம்பிதான் பொறக்கப் போறானா..'

'தம்பி, தங்கச்சி எதுவாயிருந்தா என்ன...'

'தங்கச்சிக்குக்கூட நீச்ச கத்துத் தரணுமா?'

'பொண்ணாயிருந்தா கூட சகலமும் கத்துக் குடுத்துடணும், என்ன சொல்ற..'

'கரெக்ட்டு..'

பன்னீர் ஊர் நோக்கி கார் திருப்ப, மாயவரம் செட்டியார் கை குவித் தார்.

'எங்க தம்பி அப்புறம் ஆளையே காணமே. ஒரு பெரிய பத்து ரூபாய் போடுங்க, நாலு வருஷத்துல..'

'வேணாம் செட்டியார். வேற இடத்துல டெபாஸிட் போட்டிருக்கேன். ஒண்ணுக்கு நூறு திரும்பும்.'

'எங்கிங்க அது?'

'எங்க ஊர்லயே'

'புரியலையே.'

'வயசானவங்களுக்குப் பள்ளிக்கூடம் கட்டப்போறேன். லைப்ரரி ஒண்ணு நடத்தப்போறேன். மாடுகளுக்குத் தண்ணீத் தொட்டி. பசங்க பகல் சாப்பிட கூரைக் கொட்டகை போட்டு, தட்டு டம்ளர் குடுத்து... நிறைய இருக்குங்க.''

'வரும்படி வர்ற விஷயங்களா இது.'

'சொல்லிமாளாத வரும்படிங்க. ஏழு தலைமுறைக்கு வரும்படி வரும்.'

'புரியுதுங்க தம்பி. சந்தோஷமா இருக்கிங்கன்னு புரியுது. எப்பத்தி லேர்ந்து இந்தத் தீர்மானம்.'

'ஒரு பத்து நிமிஷத்துக்கு முன்னாடிதான் நினைச்சேன்..'

'நல்லதுங்க. என் பங்கா நூத்தியொரு ரூபா தரேன்.'

செட்டியார் பர்ஸ் பிரித்து எண்ணிக் கொடுத்தார். பன்னீர் வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டு, 'காமாட்சி. மனசுல குறிச்சுக்கடா. நல்ல சிவம் செட்டியார் நூத்தியொரு ரூவா. ஊருக்குப் போய் நோட்டுல எழு திக்கணும்.'

வண்டி நகர்ந்தது. குலுங்காமல் மெல்லக் கிராமம் நோக்கிப் போயிற்று.

பின் சீட்டில் செண்பகா குழல் பறக்க, சுகமான கனவுகளில் மூழ்கிய படி தூங்கிப் போனாள்.

## நிறைந்தது



# அவிழ்மடல்



கண்மணியில் வெளிவந்த பிரபாராஜரத்தி னம் அவர்களின் ''என்னகத்தில் உன்னைய ழைத்தேன்'' நாவல் ஓர் இனிமையான காதல் காவியமாய் காட்சியளித்தது.

நாவலின் நாயகி அகல்யாவும் நாயகன் ஆதித்தியனும் காதலில் ஒன்றுபட்டு ஊடலும், மோதலுமாய் நாவல் முழுக்க நம்மை பரவசப்ப டுத்தியது உண்மையே. உண்மை காதலர்கள் வாழ்வில் வெற்றி பெற காதலன் பின்னால் 'காத லியின் சக்தி' உள்ளது என்னும் தத்துவத்தை மெய்ப் பித்த நாவல். பாராட் டுக்கள்.

ம.வசந்தா, கச்சிராயபாளையம்.

தேவியின் கண்மணியில் என்னகத்தில் உன்னையழைத்தேன் நாவல் படிக்க அருமையாய் இருந்தது இதில் முழுமையான சுவை அளித்த பிரபா ராஜரத்தினம் அவர்களுக்கு நன்றி! இதில் சுவையான விஷயங்களை அளித்து வரும் கண்மணிக்கு பாராட்டு நன்றி!

ரா திருமலை, சிதம்பரம்.

'அகல்யா'வின் பாத்திரம் தீபம் எனில் ஆதித்தியன் பாத்திரம் நெய் என் றாகி காதலுக்கு இலக்கணத்தையும் இல்லறத்துக்கு இலக்கியத்தையும் இனிதே படைத்து செழித்த 'என்னகத்தில் உன்னையழைத்தேன்' நாவலுக் காக என்னில் பல மணி நேரங்களை திரும்பவும் அளித்தேன்!

ஆர் ஜி ஜே ஜெய்ஹரிதா, மணவிளை.

'என்னகத்தில் உன்னையழைத்தேன்' காதல் ரசம் சொட்ட கவித்துவம் முட்ட கண்களில் ஒளிகிட்ட கருத்துக்கள் விண்ணகத்தில் எட்ட அட்டா.. ரகமாக அகம் குளிரப்படித்து மகிழ்ந்த அற்புதப்படைப்பு! பிரபா நாவல் உல கின் பிரபோ என்று பாராட்டும்படி அமைந்தது.

ஆர் ஜி.கல்யாணிஜானகிராமன், திருவொற்றியூர்.

வானத்தின் செவ்வானம் வனப்பின் பூவானம் வைரமணி பற்கள் 'வா' என்றழைக்கும் விழிகள் வழ வழ கின் வதனம் வார்த்தது மாருதியாச்சே:- சற்றுநேரம் நின்றது மூச்சே! அட்டைப்பட நாயகி ஆடுகின்றாள் நெஞ்ச ஊஞ்சல் ஞானியரையும் கூட நான்முகனின் படைப்பு நாளெல்லாம் கிறங்க ரக்கும் நானறிந்த வரையில் மாருதியின் ஓவியமோ வான வரையும் கூட 'வா' என்றழைக்கும்!

ஆர்.ராஜகோபாலன், கொம்மடிக்கோட்டை.

திருமறைக்காடு எனும் வேதாரண்ய ஈஸ்வரனைப் பற்றிய தொகுப்பு